MAHAMAHOPADH...
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

ஶ்ரீ ன ரு க :

# உரைப்பாயிரம்.

பூமலி துணர்ச்சினை பொதுளிய சந்தனக், காமலி பொதி
யலிற் காட்சிகூர் நலத்திற், பற்பல முனிவரர் பணிசெயூ வருகுறச்,
சிற்பர னடியுளஞ் சேர்த்திருந் தறநெறி, முயலிசை யகத்திய முனிவ
னிற்றோன்றிய, வியலிசைநாடக மெனுமிவை புலப்பட நுதலிய வரு
ற்பெற றேழுக்கமை யகத்திய, முதலிய [illegible]யுள முத்தமிழ் நூல்களு,
வன்மா ணாக்கரீஇ, ரறுவரி னோங்கிய, தவன்மா ணாக்கரில் சாய்த்தகொ
காப்பியன், முழுவா யறத்தெரீஇ வகுத்த தொல் காப்பிய, மெழு
ா யாகிய வியற்றமிழ் நூல்களுந், திங்கட்கவிகைசேர் தென்னவ ரு
வளர், சங்கப் பலகைவாழ் சான்றோர்க் களவையாய்க், குசைநுனி
போன்மதிக் கூர்மையோர் தமக்கே, யிசைதலி னவைபோ லாதியா
ருக்குந், தெளியிய னூல்களிற் சிறந்ததோர் நூலுக், களிதுணரு
வாயினி தியற்றித் தருகெனப், புகழ்தரு பாற்கடற் பொங்கலங் கதனி
டத், திகழ்தருகலைவளர் திங்கள்வந் துதித்தென, நிலமுழுதோங்குநன்
ரிலைகெழு வைசிய, குலமது மகிழுறவங்கு வந்துதித்தோன், சொற்பல
வர்தொடு தொடுத்தபாமாலை, முற்பலமாலையுமொளிர்மணி மொய்ம்
பின்ன், பருவமொன் றிடையொருபயனுதவெழிலிநாண், மருவவெட்
பொழிதினு மருப்பல கொடையின, னெப்பொருளும்பகுத்திலதிற்
றெனை, வப்பொரு ளுண்மைதேர்ந் தறியுநன் னுணர்வின, னடை
சி ண்முக மலரவாய் நலத்தொடு, புடைவளர் விபுதரைப் போற்
புனிதன், சேது பதியெனுஞ் செங்கோன் மன்னவற், கோ
ணையென வுற்றபும் பாவை, யண்ணசாமிவே ளருந்தவ வெ

ன்கொலென் றெண்ணுற் றிசையுளோ ரியம்பிடத் தோன்றியோன், சிவனடி யவரையச் சிவனெனப்பரவுந், தவனடி முடிவிலாச் சைவசிகா மணி, சிங்கார முதலிதன் சிந்தைகூர் மகிழ்ச்சியி, னிங்காரமுதன வி ன்சொலால் வேண்டலின், முன்னூ லொழியப் பின்னூல் பலவினு, ளெந்நூ லாரு நன்னூலாருக், கிணையோ வெனத்தமி ழினிதுணர் பவ ர்க்கெலாந், துணையீதாமெனத் தோன்றுநன் னூற்கு, நயன்மிகு சங்க ர நமச்சி வாயனாற், பயன்மிகச் செய்திடப் பட்டதன் பின்னர், தவ ஞானந்தனிற் சால்புகூர் துறைசைச், சிவஞான முனிவனாற் றிருத்திட ப் பட்ட, விருத்தியுரைதனை வெளிப்படச் சுருக்கிக், கருத்துப்பதப் பொருள் காட்டுமற் றுஞ்சில, வுறுமுறை காண்டிகை யுரையுளங்கொண் டு, சிறுவரு முணர்தருஞ் செவ்வியிற் செய்தனன், றத்துவ முணர் திருத் தணிகை மடாதிபன், சத்தெனும்வீர சைவமா கேசன், கற்று ணர்ந் தோங்கிய கந்தப்ப தேசிகன், பெற்றருள் விசாகப் பெருமா ளையனென், றுலகுபுகழ்தர வோங்கி, யிலகு மியற்பெய ரெய்து நாவ லனே.

இஃது - சேயூர்.

முத்தைய முதலியாரால்

செய்யப்பட்டது.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS 600 090.

திருத்துணை.

# நன்னூல்

## மூலமுங்காண்டிகையுரையும்.

### சிறப்புப்பாயிரம்.

மலர்தலையுலகின் மல்கிருளகல, விலகொளிபரப் பியாவையும் விளக்கும், பரிதியினொருதானாகிமுதலீ, றொருப்பள வாசைமுனி விகந் துயர்ந்த, தற்புத, மூர்த்திதன்னலர் தருதன்மையின், மனவிருளிரிய மாண்பொருண்முழுவது, முனிவறவருளிய மூவருமொழியுளுங், குணகடல்குமரி குடகம்வேங்கட, மெனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலு, ளரும்பொருளைந்தையும் யாவருமுணரக், தொகைவகை விரி யிற்றருகெனத்துன்னா, ரிகலறநூறி யிருநில முழுவதுந், தனதெனக் கோலித்தன்மதவாரணந், திசைதொறநிறுவிய திறலுறு தொல்சீர்க், கருங்கழல்வெண்குடைக்கார்நிகர்வண்கைத், திருந்தியசெங்கோற் சீய கங்க, னருங்கலைவிநோதனமராபரணன், மொழிந்தனனாக முன்னோர் நூலின், வழியேநன்னூற்பெயரின் வகுத்தனன், பொன்மதிற்சனகைச் சன்மதிமுனியருள், பன்னருஞ்சிறப்பிற்பவணந்தி, யென்னு நாமத் திருந்தவத்தோனே ... ... ... ... ... ... ... ..

இது - நூல்செய்தவன் பெயர்முதலாகிய பதினொன்றையுஞ் சொல்லுகின்றது (இதன் றுபதப்பொருள்.) மலர்தலையுலகில் - பரந்த விடத்தையுடைய வுலகத்தில்—மல்கிருளகல - நிறைந்தவிருள்கெட— இலகொளிபரப்பி - விளங்குங் கிரணத்தைவிரித்து—யாவையும் விளக்கும் - கண்களுக்குத்தெரியத்தக்கஉருவங்களையெல்லாங்காட்டுகின்ற— பரிதியின் - சூரியனைப்போல—ஒருதானாகி - உலகங்களுக் கெல்லாந்தானொருமுதலாகி—முதலீறொருப்பளவாசை முனிவிகந்துயர்ந்த - பிறப்பும் இறப்பும் உபமானமும் அளவுசு விருப்பமும் வெறுப்பும் - ஆகிய விவைகளிற் சுபாவமாக நீங்கி நிற்கையினாலே தலைவனாகிய— அற்புதமூர்த்தி-ஞானமே திருமேனியாக வுடையவன்—தன்னலர் தருதன்மையின் - தனதுமலர்ந்தகுணமாகியவருளினாலே—மனவிருளிரிய - உயிர்களின்மனத்திருளாகியவஞ்ஞானங்கெட — மாண்பொருண் முழுவதும் - சிறந்த அறம் பொருள் இன்பம் வீடு என்கிற நான்கு

பொருளையும் — முனிவறவருளிய - ஆசையுடனருளிச் செய்த — மூவ
றுமொழியுளும் - பதினெட்டுநிலத்து மொழிகளுள்ளும் — குணகடல்
குமரி குடகம் வேங்கடமெனு நான்கெல்லையின் - கிழக்கே கடலும்
தெற்கே குமரியாறும் மேற்கே குடகநாடும் வடக்கே திருவேங்கட
மும ஆகிய நான்கெல்லையினையுடைய நிலத்து மொழியாகிய — இரு
ந்தமிழ்க்கடலுள் - இயல் இசை நாடகம் எனப்பெயர்பெற்ற பெரிய
தமிழென்னுங்கடலுள் — அரும் பொருளைந்தையும் - அவ்வறமுதலா
கிய நான்குபொருளையும் அறிதற்குக் காரணமாகிய அருமையாகிய
இயற்றமிழென்னுமிலக்கணத்தின்கூறுமை எழுத்துச்சொற் பொருள்
யாப்பணி என்றுமைந்து பொருளையும் — யாவருமுணர - இலக்கிய
ப்பழக்கத்தில் வல்லவர்மாத்திரமல்லாமல் எளியவரு மறிய — தொ
கைவகைவிரியிற்றருகென - தொகுத்தும் வகுத்தும் விரித்துஞ் செ
ய்யப்படும் யாப்பினாலே பாடித்தருகவென — துன்னாரிகலறநூறி-ப
கைவரது பகைமைகெட அவரையழித்து — இருநில முழுவதுந்தன
தெனக்கோலி - பெரியபூமிமுழுவதையுந் தன்னுடையதாகப் பற்றிக்
கொண்டு — தன்மதவாரணந் திசைதொறு நிறுவிய - தன்மதயானைகளை
எட்டுத்திக்கிலுந் திக்கியானைகளைப் போலநிறுத்திய — திறலுறுதொ
ல்சீர் - தன்னைப்பற்றிமாத்திரமல்லாமல் தன்னுடைய தகப்பன்பாட்ட
ன் முதலானவரைப்பற்றிவரும் வெற்றியிருந்த கீர்த்தியையும் — கரு
ங்கழல - பெருமை பொருந்தியவீரக்கழலையும் — வெண்குடை - வெள்
ளைக்குடையையும் — கார்நிகர்வண்கை - மேகம்போலப் பிரதியுபகார
த்தை நினையாது கொடுக்குங் கையினையும் — திருந்தியசெங்கோல்-
செம்மையாகிய செங்கோலையுமுடைய — சீயகங்கன் - சிங்கம்போன்றகங்க
ன் — அருங்கலைவினோதன் - அரியநூல்களை யாராய்தலே பொழுது
போக்கும் விளையாட்டாகவுடையவன் — அமராபரணன் - தன்மேலே
பெரியகாயம் படப்போர் செய்தலையே ஆபரணமாக வுடையவன் —
மொழிந்தனனாக-சொன்னனாக — முன்னோர் நூலின்வழியே - முன்
னோரிலக்கண நூலின்வழியே — நன்னூற் பெயரின்வகுத்தனன் - நன்
னூலென்னும்பெயரானேசெய்தனன் — பொன்மதிற்சனகை பொன்
மதில்சூழ்ந்த சனகாபுரத்துளிருக்கும் — சன்மதிமுனியருள் - சன்மதி
முனியன்பெற்ற — பன்னருஞ்சிறப்பிற் பவணந்தியென்னு நாமத்
து-சொல்லுதற்கரிய ஞானவொழுக்கச் சிறப்பினையும் பவணந்தியெ
ன்னும் பெயரினையுமுடைய — இருந்தவத்தோன் - பெரிய தவத்தி
னையுடையோன் - என்றவாறு [பவணந்தியெனவே - நூல்செய்தோ
ன்பெயரும் — முன்னோர் நூலின்வழியெனவே - நூல்வந்தவழியும் —
நான்கெல்லை யெனவே - நூல்வழக்கு நிலமும் — நன்னூலெனவே
நூலினதுபெயரும் — அரும்பொருளைந்தெனவே-நூலிற்சொல்லப்
பட்டபொருளும் — யாவருமுணரவெனவே - [illegible] இலக்கிய

வாராய்ச்சிசெய்தபின்பு இந்தநூல்கேட்கத்தகுமென் றுரியையும்—அவையாராய்ந்தோர் இந்நூல் கேட்டற் குரியா ரென்றும் அதிகாரிகளும்—அவர் அப்பொருளைந்தையும் அறிந்து சொல்லுகளின் முட்டுப்பாட்டை நீக்குதலாலே மொழித்திறத்தின் முட்டறுத்த லென்னும் பிரயோசனமும்—சீயகங்கன் மொழிந்தனனாக நன்னூற்பெயரின் வகுத்தனனெனவே - அவன்காலத்திலே பாடப்பட்டு அவனது சபையிலே அரங்கேற்றியதெனச்செய்தகாலமும்—அரங்கேற்றியவிடமும்சீயகங்கன் சொன்னதினாலும் யாவரிடத்து முண்டாகிய விரக்கத்தினாலும் வகுத்தமையால் காரணமும்—பெறப்பட்டன,]

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

# பொதுப்பாயிரம்.

க. முகவுரைபதிகமணிந்துரை நூன்முகம், புறவுரைதந்துரைபுனைந்துரைபாயிரம் ... ... ... ... ... ... ... ...

இதுபாயிரத்திற்கு வருங்காரணப்பெயர்களைச் சொல்லுகின்றது (இ-ள்.) முகவுரை - பாயிரத்தினிலக்கணங்களை முன்னே யறியவேண்டி நூலிற்கு முன் சொல்லப் படுதலினாலே முகவுரை யென்றும்—பதிகம்- ஐந்துபொதுவும் பதினொருசிறப்பும் ஆகிய பலவகைப் பொருள்களையுந் தொகுத்துச் சொல்லுதலினாலே பதிகமென்றும் — அணிந்துரை - நூலினது பெருமை முதலானவைகள் விளங்க அலங்கரித்துச் சொல்லு கையினாலே அணிந்துரை யென்றும் — நூன்முகம்- முகவுரையென்றதுபோல நூன்முகமென்றும்—புறவுரை - நூல் சொல்லிய பொருளல்லாதவைகளைச் சொல்லுதலினாலே புறவுரை யென்றும்—தந்துரை - நூலிலேசொல்லப்பட்ட பொருளல்லாதவைகளை அதற்குத்தந்து சொல்லுகையினாலே தந்துரையென்றும் — புனைந்துரை - அணிந்துரை யென்றதுபோலப் புனைந்துரை யென்றும்—பாயிரம்- பாயிரத்திற்குப்பெயர்களாம். எ-று. [பாயிரமென்பது-வரலாறு.]

உ. பாயிரம்பொதுச்சிறப் பெனவிருபாற்றே ... ...

இது மூன்பாயிர மென்றதை வகுத்துச் சொல்லு கின்றது. (இ-ள்.) பாயிரம்-பாயிரமானது — பொது - பொதுப்பாயிரமும்—சிறப்பு - சிறப்புப்பாயிரமும் — எனவிருபாற்று - எனவிரண்டு பிரிவையுடைத்தாகும். எ-று.ஏகாரம்-ஈற்றசை. (உ)

௫ நூலே நுவல்வோ னுவலுந்திறனே, கொள்வோன் கோடற்கூ ற்றுமைந்து, மெல்லாநூற்குமிவைபொதுப்பாயிரம் ... .... *

இது பொதுப் பாயிரத்தை விரித்துச் சொல்லு கின்றது. (இ-ள்.) நூற் (திறன்) நூலினதுவரலாறும் — நுவல்வோன் (திறன்) பாடஞ்சொல்லும் ஆசிரியனதுவரலாறும்— நுவலுந்திறன் - பாடஞ் சொல்லுதலினது வரலாறும்—கொள்வோன் (திறன்) பாடங்கேட்கு மாணாக்கனது வரலாறும் — கோடற்கூற்று - பாடங் கேட்கையினது வரலாறும்—எல்லா நூற்கும் - எல்லா நூலுக்கும்—ஆம் - ஆகும்ஆ லால்—இவை - இவ்வைந்து வரலாற்றையும் விளங்கக் காட்டுவது— பொதுப்பாயிரம் பொதுப்பாயிரமாகும் எ-று, (௫)

௬. நூலினியல்பே நுவலி னோரிரு, பாயிரந்தோற்றி மும்மையி னொன்றாய், நாற்பொருட்பயத்தோ டெழுமதந்தழுவி, யையிருகு ற்றமு மகற்றியம்மாட்சியோ, டெண்ணான் குத்தியினோத்துப் படல, மென்னுமுறுப்பினிற் சூத்திரங் காண்டிகை, விருத்தியாகும் விகற் பநடைபெறுமே ... ... ... ... ... ... ... ... ...*

இது முன்சொல்லிய பொதுப்பாயிரம் ஐந்தனுள் நூலினது வ ரலாற்றைச் சொல்லு கின்றது. (இ-ள்.) நூலினியல்பு - நூலினது வரலாற்றை —நுவலின்-சொன்னால்—ஓரிருபாயிரந்தோற்றி-பொது வுஞ்சிறப்புமாகிய விருவகைப்பாயிரத்தையு முன்னுடைத்தாகி —மு ம்மையினொன்றாய்-முதனூன்முதலாகியமூன்றனுள் ஒன்றாகி—நாற் பொருட்பயத்தோடு-அறமுதலாகிய நான்குபொருட் பிரயோசனத் துடனே—எழுமதந்தழுவி- உடன்படன்முதலாகிய எழுவகை மதத் தையுந்தழுவி—ஐயிருகுற்றமுமகற்றி- குன்றக்கூறன் முதலாகியபத் துக்குற்றத்தையுமொழித்து—அம்மாட்சியோடு-சுருங்கச்சொல்லன் முதலாகியபத்தழகுடனே —எண்ணான்குத்தியின் - நுதலிப்புகுதன் முதலாகியமுப்பத்திரண்டுஉத்தியைக்கொண்டு— ஓத்துப்படலமென் னுமுறுப்பினில்-இயல்அதிகாரம் என்னும் அவயவங்களுடனே—சூத் திரம் - சூத்திரமும்—காண்டிகை - காண்டிகை யுரையும் — விருத்தி விருத்தியுரையும்—ஆகும் - ஆகின்ற—விகற்பநடை - பதின் மூன்று வேறுபாட்டுநடையையும்—பெறும்-பெற்றுவரும். எ-று. (௬)

௭. முதல்வழிசார்பென நூன்மூன்றாகும் ... ... ... ...*

இது முன்மூன்று நூலென்றதை வகுத்துச்சொல்லுகின்றது. (இ-ள்) முதல்-முதனூல்—வழி-வழிநூல்—சார்பு-சார்புநூல்—என- என்று — நூல் - நூலானது —மூன்றாகும்-மூன்றுபிரிவையுடைத்தா கும். எ-று. (௭)

சு. அவற்றுள், வினையினீங்கி விளங்கியவறிவின், முனைவன்கண்டது முதனூலாகும் ... ... ... ... ... ... ... ... *

இது முதனூலாமாறு சொல்லுகின்றது. (இ-ள்.) வினையினீங்கி- வினையினின்று நீங்கி—விளங்கிய- பிரகாசித்த—அறிவின்- அறிவினையுடைய—முனைவன்-கடவுள்—கண்டது உயிர்களுக்கு ஆதிகாலத்திலே செய்தது—முதனூலாகும்-முதனூலாகும் எ-று. (சு)

எ முன்னோர்நூலின் முடிபொருங்கொத்துப், பின்னோன்வேண்டும்விகற்பங்கூறி, யழியாமரபினதுவழிநூலாகும் ... ... *

இது வழிநூலாமாறு சொல்லுகின்றது. (இ-ள்) முன்னோர் கடவுளும் அவனருள்வழிப்பட்டோருஞ்செய்த— நூலின் - நூல்களினுடைய—முடிபு- பொருண்முடிபுகள்—ஒருங்கு- முழுவதையும்—ஒத்து- நிகர்த்து—பின்னோன்- வழிநூல்செய்வோன்—வேண்டும்- முதனூலிருக்கவுந் தான்வழிநூல்வேறேசெய்தற்குக் காரணமாகவேண்டிற—விகற்பம்- வேறுபாடுகளையும்—கூறி- உடன்சொல்லி—அழியா- அழியாமலுலகத்திலே நிலைபெற்றுவிளங்காநின்ற—மரபினது-குணத்தையுடையது—வழிநூலாகும்- வழிநூலாகும்-எ-று. (எ)

அ. இருவர்நூற்கு மொருசிறை தொடங்கித், திரிபுவேறுடையது புடைநூலாகும் ... ... ... ... ... ... ... ... *

இது சார்புநூலாமாறு சொல்லுகின்றது. (இ-ள்.) இருவர்நூற்கும் - முதனூல் வழிநூல் என்று இருவகை நூல்களுக்கும்— ஒருசிறை-ஒருபுடை—தொடங்கி-பொருண்முடிபொத்து—வேறு- மற்றவைகளெல்லாம்—திரிபு ஒவ்வாமையை—உடையது ஒப்பட்டதாகியது—புடைநூலாகும்- சார்புநூலாகும். எ-று [புடை-பக்கம்] (அ)

கூ. முன்னோர்மொழிபொருளே யன்றியவர்மொழியும், பொன்னேபோற்போற்றுவமென்பதற்கு-முன்னோரின், வேறுநூல்செய்துமெனு மேற்கோளிலென்பதற்குங், கூறபழஞ்சூத்திரத்தின்கோள்

இது வழிநூலுக்குஞ் சார்புநூலுக்கும் முன் சொன்னதற்கு மேலே சிறப்புவிதி சொல்லுகின்றது. (இ-ள்.) முன்னோர் - முதனூலோர்—மொழி- சொன்ன—பொருளேயன்றி- பொருளைமாத்திரமல்லாமல்—அவர்-அவரது—மொழியும்-சொல்லையும்—பொன்னேபோல்- பொன்னைப்போலவே—போற்றுவமென்பதற்கும்- காப்பாற்றிக்கொள்வோமென்பதற்கு அடையாளமாகவும்—முன்னோரின் - முன்னோர் நூலையேசொல்லாமல் அந்நூலினின்றும்—வேறுநூல்- வழிநூல்

சார்பு நூல்களை — செய்துமெனும் - செய்தோமாயினும் — மேற்கோள் - ஆசிரியவசனமானது — இல்லெனபதற்கும் - இந்த நூலினிடத்தில்லையென்று சொல்லுங் குற்றமொழிதற்காகவும் — பழஞ் சூத்திரத்தின் கோள் - முன்னோர் சொல்லிய பொருளையல்லாமலும் அவர் சூத்திரத்தையும் — கூறு - ஒரோவிடத்திலே சொல்லு. எ-று. [எனினுமென்பது - எனுமென விகாரமாயிற்று] (௯)

௰ அறம்பொருளின்பம் வீடடைதனூற்பயனே … … ✱

இது முன்னே நாற்பொருட்பயனென்றதை வகுத்துச் சொல்லுகின்றது (இ-ள்) அறம் - தருமமும் — பொருள் - அர்த்தமும் — இன்பம் - காமமும் — வீடடைதல் - மோக்ஷமடைதலும் — நூல் - நூலிற்சொல்லப்படும் — பயன் - பிரயோசனமாம். எ-று (௰)

௰௧. எழுவகைமதமே யுடன்படன்மறுத்தல், பிறர்தம்மதமேற் கொண்டுகளைவே, தாஅனாட்டித்தனாது நிறுப்பே, யிருவர்மாறுகோ ளொருதலைதுணிவே, பிறர்நூற்குற்றங் காட்டலேனைப், பிறிதொடுபடா அன்றன் மதங்கொளலே … … … … … … ✱

இது முன்எழுவகைமதமென்றதை வகுத்துச்சொல்லுகின்றது. (இ-ள்.) எழுவகைமதம் - எழுவகைமதமாவன — உடன்படல் - பிறர்மதத்திற்கு உடன்படலும் — மறுத்தல் - பிறர்மதத்தை மறுத்தலும் — பிறர் தம்மதமேற் கொண்டுகளைவு - பிறர்மதத்திற்கு உடன்பட்டுப்பின்பு மறுத்தலும் — தாஅனாட்டித்தனாது நிறுப்பு - தானொருபொருளை எடுத்துநாட்டி அதனையிடந்தோறும் நிறுத்துதலும் — இருவர் மாறுகோ ளொருதலைதுணிவு - இருவர்ஒன்றற்கொன்று விரோதமாகக்கொண்ட விரண்டனுள் ஒன்றனிடத்துத் துணிதலும் — பிறர் நூற்குற்றங் காட்டல் - பிறர் நூல்களிலிருக்கின்ற குற்றத்தைக் காட்டுதலும் — பிறிதொடுபடாஅன்றன்மதங்கொளல் - பிறர்மதத்திற்கு உடன்படாதுதன்மதத்தையேகொள்ளுதலுமாம். எ-று. (௰௧)

௰௨. குன்றக்கூறன்மிகைபடக்கூறல், கூறியதுகூறன்மாறுகொளக்கூறல், வழூஉச்சொற்புணர்த்தல், மயங்கவைத்தல்வெற்றெனத்தொடுத்தன் மற்றொன்றுவிரித்தல், சென்றுதேய்ந்திறுதனின்றுபயனின்மை, யென்றிவையீரைங்குற்றநூற்கே … … … … … … ✱

இது முன்பத்துக்குற்றமென்றதை வகுத்துச்சொல்லுகின்றது. (இ-ள்.) குன்றக்கூறல் - குறித்தபொருளைக்காட்டுதற்குரிய சொற்களிற் குறைவுபடச்சொல்லுதலும் — மிகைபடக்கூறல் - அதிகப்படச்சொல்லுதலும் — கூறியதுகூறல் - முன்சொன்ன ஒருபொருளையேபின்னுஞ்

சொல்லுதலும்—மாறுகொளக்கூறல்- முன்சொன்னதெ- முன்னே
ன்சொல்லும்பொருள் விரோதங்கொள்ளச்சொல்லுதலும்— வழூஉ
சொற்புணர்த்தல்- குற்றமானசொற்களைச் சேர்த்தலும்—மயங்கவைத்
தல்- ஒன்றைமற்றொன்றாக மயங்கவைத்தலும்—வெற்றெனத்தொடு
தல் - பொருள்வெளிப்படையாகத் தோன்றச் சூத்திரித்தலு மற்
றொன்றுவிரித்தல் - சொல்லத்தொடங்கியதைவிட்டு மற்றொருக்கை
ளை விரித்தலும்— சென்றுதேய்ந்திறுதல்- சொல்லின் முடிபுபொ
ருளின்முடிபும் முன் சிறப்பாக நடந்து அந்நடைபின்னை தேய்க்
முடிதலும்—நின்றுபயனின்மை - சொற்களிருந்தும் ஒருபிரயோஜ
னமில்லாமற்போதலும்—என்றிவை- என்றுசொல்லப்பட்டவிவை,
நூற்கு- நூலுக்கு- ஈரைங்குற்றம்பத்துக்குற்றங்களாகும்-எ-று. (௰௪)

௰௫. சுருங்கச்சொல்லல் விளங்கவைத்த, னவின்றோர்க்கினிமை ந
ன்மொழிபுணர்த்த, லோசையுடைமையாழமுடைத்தாதல், முறையின்
வைப்பே யுலகமலையாமை, விழுமியதுபயத்தல் விளங்குதாரணத்த, தா
குதனூலிற்கழகெனும்பத்தே ... ... ... ... ... ... *

இது முன்பத்தழகென்றதனை வகுத்துச் சொல்லுகின்றது
(இ-ள்) சுருங்கச்சொல்லல்- சொல்லுகள்வீணாக விரியாமற்சுருங்கி நி
ற்கச்சொல்லுதலும்—விளங்கவைத்தல்-பொருளைச்சந்தேகத்துக்கு இ
டமாகாமல் விளங்கவைத்தலும்—நவின்றோர்க்கினிமை-வாசித்தவருக்
கு இன்பத்தைத்தருதலும்—நன்மொழிபுணர்த்தல்- நல்லசொற்களைச்
சேர்த்தலும்—ஓசையுடைமை- சந்தவின்பமுடைத்தாதலும்- ஆழ்ந்த
கருத்தையுடைத்தாதலும்—முறையின்வைப்பு- அதிகாரமுதலானவை
களைக் காரணகாரியமுறையாகவைத்தலும்— உலகமலையாமை - உயர்ந்
தோர்வழக்கத்தோடு மாறுகொள்ளாமையும்-விழுமியது பயத்தல்- சி
றப்பாகியபொருளைத்தருதலும்-விளங்குதாரணத்ததாகுதல்-விளங்கிய
உதாரணத்தையுடையதாதலும்— நூலிற்கு- நூலினுக்கு—அழகெனு
ம்-அழகென்றுசொல்லப்படும்—பத்து-பத்தும்; எ-று. (௰௫)

௰௬. நுதலிப்புகுதலோத்துமுறைவைப்பே, தொகுத்துச்சுட்ட
ல்வகுத்துக்காட்டன், முடித்துக்காட்டன், முடிவிடங்கூற, றானெடுத்து
மொழிதல்பிறன்கோட்கூறல்சொற்பொருள்விரித்தறொடர்ச்சொற்பு
ணர்த்த, லிரட்டுறமொழித லேதுவின்முடித்த, லொப்பின்முடித்தன்
மாட்டெறிந்தொழுக, லிறந்ததுவிலக்கலெதிரதுபோற்றன், முன்மொ
ழிந்துகோடல் பின்னதுநிறுத்தல், விகற்பத்தின்முடித்தன் முடிந்தது
முடித்த, லுரைத்துமென்ற லுரைத்தாமென்ற, லொருதலைதுணித லெடு
த்துக்காட்ட, லெடுத்தமொழியி னெய்தவைத்த, லின்னதல்லதிதுவெ
னமொழித, லெஞ்சியசொல்லினெய்தக்கூறல், பிறநூன்முடிந்ததுதா

சார்பு நூல்களை, நன்குறிவழக்க மிகவெடுத்துரைத்தல், சொல்லின் முடிவி
ஆசிரியவசன ன்முடித்தல், ஒன்றினமுடித்த றன்னினமுடித்தல், லுய்த்து
யென்று செ ப்பன வுத்தியெண்ணான்கே... ... ... ... ... ...
கோள் - மு
றையும் — து முன் முப்பத்திரண்டு உத்தியென்றதனை வகுத்துச்சொல்
எனுமொ றது (இ-ள்.) நுதலிப்புகுதல் - இதனைச்சொல்லுவேனென்று
ய லிப்புகுதலும் — ஒத்துமுறைவைப்பு - இயல்களைக் காரணகா
ரியமுறையால் வைத்தலும் — தொகுத்துச்சுட்டல் - பலவுந்தொகுத்து
ச்சுட்டலும் — வகுத்துக்காட்டல் - அப்படித் தொகுத்துக்காட்டிய
ம்-கங்களை வேறுவேறு விரித்துக்காட்டுதலும் — முடித்துக்காட்டல் தா
லப்மேலோர்முடித்தவாறுமுடித்துக்காட்டுதலும் — முடிவிடங்கூறல் -
ான்சொல்லும் இலக்கணத்திற்கு இலக்கியந்தோன்றுமிடத்தைச்சொ
ல்லுதலும் — தானெடுத்துமொழிதல் - தான்பழையசூத்திரத்தை யெ
டுத்துச்சொல்லுதலும் — பிறன்கோட்கூறல் - தன்னூலிற்பிறனதுகோ
ட்பாட்டைச்சொல்லுதலும் — சொற்பொருள்விரித்தல் - சொல்லினது
பொருள்விளங்குதற்கு உருபுமுதலானவைகளை விரித்துச்சொல்லுத
லும் — தொடர்ச்சொற்புணர்த்தல் - ஒன்றற்கொன்று சம்பந்தமுடை
யசொல்லுகளைச்சேர்த்து வைத்தலும் — இரட்டுறமொழிதல் - ஒருவா
க்கியத்தில் இரண்டுபொருட்படச் சொல்லுதலும் — ஏதுவின்முடித்
தல் - முன் காரணம் விளங்காததாகச் சொல்லப் பட்ட ஒன்றற்குப்
பின்காரணம் விளக்கக்காட்டி முடிவுசெய்தலும் — ஒப்பின்முடித்த
ல் - ஒன்றற்குச்சொல்லப்பட்ட இலக்கணம் வேறொன்றற்கும் ஒத்
துவருமாயின் அதற்கும் அதுவே இலக்கணமாக முடிபுசெய்தலும்
— மாட்டெறிந்தொழுகல் - ஒன்றற்குச்சொல்லப்பட்ட இலக்கணத்தை
அதனைப்பெறுதற்குரிய மற்றொன்றற்கு மாட்டிச்சொல்லி நடத்த
லும் — இறந்தது விலக்கல் - முற்காலத்துவழங்கிய இலக்கணங்களு
ளே பிற்காலத்துவழங்காமற்போனவைகளை நீக்குதலும் — எதிரதுபோ
ற்றல் - முற்காலத்து வழங்காமற் பிற்காலத்து வழங்கிவருகின்ற இ
லக்கணத்தைத் தழுவிக்கொள்ளுதலும் — முன்மொழிந்துகோடல் -
முன்னே ஒன்றனைச்சொல்லிப் பின்பு அதனைவேண்டுமிடந்தோறும்
எடுத்துக்கொள்ளுதலும் — பின்னதுநிறுத்தல் - ஒருபொருளுக்குக்க
ருவியாகமுன்வைத்தற்குரியது அங்கேவைத்தற்கு இடம்பெறாதாயி
ன் அப்பொருளின்பின்னே அதனைவைத்தலும் — விகற்பத்தின் மு
டித்தல் - விளங்குதற்பொருட்டுப் பலவேறுபாடுகளின் சிறப்புவாய்
பாட்டான் முடித்தலும் — முடிந்ததுமுடித்தல் சிறப்புவாய்பாட்டா
ன்முடிந்ததைப் பொதுவாய்பாட்டான்முடித்தலும் — உரைத்துமெ
ன்றல் - பின்னே சொல்லப்படுவதை முன்னே ஒருநிமித்தத்திலே சொ
ல்லவேண்டின் இதனைப்பின்னே சொல்லுவோமென்...து கோ

ன்ற அங்கேசுருக்கிச்சொல்லுதலும்—உரைத்தாமென்றல்-முன்னே ஒருநிமித்தத்தினாலே சொல்லப் பட்டதைப்பின்னே சொல்ல வேண்டியவிடத்து இதனைமுன்னேதானேசொல்லினோமென்பது தோன்றச்சொல்லாதுவிடுதலும்— ஒருதலை துணிதல் - ஒன்றற்கொன்று மாறுபாடாகக்கொண்டவிரண்டுபக்ஷத்துள் ஒருபக்ஷந்துணிதலும் — எடுத்துக்காட்டல்-தான்சொல்லுமிலக்கணத்திற்குத் தானே இலக்கியத்தை எடுத்துக்காட்டுதலும் — எடுத்தமொழியினெய்தவைத்தல்-தான் சொல்லும் இலக்கணத்தைத்தானெடுத்துக்காட்டிய இலக்கியத்தில்இருக்கவைத்தலும்—இன்னதல்லதிதுவெனமொழிதல் சந்தேகிக்க நின்றவிடத்துஇப்படிப்பட்டதல்லாதது இதுவெனச் சொல்லுதலும் — எஞ்சியசொல்லினெய்தக்கூறல்- சொல்லாதுவிடப்பட்ட வற்றிற்குஞ்சொல்லப்பட்டதனால் இலக்கணம்பொருந்தச்சொல்லுதலும் — பிறநூன்முடிந்ததுதானுடன்படுதல்- பிறநூலிலேமுடிந்த முடிபைத்தான் அங்கீகரித்தலும் — தன்குறிவழக்கமிகவெடுத்துரைத்தல் - நூதனமாகத்தான்குறித்துவழங்கும் வழக்கத்தையே பலவிடங்களிலு மெடுத்துச்சொல்லுதலும் — சொல்லின்முடிவினப்பொருண்முடித்தல்-சொல்லின்முடிவிலேஅதன்பொருளையுமுடித்தலும் — ஒன்றினமுடித்தல் ஒன்றைச்சொல்லுமிடத்தில் அதற்கு இனமாகிய மற்றொன்றையும் விரியாதிருக்கவேண்டி அதனுடன்முடித்தலும் — தன்னினமுடித்தலென்பதுமாகும்-பொருளதுமேல் — உய்த்துணரவைப்பு-சிலசூத்திரவிதிகளைக்கொண்டு ஆராய்ந்தறியவொருபொருளைவைத்தலும் — என்வுத்தி - எனத்தந்திரவுத்திகள்—எண்ணான்கு- முப்பத்திரண்டாம். எ-று (ஒன்றினமுடித்தல் - தன்னினமுடித்தல - இரண்டும் ஒருத்தி- முன்சொன்ன மதங்களுக்கும் இவ்வுத்திகளுக்கும் உதாரணம இந்நூலுள்ளே பின்வருமிடந்தோறும் காட்டப்படும ) (௰௪)

௰௫. நூற்பொருள்வழக் கொடுவாய்ப்பக்காட்டி, யேற்புழியறிந்
திதற்கிவ்வகையாமெனத், தகும்வகைசெலுத்துதறந்திரவுத்தி......

இது உத்திக்கு இலக்கணஞ் சொல்லுகின்றது. (இ-ள்) நூல்-ஓரிலக்கண நூலாலறிவிக்கப்படுகின்ற—பொருள்-பொருளை—வழக்கொடு - உலகவழக்கொடுஞ் செய்யுள்வழக்கோடும — வாய்ப்ப - பொருந்த—காட்டி- காணபித்து— ஏற்புழி - ஏற்குமிடத்தை — அறிந்து மற்றோரிலக்கியநூலி லுமறிந்து — இதற்கு-இவ்விடத்திற்கு—இவ்வகையாமென-இவ்வகையாகுமென்று நினைத்து — தகும்வகை - தக்கவகையாக—செலுத்துதல்-நடத்துவது — தந்திரவுத்தி - தந்திரவுத்தியாம் எ-று (தந்திரம் நூல் - உத்தியாவது மட்டுப் படுபொருளை உத்தியென்றதாகுபெயர்,) (௰௫)

௰௬. நேரின மணியை நிரல்பட வைத்தாங், கோரினப்பொருளையொருவழிவைப்ப, தோத்தெனமொழிப வுயர்மொழிப்புலவர் .*

இது ஓத்துறுப்பாமாறுசொல்லுகின்றது. (இ-ள்.) நேரின-ஒருசாதியாயுள்ள—மணியை-மணிகளை — நிரல்பட-வரிசையாக — வைத்தாங்கு - பதித்ததுபோல—ஓரினம் - ஒருசாதியாயுள்ள — பொருளை - பொருள்களை — ஒருவழி - ஒருவழிப்பட — வைப்பது- சொல்லுவது — ஓத்தென-இயலுறுப்பென்று— மொழிப - சொல்லுவார் —உயர்மொழி-உயிர்க்குறுதியைத் தருகின்றஉண்மைச் சொல்லுகளை உடைய—புலவர்-வித்துவான்கள். எ-று. (௰௬)

௰௭ ஒருநெறியின்றி விரவியபொருளாற், பொதுமொழிதொடரினதுபடலமாகும் ... ... ... ... ... ... ... ...*

இது அதிகாரவுறுப்பைச் சொல்லுகின்றது. (இ-ள்) ஒருநெறியின்றி-ஒருவழிப்படாமல் — விரவியபொருளால் - கலந்தபொருள்களோடுபொருந்தி—பொதுமொழி பலபொருள்களைத் தரும்பொதுச்சொல்லுகள்—தொடரின் - ஒரோவிடத்தன்றித்தொடர்ந்துவந்தால் —அது-அது—படலமாகும்-படலவுறுப்பாகும் எ-று. (௰௭)

௰௮. சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருளைச் செவ்வனாடியிற்செறித்தினிதுவிளக்கித், திட்பநுட்பஞ்சிறந்தனசூத்திரம்... ...*

இது சூத்திரமாமாறுசொல்லுகின்றது, (இ-ள்) ஆடியின் - பெரியசரீரமுதலானவைகளின் சாயையைத் தனக்குள்ளே செவ்வையாக வடக்கி இனிதாகக்காட்டுகின்ற கண்ணாடியைப் போல — சில்வகையெழுத்தில் - சிலவகையெழுத்துகளாலாகிய சொல்லுகளில் — பல்வகைப்பொருளை-பலவகைப் பட்ட-பொருள்களை—செவ்வன் -செவ்வையாக—செறித்து-அடக்கி—இனிது இனிதாக —விளக்கி - காட்டி—திட்பம்-பலபொருளினுடையதிண்மையும்— நுட்பம் - அவற்றினுடைய நுண்மையும்— சிறந்தன-சிறந்துவருவன — சூத்திரம் - சூத்திரங்களாகும், எ-று, (௰௮)

௰௯, ஆற்றொழுக்கரிமா நோக்கந்தவளைப், பாய்த்துப் பருந்தின்வீழ்வன்னசூத்திரநிலை ... ... ... ... ... ... ... *

இதுவுமது, (இ-ள்) ஆற்றொழுக்கு- நடுவில்விடாதுசெல்லுகின்றஆற்றுவெள்ளத்தினதுசெல்லுகையையும்—அரிமாநோக்கம் - முன்னும்பின்னும்பார்க்கின்றசிங்கத்தினதுபார்வையையும் —தவளைப்பாய்த்து-நடுவேயிடம்விட்டுக்குதிக்கின்றதவளையினதுகுதித்தலையும்— பருந்தின்வீழ்வு நெடுந்தூரத்திலிருந்துஒன்றைவெளவிப்போதற்கு

வீழ்கின்றபருந்தினது வீழ்ச்சியையும்—அன்ன - போலும் — சூத்திரம்-முன்சொன்னசூத்திரங்கள் — நிலை-ஒன்றோடொன்றுதொடர்ந்து நிற்குநிலைகள். எ-று. (௰௯)

**௨௰. பிண்டந்தொகைவகைகுறியேசெய்கை, கொண்டியல்புறனடைக்கூற்றனசூத்திரம் ... ... ... ... ... ... ... ***

இதுவுமது. (இ-ள்) பிண்டம்-பலதிறப்பொருள்களுக்கும்பொதுவாகப்பிண்டமாக்கிச்சொல்லும்பிண்டசூத்திரமும்—தொகை - அப்பலதிறப்பொருள்களையும் வேறுவேறாகத் தொகுத்துச் சொல்லுந் தொகைச்சூத்திரமும் — வகை - அத்தொகுத்துச் சொல்லப்பட்டவைகளைவகுத்துச்சொல்லும்வகைச்சூத்திரமும்—குறி-இவையுயிர்-இவைமெய்யெனவறியவருங் குறிச்சூத்திரமும்—செய்கை - புணர்ச்சிவிதியறிந்து புணர்த்தலையும் முடிபுவிதியறிந்து முடித்தலையும் செய்யுஞ்செய்கைச்சூத்திரமும்—கொண்டியல்புறனடை - இவைகளை அலைவறக்கொண்டு இவைகளின்புறத்து அடையாகவருகின்ற புறனடைச்சூத்திரமுமாகிய—கூற்றன - ஆறுபிரிவையுடையன — சூத்திரம்-சூத்திரங்கள். எ-று. [விரிவகையிலே சேர்தலால் வேறுசொல்லவில்லை—ஆறுவிதமாகச் சொன்னாலும் குறிச்சூத்திரம் செய்கைச் சூத்திரம் என்னுமிரண்டனுள்ளேமற்றைநான்கும் அடங்கும்.] (௨௰)

**௨௧. பாடங் கருத்தே சொல்வகை சொற்பொரு, டொகுத்துரையுதாரணம் வினாவிடை விசேடம், விரிவதிகாரந் துணிவுபயனோ, டாசிரியவசனமென்றீரேழுரையே. ... ... ... ... ...***

இது முன் காண்டிகைவிருத்தி என்ற உரைகளைச்சொல்லத்தொடங்கி உரையினது பொதுவிலக்கணத்தைச் சொல்லுகின்றது.— (இ-ள்.) பாடம்-பாடமும்—கருத்து - கருத்துரையும்—சொல்வகை-சொல்லுக்குப்பொருளைவகுத்துரைத்தலும் — சொற்பொருள்- பதப்பொருளும்—தொகுத்துரை- தொகுத்துரைத்தலும்—உதாரணம்-உதாரணமும்—வினா-வினாவும்—விடை-உத்தரமும்—விசேடம்- வேண்டியவைகளைத் தந்துரைத்தலும் — விரிவு - வேற்றுமைத்தொகைமுதலானவைகளை விரித்துரைத்தலும்—அதிகாரம் - அதிகாரத்தோடு பொருந்தவுரைத்தலும் — துணிவு - இதற்கு இதுவேபொருளென வுரைத்தலும்—பயன்- பயனையுரைத்தலும்—ஆசிரியவசனம் - ஆசிரியவசனங்காட்டுதலும்—என்று-என்றுசொல்லப்பட்ட—ஈரேழ் - பதினான்குவகையாலுமுரைக்கப்படும்—உரை- நூலுக்குஉரை-எ-று. (௨௧)

**௨௨. கருத்துப்பதப்பொருள் காட்டுமூன்றினு, மவற்றொடுவினாவிடையாக்கலானுஞ், சூத்திரத்துட்பொருடோற்றுவகாண்டிகை. ***

இது காண்டிகையுரையாமாறு சொல்லுகின்றது, (இ-ள்) கருத்து-கருத்துரையும் — பதப்பொருள் - பதவுரையும்—காட்டு - உதாரணமும்—மூன்றினும் - ஆகியமூன்றனையுஞ் சொல்லுதலாலும் — அவற்றொடு-அம்மூன்றனோடு—வினா-வினாவும்—விடை - உத்தரமும் —ஆக்கலானும் - ஆகியவிரண்டனையுங் கூட்டிச் சொல்லுதலாலும்— சூத்திரத்துள்-சூத்திரத்துளிருக்கின்ற—பொருள்-பொருளை —தோற்றுவ-காட்டுவன—காண்டிகை-காண்டிகையுரைகளாம்,எ-று, (௨௨)

௨௩. சூத்திரத்துட்பொரு ளன்றியுமாண்டைக், கின்றியமையா தியாவையும் விளங்கத், தன்னுரையானும் பிறநூலானு, மையமகல வைங் காண்டிகையுறுப்பொடு, மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி ... ... ... ... ... ... ... ... ... ... ... *

இது விருத்தியுரையாமாறு சொல்லுகின்றது. (இ-ள்.) சூத்திரத்துள்-சூத்திரத்திலுள்ள—பொருளன்றியும் - பொருளையல்லாமலும் —ஆண்டைக்கு - அவ்விடங்களுக்கு — இன்றியமையாதியாவையும்- இல்லாதுநிறையாதவெல்லாப்பொருள்களும்—விளங்க - விளங்கும்படியாக—தன்னுரையானும் - தானுரைக்குமுரையாலும் —பிறநூலானும்-ஆசிரியவசனங்களாலும் — ஐங்காண்டிகையுறுப்பொடு - முன்சொன்ன காண்டிகையுரையின் அவயவமாகிய ஐந்தனோடும் — ஐயமகல - சந்தேகந்தீர—மெய்யினை- மெய்மைப்பொருளை — எஞ்சாது- குறையாமல்—இசைப்பது - விரித்துரைப்பது — விருத்தி - விருத்தியுரையாகும். எ-று (சூத்திரத்துட்பொருளன்றியு மென்றதால்- முன்சொன்ன பதினான்கு உறுப்புகளையுங் கொண்டுவருவது விருத்தியுரையென்றதாயிற்று.) (௨௩)

௨௪. பஞ்சிதன்சொல்லாப் பனுவலிழையாகச், செஞ்சொற்புலவனேசேயிழையா - வெஞ்சாத, கையேவாயாகக் கதிரோமதியாக, மையிலா நூன்முடியுமாறு ... ... ... ... ... .. ... *

இது நூலென்னும் பெயர்வருமாறு சொல்லுகின்றது. (இ-ள்.) இதன்சொல்-இதனதுசொல்—பஞ்சா-பஞ்சாகவும் —பனுவல்-செய்யுள்—இழையாக-இழையாகவும்— செஞ்சொற்புலவன் - செவ்வையாகிய சொல்லுகளையறிந்தபுலவன் —சேயிழையா- நூற்கின்றபெண்ணாகவும்—எஞ்சாத-குறையாத—வாய்-வாய்—கையாக - கையாகவும் — மதி-அறிவு—கதிராக-கதிராகவும்— மையிலா-குற்றமில்லாத — நூல் இந்நூலானது —முடியுமாறு - முடியும்வழி இதுவாகும், ஆகையால் நூலென்றது உவமவாகுபெயராம்-எ-று. (௨௪)

௨௫. உரத்தின்வளம் பெருக்கி யுள்ளியதீமைப், புரத்தின்வள முருக்கிப்பொல்லா - மரத்தின், கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதே போன்மாந்தர்,மனக்கோட்டந்தீர்க்குநூன்மாண்பு ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) புரத்தின் - உடம்பினுள்ளிருக்கின்ற — உரத்தின் வளம் - அறிவின்வளத்தை — பெருக்கி - வளர்வித்து — உள்ளிய - நினைக்கப்பட்ட — தீமைவளம் - அறியாமையின்வளத்தை — முருக்கி - கெடுத்து — பொல்லாமரத்தின் - பொல்லாதமரத்தினது — கணக்கோட்டம் - கணம்பொருந்தியகோணலை — நூல் - எற்றுநூலானது — தீர்க்கும் நீக்கும் — அஃதேபோல் - அதுபோலவே — நூல் - கல்விநூலானது — மாந்தர் - மனிதரது — மனக்கோட்டம் - மனத்தினதுகோணலை — தீர்க்கும் - நீக்கும் — மாண்பு - அந்நூல்போலச் செப்பஞ்செய்யு மம்மாட்சிமையாலும் நூலென்றது உவமவாகுபெயராம். எ-று. (௨௫)

**௨௬.** குலனருடெய்வங் கொள்கைமேன்மை, கலைபயிறெளிவு கட்டுரைவன்மை, நிலமலைநிறைகோன் மலர்நிகர் மாட்சியு, முலகியலறிவோ டுயர்குணமினையவு, மமைபவ னூலுரை யாசிரியன்னே ... *

இது நிறுத்தமுறையாலே ஆசிரியனதுவரலாற்றைச் சொல்லுகின்றது. (இ-ள்.) குலன் - நல்லசாதியும் — அருள் - கருணையும் — தெய்வங்கொள்கை - கடவுள்வழிபாடும் — மேன்மை - மேன்பாடும் — கலைபயிறெளிவு - நூல்களிலே பழகிய தெளிவும் — கட்டுரைவன்மை - தொடுத்துச்சொல்லுகின்ற உரைவலிமையும் — நிலமலைநிறைகோன் மலர்நிகர் - நிலத்தையு மலையையுந் துலாக்கோலையும் மலரையும்நிகர்க்கின்ற — மாட்சியும் - குணங்களும் — உலகியல் - உலகநடையை — அறிவு - அறியுமறிவும் — உயர்குணம் - உயர்வாகியகுணங்கள் — இனையவும் - இவைபோல்வன பிறவும் — அமைபவன் - நிறைந்திருப்பவன் — நூலுரையாசிரியன் - நூல்கற்பிக்கும் ஆசிரியனாவான். எ-று. (௨௬)

**௨௭** தெரிவரும்பெருமையுந் திண்மையும்பொறையும், பருவமுயற்சி யளவிற்பயத்தலு, மருவியநன்னில மாண்பாகும்மே ... *

இது முன்சொன்ன உபமானத்தின் குணத்தை விரித்துச்சொல்லுகின்றது. (இ-ள்.) தெரிவரும் பெருமையும் - பிறராலறியப்படாத உருவத்தின் பெருமையும் — திண்மையும் - பெரியபாரஞ்செய்து தன்மேலே நெருங்கினவைகளாற் கலங்காத வலிமையும் — பொறையும் - தன்னையடுத்தமனிதர் தோண்டுதலாதியாகிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கின்ற பொறுமையும் — பருவமுயற்சியளவிற்பயத்தலும் - பருவத்திலே உழவர்செய்கிற முயற்சியளவிற்குத்தக அவர்க்குப்பயனைத் தருதலும் — நன்னிலம் - நல்லநிலத்தினிடத்து — மருவிய - பொருந்திய — மாண்பாகும் - குணங்களாகும். எ-று. [பிறரா லறியப்படாத கல்வியறிவின்பெருமையும் பெரியவாதஞ்செய்து தன்மேலே நெருங்கினவ

நாற் கலங்காதவலிமையுந் தன்னையடுத்த மாணாக்கர் இகழ்தலாதியாகிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கின்ற பொறுமையும் பருவத்திலே மாணாக்கர்செய்கிற முயற்சியளவிற்குத்தக அவர்க்குப்பயனைத்தருதலும் ஆசிரியனிடத்துப் பொருந்திய குணங்களாதலால்- நிலம் அவனுக்கு உபமானமாயிற்று ] (௨௭)

௨௮. அளக்களாகா வளவும்பொருளுந், துளக்கலாகா நிலையுந்தோற்றமும், வறப்பினும்வளந்தரும்வண்மையுமலைக்கே ... ... ...*

இதுவுமது. (இ-ள்.) அளக்களாகாவளவும் - அளவுசெய்யப்படாத தன்வடிவத்தினளவும்— (அளக்கலாகாப்) பொருளும் - அளவுசெய்யப்படாதபலவகைப்பொருளும்— துளக்கலாகாநிலையும் - எப்படிப்பட்ட வலிமையுடையவராலும் அசைக்கப்படாத உருவத்தினிலையும்— தோற்றமும் - நெடுந்தூரத்திலுள்ளாராலுங் காணப்படும் உயர்ச்சியும் —வறப்பினும் வளந்தரும் வண்மையும்- மழைபெய்யாமல் வறந்தகாலத்திலுந் தன்னைச்சேர்ந்த உயிர்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கிற கொடையும்— மலைக்கு-மலைக்குள்ள குணங்களாகும் எ-று [அளவுசெய்யப்படாத தன்கல்வியினளவும் அளவுசெய்யப்படாத பலவகை நூற்பொருளும் எப்படிப்பட்ட புலமையை யுடையோராலும் அசைக்கப்படாத கல்வியறிவினிலையும் நெடுந்தூரத்திலுள்ளாராலும் அறியப்படுமுயர்ச்சியும் பொருள்வருவழிவறந்த காலத்திலுந் தன்னைச்சேர்ந்த மாணாக்கருக்குக் கல்விப்பொருளைக் கொடுக்கின்ற கொடையும் ஆசிரியனுக்குள்ள குணங்களாதலால் மலைஅவனுக்கு உபமானமாயிற்று.]

௨௯. ஐயந்திரப் பொருளையுணர்த்தலு, மெய்ந்நடுநிலையு மிகுநிறைகோற்கே ... ... ... ... ... ... ... ... ...*

இதுவுமது. (இ-ள்.) ஐயந்திரப் பொருளை யுணர்த்தலும்-சந்தேகந்திர நிறுக்கப்பட்ட பண்டத்தினளவைக் காட்டலும் — மெய்ந்நடுநிலையும்-உண்மைபெறத் தான் இரண்டு தட்டுகளுக்கும் நடுவே நிற்கையும்— நிறைகோற்கு- தராசுகோலின்கண்—மிகும்- குணங்களாகமிகும். எ-று. [சந்தேகந்திர வினவப்பட்ட சொற்பொருளி னியல்பைக்காட்டலும் புலவரிருவர் மாறுபட்டாராயின் உண்மைபெறத்தான் அவ்விருவருக்கும் நடுவாக நிற்கையும் ஆசிரியன்கட் குணங்களாகமிகும் ஆதலால் நிறைகோல் அவனுக்கு உபமானமாயிற்று.] (௨௯)

௩௰. மங்கலமாகியின்றியமையா, தியாவருமகிழ்ந்து மேற்கொளமெல்கிப், பொழுதின்முகமலர்வுடையதுபூவே ... ... ... ...*

இதுவு மது (இ-ள்) மங்கலமாகி - சுபச்செய்கைக்குரியதாகி — இன்றியமையாது - யாதொருசெயலும் அலங்கரிக்குந் தானில்லாதுமுடியாதாக — யாவருமகிழ்ந்துமேற்கொள - கண்டோர்யாவருங் களித்துமேலாகத்தன்னைச்சூடிக் கொள்ள — மேவி - மெல்லியகுண முடையதாகி — பொழுதின்முகமலர்வுடையது — மலர்தற்குரிய காலத்திலே முகம்விரிதலையுடையது — பூ - பூவாகும். எ-று [சுபச்செய்கைக் குரியனாகி யாதொரு செயலுஞ்சிறப்பிக்குந் தானில்லாது முடியாதாகக்கண்டோர்யாவருங்களித்து மேலாகத் தன்னைவைத்துக்கொள்ள மெல்லியகுணமுடையவனாகிப்பாடஞ்சொல்லுதற்குரிய காலத்திலேமுகமலர்தலையுடையவன் ஆசிரியனாதலால் - பூ அவனுக்குஉபமானமாயிற்று]

௲௧ மொழிகுணமின்மையு மிழிகுணவியல்பு, மழுக்காறவாவ ஞ்சமச்சமாடலுங், கழற்குடமடற் பனைபருத்திக்குண்டிகை, முடத்தெங்கொப்பென முரண்கொள்சிந்தையு, முடையோரிலரா சிரியராகுதலே ... ... ... ... ... ... ... ... ... ... *

இது ஆசிரியராகாதவரிவரென்று சொல்லுகின்றது. (இ-ள்.) மொழிகுணமின்மையும் - பாடஞ்சொல்லுங் குணமில்லாமையையும் — இழிகுணவியல்பும் - இழிகுணமாகிய சுபாவத்தையும் — அழுக்காறு - பிறருக்கு வருங்கல்வியைக்குறித்துக் கொள்ளும் பொறாமையையும் — அவா - பொருளின்மேலதிகமாகவைக்கு மாசையையும் — வஞ்சம் - மெய்ப்பொருளைமறைத்துப் பொய்ப்பொருளைக் காட்டி வஞ்சித்தலையும் — அச்சமாடலும் - கேட்போர்க்கு அச்சமுண்டாகப்பேசுதலையும் — கழற்குடமடற்பனை பருத்திக்குண்டிகை முடத்தெங்கு - கழற்குடமும்மடற்பனையும்பருத்திக்குண்டிகையும் முடத்தெங்கும் ஆகியநான்கனையும் - ஒப்பென - ஒப்பென்றுசொல்ல — முரண்கொள்சிந்தையும் - மாறுபாடுகொண்டகருத்தையும் — உடையோர் - தம்மிடத்திலுடையவர் — ஆசிரியராகுதல் - கற்பிக்கும் ஆசிரியராகுதல் — இலர் - இலராவர் எ-று. (௲௧)

௲௨. பெய்தமுறையன் றிப்பிறழவுடன்றருஞ், செய்திகழற்பெய் குடத்தின்சீரே ... ... ... ... *

இது முன்சொன்ன உபமானத்தின்குற்றத்தை விரித்துச்சொல்லுகின்றது. (இ-ள்.) பெய்தமுறையன்றி - தன்னுள்ளே போட்டமுறையினலல்லாமல் — பிறழ - முன்போடப் பட்டவையும் பின்போடப்பட்டவையும் அம்முறை பிறழ்ந்துபோக — உடன்றரும் - விரைவிலே தன்னுள்ளேகொண்ட கழற்காய்களைக்கொடுக்கின்ற — செய்தி - செய்கையானது — கழற்பெய்குடத்தின்சீர் - கழற்காய்போட்ட குடத்தினது குற்றமாம், எ-று, [தமக்குக்கற்பித்த முறையினலல்லாமல் முன்

கற்பிக்கப் பட்டவையும் பின்கற்பிக்கப் பட்டவையும் அம்முறையி
ழந்துபோக விரைவிலே தம்முள்ளே கொண்ட நூற்பொருள்களை
த்தருகின்றசெய்கையானது ஆசிரியராகாதவரது குற்றமாதலால் - க
ழற்குடம் அவருக்கு உபமானமாயிற்று.] (௩௨)

௩௩. தானே தரக்கொளினன்றித் தன்பால், மேவிக் கொளக்கொ
டாவிடத்ததுமடற்பனை ... ... ... ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) தானேதர-தானே தன்னிடத்துள்ள பழங்க
ளைத்தர—கொளினன்றி-கொண்டாற்கொள்ளலாமேயல்லாமல்— தன்
பான்மேவிக்கொள-ஒருவர்தன்னிடத்துநெருங்கிவந்து பறித்துக்கொ
ள்ள — கொடாவிடத்தது-அப்பழங்களைக்கொடாத விடத்தையுடைய
து—மடற்பனை-தன்வடிவமுழுது மடல்விரிந்தபனை. எ-று [தாமேத
ம்மிடத்திலுள்ள நூற்பொருள்களைச்சொல்ல அறிந்து கொண்டாற்
கொள்ளலாமேயல்லாமல் ஒருவர்தம்மிடத்து நெருங்கிவந்து வினவி
அறிந்துகொள்ள அந்நூற்பொருள்களைச்சொல்லாதவிடத்தையுடைய
வர்ஆசிரியராகாதவராதலால்-மடற்பனைஅவருக்குஉபமானமாயிற்று.]

௩௪. அரிதிற்பெயக்கொண்டப் பொருட்டான்பிறர்க், கெளிதீவி
ல்லது பருத்திக்குண்டிகை ... ... ... ... ... ... ... *

இதுவுமது (இ-ள்) அரிதிற்பெயக்கொண்டு- பஞ்சைக்கொண்
டபோதும் வருத்தத்தோடுசிறிதுசிறிதாக அடைப்பத் தன்னுள்ளே
கொண்டு—அப்பொருடான்பிறர்க்கெளிதீவில்லது - கொடுக்கும்போ
தும்அப்பஞ்சைத்தான்பிறர்க்கு எளிதிற்கொடாதகுற்றமுடையது —
பருத்திக்குண்டிகை-பஞ்சுபோட்ட குடுக்கையாகும் எ-று. கல்வியை
க்கற்றபோதும்வருத்தத்தோடு சிறிது சிறிதாகக் கற்பிக்கத் தம்முள்
ளேகொண்டு பாடஞ் சொல்லும்போதும் அக்கல்வியைத் தாம்பிற
ர்க்கு எளிதிற்கொடாத குற்றமுடையவர் ஆசிரியராகாதவ ராதலால்
பருத்திக்குண்டிகை அவர்க்கு உபமானமாயிற்று.] (௩௪)

௩௫ பல்வகையுதவி வழிபடுபண்பி, னல்லோர்க் களிக்கு மது
முடத்தெங்கே ... ... ... ... ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) பல்வகையுதவி - நீர்விடுகை முதலாகியப
ல்வகையுபகாரங்களையுஞ்செய்து — வழிபடுபண்பின் - தனக்குவழி
பாடுசெய்யுங்குணத்தினின்றும்—அல்லோர்க்கு - அல்லாத பிறருக்கு
—அளிக்குமது - தன்னிடத்துள்ள காய்களைத்தருங் குற்றமுடையது
—முடத்தெங்கு- வேலிக்கப்புறம்வளைந்த தென்னைமரமா மென்றவா
று [பொருள்கொடுத்தல் முதலாகிய பல்வகையுபகாரங்களையுஞ்செ

ய்து தமக்குவழிபாடுசெய்யுங் குணத்தினின்றும் அல்லாத மாணாக்கருக்குத் தம்மிடத்துள்ள கல்விப்பொருளைத்தருங் குற்றமுடையவ ராகி ரிய ராகாதவராதலால் - முடத்தெங்கு அவருக்கு உபமானமாயிற்று.]

௩௬. ஈதலியல்பே யியம்புங்காலைக்,காலமுமிடனும் வாலிதினோக்கிச்,சிறந்துழியிருந்து தன்றெய்வம்வாழ்த்தி, யுரைக்கப்படும்பொருளுள்ளத்தமைத்து,விரையான் வெகுளான் விரும்பிமுகமலர்ந்து, கொள்வோன்கொள்வகை யறிந்தவனுளங்கொளக், கோட்டமில்மனத்தினூல் கொடுத்தலென்ப ... ... ... ... ... ... ... *

இது நிறுத்தமுறையாற் பாடஞ்சொல்லுதலின் வரலாற்றைச்சொல்லுகின்றது (இ-ள்.) ஈதல்- பாடஞ்சொல்லுதலினது—இயல்பு- வரலாற்றை—இயம்புங்காலை- சொல்லும்போது—காலமும்- உரியகாலத்தையும்—இடனும் - உரியவிடத்தையும்—வாலிதின் - தூயனவாக—நோக்கி-பார்த்து—சிறந்துழியிருந்து- சிறந்தவிடத்திருந்து—தன்றெய்வம்-தான்வழிபடுகடவுளை—வாழ்த்தி - வாழ்த்துதல்செய்து—உரைக்கப்படும்பொருள்-பாடஞ்சொல்லப்படும்பொருளை—உள்ளத்து-தன் கருத்தின்கண்—அமைத்து - நிறைத்து—விரையான்- விரையானாகியும்—வெகுளான்-கோபஞ்செய்யானாகியும்—விரும்பி- இச்சித்து—முகமலர்ந்து-முகமலர்ச்சியையடைந்து—கொள்வோன்-கேட்பவனது—கொள்வகை- கேட்குமறிவின்வகையை—அறிந்து - உணர்ந்து—அவனுளம்-அவனதுமனம்—கொள-ஏற்றுக்கொள்ள—கோட்டமில் மாறுபாடில்லாத—மனத்தின்-மனத்துடனே—நூல்- நூலை—கொடுத்தல்- கொடுத்தலாகும்—என்ப-என்றுசொல்லுவர்புலவர்.எ-று. (௩௬)

௩௭. தன்மகனாசான் மகனேமன்மகன்,பொருணனிகொடுப்போன் வழிபடுவோனே,யுரைகோளாளற்குரைப்பதுநூலே ... *

இது நிறுத்தமுறையாற் பாடங்கேட்கு மாணாக்கனது வரலாற்றைச் சொல்லுகின்றது. (இ-ள்.) தன்மகன்-தன்புதல்வனுக்கும்—ஆசான்மகன்-தன்னாசிரியன்புதல்வனுக்கும்—மன்மகன்- அரசன்புதல்வனுக்கும்—பொருணனிகொடுப்போன் - பொருளைமிகுதியாகக்கொடுப்போனுக்கும்—வழிபடுவோன்- வழிபாடுசெய்வோனுக்கும்—உரைகோளாளற்கு-தன்னாற்சொல்லப்பட்டவுரையை விரைவிலேகற்கும் அறிவுடையோனுக்கும்—உரைப்பது- சொல்லப்படுவது—நூல்- நூலேயாம் எ-று. (௩௭)

௩௮ அன்னமாவே மண்ணொடுகிளியே, யில்லிக்குடமா டெருமைநெய்யரி, யன்னர்தலையிடை கடைமாணாக்கர் ... ... ...

இதுவுமது. (இ-ள்.) அன்னம் - அன்னத்தையும்—ஆ-பசுவையும்—(அன்னர்)-போல்வார்—தலை மாணாக்கர் - முதன்மாணாக்கர்—மண் - மண்ணையும்—கிளி- கிளியையும்—(அன்னர் -போல்வார்—இடைமாணாக்கர்)- நடுமாணாக்கர்—இல்லிக்குடம் - பொள்ளற்குடத்தையும்—ஆடு- ஆட்டையும்—எருமை - எருமையையும்—நெய்யரி - பன்னாடையையும்—அன்னர்- போல்வார்—கடைமாணாக்கர்- கடைமாணாக்கர். எ-று. அன்னம்பாலையும் நீரையும்-வேறுபிரித்துப் பாலைமாத்திரங்குடித்தல்போல முதன்மாணாக்கர், குணத்தையுங் குற்றத்தையும்வேறுபிரித்துக் குணத்தைமாத்திரங் கொள்ளுதலாலும் பசு- மிகுந்தபுல்லையுடைய விடத்தைக்கண்டால் அப்புல்லை வயிறுநிறையமேய்ந்து பின்போரிடத்திற் போயிருந்து சிறிதுசிறிதாகவாயில் வருவித்துக்கொண்டுமென்று தின்றல்போல முதன்மாணாக்கர், மிகுந்தகல்வியுடைய ஆசிரியனைக்கண்டால் அக்கல்வியைத்தன்னுள்ள நிறையக்கேட்டுக்கொண்டு பின்போரிடத்துப்போயிருந்து சிறிது சிறிதாக நினைவிற்கொண்டு வந்து சிந்தித்தலாலும் அவருக்கு அவ்விரண்டும் உபமானமாதலறிக—மண் - உழவர்வருந்திப் பயிர்செய்யு முயற்சியளவுவிளைவைத்தன்கட்காட்டல்போல இடைமாணாக்கர், ஆசிரியன் வருந்திக்கற்பிக்குமுயற்சியளவுகல்வியறிவைத்தன்கட்காட்டுதலாலும் கிளி தனக்குக்கற்பித்தசொல்லையல்லாமல் வேறொன்றையுஞ் சொல்ல மாட்டாமை போல இடைமாணாக்கர், தமக்குக்கற்பித்த நூற்பொருளையல்லாமல் வேறொரு நூற்பொருளையுஞ் சொல்ல மாட்டாமையாலும் அவருக்கு அவ்விரண்டும் உபமானமாதலறிக—பொள்ளற்குடம் - நீரைவார்க்குந்தோறும் ஒழுகவிடுதல்போலக் கடைமாணாக்கர், நூற்பொருளைக்கற்பிக்குந்தோறும் மறந்துவிடுதலாலும். ஆடு- ஒருசெடியிலே தழைநிறைந்திருந்தாலும் வயிறுநிறைய மேயாமற் செடிதோறும்போய் மேய்தல் போலக் கடைமாணாக்கர் ஓராசிரியனிடத்து மிகுந்த கல்வி யிருந்தாலும் புலமை நிறையக்கற்றுக்கொள்ளாமற் பலரிடத்திலும் போய்ப் பாடங்கேட்கையாலும் எருமை குளத்து நீரைக்கலக்கிக் குடித்தல் போலக் கடைமாணாக்கர், ஆசிரியனைவருத்திப் பாடங்கேட்கையாலும். பன்னாடை- தேன்முதலியவற்றைக்கீழேவிட்டு அவற்றிலுள்ள குற்றங்களைப் பற்றிக் கொள்ளுதல்போலக் கடைமாணாக்கர், நல்லபொருளை மறந்துவிட்டுத் தீயபொருளைச் சிந்தித்துப் பற்றிக்கொள்ளுதலாலும் அவருக்கு இந்நான்கும் உபமானமாதலறிக. ; (௩௮)

௩௯. களிமடிமானிகாமிகள்வன், பிணியனேழை, பிணக்கன் சினத்தன், துயில்வோன்மந்தன் றொன்னூற்கஞ்சித், தடுமாறுளத்தன் றறுகணன்பாவி; படிறனின்னோர்க்குப்பகரார்நூலே ... ... ...

இது மாணாக்காராகாரிவரென்று சொல்லுகின்றது, (இ-ள்) களி கட்குடியனும்—மடி - சோம்பேறியும்—மானி - அபிமானமுடையவனும்—காமி-காமமுடையவனும்—கள்வன் - திருடனும்—பிணியன் - நோயாளியும்—ஏழை-ஏழைமையுடையவனும்—பிணக்கன் - பிணக்குடையவனும்— சினத்தன் கோபமுடையவனும்— துயில்வோன்-மிகத்தூங்குவோனும்—மந்தன் - புத்திநுட்பமில்லாதவனும்—தொன்னூற்கஞ்சித்தடுமாறுளத்தன் - பழைய நூல்களைக் கண்டஞ்சித்தடுமாறுமுள்ளத்தையுடையவனும்— தறுகணன் - அஞ்சத்தக்கவைகளை யஞ்சாதவனும்—பாவி - பாவஞ்செய்வோனும்—படிறன் - பொய்பேசுகிறவனும்—இன்னோர்க்கு ஆகிய இப்படிப்பட்ட குற்றத்தை யுடையவருக்கு—நூல் நூலை—பகரார்-சொல்லார் எ-று. (௩௯)

௪௰ கோடன்மரபேகூறுங்காலைப், பொழுதொடுசென்று வழிபடன்முனியான், குணத்தொடுபழகி யவன்குறிப்பிற்சார்ந், திருவெனவிருந்துசொல்லெனச்சொல்லிப், பருகுவனன்ன வார்வத்தனாகிச், சித்திரப் பாவையினத்தகவடங்கிச், செவிவாயாக நெஞ்சுகளனாகக், கேட்டவைகேட்டவை விடாதுளத் தமைத்துப், போவெனப்போதலென்மனார்புலவர் ... ... ... ... ... ... ... ...

இது நிறுத்தமுறையாற்பாடங்கேட்கையின்வரலாற்றைச்சொல்லுகின்றது. இ-ள்.) கோடன்மரபு-பாடங் கேட்கையினது வரலாற்றை—கூறுங்காலை சொல்லும்பொழுது—பொழுதொடு-தகுங்காலத்தில்—சென்று போய் -வழிபடல்-வழிபாடுசெய்தலில்- முனியான்-வெறுப்பில்லாதவனாகி—குணத்தொடு ஆசிரியன்குணத்தோடுபொருந்த—பழகி-பயின்று—அவன்குறிப்பின்.அவன்குறிப்பின்வழியிலே—சார்ந்து-சேர்ந்து - இருவென-இருவென்றுசொன்னபின்—இருந்துஇருந்து—சொல்லென-படியென்றுசொன்னபின்—சொல்லி படித்து—பருகுவனன்ன-பசித்துண்பவனைப்போல—ஆர்வத்தனாகி -மிக்கவிருப்பத்தையுடையவனாகி—சித்திரப்பாவையின் - சித்திரப் பாவையைப்போல—அத்தகவடங்கி-அவ்வசைவறுகுணத்திலேயடங்கி — செவி-காதானது—வாயாக-வாயாகவும் — நெஞ்சு-மனமானது — களனாக கொள்ளுமிடமாகவும்—கேட்டவை - முன்கேட்கப் பட்டவற்றை—கேட்டு-திரும்பிக்கேட்டு—அவை-அப்பொருள்களை—விடாது-மறந்துவிடாமல்—உளத்து-உளத்தின்கண்— அமைத்து - நிறைத்துக்கொண்டு—போவன - போவென்றபின்—போதல் )- போகுதலாகும்—என்மனார்-என்றுசொன்னார்—புலவர்-புலவரானவர்-எ-று. (௪௰)

**௪௧.** நூல்பயிலியல்பே நுவலின்வழக்கறிதல், பாடம்போற்றல் கேட்டவைநினைத்த, லாசாற்சார்ந்தவை யமைவரக்கேட்ட, லம்மாணுடையோர் தம்மொடுபயிறல், வினாதல்வினாயவை விடுத்த லென்றிவை, கடனாக்கொளினேமடநனியிகக்கும் ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) நூல்பயிலியல்பு - நூலைக்கற்றலி னியல்பை — நுவலின் - சொல்லினால் — வழக்கு - உலகவழக்குஞ் செய்யுள் வழக்குமாகிய விருவகைநடையையும் — அறிதல் - ஆராய்ந்தறித லும் — பாடம் - கேட்டபாடத்தை — போற்றல் - பலகாற்சிந்தித் தலும் — கேட்டவை - தான்கேட்டபொருள்களை — நினைத்தல் - எ ண்ணுதலும் — ஆசான் - ஆசிரியனை — சார்ந்து - அடுத்து — அவை அவற்றை — அமைவர - குறைவுதீர — கேட்டல் - கேட்டலும் — அ ம்மாண்பு - அக்கல்வி மாட்சிமையை — உடையோர் தம்மொடு - உ டையவரோடு — பயிறல் - பழகுதலும் — வினாதல் - தானையுற்ற பொ ருளைவினவுதலும் — வினாயவைவிடுத்தல் - அவர்வினா வியவைகளுக் கு உத்தரங்கொடுத்தலும — என்று - என்றுசொல்லப்பட்ட — இவை - இச்செயல்களை — கடனா - முறையாக — கொளின் - மாணாக்கன்கொ ண்டால் — மடம் - அறியாமையானது — நனி - மிகவும் — இகக்கும் - அ வனைவிட்டுநீக்கும். எ - று. (௪௧)

**௪௨.** ஒருகுறிகேட்போனிருகாற்கேட்பிற், பெருகநூலிற்பிழை பாடிலனே ... ... ... ... ... ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) ஒருகுறி - ஒருதரம் — கேட்போன் - ஒ ருநூலைப்பாடங்கேட்பவன் — இருகால் - இரண்டுதரம் — கேட்பின் - கேட்டானாயின் — பிழைபாடு - அந்நூலிற்பிழைபடுதல் — பெருகமி. குதியும் — இலன் - இலனாவன் எ - று. (௪௨)

**௪௩,** முக்காற்கேட்பின்முறையறிந்துரைக்கும் ... ... *

இதுவுமது, (இ-ள்,) முக்கால் - மூன்றுதரம் — கேட்பின் - கே ட்டானாயின் — முறை ஆசிரியன்கற் பித்தமுறையை — அறிந்து - உணர்ந்து — உரைக்கும் - சொல்லுவான், எ - று, (௪௩)

**௪௪,** ஆசானுரைத்தவை யமைவரக்கொளினுங், காற்கூறல்லது பற் றலனாகும் ... ... ... ... ... ... ... ... ... ... ... *

இதுவுமது, (இ-ள்.) ஆசான் - ஆசிரியன் — உரைத்தது - கற் பித்தபொருளை — அமைவர - தன்னறிவினிடத்து நிறைய — கொ ளினும் - கற்றானாயினும் — காற்கூறல்லது - புலமைத்திறத்திற் கா ற்பங்கல்லது — பற்றலனாகும் - அதற்கதிகமாகப் பெறுதலனாவன், எ - று, (௪௪)

௩௫ அவ்வினையாளரொடு பயில்வகையொருகாற், செவ்விதினுரைப்பவவ்விருகாலு, மையறுபுலமைமாண்புடைத்தாகும் ... ...*

இதுவுமது. (இ-ள்) அவ்வினையாளரொடு - தன்போலியரோடு —பயில்வகை - பழகும்வகையால் — ஒருகால் - காற்கூறும் — செவ்விதினுரைப்ப - தன்மாணாக்கருக்குஞ் சபையாருக்கு முணரவிரித்துரைத்தலால் — அவ்விருகாலும் - அரைக்கூறுமாக — மையறு - குற்றமற்ற —புலமை - புலமையானது — மாண்புடைத்தாகும் - நிரம்புதலுடைத்தாகும். எ-று. (௩௫)

௩௬. அழலினீங்கானணுகானஞ்சி, 'நிழலினீங்கா னிறைந்த நெஞ்சமோ, டெத்திறத்தாசானுவக்குமத்திற, மறத்திற்றிரியாப்படர்ச்சி வழிபாடே ... .. ... ... ... ... ... ... ... ...*

இதுவுமது (இ-ள். அழலின் - குளிர்காய்வோன்விட்டுநீங்காமலும் நெருங்காமலும் இருக்கின்ற நெருப்பைப்போல ஆசிரியனை நினைத்து — அஞ்சி - அச்சமுற்று — நீங்கான் - விட்டுநீங்கானாகியும் —அணுகான் - நெருங்கானாகியுமிருந்து — நிழலின் - விடாதுபின் செல்லுநிழலைப்போல — நீங்கான் - தொடர்ந்துசென்று —நிறைந்த நெஞ்சமோடு - நிறைந்தகருத்துடனே — எத்திறத்து - எத்தன்மையினாலே — ஆசான் - ஆசிரியனானவன் — உவக்கும் - மகிழ்வான்— அத்திறம் - அத்தன்மையோடுபொருந்தி — அறத்தின்-அறத்தினின்றும் — திரியா - வேறுபடாத—படர்ச்சி-நடத்தலானது — வழிபாடு மாணாக்கன்செய்யும் வழிபாடாகும். எ-று. [அழலினென்பதற்கு ஆசிரியன்கோபித்தாலெனப் பொருள்கூறினும் பொருந்தும்.] (௩௬)

பொதுப்பாயிரமுற்றுப்பெற்றது.

## சிறப்புப்பாயிரத்திலக்கணம்.

௩௭ ஆக்கியோன்பெயரே வழியேயெல்லை, 'நூற்பெயர்யாப் பேநுதலியபொருளே, கேட்போர்பயனோடாயெண்பொருளும், வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே ... ... ... ... ... ...*

இதுபாயிரம் பொதுச்சிறப்பெனநிறுத்த முறையாற் சிறப்புப் பாயிரங்களது பொதுவிலக்கணத்தைச் சொல்லுகின்றது. (இ-ள்) ஆக்கியோன்பெயர் - நூல்செய்தோன்பெயரும்—வழி - நூல்வந்த வழியும்—எல்லை - நூல்வழங்குநிலமும்—நூற்பெயர்- நூலினதுபெயரும்—யாப்பு - இந்நூல்முடிந்தபின்பு இந்நூல் கேட்கத்தகுமென்னுநிலையும்—நுதலியபொருள் - நூலிற்சொல்லப்பட்டபொருளும்

—கேட்போர் - இந்நூல்கேட்டற்குரியவதிகாரிகளிவரொன்பதும்—பயன் - நூல்கேட்கையாற்பெறப்படும்பயனும்—ஆயெண்பொருளும்- ஆகியவெட்டுப்பொருளையும்—வாய்ப்பக்காட்டல் - விளங்கவுணர்த்துதல்—பாயிரத்து-சிறப்புப்பாயிரத்தினது—இயல்பு - இலக்கணமாம் எ-று. [ஆகியவென்பது-ஆயென்றாயிற்று.] (க)

சஅ. காலங்களனே காரணமென்றிம், மூவகையேற்றி மொழி நருமுளரே ... ... ... ... ... ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) காலம் - நூல்செய்தகாலமும் — களன்-நூலரங்கேற்றியசவையும்—காரணம் - நூல்செய்தற்குக் காரணமும் —என்று-என்று—இம்மூவகை-இம்மூன்றினையும்—ஏற்றி - அவ்வெட்டனோடுகூட்டி —மொழிநரும்-பதினொன்றாகச்சொல்லுவாரும் — உளர்-சிலருளர். எ-று. (உ)

சகூ. முதனூல்கருத்தனளவுமிகுதி, பொருள்செய்வித்தோன்றன்மைமுதனிமித்தினு, மிடுகுறியானுநூற்கெய்துபெயரே ... *

இது முன்சொன்ன பதினொன்றனுள் நூற்பெயருக்குச் சிறப்புவிதி சொல்லுகின்றது. (இ-ள்) முதனூல்-முதனூலும் — கருத்தன்-செய்தவனும்—அளவு-அளவும்— மிகுதி-மிகுதியும்— பொருள்-பொருளும்—செய்வித்தோன்-செய்வித்தவனும்—தன்மை- குணமும்—முதல்-முதலாகிய— நிமித்தினும்-காரணங்களாலும் — இடுகுறியானும்-இடுகுறியாலும்—நூற்கு-நூலுக்கு—பெயர் - பெயரானது —எய்தும்-வரும். எ-று. [முதனூலாற் பெயர்பெற்றவை- பாரதமுதலியன—செய்தவனாற்பெயர்பெற்றவை - தொல்காப்பியமுதலியன —அளவினாற்பெயர்பெற்றவை- நாலடிநானூறுமுதலியன — மிகுதியாற்பெயர்பெற்றவை-களவியன்முதலியன—பொருளாற்பெயர்பெற்றவை- அகப்பொருண்முதலியன—செய்வித்தோனாற்பெயர்பெற்றவை—சாதவாகனமுதலியன-தன்மையாற்பெயர்பெற்றவை—நன்னூன்முதலியன—இடுகுறியாற்பெயர்பெற்றவை - கலைக்கோட்டுத்தண்டுமுதலியன. (௩)

ருய. தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்ப், பெனத்தகுநூல்யாப்பீரிரண்டென்ப ... ... ... ... ... ... *

இது வழியின்வகையாகிய நூல் யாப்பினுக்குச் சிறப்புவிதி சொல்லுகின்றது. (இ-ள்) தொகுத்தல்- விரிந்துகிடக்கின்றவைகளைத் தொகுத்துச்சொல்லுதலும்—விரித்தல்-சுருங்கிக் கிடக்கின்றவைகளை விரித்துச்சொல்லுதலும் — தொகைவிரி -தொகுத்தும் விரித்துஞ் சொல்லுதலும்—மொழிபெயர்ப்பு-பதினெண்மொழியுளொன்றனு

ளிருக்கின்றபொருளைமற்றொன்றுள்ளே- திருப்பிச்சொல்லுதலும்—எனத்தகும்-என்றசொல்லத்தகும்—ஈரிரண்டு- நான்குபிரிவையுடைத்தாகும்—நூல்யாப்பு-நூல்யாப்பானது—என்ப- என்றுசொல்லுவர் புலவர். எ-று. [மலர்தலையென்னுஞ் சூத்திரத்துள்ளே தொகைவகைவிரியாப்பென்று சொல்லியது இந்நான்கு பிரிவினுள் இல்லையே யென்றால் நடுநின்றவகைபின்னின்ற விரியைக்குறிக்கும்போது விரியாகவும் நிற்கையால் தொகைவிரியேயாம். (௪)

௫௧. தன்னாசிரியன் றன்னொடுகற்றோன், றன்மாணாக்கன் றகுமுணாகாரனென், றின்னோர்பாயிர மியம்புதல்கடனே ... ... ... *

இதுமுன்சொன்ன சிறப்புப்பாயிரஞ் செய்தற்குரியா ரிவரொன்றுசொல்லுகின்றது (இ-ள்.) தன்னாசிரியன்- தன்னுடையவாசிரியனும்—தன்னொடுகற்றோன் - தன்னோடுபாடங் கேட்டவனும்—தன்மாணாக்கன்-தன்னுடையமாணாக்கனும்—தகுமுணாகாரன்- தன்னூலுக்குத்தகுமுரையைச்செய்தவனும்— என்று - என்றுசொல்லப்பட்ட—இன்னோர்-இந்நால்வருளொருவர்—பாயிரம்- சிறப்புப்பாயிரத்தை—இயம்புதல்-சொல்லுதல்—கடன்-முறைமையாகும்.எ-று. (௫)

௫௨ தோன்றாதோற்றித் துறைபலமுடிப்பினுந், தான்றற்புகழ்தல் றகுதியன்றே... ... ... ... ... ... ... ... ... *

இது சிறப்புப்பாயிரம் பிறர் செய்தற்குக்காரணஞ் சொல்லுகின்றது (இ-ள்.) தோன்றா - தோன்றாதநுட்பங்களெல்லாம்—தோற்றி-காட்டி-துறைபல-பலதுறைப்பட்டு விரிந்தநூலை—முடிப்பினும் செய்துமுடித்தாலும்—தான்-தானே—தற்புகழ்தல்- தன்னைப்புகழ்ந்துகொள்ளுதல்—தகுதியன்று-தகுதியன்றாம்.எ-று. (௬)

௫௩. மன்னுடைமன்றத் தோலைத்தூக்கினுந், தன்னுடையாற்றலுணராரிடையினு, மன்னியவவையிடை வெல்லுறுபொழுதினுந், தன்னைமறுதலைபழித்தகாலையுந், தன்னைப்புகழ்தலுந் தகும்புலவோற்கே. *

இது தற்புகழ்ச்சியும் ஒரோவிடத்துக் குற்றமாகாதென்று சொல்லுகின்றது (இ-ள். மன்னுடைமன்றத்து அரசனதுசபைக்கெழுதும்—ஓலைத்தூக்கினும் - சீட்டுக்கவியிலும்—தன்னுடையாற்ற லுணராரிடையினும்-தனதுவலிமையையறியாதாரிடத்திலும்—மன்னியவவையிடைவெல்லுறுபொழுதினும்- பெரியசபையில்வாதஞ்செய்துவெல்லும்பொழுதும்—தன்னைமறுதலைபழித்தகாலையும் - தன்னையெதிரிபழித்தகாலத்திலும் — தன்னைப்புகழ்தலும் - தன்னைத்தான் புகழ்ந்துகொள்ளலும்—புலவோற்கு-புலவனுக்கு-தகும்-தகும்.எ-று. (எ)

௫௪. ஆயிரமுகத்தானகன்றதாயினும், பாயிரமில்லது பனுவலன்றே

இது இருவகைப்பாயிரமும் நூலுக்கு இன்றியமையாச் சிறப்பினவென்பது சொல்லுகின்றது. (இ-ள்.) ஆயிரமுகத்தான்- ஆயிரமுறுப்புகளால்—அகன்றதாயினும்- விரிந்ததாயினும்—பாயிரமில்லது- பாயிரமில்லாதது—பனுவலன்று- நூலன்றாகும்- எ-று. (அ)

௫௫. மாடக்குச்சித்திரமு மாநகர்க்குக்கோபுரமு, மாடமைத்தோணல்லார்க்கணியும்போ-லாடிமு, னைதுரையாநின்றவணிந்துரையையெந்நூற்கும், பெய்துரையாலைவத்தார்பெரிது ... ... ... ... *

இது முன்னே நூலன்றென்றதற்குக் காரணஞ்சொல்லுகின்றது. (இ-ள்.) மாடக்கு-மாளிகைக்கு—சித்திரமும்- ஓவியமும்—மாநகர்க்கு-பெரியபட்டணத்திற்கு—கோபுரமும்-சிகிரியும்—ஆடு- நாட்டியஞ்செய்கின்ற—அமை-மூங்கில்போன்ற—தோள்-தோள்களையுடைய—நல்லார்க்கு - மங்கையருக்கு—அணியும் - ஆபரணமும்—போல்-போல—நாடி- நினைத்து—ஐது - அழகியபொருளை—உரையாநின்ற-சொல்லுகின்ற—அணிந்துரையை - இருவகைப்பாயிரங்களையும்— உரையா-உரைத்து—எந்நூற்கும்-எவ்வகைப்பட்டபெரியநூலுக்கும்—முன்-முன்னே—பெய்து- சேர்த்து—வைத்தார்- ஆசிரியர்வைத்தார்—பெரிது மிகவும் எ-று. (௯)

சிறப்புப்பாயிரமுற்றுப்பெற்றது.

எழுத்ததிகாரம்.

# முதலாவதெழுத்தியல்.

௫௬. பூமலியசோகின் புனைநிழலமர்ந்த, நான்முகற்றொழுது நன்கியம்புவனெழுத்தே ... ... ... ... ... ... ... *

இதுகடவுள்வணக்கமும் அதிகாரமும் உணர்த்துகின்றது.(இ-ள்) பூ-பூக்களானவை—மலி-நிறைந்த— அசோகின்- அசோகமரத்தினது—புனை-அலங்கரிக்கும்—நிழல்-நிழலின்கண்—அமர்ந்த- எழுந்தருளியிருந்த —நான்முகன் நான்குதிருமுகங்களையுடையகடவுளை—தொழுது-வணங்கி-நன்கு- நன்றாக—இயம்புவன்- சொல்லுவன்—எழுத்து-எழுத்திலக்கணத்தை-எ-று ஏகாரம்,ஈற்றசை. [எல்லாம்வல்ல கடவுளைவணங்கலால்-இனிதுமுடியுமென்பதுகருதிநன்கியம்புவனென்று புகுந்தமையின் இது நுதலிப்புகுதலென்னுமுத்தி.] (௧)

௫௭. எண்பெயர் முறைபிறப் புருவமாத்திரை, முதலீ றிடைநிலை போலியென்றா, பதம்புணர்பெனப்பன் னிருபாற்றதுவே ... ...

இது அவ்வெழுத்திலக்கணம் இவ்வளவிற்றென்பதை யுணர்த்துகின்றது. (இ-ள்.) எண் எழுத்தினெண்ணும்—பெயர்- பெயரும்—முறை முறையும்—பிறப்பு-பிறப்பும்—உருவம்-வடிவமும்—மாத்திரை- அளவும்— முதல்நிலை முதனிலையும்—ஈறு (நிலை) - கடைநிலையும்—இடைநிலை-இடைநிலையும்—போலி போலியும்—பதம்- பதமும்—புணர்பு-புணர்ச்சியும்—என- என்று—பன்னிருபாற்று-பன்னிருபகுதியினையுடைத்தாகும்—அது-அவ்வெழுத்திலக்கணம்- எ-று. என்றாவென்பது எண்ணிடைச்சொல், [இச்சூத்திரம்- தொகுத்துச்சுட்டலென்னுமுத்தி-மேல்வருவனவெல்லாம்வகுத்துக்காட்டல் ] (௨)

(எழுத்து)

௫௮. மொழிமுதற்காரணமாமணுத்திரளொலி, யெழுத்தது முதல்சார்பெனவிருவகைத்தே ... ... ... ... ... ... ...

இது எழுத்தின் அகத்திலக்கணமாகிய எண்முதலிய பத்தையும் ஓரியலாகவும் - புறத்திலக்கணமாகிய பதம்புணர்பு என்னுமிரண்டனுள் அவ்வெழுத்தாலாம் பதத்தை ஓரியலாகவும் - அப்பதம்புணரும் புணர்ப்பை மூன்றியலாகவும் ஒத்துமுறைவைப்பென்னு முத்தியால் வைக்கப்புகுந்து முதற்கண்வைத்த எழுத்தியலில் எழுத்தின்னெண்ணினை அறிவிக்கும்படியாகத் தொடங்கி எழுத்து இப்படிப்பட்டதென்பதும் அதன் வகையும் உணர்த்துகின்றது (இ-ள்.) மொழி-சொல்லுக்கு—முதற்காரணமாம் ஆதிகாரணமாகிவருகின்ற—அணுத்திரள்- அணுத்திரளின் காரியமாகிய—ஒலி ஒலியாவது—எழுத்து- எழுத்தாகும் —அது அவ்வெழுத்து—முதல் (மென - முதலெழுத்தென்றும்—சார்பென - சார்பெழுத்தென்றும் — இருவகைத்து - இரண்டுவகையினையுடைத்தாகும். எ-று. [அணுத்திரளென்றது ஒலிநுட்பத்தை— மொழி முதற்காரணமாமொலியெழுத்தென்றால்-ஈங்கீ முதலியவை எழுத்தாகாவென்றும் அணுத்திரளொலி யெழுத்தென்றால் - முற்கு இருமல் முதலியவை எழுத்தாமென்றுங் கொள்ளவேண்டுதலால் மொழிமுதற் காரணமா மணுத்திரளொலி யெழுத்தென்றார்.] (௩)

௫௯. உயிருமுடம்பு மாமுப்பதுமுதலே ... ... ... ...

இது முதலெழுத்தின்விரியை உணர்த்துகின்றது, (இ-ள்) உயிரும்-ஆவியும்—உடம்பும்- மெய்யும்—ஆம்-ஆகும்—முப்பதும்- முப்பதெழுத்தும்—முதல்-முதலெழுத்தாகும். எ-று, (௪)

௬௰, உயிர்மெய்யாய்த முயிரளபொற்றளபஃகிய இஉஐஔமஃ
கான்றனிநிலைபத்துஞ் சார்பெழுத்தாகும் ... ... ... ... *

இது சார்பெழுத்தின்விரியை உணர்த்துகின்றது, (இ-ள்) உயிர்மெய்- உயிர்மெய்யும்—ஆய்தம்- ஆய்தமும்—உயிரளபு- உயிரளபெடையும்—ஒற்றளபு-ஒற்றளபெடையும்— அஃகிய) இ-குற்றியலிகரமும்—(அஃகிய உ-குற்றியலுகரமும்—(அஃகிய ஐ-ஐகாரக்குறுக்கமும்—(அஃகிய ஔ-ஔகாரக்குறுக்கமும்—(அஃகிய) மஃகான்-மகரக்குறுக்கமும்—(அஃகிய) தனிநிலை-ஆய்தக்குறுக்கமும்—பத்தும்- ஆகிய பத்தும்—சார்பெழுத்தாகும்- சார்பெழுத்தாகும், எ-று, [அஃகுதல் சுருங்குதல்,] (௫)

௬௧, உயிர்மெய்யிரட்டு நூற்றெட்டுயராய்த, மெட்டுயிரளபெழு
மூன்றொற்றளபெடை, யாறேழஃகுமிம்முப்பானே, மூகரமாறுறை
கான்மூன்றே,மௌகாரனொன்றேமஃகான்மூன்றே, யாய்தமிரண்டோ
டுசார்பெழுத்துறுவிரி,யொன்றொழிமுந்நூற்றெழுபானென்ப... *

இதுவுமது, (இ-ள்) உயிர்மெய்- உயிர்மெய்—இரட்டு நூற்றெட்டு-இருநூற்றுப்பதினாறு—உயராய்தம்- குறுகாதவாய்தம்—எட்டு-எட்டு—உயிரளபு உயிரளபெடை- எழுமூன்று- இருபத்தொன்று—ஒற்றளபெடை-ஒற்றளபெடை—ஆறேழ்- நாற்பத்திரண்டு—அஃகுமி-குற்றியலிகரம்—முப்பானேழ்-முப்பத்தேழு—(அஃகு) மூகரம்- குற்றியலுகரம்—ஆறாறு - முப்பத்தாறு— அஃகு) ஐகான் - ஐகாரக்குறுக்கம்—மூன்று-மூன்று—(அஃகு) மௌகான்- ஔகாரக்குறுக்கம்—ஒன்று-ஒன்று—(அஃகு மஃகான்-மகாக்குறுக்கம்—மூன்று-மூன்று—(அஃகு) மாய்தம்-ஆய்தக்குறுக்கம்—இரண்டோடு- இரண்டுடனே—சார்பெழுத்து - சார்பெழுத்தினது — உறுவிரி - மிகுந்தவிரி—ஒன்றொழிமுந்நூற்றெழுபான்-முந்நூற்றறுபத்தொன்பதாம்—என்ப- என்றுசொல்லுவர்புலவர்-எ-று, [இவை இத்தனையாதல் அவ்வவற்றின் பிறப்பிலக்கணத்திற்காண்க,] (௬)

௬௨, இடுகுறிகாரணப்பெயர்பொதுச்சிறப்பின... ... ... *

இது நிறுத்தமுறையால் எழுத்தின்பெயரை அறிவிக்கும்படியாகத் தொடங்கிப் பெயர்க்கெல்லாம் பொதுவிலக்கண முணர்த்துகின்றது, (இ-ள்) இடுகுறிகாரணப்பெயர் - இடுகுறிப்பெயருங்காரணப்பெயருமாகிய விரண்டும் — பொதுச்சிறப்பின - பலபொருளுக்குப் பொதுப்பெயராகியும் ஒருபொருளுக்குச் சிறப்புப்பெயராகியும் வருவனவாம். எ-று, (உதாரணம்) மரம், இடுகுறிப்பொதுப்பெயர்-

பனை- இடுகுறிச்சிறப்புப்பெயர்-அணி-காரணப்பெயர்- முடி-காரணச் சிறப்புப்பெயர் [இனி இரட்டுறமொழிதலென்னு முத்தியால் இச்சூத்திரத்திற்கு - இடுகுறிகாரணப் பெயர் - இடுகுறியென்றுங் காரணமென்றுஞ் - சொல்லப்படு மிலக்கணங்களை யுடைய பெயர்கள் — பொது-இடுகுறிகாரணமென்னு மிரண்டற்கும் பொதுவாகியும்—சிறப்பின - இடுகுறிக்கே சிறப் பாகியுங் காரணத் திற்கே சிறப்பாகியும் வருவனவாமென்றும் பொருளுரைத்துக் கொள்க. (உதாரணம்.) பரம் - இடுகுறிப்பெயர் — பரமன் - காரணப்பெயர் — முக்கணன்-அந்தணன் - காரணவிடுகுறிப்பெயர் — முக்கணனென்பது காரணங்கருதியவழி மூன்றுகண்ணையுடைய விநாயகமூர்த்தி முதலாகிய பலர்க்குஞ் சொல்லுதலாலுங் காரணங் கருதாதவழி இடுகுறியளவேயாய்ப் பரமசிவனுக்குச் சொல்லுதலாலுங் காரணவிடு குறியாயிற்று அந்தணனென்பதும் அப்படியே அழகிய தன்மையையுடைய பலர்க்கும்பார்ப்பாருக்குஞ்சொல்லுதல்காண்க.] (எ)

சூ௮. அம்முதலீராறுவிகம்முதன், மெய்ம்மூவாறென விளம்பினர்புலவர் ... ... ... ... ... ... ... ... ... *

இது ஒருசாரெழுத்தினது பெயராமாறு உணர்த்துகின்றது — (இ-ள்.) அம்முதல்-அகரமுதலாகிய—ஈராறு - பன்னிரண்டனையும்—ஆவி (யென) - ஆவியென்றும்—கம்முதல் - ககரமுதலாகிய—மூவாறு-பதினெட்டனையும்—மெய்யென-மெய்யென்றும் — விளம்பினர் சொன்னர் — புலவர்-அறிவுடையோர்.எ-று. (உதாரணம்.) அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ - உயிர். க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் - மெய். ஆவியுமெய்யும்போல விருக்கையால்இவ்விருவகையெழுத்திற்கும் ஆவிமெய்யென உவமவாகுபெயராய்க் காரணப்பொதுப்பெயராயின-பிறவெழுத்துகளுமிவ்வாறே வருதல்காண்க.

சூ௯. அவற்றுள், அ இ உ எ ஒ க்குறிலைந்தே ... ... *

இதுவுமது- (இ-ள்.) அவற்றுள் - ஆவிமெய்யென்றவற்றுள் — அ இ உ எ ஒ - அ இ உ எ ஒ என்கிற—ஐந்து - ஐந்தும் —குறில் குற்றெழுத்தாம். எ-று. (௮)

சூ௰. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில் ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிறவேழும்.நெடில்-நெட்டெழுத்தாம்.எ-று. (௯)

சூ௧௧. அ இ உம்முதற் றனிவரிற்சுட்டே ... ... ... ... *

இதுவுமது, (இ-ள்) அ இ உ - அ இ உ என்கிற மூன்றும் — முதல்-சொல்லுக்குமுதலில் — தனி தனித்து — வரின் - சுட்டுப்பொருளைக்காட்டவந்தால் — சுட்டு - சுட்டெழுத்தாம், எ-று, [முதலெனப்பொதுப்படச் சொன்னதனால் புறத்தும்அகத்தும் வருமெனக்கொள்க,] (உ-ம்,) அக்கொற்றன்-இக்கொற்றன் -உக்கொற்றன் - புறத்துவந்தன, அவன்-இவன்-உவன்-அகத்துவந்தன,] அகரம் தூரத்திலிருக்கிறபொருளையும்·இகரம்சமீபத்திலிருக்கிறபொருளையுஞ்சுட்டுதற்கு வரும்,] (௰௧)

(வினா எழுத்து)

(8) சூ ௬௭, எயா முதலும் ஆஓ வீற்றும், ஏயிருவழியும் வினாவாகும்மே,

இதுவுமது, (இ-ள்) எயா-எகரமும்யாவும் — முதலும் - சொல்லுக்குமுதலிலும் — ஆஓ - ஆகாரமும்ஓகாரமும் — ஈற்றும்-சொல்லுக்குஈற்றிலும் — ஏ-ஏகாரம் — இருவழியும்அவ்விரண்டிடத்திலும் — (தனிவரின்) - தனித்துவினாப்பொருளைக்காட்டவந்தால் — வினாவாகும் - வினாவெழுத்தாகும், எ-று, [முன்சூத்திரத்திலேதனிவரினென்றது இதற்குங் கூட்டப்பட்டது, ஒன்றினமுடித்தல் தன்னின முடித்தலென்னுமுத்தியால் உயிர்மெய்யாகிய யாவினாவுமுடன்கூறப்பட்டது இவை புறத்தும் அகத்தும் வருகலேற்றபடி கொள்க,] (உ-ம்) எக்கொற்றன்-எவன்-யாங்ஙனம்-யாவன்-எகரமும்யாவும் - முதலிலேபுறத்தும் அகத்தும்வந்தன — கொற்றனா-கொற்றனோ-ஆகாரமும் ஓகாரமும் ஈற்றிலேபுறத்துவந்தன — ஏவன் -கொற்றனே-ஏகாரம் முதலிலகத்தும் ஈற்றிற்புறத்தும் வந்தது. (௰௨)

(வல்லினம்)

(9) சூ ௬௮, வல்லினங்கசடதபறவெனவாறே ... ... ... ... *

இதுவுமது, (இ-ள்,) கசடதபறவென - கசடதபறவென்று — ஆறு-ஆறும் — வல்லினம்-வல்லினமாம்-எ-று, இதுவன்கணமெனவும்பெயர்பெறும் (மெல்லினம்) (௰௩)

(10) சூ ௬௯, மெல்லினம்ஙஞணநமனவெனவாறே ... ... ... *

இதுவுமது, (இ-ள்,) ஙஞணநமனவென - ஙஞணநமனவென்று — ஆறு-ஆறும் — மெல்லினம்-மெல்லினமாம்-எ-று, மென்கணமெனவும் பெயர்பெறும், இடையினம் (௰௪)

௭௰, இடையினம்யரலவழளவெனவாறே ... ... ... ... *

இதுவுமது, (இ-ள்,) யரலவழளவென - யரலவழளவென்று — ஆறு-ஆறும் — இடையினம்-இடையினமாம்- எ-று, இடைக்கணமெனவும் பெயர்பெறும், (௰௫)

( [illegible] )

எக. ஐ ஔ இ உச் செறிய முதலெழுத் திவ்விரண் டோரினமாய்
வரன்முறையே ... ... ... ... ... ... ... ... *

இதுவு மது. (இ-ள்.) ஐ ஔ இனமில்லாத ஐகார ஔகாரங்கள் — இ உ ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய இகர உகரங்களை — செறிய — தமக்கு இனமாகப் பொருந்த — முதலெழுத்து - முதலெழுத்துகளான வை — இவ்விரண்டு - இரண்டிரண்டு — ஓரினமாய் - ஓரினமாகி — வரல் - வருதல் — முறை - முறையாதலால் அவை இனவெழுத்தெனப் பெயர் பெறும் - எ-று. (௰௬)

எஉ. தானம் முயற்சி யளவு பொருள் வடிவானவொன் றாதியோர் புடையொப் பினமே ... ... ... ... ... ... ... ... *

இனமென்றதற்குக் காரணம் உணர்த்துகின்றது. (இ-ள்) தானம் பிறப்பிடமும் — முயற்சி - தொழிலும் — அளவு மாத்திரையும் — பொருள் - பொருளும் — வடிவு உருவமும் — ஆன - ஆகியவிவற்றுள் — ஒன்றாதி ஒன்றுமுதலாக — ஓர்புடையொப்பு ஒருபுடையொத்தலால் — இனம் - இனமாம் எ-று [ஆய்தம் தனியில்லாதலாலும் - மற்றைச்சார் பெழுத்துகளுக்கு அவ்வவற்றின் முதலெழுத்துகளின் பெயர்களே பெயர்களாயடங்கலாலும் - சார்பெழுத்துகளுக்குப் பெயர் சொல்லா து விட்டார்.] (௰௭)

எங. சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல் நடத்தல் தானே முறையாகும்மே ... ... ... ... ... ... ... ... *

இது நிறுத்தமுறையால் எழுத்துகளின் முறையாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) சிறப்பினும் - சிறப்பினாலும் — இனத்தினும் - இனத்தினாலும் — செறிந்து - பொருந்தி — ஈண்டு - இவ்வுலகத்தில் — அம்முதல் - அகரமுதலாக — நடத்தல்தானே - வழங்குதலே — முறையாகும் - எழுத்துகளது முறையாம் - எ-று. [குறிலினது விகாரமே நெடிலாதலாற் குறில் முன்னிற்றல் பற்றிச் சிறப்பினுமென்றார் - அம்முறையை நெடுங்கணக்கிலே காண்க.] (௰௮)

எச. நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப, வெழுமணுத் திரளுரங் கண்டமுச்சி, மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின், வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே ... ... ... ... ... ... *

இது நிறுத்தமுறையால் எழுத்துகளின் பிறப்பாமாறு அறிவிக்கத் தொடங்கி அப்பிறப்பின் பொதுவிதி உணர்த்துகின்றது. இ-ள்.) நிறை - ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி நிறைந்த — உயிர் - உயிரினது — முயற்சியின் - முயற்சியால் — உள் - உள்ளே நின்ற

வளி-காற்றானது—தூரப்ப எழுப்ப—எழும்- எழுகின்ற—அணுத்திர
ள்-செவிப்புலனுமணுக்கூட்டம்—உரம்-மார்பும்—கண்டம்-கழுத்தும்
—உச்சி-தலையும்-மூக்கு-நாசியும்—ஆகிய-நான்கிடத்தலையும்—உற்று-
பொருந்தி—இதழ்-உதடும்—நா-நாக்கும்—பல்-பல்லும்—அணம்-
மேல்வாயும் ஆகியநான்கனுடைய—தொழிலின்-முயற்சிகளால்—வெ
வ்வேறு-வேறுவேறு—எழுத்து-எழுத்தாகிய—ஒலியாய்-ஓசைகளாய்
—வரல்-தோன்றுதல்—பிறப்பு-அவற்றின்பிறப்பாம்-எ-று. (௰௯)

௭௫. அவ்வழி, ஆவியிடைமையிடமிடறாகு, மேவுமென்மைமூக்
குரம்பெறும்வன்மை ... ... ... ... ... ... ... ...*

இது முதலெழுத்துகளுக்கு இடஞ் சொல்லுகின்றது. (இ-ள்.) அவ்வழி- முன்சொன்னவழியாற்பிறக்குமிடத்து—ஆவி- உயிரெழுத்துகளுக்கும்—இடைமை- இடையினத்திற்கும்—இடம்- இடம்—மிடறாகும்- கழுத்தாகும்—மென்மை- மெல்லினம்—மூக்கு- நாசியை—மேவும்-இடமாகப்பொருந்தும்-வன்மை-வல்லினம்—உரம்- மார்பை—பெறும்-இடமாகப்பெறும்-எ-று. (௨௰)

௭௬. அவற்றுள், முயற்சியுள் அ ஆ அங்காப்புடைய ... ...*

இது முதலெழுத்தினுட் சிலவெழுத்திற்கு முயற்சிவகையாற் பிறப்பு உணர்த்துகின்றது. (இ-ள்.) அவற்றுள்- மேலிடம்வகுத்தமுதலெழுத்துகளுள்—அ ஆ- அ ஆ இரண்டும்—அங்காப்புடைய - அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலையுடையன வாய்ப்பிறக்கும் -எ-று.

௭௭. இ ஈ எ ஏ ஐ அங்காப்போ டண்பன்முதனா விளிம்புற
வருமே... ... ... ... ... ... ... ... ... ... ...*

இதுவுமது (இ-ள்.) இ ஈ எ ஏ ஐ - இ ஈ எ ஏ ஐ ஐந்தும்—அங்காப்போடு அங்காப்புடனே—அண்பல் - அண்பல்லை—நாமுதல் - நாக்கடியினது—விளிம்பு- ஓரமானது—உற- பொருந்த—வரும்- பிறக்கும்-எ-று. (௨௨)

௭௮. உ ஊ ஒ ஓ ஔ- விதழ்குவிவே ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) உ ஊ ஒ ஓ ஔ - உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் பிறத்தற்கேதுவாகியமுயற்சி—இதழ்குவிவு உதடுகளின் குவிதலாம்-எ-று. (௨௩)

௭௯. கஙவுஞ்சஞவுஞ்டணவுமுதலிடை, நுனிநாவண்ணமுறமுறை
வருமே ... ... ... ... ... ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) கங- கவ்வுஙவ்வும்— (நா) முதல்-நாக்கினடி— (அண்ணமுதல்) - மேல்வாயடியையும்—சஞ - சவ்வுஞவ்வும்— (நா)விடை-நாக்கினடு—(அண்ணவிடை)-மேல்வாய்நடுவையும்—டண-டவ்வும்ணவ்வும்—நாநுனி-நாக்கின்கடை—அண்ணநுனி)-மேல்வாய்க்கடையையும் —உற-பொருந்த—முறை-இம்முறையே—வரும்-பிறக்கும் எ-று. (௨௪)

௮௰. அண்பல்லடிநாமுடியுறத்தநவரும்.... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) அண்பல்-அண்பல்லினது—அடி- அடியை—நாமுடி-நாக்குநுனி—உற-பொருந்த—தந தவ்வும்நவ்வும்—வரும்-பிறக்கும் எ-று. (௨௫)

௮௧. மீகீழிதழுறப்பம்மப்பிறக்கும் ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) மீ இதழ்)- மேலுதடும்—கீழிதழ்-கீழுதடும்—உற- பொருந்த—பம்ம-பவ்வும் மவ்வும்— பிறக்கும் - பிறக்கும்-எ-று. (௨௬)

௮௨. அடிநாவடியணையுறயத்தோன்றும் ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) நாவடி- நாக்கினடியானது—அணவடி- மேல்வாயடியை—உற - பொருந்த—ய - யகரமானது—தோன்றும் - பிறக்கும்-எ-று. (௨௭)

௮௩. அண்ணநுனிநாவருடரழவரும் ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) அண்ண நுனி - மேல்வாய்க்கடையை—நாநுனி-நாக்குநுனியானது—வருட- தடவ-ரழ- ரவ்வும்ழவ்வும்—வரும்-பிறக்கும்-எ-று (௨௮)

௮௪. அண்பன்முதலுமண்ணமுமுறையின், நாவிளிம்புவீங்கியொற்றவும்வருடவும், லகாரளகாரமாயிரண்டும்பிறக்கும் ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) அண்பன்முதல்- அண்பல்லடியை—நாவிளிம்பு-நாவோரமானது—வீங்கி- தடித்து—ஒற்ற- நெருங்க—லகாரமாய்- லகாரமாகியும்—அண்ணம்-மேல்வாயை—(நாவிளிம்பு)- நாவோரமானது—வருட-தடவ—ளகாரமாய்- ளகாரமாகியும்—இரண்டும்-இரண்டெழுத்துகளும்—முறை-இம்முறையே—பிறக்கும்-பிறக்கும்-எ-று.

௮௫. மேற்பல்லிதழுறமேவிடும்வவ்வே ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) மேற்பல் - மேற்பல்லானது—இதழ் - கீழுதட்டை—உற - பொருந்த—வ - வகரமானது—மேவிடும் - பிறக்கும்-எ-று. (௩௰)

௮௬. அண்ணநுனிநாநனியுறிற்றனவரும். ... ... ... *

இதுவுமது. (இ-ள்) அண்ணம் - மேல்வாயை—நாநுனி - நாக்குநுனி—நனியுறின் - மிகப்பொருந்தின்—றன - றவ்வும் னவ்வும்—வரும் - பிறக்கும் எ-று. (௩௧)

௮௭. ஆய்தக்கிடந்தலை யங்காமுயற்சி, சார்பெழுத்தேனவுந் தம்முதலனைய ... ... ... ... ... ... ... ... ... *

இது சார்பெழுத்திற்கு இடமுயற்சிவகையாற் பிறப்புணர்த்துகின்றது. (இ-ள்) ஆய்தக்கு - ஆய்தம்பிறத்தற்கு—இடம் - இடமானது—தலை - தலையாம்—முயற்சி - தொழிலானது—அங்கா - வாயைத்திறத்தலாம்—சார்பெழுத்தேனவும் - ஆய்தம்நீங்கலாகியமற்றைச் சார்பெழுத்துகளும்—தம்முதலனைய - தம்முதலெழுத்துகளோடொப்பனவாய்ப் பிறக்கும்-எ-று. (௩௨)

௮௮. எடுத்தல்படுத்தனலிதலுழப்பிற், றிரிபுந்தத்தமிற்சிறிதுளவாகும் ... ... ... ... ... ... ... ... ... ... *

இது முன்சொன்னபிறப்பிற்கு ஓர்புறனடை உணர்த்துகின்றது (இ-ள்) பலவெழுத்திற்குப்பிறப்பு - ஒன்றாகச்சொல்லப்பட்டாலும்—எடுத்தல் - எடுத்தலும்—படுத்தல் - படுத்தலும்—நலிதல் - நலிதலும்ஆகிய—உழப்பின் - எழுத்திற்குரியஒலிமுயற்சியால்—திரிபும் - ஒன்றற்கொன்றுபிறப்புவேறுபாடுகளும்—தத்தமில் - அவ்வவற்றின்கண்—சிறிது - சிறிது—உளவாகும் - உள்ளனவாம்-எ-று. (௩௩)

௮௯. புள்ளிவிட்டவ்வொடு முன்னுருவாகியு, மேனையுயிரோ டுருவுதிரிந்து,முயிரளவாயதன்வடிவொழித்திருவயிற், பெயரொடுமொற்று முன்னாய்வருமுயிர்மெய் ... ... ... ... ... ... *

இது முன்பிறப்புச் சொல்லிய சார்பெழுத்திற்குச்சார்ந்து வருமாறு மோர்பிறப்பாதலாற் பிறப்பிலக்கணத்துளடக்கி அறிவிக்கத் தொடங்கி அவற்றுள்உயிர்மெய்வருமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) புள்ளிவிட்டு - மெய்புள்ளியைவிட்டு—அவ்வொடு - அகரத்தோடுகூடியவழி—முன்னுருவாகியும் - அவ்விட்டவுருவேயுருவாகியும்—ஏனையுயிரோடு - அதுநீங்கலாகியவுயிர்களோடுகூடியவழி—உருவுதிரிந்தும் - உருவுவேறுபட்டும்—உயிரளவாய் - தன்மாத்திரைதோன்றாதுஉயிர்மாத்திரையேமாத்திரையாய்—அதன்வடிவொழித்து - தன்வரிவடிவின்

விகாரவடிவேவடிவாய் உயிர்வடிவையொழித்து — இருவயிற் பெயரொடும்-உயிரும்மெய்யும் ஆகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் யென்னும்பெயருடனே—ஒற்றுமுன்னாய்- ஒற்றொலிமுன்னும் உயிரொலிபின்னுமாகி—உயிர்மெய் - உயிர்மெய்யெழுத்து—வரும்- வரும்.எ-று [க்அ-க க்ஆ-கா. க்இ-கி.க்ஈ.கீ.க்உ-கு.க்ஊ-கூ.க்எ-கெ-க்ஏ-கே.க்ஐ- கை க்ஒ-கொ.க்ஓ-கோ.க்ஔ-கௌ. இப்படியே மற்றைமெய்களின்மேலும் பன்னிரண்டுயிர்களுங்கூடலால் இருநூற்றுப் பதினாறாதல்காண்க. (௫௫)

௯௰. குறியதன் முன்னராய்தப்புள்ளி, யுயிரொடு புணர்ந்தவல்லா றன்மிசைத்தே ... ... ... ... ... ... ... ... ...*

இது முற்றாய்தம்வருமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) ஆய்தப் புள்ளி - புள்ளிவடிவினதாகியவாய்தம்—குறியதன்முன்னர்- குற்றெழுத்தின்முன்னதாய்—உயிரொடுபுணர்ந்த-உயிரோடுகூடிய—வல்லாறன்மிசைத்து - வல்லெழுத்தாறனுளொன்றன்மேல தாய்வரும்-எ-று. (உ-ம்) எஃகு கஃசு இருபஃது எனவரும். பிறவுமன்ன-[இச்சூத்திரம் மேற்கோளாதலால் தானெடுத்துமொழுதலென்னுமுத்தி. வல்லினவகையாலியல்பாக வருமாய்தமாறனோடு அஃகிய எனப்புணர்ச்சி விகாரத்தால் வருமாய்தமும். அஃகான் எனச்செய்யுள் விகாரத்தால்வருமாய்தமும்; கூடியெட்டாதல்காண்க ] (௫௬)

௯௧. இசைகெடின் மொழிமுதலிடைகடை நிலைநெடி லளபெழுமவற்றவற்றினக்குறில்குறியே ... ... ... ... ... ... *

இது உயிரளபெடைவருமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) இசைகெடின் - பாட்டிலோசைகுறையின்— மொழி - அவ்வோசைகுறைந்தசொல்லுக்கு—முதல் - முதலிலாகிலும்— இடை - நடுவிலாகிலும் —கடை - இறுதியிலாகிலும்—நிலை-நின்ற — நெடில் - நெட்டெழுத்தேழுமொன்று — அளபெழும் - அவ்வோசையைநிறைக்கத்தன்மாத்திரையின் மிகுந்தொலிக்கும்—அவற்று -அவற்றின்பின்—அவற்றினக்குறில் - அதகற்குஇனமாகியகுற்றெழுத்துகள் —குறி - அளபெடுத்தமையை அறிதற்குவரிவ்வடிவில் அறிகுறியாய்வரும்-எ-று. (உ-ம்) ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ்செய்வினை. யாஅது மென்னுமவர்.—உறாஅர்க்குறுநோயுரைப்பாய்கடலைச்.செறாஅஅய்வாழியநெஞ்சு—அனிச்சப்பூக்கால் களையாள் பெய்தாளுசுட்பிற்கு, நல்லபடாஅ பறை — எனவரும். ஓதலில் ஓமுதலிலும் உறாரில் ஆ இடையிலும். படாவில் ஆ இறுதியிலும், அளபெடுத்தன. மற்றை நெட்டெழுத்து

ணும் இப்படியே அளபெடுக்கும். செருய் ஈளபெடுத்தது [ஔகா ரஞ்சொல்லுக்கு நடுவிலும், கடையிலும், வாராமையால் அவ்விடங்க ளில் அது நீங்கலாக நின்று அளபெடுக்கின்ற அளபெடைபத் தொ ன்படுதோடும்-கெடுப்பதா உங்கெட்டார்க்குச்சார்வாய்மற்றுங்கே, யெ டுப்பதூஉ மெல்லாமழை. எனவின்னிசை நிறைக்கவரு மளபெடையு ம் - உரனசைஇயுள்ளந் துணையாகச்சென்ருர்,வரனசைஇயின்னுமுளே ன், எனச்சொல்லிசை நிறைக்கவருமளபெடையுங்கூடிஉயிரளபெடை யிருபத்தொன்ருய் வருதல்காண்க] (௩௬)

௩௨. ஙஞணநமனவயலளவாய்து,மளபாங்குறிலிணைகுறிற்கீழிடை கடை, மிகமேலயவற்றின்குறியாம்வேறே ... ... ... ... *

இது ஒற்றளபெடை வருமாறுணர்த்துகின்றது. (இ-ள்) (இசை கெடின்) - பாட்டிலோசை குறையின் — குறிலிணைக் (கீழ்) - குறிலி ணையின்கீழாவது —குறிற்கீழ் - குறிற்கீழாவது—இடை - சொல்லுக் குநடுவிலாகிலும்—கடை - சொல்லுக்குக் கடையிலாகிலும் — ஙஞண நமனவயலள - ஙம்முதலிய விப்பத்துளொன்றேனும்—ஆய்தம் -ஆ ய்தமேனும் —அளபு மிகலாம் - அவ்வோசையை நிறைக்கத் - தன்மா த்திரையின்மிகுந்தொலிக்கும் — அவற்றின்வேறுகுறியாம் - அப்படி யளபெடுத்தமையை யறிதற்குஅவற்றின்பின் அவ்வெழுத்துகளேவ ரிவடிவில்அறிகுறியாய்வரும் எ-று முன்சூத்திரத்தில் இசைகெடினெ ன்றது இதற்குங்கூட்டப்பட்டது. உ-ம இலங்ங்கு வெண்பிறைசூடீச னடியார்க்குக்-கலங்ங்கு நெஞ்சமிலைகாண்-எ ம், எங்ங்கிறைவனுள்ளெ ன்பாய் மனனேயா - னெங்ங்கெனத்திரிவாரின் எ-ம். மடங்ங்கலந்தம னனேகளத்து - விடங்ங்கலந்தானை வேண்டும்.எ-ம். அங்ங்கனிந்தவரு ளிடத்தார்க் கன்புசெய்து-நங்ங்களங்கறுப்பாநாம்-எ-ம்.வரும்- இலங்- கு-குறிலிணைக்கீழிடையிலும். எங்கு-குறிற்கீழிடையிலும். மடங் - கு றிலிணைக்கீழ்க்கடையிலும். அங் - குறிற்கீழ்க்கடையிலும் ஙகரம் அ ளபெடுத்தது. எஃஃகிலங்கியகையராயின்னுயிர் - வெஃஃகுவார்க்கி ல்லைநீ. ஆய்தமளபெடுத்தது மற்றைமெய்களும் இப்படியே அள பெடுக்கும். [ஙகரம்போலவிதிமீருகவும் வாராமையால் ஆய்தத்தைஇ றுதியில் விலக்கி ஒற்றளபெடைநாற்பத்திரண்டாதல்காண்க.] (௩௭)

௩௩. யகரம்வரக்குறளுத்திரியிகரமு, மசைச்சொன்மியாவினிக ரமுங்குறிய ... ... ... ... ... ... ... ... ... *

இது குற்றியலிகரம்வருமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) யகர ம்வரயகரத்தைமுதலிலேயுடையசொல்வர — குறளு - குற்றியலுகரம் —திரி-திரிந்த—இகரமும்-இகரமும்— அசைச்சொல்- அசைச்சொல் லாகிய—மியாவின்-மியாவென்பதின்மகரத்தின்மேலிருக்கிற — இக

மும்-இகரமும்—குறிய-குற்றியலிகரங்களாம்-எ-று. (உ-ம்) நாகியா து எஃகியாது வரகியாது கொக்கியாது குரங்கியாது அல்கியாது. எ-ம். கேண்மியா. எ-ம் வரும்பிறவுமிப்படியேவரும். நாகு — யாது நாகியாது என்றாதல்காண்க. [பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறாலும் அசைச்சொன்மியாவினாலும்- குற்றியலிகரம் முப்பத்தேழாய்வருமாறுகாண்க.] (௯௩)

௯௪. நெடிலோடாய்தமுயிர்வலி மெலியிடைத், தொடர்மொழி யிறுதிவன்மையூருகர, மஃகும்பிறமேற்றொடரவும்பெறுமே ...

இது குற்றியலுகரம்வருமாறு உணர்த்துகின்றது (இ-ள்) நெடிலோடு-தனிநெடிலெழுத்தோடே—ஆய்தம் - ஆய்தமொன்றும் — உயிர் சொல்லுக்கு நடுவிலுங் கடையிலும்வாராத ஔகாரம்நீங்கிய உயிர்பதினொன்றும் — வலி-வல்லெழுத்தாறும்—மெலி-மெல்லெழுத்தாறும் —இடை - வல்லெழுத்துகளோடு தொடராதவகரம் நீங்கிய இடையெழுத்தைந்தும் ஆகியமுப்பத்தாறனுளொன்றால் — தொடர்—தற்குக்கு அயலெழுத்தாகத் தொடரப்பட்டு— மொழியிறுதி — சொல்லினிறுதியில் — வன்மை-வல்லெழுத்துகளுள்யாதாயினுமொன்றன்மேல் —ஊர் ஏறிவருகின்ற—உகரம்-உகரமானது—அஃகும் - தன்மாத்திரையிற்குறுகும்—பிற-பிறவெழுத்துகளுளொன்றும்பல்வும்— மேற்றொடரவும்-குறுகுதற்குமொழிநிறைதற்குங் காரணமாக மேலேதொடரவும்— பெறும் - தனிநெடிலொழிந்தவைந்து தொடரும்பெறும் எ-று. (உ-ம்) நாகு-காசு-நீறு-நெடிற்றொடர் — எஃகு - ஆய்தத்தொடர் —வரகு-பலாசு-கிரிது உயிர்த்தொடர்—கொக்கு - கச்சு - பற்று-வன்றொடர்—குரங்கு-மஞ்சு கன்று-மென்றொடர்—தெள்கு-சேர்பு-வீழ்து-இடைத்தொடர்—எனவரும் - பிறவுமிப்படியேவரும். [இங்கேசுற்றயலெழுத்தைக்கொண்டு ஆறுவகையாகச்சொல்லிப் பின்னேபுணரியல் முதலானவிடங்களிலே எடுத்தாளுதலால் முன்மொழிந்து கோடலென்னுமுத்தி— மொழிந்த பொருளோடவ்வயின் மொழியாததனையுமுட்டின்று முடித்தலென்னுமுத்தியால்-நுந்தையென்னுமுறைப்பெயரின்முன்னின்ற நகரமெய்யிலிருக்கிற உகரமுங் குறுகுமென்றுகொள்க] (௯௪)

௯௫. தற்சுட்டளபொழியைம் மூவழியு, நையுமௌவு முதலற் றாகும் ... ... ... ... ... ... ... ... ... ...

இது ஐகார ஔகாரக்குறுக்கம்வருமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) ஐ-ஐகாரம்—தற்சுட்டளபு-தன்னைக்குறித்துத்தன்பெயர்சொல்லுமளவிற்குறுகாது—ஒழி-ஒழிந்த—மூவழியும் - சொல்லுக்குமுதலிடைகடைகளிலேயெங்கேநின்றாலும்— நையும் - தன்மாத்திரையி

குறுகும்—ஔவும்-ஔகாரமும்—முதல்-சொல்லுக்குமுதலில்—அற்றுகும்-தன்மாத்திரையிற்குறுகும்-எ-று. (உ-ம்) ஐப்பசி வலையன் குவளை. எ-ம். மௌவல், எ-ம், வரும், [இடவகையால் ஐகாரக் குறுக்கமூன்றும்ஔகாரக்குறுக்கமொன்றும்வருதல்காண்க,] (௪௰)

(19) ௧௬, ணனமுன்னும்வஃகான்மிசையுமக்குறுகும் ... ...*

இது மகரக்குறுக்கம் வருமாறு உணர்த்துகின்றது, (இ-ள்) ணன ணகர னகரங்களிலொன்று நின்றுதொடர — முன்னும்-அதன்முன்னின்றாலும்—வஃகான் - வகரம்வந்துதொடர — மிசையும்-அதன் பின்னின்றாலும் —ம - மகரம் — குறுகும் - தன்மாத்திரையிற்குறையும் - எ-று, (உ-ம்) வெருளினுமெல்லாம்வெருளுமஃதன்றி மருளினுமெல்லாமருண்ம் - எ-ம், திசையறி மீகானும் போன்ம் - எ-ம், தரும்வளவன் - எ-ம், வரும், [இவற்றுள் மருளும்மருண்ம், போலும் போன்ம் என்றாதலால் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச்சொல்லிலே-ள-ல-திரிந்த ண-ன-வென்றறிக, இச்சூத்திரக்கருத்தைப் பின்வருஞ்சில சூத்திரங்களைக்கொண்டு உய்த்துணரவைத்தலால் இது உய்த்துணரவைப்பென்னுமுத்தி, (௪௧)

(20) ௧௭, லளவீற்றியைபினாமாய்தமஃகும் ... ... ... ...*

இது ஆய்தக்குறுக்கம் வருமாறு உணர்த்துகின்றது, (இ-ள்) லளவீற்றியைபின் - லகாரளகார வீற்றுப்புணர்ச்சியில் — ஆம் - ஆகின்ற—ஆய்தம்-குறில் வழிலளத்தவ் வணையினாய்த மாகவும் பெறூஉமல்வழியானேஎன்னுமாய்தம்—, அஃகும்-தன்னரைமாத்திரையிற்குறுகும்-எ-று. (உ-ம்) கஃறீது முஃடீது-எனவரும், [இதுமுடிவிடங்கூறலென்னுமுத்தி.] (௪௨)

௧௮, தொல்லைவடிவின வெல்லாவெழுத்துமாண், டெய்துமெகரவொகரமெய்புள்ளி ... ... ... ... ... ... ... ...*

இதுநிறுத்தமுறையாலுருவமாமாறுஉணர்த்துகின்றது(இ-ள்) எல்லாவெழுத்தும் - எல்லா வெழுத்துகளும் — தொல்லை வடிவின-பலவேறுவகைப்பட வெழுதிவழங்கும் பழையவடிவினை யுடையவாம் - ஆண்டு - அவ்வடிவையுடையவாய்வழங்கு மிடத்து — எகரம் - எகாரமும் —ஒகரம் ·ஒகாரமும்—மெய் - மெய்களும்—புள்ளி - புள்ளியை—எய்தும்-பெறும்-எ-று, உ-ம்) எ ஒ க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன், எனவரும் (௪௩)

21) ௧௯, மூன்றுயிரளபிரண்டாநெடிலொன்றேகுறிலோடையௌக்குறுக்கமொற்றளபரையொற்றி உக்குறுக்கமாய்தங், கால்குறண்மஃகானாய்தமாத்திரை... ... ... ... ... ... ... ... *

இது நிறுத்தமுறையால் மாத்திரையாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) மாத்திரை-ஒலிக்குமளவு—உயிரளபு-உயிரளபெடைக்கு—மூன்(றும்) -மூன்றாகும்—நெடில்-நெட்டெழுத்திற்கு—இரண்டாம்- இரண்டாகும்—குறில்-குற்றெழுத்திற்கும்—ஐக் (குறுக்கம்)-ஐகாரக்குறுக்கத்திற்கும்—ஔக்குறுக்கம்- ஔகாரக்குறுக்கத்திற்கும்—ஒற்றளபு-ஒற்றளபெடைக்கும்—ஒன்(றும் -தனித்தனியொன்றாகும்—ஒற்று-மெய்யெழுத்திற்கும்—இக் (குறுக்கம்)- குற்றியலிகரத்திற்கும்—உக்குறுக்கம்- குற்றியலுகரத்திற்கும்—ஆய்தம்- ஆய்தத்திற்கும்—அரை (யாம்)-தனித்தனியரையாகும்—குறண்மஃகான்-மகரக்குறுக்கத்திற்கும்—(குற) ளாய்தம்-ஆய்தக்குறுக்கத்திற்கும்—கா (லாம்)-தனித்தனிகாலாகும்- எ - று. [மேலுயிரளபென்று சொன்னதனால் இங்கே உயிர்மெய்க்கு மாத்திரை சொல்லவில்லை.] (௫௪)

௱ இயல்பெழுமாந்தரிமைநொடிமாத்திரை ... ... ... *

இது ஒருமாத்திரை யென்னுங்காலவரையை உணர்த்துகின்றது. (இ-ள்) மாந்தர் மாந்தருடைய—இயல்பு-இயல்பாக—எழும்-உண்டாகுகின்ற—இமை - கண்ணிமைப்பொழுதும்—நொடி - கைந்நொடிப்பொழுதும்—மாத்திரை - ஒருமாத்திரை யென்னும்வரையறைப்பொழுதாம்- எ - று [இது பின்னது நிறுத்தலென்னு முத்தியால் மாத்திரையினளவைப் பின்னாகச்சொன்னார்.] (௫௫)

௱௧ ஆவியுமொற்று மளவிறந்திசைத்தலு,மேவுமிசைவிளிபண்டமாற்றாதியின் ... ... ... ... ... ... ... ... ... *

இது மூன்றுயிரளபெடை யென்னுஞ் சூத்திரவிதிக்குப் புறனடை உணர்த்துகின்றது. (இ-ள்.) ஆவியும் - முதலுஞ்சார்புமாகிய உயிரெழுத்துகளும்—ஒற்றும் - அவ்விருவகைமெய்யெழுத்துகளும்—அளவிறந்து-முன்சொன்ன அளவைக்கடந்து—ஒலித்தலும்-அதிகமாக ஒலித்தலையும்—மேவும் பொருந்தும்—இசை- இராகமும்—விளி- அழைத்தலும்—பண்டமாற்று - பண்டமாற்றலும்—ஆதியின்- முதலானவைகளிடத்தென்றவாறு. [ஆதியென்றதனால் புலம்பல் முதலானவைகளுங்கொள்க இராகத்தில் அதிகமாக ஒலிக்கும்பொழுது உயிர்பன்னிரண்டு மாத்திரையாகவும் ஒற்றுப்பதினொரு மாத்திரையாகவும் ஒலிக்குமென்பாரிசைநூலார் இதுபிறநூன்முடிந்தது தானுடன்படுத லென்னுமுத்தி.] (௫௬)

௱௨. பன்னீருயிருங்கசதநபமவய ஞஙவீரைந்துயிர் மெய்யு மொழிமுதல் ... ... ... ... ... ... ... ... ... *

இது நிறுத்தமுறையால் மொழிக்குமுதலாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) பன்னீருயிரும்-பன்னிரண்டுயிரெழுத்துகளும்—கசத நபமவயஞங- ககரமுதல் ஙகரமீறாகச்சொல்லப்பட்ட—ஈரைந்து- பத்து—உயிர்-உயிரோடிய—மெய்யும்- மெய்யெழுத்துகளும்—மொழி- சொல்லுக்கு—முதல் - முதலாகும்- எ-று. (உ-ம்.) அடை- ஆடை- இடை- ஈடு- உடை- ஊடல்- எடு- ஏடு- ஐயம்- ஒதி- ஓதி- ஔவியம்- எனவும்- கனி- சவடி- தளிர்- நலம்- படை- மலை- வளம்- யவனர் - ஞமலி- அங்ஙனம் - எனவும்வரும். [உயிர்போலத்தனித்து முதலாகமாட்டாமையால் உயிர்மெய்யென்றார். இது இன்னதல்ல திதுவெனமொழிதலென்னுமுத்தி.] (௪௭)

(24) ௱௩. உஊஒஓவலவொடுவம்முதல் ... ... ... ... *

இது முதலாமென்ற மெய்களுட்சிறப்பு விதிஉணர்த்துகின்றது. (இ-ள்.) உஊஒஓவலவொடு- உஊஒஓஎன்கின்ற நான்குமல்லாத எட்டுயிர்களோடும்—வ - வகரமெய்யானது—முதல் - சொல்லுக்குமுதலாகும்- எ-று. (உ-ம்) வளி- வாளி- விளி- வீறு- வெளி- வேலை- வைகல்- வௌவு-எனவரும் (௪௮)

(25) ௱௪. அ ஆ உ ஊ ஓ ஔயம்முதல் ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) அ ஆ உ ஊ ஓ ஔ (வொடு) - அ ஆ உ ஊ ஓ ஔ என்கிற ஆறுயிரோடும்—ய - யகரமெய்—முதல் - சொல்லுக்குமுதலாகும் - எ - று. முன்சூத்திரத்தினெடுவைவருவிக்கலாயிற்று. (உ-ம்) யவனர் - யானை - யுகம் - யூகி - யோகி - யௌவனம் - எனவரும். (௪௯)

(26) ௱௫. அ ஆ எ ஒவ்வோடாகுஞம்முதல் ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) அ ஆ எ ஒவ்வோடு - அ ஆ எ ஒ என்கின்ற நான்குயிரோடும்—ஞ - ஞகரமெய் — முதலாகும் - சொல்லுக்குமுதலாகும் - எ-று. (உ-ம்) ஞமலி - ஞாலம் - ஞெகிழி - ஞொள்கிற்று- எனவரும் (௫௰)

௱௬. சுட்டியாவெகர வினாவழியவ்வை, யொட்டிஙவ்வு முதலாகும்மே ... ... ... ... ... ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) சுட்டு-மூன்றசுட்டும்—யா (வினா)- யாவினாவும்—எகரவினா-எகரவினாவும்—ஆகிய வைந்தனுடைய—வழி- பின்பு—அவ்வை-அகரத்தை—ஒட்டி-சேர்ந்து—ஙவ்வும்-ஙகரமெய்யும்—முதலாகும்-சொல்லுக்குமுதலாகும்-எ-று. (உ-ம்) -அங்ஙனம்-இங்ஙனம்

உங்ஙனம்- யாங்ஙனம்- எங்ஙனம்- எனவரும். [ஒருவிதத்திலேலே முத லாகையால் ஙவ்வுமென இழிவுசிறப்பும்மை கொடுத்துக்கூறினர் முத லாகாதென்பவர்க்கு உடன்படுதலு மறுத்தலு மாதலால்-பிறர்தம்மத மேற்கொண்டுகளைவென்னுமதம்.] (௬௧)

௫௭. ஆவிஞணநமனயரலவழள மெய், சாயுமுகரநாலாறுமீறே.

இது நிறுத்தமுறையான் மொழிக்கீறுமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) ஆவி- தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரண்டு உயிர்களும்—ஞணநமனயரலவழளமெய்- இப்பதினொருமெய்களும்—சாயுமுகரம்- குற்றியலுகரமும்ஆகிய—நாலாறும் - இருபத்துநான்கெழுத்தும்—ஈறு-மொழிக்கீறாகும்- எ-று. (உ-ம்) ஆ- ஈ- ஊ- ஏ- ஐ- ஓ- எ-ம். விள-பலா-கரி-தீ- கடு- பூ- சேஎ- தே- தை- நொ- போ- கௌ- எ-ம், உரிஞ்- மண்- பொருந்- மரம்- பொன் - வேய்- வேர் - வேல்- தெவ்- வீழ்- வாள்- அஃகு, எ-ம், வரும். (௬௨)

௫௮. குற்றுயிரளபினீறாமெகரம், மெய்யோடேலாதொந்நவ்வொ டாமௌக், ககரவகரமோடாகுமென்ப ... ... ... ... ...

இது முன்னீறுமென்றவெழுத்துட் சிலவற்றிற்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது. (இ-ள்.) குற்றுயிர் - அ இ உ எ ஒ என்கிற குற்று யிரானவை—அளபின்-அளபெடையிலே—ஈறும்-வரிவடிவில் அறிகு றியாகத்தனித்துஈறாகும்—எகரம்-எகரமானது—மெய்யொடேலாது- மெய்யோடீறாகாது—ஒ- ஒகரமானது—நவ்வொடாம்- நகரமெய்யொ டீறாகும்—ஔ ஔகாரமானது—ககரவகரமோடாகும்- ககரவ காரங்களிரண்டுமெய்களுடனீறாகும்—என்ப-என்றுசொல்லுவர்புலவர். எ-று. (உ-ம்,) பலாஅ- தீஇ- பூஉ - சேஎ - கைஇ- கோஒ- கௌஉ-எ- ம். நொ- எ-ம். கௌ- வௌ- எ-ம். வரும். (௬௩)

௫௯. நின்றநெறியேயுயிர்மெய்முதலீறே ... ... ... ...

இது எழுத்தினது முதலுமீறு மாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) நின்றநெறியே-மெய்முன்னும் உயிர்பின்னுமாக ஒலித்து நின்றவ ழியே—உயிர்மெய்-உயிர்மெய்க்கு—முதல்- மெய்முதலாகும்—ஈறு- உயிரீறாகும். எ-று. [எனவேஉயிரும் ஒற்றும் ஆய்தமுதலிய ஒன்பது சார்பெழுத்துகளும் ஓரெழுத்தாகையால் அவற்றிற்கு முதலுமீறும் அவையே யாமென்பதை அருத்தாபத்தியாற் கூறினர். இது எஞ்சிய சொல்லி னெய்தக்கூறலென்னுமுத்தி. இப்படி சொல்லாதவையெல் லாம் சொல்லின்முடிவினப் பொருண்முடித்தலென்னுமுத்தி ]. (௬௪)

௱௰. கசதபவொழித்த வீரேழன் கூட்ட, மெய்ம்மயக்குடனிலை ரழவொழித்தீரெட், டாகுமிவ்விருபான் மயக்குமொழியிடை, மேவுமுயிர்மெய்ம்மயக்களவின்றே ... ... ... ... ... ... ... ✱

இது நிறுத்தமுறையாலே மெய்யுடன்மெய்ம்மயங்கலும் உயிருமெய்யு மாறிமயங்கலும் ஆகிய இடைநிலை மயக்கமோமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) கசதப-கசதபவென்னுநான்கையும்—ஒழித்த நீக்கிய—ஈரேழன்கூட்டம் - பதினான்குமெய்களும் பிறமெய்களோடுகூடுங்கூட்டம்—மெய்ம்மயக்(காகும், - வேற்றுநிலைமெய்ம்மயக்கமாகும்—ரழ-ரழவென்னுமிரண்டனையும்—ஒழித்து-நீக்கி—ஈரெட்டு- மற்றைப்பதினாறுமெய்களும் —(கூட்டம் - தம்மோடு கூடுங்கூட்டம்— உடனிலை-மெய்ம்மயக் காகும்)-உடனிலைமெய்ம்மயக்கமாகும்— இவ்விருபான்மயக்கும்-இவ்விருவகைமயக்கமும்—மொழி- ஒருமொழிக்குந்தொடர்மொழிக்கும்—இடை-நடுவில்—மேவும்-வரும்—உயிர்மெய்- உயிருடன்மெய்யும் மெய்யுடன்உயிரும்—மயக்கு - மாறிமயங்குமயக்கத்திற்கு—அளவின்று- அளவில்லைவேண்டியவாறேமயங்குமென்றவாறு [கூட்டமென்றாலு மயக்கமென்றாலுஞ் சையோகமென்றாலும் ஒருபொருள் பின்றொடர்நிலையென்றதனால் முன்பிறமெய்யென்பது கொள்ளப்பட்டது.] உயிர்மெய்மயங்குதற்கு உதாரணம்-அல்- வில்-எ-ம். கா-எ-ம்.வரும்—மற்றவைகளுக்கு உதாரணம்- பின்வருஞ்சிறப்புச்சூத்திரங்களுட்காண்க. (௫௫)

௱௧௧. ஙம்முன்கவ்வாம்வம்முன்யவ்வே... ... ... ... ✱

இது வேற்றுநிலை மெய்ம்மயக்கத்துள் விதந்துசிறப்புவிதி உணர்த்துகின்றது (இ-ள், ஙம்முன்- ஙகரத்தின்முன்—க- ககரமும்—வம்முன்- வகரத்தின்முன்—ய- யகரமும்—ஆம்- மயங்கும்-எ-று.(உ-ம்.) கங்கு-எ-ம். தெவ்யாது எ-ம்.வரும். (௫௬)

௱௧௨. ஞநமுன்றம்மினம் யகரமோடாகும் ... ... ...

இதுவுமது. (இ-ள்) ஞநமுன்- ஞகரநகரங்களின்முன்—தம்மினம்- அவற்றிற்கினமாகியசகரதகரங்களும்—ய-யகரமும்—ஆகும்- மயங்கும்-எ-று. (உ-ம்; கஞ்சன்-உரிஞ்யாது- எ-ம். சந்தம்- பொருந்யாது-எ-ம்.வரும். (௫௭)

௱௧௩. டறமுன்கசபமெய்யுடன்மயங்கும் ... ... ... ✱

இதுவுமது. (இ-ள்) டறமுன்- டகரறகரங்களின்முன்—கசபமெய்-கசபவெனுமிம் மூன்றுமெய்களும்—உடன்மயங்கும் - இணங்கிமயங்கும்-எ-று [illegible] கட்கம்- கட்சி- திட்பம்- எ-ம். கற்க- கற்சிறார்- கற்பம்- எ-ம். வரும். (௫௮)

௱௧௪. ணனமுன்னினங்கச ஞபமயவவ்வரும் ... ... ... *

இதுவுமது (இ-ள்.) ணனமுன் - ணகரனகரங்களின் — இனம் - அவற்றிற்கினமாகிய டகாறகரங்களும் — கசஞபமயவ - ககரமுதலியவேழுமெய்களும் — வரும் மயங்கும், எ-று. (உ-ம்.) விண்டு - வெண்கலம் - வெண்சோறு - வெண்ஞமலி - வெண்பல் - வெண்மலர் - மண்யாது - மண்வலிது எ-ம். புன்றலை - புன்கண் - புன்செய் - புன்ஞமலி - புன்பயிர் - புன்மலர் - பொன்யாது - பொன்வலிது, எ-ம், வரும். (௫௧)

௱௧௫. மம்முன்பயவமயங்குமென்ப ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) மம்முன் - மகரத்தின்முன் — பயவ - பயவவென்னுமூன்றுமெய்களும் — மயங்குமென்ப - மயங்குமென்றுசொல்லுவர் புலவர் - எ-று. (உ-ம்) கம்பன் - கலம்யாது கலம்வலிது - எனவரும்.

௱௧௬. யரழமுன்னர்மொழிமுதன்மெய்வரும் ... ... *

இதுவுமது (இ-ள்) யரழமுன்னர் - யரழவென்னுமூன்றுமெய்களின்முன் — மொழிமுதன்மெய் - மொழிக்குமுதலாகநின்றபத்துமெய்களும் — வரும் மயக்கும் — என்றவாறு. (உ-ம்) வேய்கடிது வேர்கடிது - வீழ்கடிது - சிறிது - பெரிது - தீது - நீண்டது - மாண்டது - ஞான்றது - யாது - வலிது - இவற்றையும் அம்மூன்றுடன் கூட்டுக, வேய்க்குழல் ஆர்க்கோடு - பாழ்ங்கிணறு - எனவரும். (௬௧)

௱௧௭. லளமுன்கசபவயவொன்றும்மே ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) லளமுன் - லகர ளகரங்களின்முன் — கசபவய - ககரமுதலியவைந்தும் — ஒன்றும் மயங்கும் - எ-று. (உ-ம்) வேல்கடிது - வாள்கடிது - சிறிது - பெரிது - வலிது - யாது - இவற்றையுங்கூட்டுக (௬௨)

௱௧௮ ரழவல்லனதம்முற்றாமுடனிலையும் ... ... ... *

இது உடனிலை மயக்கத்தின் சிறப்புவிதி உணர்த்துகின்றது — (இ-ள்.) ரழவல்லன - ரகர ழகரமல்லாத பதினாறு மெய்களும் — தம்முன் - தமக்குமுன் — தாம் - தாம் — உடனிலையும் - உடனின்றுமயங்கும் - எ-று. (உ-ம்) அக்கம் - அங்ஙனம் - அச்சம் - அஞ்ஞானம் - அட்டு - அண்ணம் - அத்து - அந்நீர் - அப்பு - அம்மை - அய்யம் - அல்லி - அவ்வை அவ்வல் - அற்றம் - அன்னை - எனவரும். (௬௩)

௱௧௯ யாழவொற்றின்முன் கசதபஙஞநம, வீரொற்றாம்ரழத்தனிக்குறிலணைபா ... ... ... ... ... ... ... ... *

இது தனிமெய்யுடனே தனிமெய்யாகியும் மயங்குமெய்கள் இத்தனையென்றும் சொல்லுக்கு உறுப்பாகமயங்காத வெழுத்துகள் இத்தனையென்றும் உணர்த்துகின்றது (இ-ள்.) யரழ-யரழ வென்கிற மூன்றுமெய்களும்—முன்-இவற்றின் முன்மயக்குமென்ற—ஒற்றில்-பத்துமெய்களுள்—கசதபஙஞநம-ககரமுதலாகியவிவ்வெட்டுமெய்களும்—ஈரொற்றும்-தனிமெய்யும் உயிர்மெய்யுமாகி மயங்குதலன்றியும் ஈரொற்றாயுமயங்கும்—ரழ-ரகார ழகாரமெய்களும்— தனிக்குறில் - தனிக்குற்றெழுத்தும் — அணையா - சொல்லுக்கு உறுப்பாக வருவதும் நிற்பதுமாகமயங்குவனவல்ல. எ-று உ-ம். வேய்க்குறை-வேர்க்குறை-வீழ்க்குறை - எ-ம், வேய்ச்சிறை-வேர்ச்சிறை - வீழ்ச்சிறை எ-ம், வேய்த்தலை-வேர்த்தலை வீழ்த்தலை - எ-ம், வேய்ப்புறம்- வேர்ப்புறம்- வீழ்ப்புறம் - எ-ம், வேய்ங்குழல்-ஆர்ங்கோடு - பாழ்ங்கிணறு - எ-ம் காய்ந்தனம்-நேர்ந்தனம் வாழ்ந்தனம் எ-ம், மெய்ம்மயிர்- மெய்ஞ்ஞானம் - எ-ம், வரும் ஞகர மகரங்கள் ரகர ழகரங்களோடுகூடி மயங்குதற்கு உதாரணம் வந்தவிடத்திலேகாண்க. (௩௪)

௱௨௰. லளமெய்த்திரிந்த ணனமுன்மகார, நைந்தீரொற்றாஞ்செய்யுளுள்ளே ... ... ... ... ... ... ... ... ... *

இது செய்யுளுக்கு உரிமையாயீரொற்று உடனிற்பன இத்தனையென்று உணர்த்துகின்றது. (இ-ள்) லளமெய்த்திரிந்த லகாரளகாரவொற்றத்திரிந்த—ணனமுன் - னகாரணகாரமுன்வரும்— மகாரம்-மகரவொற்றானது—நைந்து-முன்சொன்னபடியேகுறுகி — ஈரொற்றும்-அந்தமெய்களுடனே யீரொற்றுடனிலையாம் — செய்யுளுள்ளே பாட்டினுள்எ-று. (உ-ம்.) திசையறிமீகானும் போன்ம் - எ-ம், மயிலியன் மாதர்மருண்ம் - எ-ம், வரும். (௩௫)

௱௨௧ தம்பெயர்மொழியின் முதலுமயக்கமு, மிம்முறைமாறியுமியலுமென்ப ... ... ... ... ... ... ... ... *

இது முதனிலை யிறுதிநிலை யிடைநிலைகளுக்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது. (இ-ள்) தம்பெயர் - தம்முடைய பெயர்களை—மொழியின் - சொல்லிநிலைமொழி வருமொழிகளாகப் புணர்க்குமிடத்து—முதலும் மொழிமுதலுக்கும்,— மயக்கமும்- இடைநிலைமயக்கத்திற்கும்— இம்முறை- இப்படிவிதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய வெல்லாவெழுத்துகளும் — மாறியுமியலும் - முதலாகியும் மயங்கியும் வரும் — என்ப - என்றுசொல்லுவர்புலவர் - எ-று. இப்படி யெல்லா வெழுத்துகளும் தனித்தனி அதற்கதுவே முதலாமெனவே ஈற்றிற்கு விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவு மாகிய வெல்லா வெழுத்துகளும் தனித்தனி அதற்கதுவே ஈறுமென

னே விளங்குதலால் ஈறுமென மிகைபடக் கூறல்விட்டார்] (உ-ம்) அவற்றுள் ளஃகான் முன்னர் யவ்வுந்தோன்றும் இதிலே லகரமானது முதலாகியும் ளகரமெய்யோடு மயங்கியும்வந்தது, கெப்பெரி து இதில் எகரமானது மெய்யோடேறாய் வந்தது - பிறவு மிப்படியே வரும். (மொழியிறுதிப் போலி) (௬௬)

௱௨௨. மகரவிறுதி யஃறிணைப்பெயரி, னகரமோடுறழா நடப்பனவுளவே ... ... ... ... ... ... ... ... ... ...*

இது - நிறுத்தமுறையினாலே போலியாமாறு உணர்த்தும் படியாகத் தொடங்கி மொழியிறுதிப்போலி உணர்த்துகின்றது (இ-ள்.) அஃறிணைப்பெயரின் - பால்பகாவஃறிணைப்பெயர்களிடத்து — இறுதி-ஈற்றிலேநின்ற — மகரம்-மகரமெய்யானது— னகரமோடு - னகரமெய்யோடு—உறழா-ஒத்து—நடப்பன-நடப்பவை— உள - உண்டு எ-று. [மகரம் னகரத்தோ டொத்தலாவது பெயரினிறுதியிலே மகரமிருந்தவிடத்து னகரம்வந்திருந்தாலும் வேறுபடாமலொத்தலாம் இம்மகரம் குறிலிணையைச்சேர்ந்து வருவதென்றறிக.] (உ-ம்) அகம்-அகன்-நிலம் - நிலன் -எனவரும் - [இவ்விறுதிப்போலியை முன்னே சொல்லுதலால்-சுரும்பு-சுரும்பர்-வண்டு-வண்டர் - எனமென்றொடர் குற்றியலுகரப்பெயரிறுதியுகரம் அர் என்பதனோடொத்து வருதலும்-பந்தல்-பந்தர்-சாம்பல்-சாம்பர்- எனச்சில லகரமெய்யீற்றுப்பெயரினிறுதி லகரமெய் ரகரமெய்யோடொத்துவருதலுங்கொள்க. (௬௭)

௱௨௩. அஐ முதலிடையொக்குஞ்சஞயமுன் ... ... ...*

இதுமொழிமுதற்போலியும் இடைப்போலியும் உணர்த்துகின்றது. (இ-ள்) அஐ - அகாரமும்ஐகாரமும்—முதல்-சொல்லுக்குமுதலிலும்— இடை-நடுவிலும் — ஒக்கும் - வேறுபாடில்லாமலொத்துநடக்கும்— சஞயமுன்-சகாரஞகாரயகரங்களுக்குமுன்வந்தால் எ-று (உ-ம்) பசல்-பைசல்-மஞ்சு-மைஞ்சு-மயல்-மையல்-எ-ம். அமச்சு-அமைச்சு-இலஞ்சி-இலைஞ்சி-அரயர்-அரையர்-எ-ம். வரும். (௬௮)

௱௨௪. ஐகான்யவ்வழிநவ்வொடுசில்வழி, ஞஃகானுறழுமென்மருமுளரே ... ... ... ... ... ... ... ... ... ...*

இது. மொழியிடைப்போலி - உணர்த்துகின்றது. (இ-ள்) சில்வழி-சொல்லுக்குநடுவே சிலவிடத்து—ஐகான் (வழி) ஐகாரத்தின்பின்னும்—யவ்வழி - யகரமெய்யின்பின்னும்—நவ்வொடு-இயல்பாய்வரும் நகரமெய்யினோடும்—ஞஃகான் -ஞகரமெய்யானது — உறழும்-ஒத்துநடக்கும்—என்மரும் -என்றுசொல்வாரும்—உளர் - சிலருண்டு. எ-று. (உ-ம்) செய்ஞ்ஞின்றநீல மலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன்-மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநிற்க- நெய்ஞ்ஞின்ற

சியும்விளக்கொத்தநீல மணிமிடற்றான் - வகைஞ்ஞின்ற வாடல்கண்டாற் பின்னைக் கண்கொண்டு காண்பமதென்னே, எ-ம் ஐஞ்ஞாறு. எ-ம். வரும் [மண்யாத்த-மணஞாத்த-பொன்யாத்த-பொன்ஞாத்த' எனவரும்போலிக்கு ஆசிரியர் தொல்காப்பியர் - இலக்கணஞ்சொன்னபடி இந்நூலாசிரியர் சொல்லாமல் வி[illegible]து இறந்தது விலக்கலென்னுமுத்தி (௬௯)

௱௨௫ அம்முனிகரம்யகரமென்றிவை, யெய்தினை யொத்திசைக்குமவ்வோ, டுவ்வும்வவ்வுமௌவோரன்ன ... ... ... ... *

இது. வடநூலார்சந்தியக்கர மென்பவற்றுள் ஐஔ என்கிற நெட்டெழுத்துகளின்வடிவு தோன்றுதலை உணர்த்துகின்றது. (இ-ள்) அம்முன்-அகரத்தின் முன்—இகரம் - இகரமும்— யகரம் - யகரமெய்யும்—என்றிவை-என்றுசொல்லப்பட்டவிவை—ஒத்து- தம்முளொத்து—எய்தின்-பொருந்தினால்—ஐயிசைக்கும்- ஐயென்கிற நெட்டெழுத்துஒலிக்கும்—அவ்வோடு-அகரத்தோடு—உவ்வும் உகரமும்— வவ்வும்-வகரமெய்யும்— ஒத்து தம்முளொத்து—ஓரன்ன -ஒருதன்மையனவாக—(எய்தின்) பொருந்தினால்—ஔ- (விசைக்கும்)ஔவென்கிற நெட்டெழுத்து ஒலிக்கும்-எ - று [யகரவகரமெய்கள் நடுவிலேகலக்குமெனக்கொள்க - மொழிந்தபொருளோ டொன்றவவ்வயின்மொழியாதத‌னையு முட்டின்றுமுடித்தல் என்னுமுத்தியால் - அகரக்கூறும் இகரக்கூறும் தம்முளொத்து எகரமொலிக்கும் அகரக்கூறும் உகரக்கூறும்தம்முளொத்து ஒகரமொலிக்குமெனக்கொள்க (௭௰)

௱௨௬. மெய்களகரமுநெட்டுயிர்காரமு, மையௌக் கானுமிருமைக்குறிலிவ், விரண்டொடுகரமுமாஞ் சாரியைபெறும்பிற ......*

இது மேலேசொல்லப்பட்ட எழுத்தின் சாரியைகளைத் தொகுத்து இடமடைத்தல் உணர்த்துகின்றது இ-ள், மெய்கள் - ஒற்றுகள்—அகரமும்-அகரச்சாரியையும்—நெட்டுயிர் உயிர்நெடில்கள்— காரமும்-காரச்சாரியையும்,—ஐயௌ - அவற்றுள் ஐகார ஔகாரங்கள்—கானும் - காரச்சாரியையுடனே கான்சாரியையும் — இருமைக்குறில்-உயிர்க்குறிலுமுயிர்மெய்க்குறிலும்—இவ்விரண்டொடு - காரம்கானென்கிறவிரண்டுடனே—கரமும் - கரச்சாரியையும் — ஆம்,- ஆகின்ற—சாரியை-சாரியைகளை—பெறும்-பெறும், எ-று, [மெய்களவ்வுமென்னாது அகரமுமென்றதனால் - இப்படியேசரம் காரம்கான்வந்தால் சாரியை அகரத்தினது சாரியையென்றுகொள்க, மெய்கள் சாரியைபெறாமலும்உயிர் மெய்நெடில்கள் சாரியைபெற்றும் வருதலில்லை] (உ-ம்) க ங, எ - ம், ஆகாரம் - ஐகாரம் - ஔகாரம், எ-ம், ஐகான் - ஔகான் எ-ம், அகாரம் - அஃகான் - அகரம் - மகாரம் மஃகான் மகரம் - எ-ம்,

வரும் [விகற்பத்தின்முடித்தலென்னுமுத்தியால் மேலியிருந்து மேடந் தனவற்றை விளங்கவேண்டி இங்கேதொகுத்து முடித்தலால் இச்சூத் திரம்முடிந்தது முடித்தலென்னுமுத்தி.] (௭௧)

௩௨எ. மொழியாய்த்தொடரினுமுன்னனைத்தெழுத்தே ... *

இது இவ்வியலுக் காவதோர் புறனடையுணர்த்துகின்றது (இ-ள்) எழுத்து- இவ்வெழுத்துகள்—மொழியாய் - பதமாயினும்—தொடரி னும் - அப்பதந் தம்மோடும் உருபோடும் புணர்ந்தாலும்— முன்னனைத்து - முன்சொல்லப்பட்ட அப்பதத்திலக்கணத்தையு முடையன வாகும்-எ-று. (௭௨)

எழுத்தியன்முற்றுப்பெற்றது.

## இரண்டாவது-பதவியல்.

௩௨அ. எழுத்தேதனித்துந்தொடர்ந்தும்பொருடரிற், பதமாம துபகாப்பதம்பகுபதமென, விருபாலாகியியலுமென்ப, ... ...*

இது. நிறுத்தமுறையினாலே பதத்திலக்கணத்தை அறிவிக்கத் தொடங்கி எழுத்தினாலே பதமாதலும் அதுயித்தனை வகைப்படுமெ ன்பதும் உணர்த்துகின்றது. (இ-ள்.) எழுத்தே-எழுத்துகள்தாமே— தனித்தும்- ஒவ்வொன்றாகத்தனித்தாகிலும்— தொடர்ந்தும் - இரண் டுமுதலாகத்தொடர்ந்தாகிலும்—பொருள் - பிறபொருளை—தரின்-கா ட்டுமேயானால்—பதமாம்-பதமாகும்—அது- அப்பதமானது—பகா ப்பத மென)-பகாப்பதமெனவும்—பகுபதமென- பகுபதமெனவு ம்—இருபாலாகி- இரண்டுவகையினையுடையதாகி—இயலும்- நடக்கும் —என்ப-என்றுசொல்லுவர்புலவர்-எ-று. (௧)

௩௨௯. உயிர்மவிலாறுந் தபநவிலைந்துங், கவசவினாலும் யவ்வி லொன்றுமாகுநெடினொதுவாங்குறிலிரண்டோ, டோரெழுத்தியல்பத மாறேழ்சிறப்பின ... ... ... ... ... ... ... ... *

இது ஓரெழுத்தொருமொழி இவையென்பதும் இத்தனையென் பதும் உணர்த்துகின்றது. (இ-ள்) உயிர்மவில் - உயிர்வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும்—ஆறும்-அவ்வாறும்—தபநவில்-தவ்வருக்கத்திலு ம் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும்—ஐந்தும் - ஐவைந்தும்— கவசவில்- கவ்வருக்கத்திலும் வவ்வருக்கத்திலும் சவ்வருக்கத்திலும்—

நாலும்-நந்நான்கும்—பவ்வில்-பவ்வருக்கத்தில்—ஐந்தும்- ஒன்றும்—
ஆறும்நெடில் - ஆறுநெட்டெழுத்தாலாகிய மொழிநாற்பதும் — நொ-
நொவவும்—து துவ்வும்—ஆங்குறில்- ஆறுங்குற்றெழுத்தாலாகியமொ
ழி—இரண்டோடு-இரண்டுடனே—ஓரெழுத்தியல்பதம்- ஓரெழுத்தா
லாகியமொழிகள்—ஆறேழ்-நாற்பத்திரண்டும்—சிறப்பின-சிறப்பின
வாம் - எ-று. (உ-ம்) ஆ- ஈ - ஊ - ஏ- ஐ- ஓ - எனவும் மா- மீ- மூ-
மே- மை- மோ- எனவும். தா- தீ- தூ- தே- தை - எனவும். பா- பூ-
பே- பை- போ- எனவும் நா- நீ- நே- நை - நோ- எனவும். கா- கூ-
கை- கோ- எனவும். வா- வீ- வை- வௌ- எனவும். சா- சீ சே- சோ-
எனவும். யா-எனவும் நொ- து-எனவும். வரும் இவற்றுள். ஊ-இறைச்சி,
ஓ-மதகுநீர்தாங்கும்பலகை, பே-நுரை-நே அன்பு-சோ- மதில், நொ-
துன்பப்படு, து-உண், [இவை சிறப்பினவெனவே- கு-கௌ பி-வெ-
பனச்சிறப்பில்லாதவைகளுஞ் சிலவுளவென்றறிக.] (உ)

௱௩௰. பகாப்பதமேழும் பகுபதமொன்பது, மெழுத்தீறுகத்
தொடருமென்ப ... ... ... ... ... ... ... ... *

இது தொடரெழுத்து மொழியாமாறு உணர்த்துகின்றது (இ-ள்.)
பகாப்பதம்-பகாப்பதங்கள்—ஏ (ழெழுத்தீறாக) வும்- இரண்டெழுத்
துமுதலேழெழுத்தீறாகவும்—பகுபதம்- பகுபதங்கள்—ஒன்பதெழு
த்தீறாகவும்- இரண்டெழுத்துமுதலொன்பதெழுத்தீறாகவும்,—தொட
ரும் - தொடரும்—என்ப - என்றுசொல்லுவர்புலவர்- எ-று (உ-ம்)
அணி-அறம்- அகலம்- அருப்பம்- தருப்பணம்-உத்திரட்டாதி- எ-ம்.
கூனி-கூனன்-குழையன்- பொருப்பன்- அம்பலவன்- அரங்கத்தான்-
உத்திராடத்தான்-உத்திரட்டாதியான்- எ-ம். வரும் [நடத்துவிப்பிக்கி
றான்- எனப்பகுதிமுதலியவுறுப்பு வேறுபட்டு வருகின்றவைகளுக்கு
இவ்வரையறையில்லையென்றறிக] (௩)

(பகாப்பதம்)

௱௩௧. பகுப்பாற்பயனற் றிடுகுறியாகி, முன்னேயொன்றாய் மு
டிந்தியல்கின்ற,பெயர்வினையிடையுரி நான்கும்பகாப்பதம் ... ... *

இது முன்பகாப்பதம் பகுபதமென்றவற்றுள்ளே பகாப்பதங்
கள் இப்படிப்பட்டவைகளென்பதும் இத்தனைவகைப்படுமென்பது
ம் உணர்த்துகின்றது. (இ-ள்.) பகுப்பால்- பிரிக்கப்படுதலினாலே—ப
யனற்று பகுதிவிகுதிமுதலாகியபயனில்லாமல்—இடுகுறியாகி- காரண
மில்லாமல் இடப்பட்டகுறியாகி— முன்னேயொன்றாய்-படைப்புக்கா
லந்தொட்டொன்றாகி—முடிந்து முடிந்து—இயல்கின்ற-நடக்கின்ற—
பெயர்- பெயர்ச்சொல்லும்—வினை - வினைச்சொல்லும்—இடை- இ

டைச்சொல்லும்—உரி-உரிச்சொல்லுமாகிய—நான்கும்- நான்கும்—பகாப்பதம்-பகாப்பதங்களாகும். எ-று. (உ-ம்) நிலம்-நீர்-நெருப்பு-காற்று-என்பன பெயர்ப்பகாப்பதம்-நட-வா-உண்- தின்-என்பன வினைப்பகாப்பதம்-மன்-கொல்-போல்-மற்று- என்பன இடைப்பகாப்பதம்-உறு-கழி-அன்பு-அழகு-என்பன உரிப்பகாப்பதம். (௪)

௱௩௨. பொருளிடங்காலஞ் சினைகுணந்தொழிலின், வருபெயர்பொழுது கொள்வினைப்பகுபதமே ... ... ... ... ... *

இது பகுபதங்கள் இப்படிப்பட்டவைகளென்பதும் இத்தனைவகைப்படுமென்பதும் உணர்த்துகின்றது. (இ-ள்.) பொருள்- பொருளும்—இடம்-இடமும்—காலம்-காலமும்—சினை-உறுப்பும்—குணம்-குணமும்—தொழிலின்-தொழிலுங்காரணமாக—வரு- வருகின்ற—பெயர்-பெயர்ச்சொற்களும்—பொழுதுகொள்-தெரிநிலையாகவுங் குறிப்பாகவுங் காலத்தைக்கொள்ளும்—வினை-வினைச்சொற்களும்—பகுபதம்- பகுபதங்களாகும்- எ-று [பொழுதுகொள்வினை பகுபதமெனவே அவ்விருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமாமென்பது அருத்தாபத்தியாற் சொன்னானெனவறிக.] (உ-ம்.) பொன்னன் அகத்தன் ஆதிரையான் கண்ணன் கரியன் ஊணன் எனப்பெயர்ப்பகுபதம்வந்தன- நடந்தான் நடக்கிறான் நடப்பான்-எ-ம் நடந்த-நடக்கின்ற-நடக்கும்- எ-ம். நடந்து-நடக்க-நடக்கின்-எ-ம். நடந்திலன்- நடக்கின்றிலன்-நடவான்-எ-ம் நடவாத-எ-ம். நடவாமல்-எ-ம் உடன்பாட்டிலும் எதிர்மறையிலுங்கூடிய முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமுமாகிய தெரிநிலை வினைப்பகுபதம் வந்தன-பொன்னன்- ஊணன்-எ-ம், கரிய-பெரிய, எ-ம். அன்றி-இன்றி-எ-ம். முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமுமாகிய குறிப்புவினைப்பகுபதம் வந்தன, நடந்தான் நடந்தவன்-பொன்னன்- பொன்னவன் எனவிருவகை வினையாலணையும் பெயர்ப்பகுபதம் வந்தன. (௫)

௱௩௩ பகுதிவிகுதியிடைநிலைசாரியை, சந்திவிகாரமாறினுமேற்பவை, முன்னிப்புணர்ப்பமுடியுமெப்பதங்களும் ... ... ... *

இது பகுபதத்திலுறுப்புகள் இத்தனையென்பது உணர்த்துகின்றது இ-ள் பகுதி-முதனிலையும்—விகுதி- இறுதிநிலையும்—இடைநிலை-இடைநிலையும்—சாரியை-சாரியையும்-சந்தி- சந்தியும்—விகாரம்-விகாரமும்—ஆறினும்-ஆகியவிவ்வாறுறுப்பினுள்ளும்—ஏற்பவை-பொருளமைதிக்கு ஏற்பவைகளை—முன்னி- நினைத்து—புணர்ப்ப- அறிவுடையோர்கூட்டிமுடிக்க—எப்பதங்களும்- எவ்வகைப்பட்ட பகுபதங்களும்—முடியும் முடிவுபெறும்-எ-று. (உ-ம்) கூனியென்பது-கூன்-இ-எனப்பகுதிவிகுதியான் முடிந்தது-உண்டானென்பது ...

ன்-என அவ்விரண்டுடன்-இடைநிலைபெற்றுமுடிந்தது- உண்டனன்- என்பது உண்-ட்-அன்-அன்- என அம்மூன்றுடன்சாரியைபெற்றுமுடிந்தது பிடித்தனன் என்பது-பிடி-த்-த்-அன்-அன்- என- அந்நான்குடன் சந்திபெற்றுமுடிந்தது-நடந்தனன் என்பது-நட-த்-த்- அன்- அன்-என- அவ்வைந்தும்பெற்றுச் சந்தியால்வந்த தகரவல்லொற்று மெல்லொற்றாகிய விகாரமும் பெற்றுமுடிந்தது. [பதப்புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட- தோன்றல்முதலாய மூன்றுபுணர்ச்சி விகாரங்களையும் வலித்தல்முதலாகிய வொன்பதுசெய்யுள் விகாரங்களையும் இதுபெறுமென மாட்டிதலால் இதுபட்டெறிந் தொழுகவென் றுமுத்தி ],(௬)

௱௩௪. தத்தம்பகாப்பதங்களேபகுதியாகும் ... ... ...

இது - பகுபதவுறுப்புகள் ஆறனுள்ளே பின்னைய மூன்றும் புணரியலுள் காட்டப்படுதலால் அவை நீங்கலாக முன்னைய மூன்றனுள்ளே பகுதிகள் இப்படிப்பட்ட வைகளென்று உணர்த்துகின்றது. (இ-ள்) தத்தம்பகாப்பதங்களே-பெயர்ப்பகுபதங்களுள்ளும்வினைப்பகுபதங்களுள்ளும்-அதனதனுடைய முன்னிற்கின்ற பகாப்பதங்களே—பகுதியாகும்-பகுதிகளாகும்-எ-று. (எ)

௱௩௫. செம்மைசிறுமைசேய்மைதீமை,வெம்மைபுதுமைமென்மைமேன்மை,திண்மையுண்மை நுண்மையிவற்றெதிர், இன்னவும்பண்பிற்பகாநிலைப்பதமே ... ... ... ... ... ... ... ...

இது பண்புப்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது. (இ-ள்) செம்மைநுண்மை-செம்மைமுதல் நுண்மையீறாகச்சொல்லப்பட்ட பதினொன்றும்—இவற்றெதிர் - இவைகளுக்கு எதிரானவெண்மைமுதலானவைகளும்—இன்னவும்- இவைபோல்வனபிறவும்—பண்பின்-பண்புப்பொருளினின்றும்—பகா - வேறுபொருள் பகுக்கப்படாத—நிலை-நிலையையுடைய—பதம்- பதங்களாகும் எ-று [சொன்னிலையாற் பகுபதமாயினும் மைவிகுதிக்குப்பகுதிப்பொருளல்லது வேறுபொருளில்லாமையினாலே பண்புப் பகாநிலையென்னாது பண்பிற்பகாநிலையென்றார். இது சொற்பொருள் விரித்தலென் றுமுத்தி,செம்மை சிறுமைசேய்மை தீமைமுதலிய வாய்பாடுகள் எடுத்துக்காட்டலென் றுமுத்தி] (அ)

௱௩௬. ஈறுபோதலிடையுகரமிய்யாதல், ஆதிநீடலடியகரமையாதல், தன்னொற்றிரட்டன்முன்னின்றமெய்திரிதல், இனமிகலினையவும் பண்பிற்கியல்பே ... ... ... ... ... ... ... ... ...

இதுவுமது- (இ-ள்) ஈறு - இறுதியிலுள்ள மைவிகுதியானது—

இய்யாதல்-இகரமாதலும் — ஆதி-முதனின்றகுறிலானது — நீடல்-நெடிலாதலும் — அடியகரம் - முதனின்ற அகரமானது — ஐயாதல் - ஐகாரமாதலும் — தன்னொற்று-தன்மெய்யானது — இரட்டல் - நடுவேமிகுதலும் — முன்னின்றமெய்-முன்னின்றமெய்யானது — திரிதல்-வேறொருமெய்யாதலும் — இனம்-வருமெழுத்திற்கு இனவெழுத்து — மிகல்-மிகுதலும் — இனையவும்- இவைபோல்வனபிறவும் — பண்பிற்கு-அப்பண்பினுக்கு — இயல்பு இயல்பாகும் எ-று [இவ்விகாரங்கள் பதப் புணர்ச்சிக்குங் கொள்க. இது ஒப்பின்முடித்த லென்னுமுத்தி.] (உ-ம்) நல்லன் - நன்மையின் மைவிகுதிகெட்டது — கரியன் - கருமையின் மைவிகுதிகெட்டு நடுநின்ற உகரம் இகரமாயிற்று — பாசி - பசுமையின் மைவிகுதிகெட்டு ஆதிநீண்டது — பைந்தார் - பசுமையின் மைவிகுதியும் நடுநின்ற வுயிர்மெய்யுங்கெட்டு வருமெழுத்திற்கு இனவெழுத்துமிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று — வெற்றிலை-வெறுமையின் மைவிகுதிகெட்டுத் தன்னொற்றிரட்டியது — செந்தாம்பல் - செம்மையின்மைவிகுதிபோய் ஆதிநீண்டு முன்னின்றமகரமெய் தகரமெய்யாகத்திரிந்தது. [இவ்விகாரங்கள் அன்பன் அழகன் முதலிய வாய்பாடுகளுக்கு அடையாமல் செம்மைமுதலிய வாய்பாடுகளுக்கே அடையவைத்தலால் எடுத்தமொழியினெய்தவைத்தலென்னுமுத்தியாம்.] (௯)

எகின நடவாமடி சீவிடுகூவேவை, தொப்போ வௌவுரிஞ்நுண
பொருந்திருந்தின், றேட்பார்செல்வவ்வாழ் கேளஃகென், றெய்திய
இருபான்மூன்றாமீற்றவுஞ், செய்யெ னேவல்வினைப்பகாப்பதமே. —*

இது தெரிநிலை வினைப்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது. (இ-ள்) நட-அஃகென்று நட வா மடி சீ விடு கூ வே வை தொ போ வௌ உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று — எய்திய - முதனிலைகளாகப் பொருந்திய — இருபான்மூன்றாம்-இருபத்துமூன்றாகும் — ஈற்றவும் உயிருமெய்யுங் குற்றியலுகரமுமாகிய ஈற்றையுடைய இவைமுதலாகிய வாய்பாடுகளெல்லாம் — செய்யென்-செய்யென்கின்ற — ஏவல் ஏவலினது — (பகாப்பதம் - பகாப்பதமாகிய பகுதியும் — ஏனை மற்றை வினைகளுக்கு — பகாப்பதம் - பகாப்பதங்களாகிய பகுதியும் — ஆம் - எ - று. [விகற்பத்தின் முடித்தலென்னு முத்தியால்- இருபத்துமூன்றீற்றனவாக விகற்பித்து எடுத்துக் காட்டும் வாய்பாடுகளெல்லாம் இப்பொதுவாய் பாட்டிலடங்குமென்பார் முடிந்தது முடித்தலென்னு முத்தியால்- செய்யெனவுங்கூறினார் — செய்யென்வினைப்பகாப்பதமென்ற வளவிலே [illegible]

தமும்அடங்குமாயினும் முதனிலைகளே ஏவற்பொருளுணர்த்தாமல் ஆய்விகுதியோடுபுணர்ந்துநின்று உணர்த்துமென் றறிவித்தற்குவே றுகூறினர், அம்முன்னிலையேவலொருமை யெதிர்காலவினை முற்றிற் குவரும் ஆய்விகுதி குன்றியும்வரும் இதுபோலவே விகுதிபுணர்ந் து கெட்டுநிற்குஞ்சொற்கள் இன்னும் பலவுண்டு அவை யெல்லாம் பகுபதமுடிக்கும் போது காண்பிக்கப்படும் ] (ஏவற்பகுதிக்கு உதாரணம்) நடவாய் வாராய் உண்ணாய் தின்னாய் அஃகாய் - எ - ம். நட வா உண் தின் - அஃகு - எ - ம்.வரும் மற்றைவினைப்பகுதிக்கு உதாரணம்) நடந்தான் வந்தான் மடித்தான் சீத்தான் விட்டான் கூவினான் வெந்தான் வைத்தான் நொந்தான் போயினான் வெளவி னான் உரிஞினான் உண்டான் பொருநினான் திருமினான் தின்றான் தேய்த்தான் பார்த்தான் சென்றான் வவ்வினான் வாழ்ந்தான் கேட் டான் அஃகினான் எனவரும். [இந்நூலாசிரியர் வடநூன் மேற்கோ ளாகஒருமொழிகளை விதந்துபகாப்பதம் பகுபதமெனக் காரணப்பெ யர்தாமே இட்டெழுத்தே என்னுஞ்சூத்திரமுதல் இதுவாறாக்கும் ப காப்பதம் பகுபதமெனப் பலதாஞ்சொல்லுதல் தன்குறிவழக்கமிக வெடுத்துரைத்தலென் றுமுத்தி.]

இத்தெரிநிலை வினைப்பகுதிகள் — விகுதியோடு புணரும்போ து தொழுதான் உண்டான் எனச்சில இயல்பாத லல்லாமலும்- செல் - சேறல் - எனமுதனீண்டும் — தா - தந்தான், எனத்தனிநெடில்குறுகியும் — சா - செத்தான், எனமுதல் ஆகாரம் எகரமாகியும் —கொணா - கொணர்ந்தான், எனமுதலயலெழுத்துக் குறுகி ரகர மெய்விரிந்தும் — விரவு - விராவினான். எனநடுக்குறில் நீண்டும்— முழுகு - முழுகினான் - மூழ்கினான். என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும் — வா - வருகின்றான். எனத்தனி நெடில்குறுகி ஒருயிர்மெ ய்விரிந்தும் — கல் - கற்றான் எனவீற்றுமெய்வரு மெய்யாகத் திரிந்தும் — செல் - சென்றான். எனவீற்றுமெய்வரு மெழுத்திற்கு இனமாகத்திரிந்தும் இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும் — கா- சா - தா இவைமுறையே காத்தான் - செத்தான் - தந்தான் - எனவும். கல் - நில் - புல் - சொல் - இவைகற்றான் - நின்றான் - புல்லினான்- சொன்னான். எனவும். ஒருநிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப் படுதலால் அவையெல்லாம் தனித்தனிச் சொல்லப் புகுந்தால் விரியு மாதலால் செய்யுள்வழக்கத்தையும் உலகவழக்கத்தையும் பார்த்தறுச செய்யுள் விகாரமும் புணர்ச்சிவிகாரமுங்கொண்டு அமைத்துக் கொள்க. தெரிநிலைவினைகள் நட - வா - முதலாகியமுதனிலை வினைப்பகு திகளிலிருந்தல்லாமலும் சிறுபான்மை - கடைக்கண் - கடைக்கணித் தான். சித்திரம் - சித்திரித்தான். எனப்பெயர்ச் சொற்களி லிருந்து ம் — போல் - பொன்போன்றான் - நிகர் - புலிநிகர்த்தான், எனவி

டைச்சொற்களி லிருந்தும் — மால் - மாலும். சால் - சான்றுஞ்செம்மை - சேந்தான். சிறுமை - சிறுத்தான். என வுரிச்சொற்களி லிருந்தும்பிறக்கும். (௰)

**௱௩௮** செய்யென்வினைவழிவிப்பிதனிவரிற், செய்வியென்னேவலிணையினீரேவல் ... ... ... ... ... ... ... ... *

இது. ஏவற்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது (இ-ள்) செய்யென் - செய்யென்னும் வாய்பாட்டு — வினைவழி - ஏதநிலைத்தனிவினையின்பின் — விப்பி - விவ்விகுதியாவது பிவ்விகுதியாவது — தனிவரின் - தனித்துவருமாயின் — செய்வியென்னேவல் - செய்யென்னுமேவலின் மேலோரேவலாய்ச்செய்வியென்னும்வாய்பாட்டேவற்பகுதியாம் — இணையின் - அவ்வினையின்பின் இந்தவிகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின் — ஈரேவல் - செய்விப்பியென்னும் வாய்பாட்டேவற்பகுதியாம் - எ-று. (உ-ம்) நடப்பியாய் - நடப்பிப்பியாய் - வருவியாய் - வருவிப்பியாய்-எனவரும்.] சிறுபான்மை - உரையிற் கோடலென்னு முத்தியால். கு - சு - டு - து - பு - று என்கிற ஆறுவிகுதிகளுள் ஒன்றுபெற்றும்-சிலபகுதிகள்விகாரப்பட்டும், அப்படிவருமெனக்கொள்க (உ-ம்) போ போக்கு. பாய் - பாய்ச்சு உருள் - உருட்டு. நட - நடத்து எழு - எழுப்பு துயில் - துயிற்று. எனவும். இயங்கு இயக்கு. திருந்து - திருத்து தோன்று தோற்று. ஆடு-ஆட்டு. தேறு - தேற்று, உருகு - உருக்குஎனவும்வரும் ] (௰௧)

**௱௩௯.** விளம்பியபகுதிவேறாதலும்விதியே ... ... .. *

இது. வினைப்பகுதிக்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது (இ-ள்.) விளம்பியபகுதி- ஏவற்பகுதி வேறாதல்போல அதன்பின்னே சொல்லப்பட்டமற்றைவினைப்பகுதிகள் — வேறாதலும் - வேறுபடுதலும் — விதியே - விதியேயாகும். எ - று. உ-ம்) நடத்தினன்-நடப்பித்தான் - நடத்துவிப்பித்தான்-எனவரும். இங்கே தன்வினைப்பகுதிகள் பிறவினைப்பகுதிகளானமைகாண்க. (௰௨)

**௱௪௰** அன் ஆன் அள் ஆள்அர்ஆர்பம்மார், அஆகுடுதுறுஎன்என்அல்அன், அம்ஆம்எம்ஏம் ஓமொடும்ஊர், கடதறஐ ஆய் இம்மின் இர்ஈர், ஈயர்கயவுமென்பவும் பிறவும், வினையின்விகுதி பெயரினுஞ் சிலவே ... ... ... ... ... ... ... ... ... ... *

இது. விகுதிகள். இப்படிப் பட்டவைகளென்று உணர்த்துகின்றது. (இ-ள்.- அன்-என்பவும்-அன்முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும் — பிறவும்-இவைபோல்வனபிறவும்— வினையின்வி

று இ-வினைப்பகுபதங்களின் விகுதிகளாகும்— பெயரினும்- பெயர்ப் பகுபதங்களினும் —சில - சிலவிகுதிகளாகும் எ-று. [அல் விகுதி தன்மைக்கு எதிரதுபோற்றலென்னுமுத்தியாற் சேர்க்கப்பட்டதாகலின் வழியுறுத்தற்குப்பின்னுங்கூறினர்] (உ-ம்) நடந்தனன் நடந்தான் நடந்தனள் நடந்தாள் நடந்தனர் நடந்தார் நடப்ப நடமார் நடந்தனநடவா உண்கு உண்டு நடந்தது கூயிற்று நடந்தனென் நடந்தேன் நடப்பல் நடப்பன் நடப்பம் நடப்பாம் நடப்பெம் நடப்பேம் நடப்போம் நடக்கும் உண்டும் நடந்தும் சேறும் நடந்தனை நடந்தாய் நடக்தி நடமின் நடந்தனிர் நடந்தீர் நீயிர் நடக்க வாழிய நடக்கும் எனவரும். பிறவுமென்றதனால் நடந்திசி எழுந்திரு அருளுமாறால் அமேழல் சொல்லிக்காண் என இடு இரு உ ஆல் எல் காண் முதலியவும் வரும். இவையெல்லாந் தெரிநிலை வினைமுற்றுகள் வினைக்குறிப்பு முற்றுகள் குறிப்பாகக் காலங்காட்டுவனவாதலால் இந்தவிகுதிகளுக்குள்ளே-தாமே காலங்காட்டும் விகுதிகளொழிந்த மற்றவைகளோடு வருமெனக்கொள்க. (உ-ம்) குழையன் குழையான் குழையள் குழையாள் குழையர் குழையார் குழையன குறுந்தாட்டு குழையது குழையிற்று குழையினென் குழையினேன் குழையம் குழையாம் குழையினெம் குழையினேம் குழையினோம் குழையினை குழையாய் வில்லி குழையினிர் குழையீர் எனவரும்

(பெயரினுஞ்சிலவென்றதனால் இவ்விகுதிகளுள்.)

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் அ து இ மார் எனவருகின்றவைகளுடனே மன் மான் கள் வை தை கை பி முன் அல் னளரவ மெய்கள் முதலானவைகள் பெயர்விகுதிகளாம். (உ-ம் குழையன்வானத்தான் குழையள் வானத்தாள் குழையர் வானத்தார் குழையனயாது பொன்னி தேவிமார் வடமன் கோமான் கோக்கள் அவைஎந்தை எங்கை எம்பி எம்முன் தோன்றல் பிறன் பிறள் பிறர் அவ் என வரும்.

இன்னும் வினையின் விகுதி பெயரினுஞ்சிலவென்றதனாலும்பிறவுமென்றதனாலும் பலவகைப் பட்ட வினைகளுக்கும் பெயர்களுக்கும் உவ்விகுதிகளுக்குள் அடங்கியும் அடங்காமலும் வரும்விகுதிகளெல்லாங் கொள்ளப்படும்.

(பெயரெச்சவிகுதிகள்.)

அ-உம். இவைபெயரெச்சவினைவிகுதிகளாம். (உ-ம்) நடந்த நடக்கின்ற நடக்கும் எனவரும்.

(வினையெச்சவினைவிகுதிகள்.)

உ பு ஆ ஊ என அ இன் இய இயர் வான் பான்-பாக்கு இவை

களுடன் இ ய ப ர மெய் கு ஆல் கால் ஏல் எனும் உம் மல் மை மை து றி இவை முதலானவைகளும் வினையெச்ச விகுதிகளாம் (உ-ம்.) நடந்து உண்கு உண்ணு உண்ணா உண்டென உண்ணநடக்கின் உண்ணிய உண்ணியர் வருவான் உண்பான் உண்பாக்கு ஓடிப்போய் உணற்கு நடந்தால் ஒலித்தக்கால் நடக்குமேல் நடக்குமேனும் காண்டலும் உணாமல் உண்ணாமை உண்ணாமே அல்லது அன்றி எனவரும்.

(தொழிற்பெயர்விகுதிகள்.)

தல் அல் அம் ஐ கை வை கு பு உ து சி வி உள் காடு பாடு அரவு ஆனை மை து, இவைமுதலியன தொழிற்பெயர் விகுதிகளாம். (உ-ம்) நடத்தல் ஆடல் வாட்டம் கொலை நடக்கை பார்வை போக்கு நடப்பு வரவு மறதி புணர்ச்சி புலவி விக்குள் சாக்காடு கோட்பாடு தோற்றரவு வரானை நடவாமை பாய்த்து எனவரும். துவ்விகுதி நடந்தது நடக்கின்றது நடப்பது. எனக் காலவிடை நிலையொடு கூடியும்வரும்.

(பண்புப்பெயர்விகுதிகள்)

மை ஐ சி பு உ கு தி று அம் நர் இவைமுதலியன பண்புப்பெயர் விகுதிகளாம். (உ-ம்) நன்மை தொல்லை மாட்சி மாண்பு மழவு நன்கு நன்றி நன்று நலம் நன்னர் எனவரும்

(எதிர்மறைவிகுதிகள்.

இல் அல் ஆ இவை எதிர்மறைவிகுதிகளாம். (உ-ம்) நடந்திலன் நடக்கின்றிலன் நடப்பிலன் நடக்கலன் நடவாதான் எனவரும்.

(பிறவினைவிகுதிகள்.)

வி பி கு சு டு து பு று இவை பிறவினை விகுதிகளாம் (உ-ம்) வருவித்தான் நடப்பித்தான் போக்கினான் பாய்ச்சினான் உருட்டினான் நடத்தினான் எழுப்பினான் அயிற்றினான் எனவரும் — கரைதேய் எனவருகிற தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதனிலைகள் சிறுபான்மை இவ்விகுதிவேண்டாமல் கரைத்தான் தேய்த்தான் கரைத்திலன் தேய்த்திலன் கரைக்கின்றான் தேய்க்கின்றான் கரைக்கின்றிலன் தேய்க்கின்றிலன் கரைப்பான் தேய்ப்பான் கரைக்கான் தேய்க்கான் எனப்பிறவினைப்பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிக்கும், கரைந்தான் கரைந்திலன் கரைகிறான் கரைகின்றிலன் கரைவான் கரையான் எனத்தன் வினைப்பொருளைத்தரும்போது வல்லெழுத்து மிகாமலும்வருமென்றறிக.

இன்னும்-இ-ஐ-அம் விகுதிகள் அலரி பறவை எச்சம் எனவிவை

முகப்பொருளையும். ஊருணி தொடை தொல்காப்பியம். எனச்செயப்படு பொருளையும். மண்வெட்டி பார்வைநோக்கம் எனக்கருவிப் பொருளையும் உணர்த்திவரும். விடு ஒழி விகுதிகள் வந்துவிட்டான் கேட்டொழிந்தான். எனத் துணிவுப் பொருளுணர்த்திவரும் — கொள் விகுதி அடித்துக்கொண்டான் சடித்துக் கொண்டான் எனத் தற்செயலுணர்த்திவரும் — படு உண் விகுதிகள் கட்டப்பட்டான் கட்டுண்டான் எனச்செயப்பாட்டு வினைகளுக்குவரும் — மை விகுதி ஆண்மை பெண்மை எனத் தன்மைப் பொருளுணர்த்தும் எல்லாப் பொருளிலும்வரும் எல்லாவிகுதிகளையும் அளவுசெய்தல் கூடாமையால் அதிகமாகவழங்குகிற சிலவிகுதிகளைக்காட்டினோம்

பொன்னன்-கரியன் - எனவருகின்றவை முக்காலங்களுளொன்றைக்குறிப்பாகக்காட்டும்போது வினைக்குறிப்பு முற்றுப்பகுபதங்களாம். எட்டுவேற்றுமைகளுளொன்றையேற்று வரும்போது பெயர்ப்பகுபதங்களாகும். அவ்விரண்டையுங்கொண்டு வரும்போது வினைக்குறிப்புமுற்றாலணையும் பெயர்ப்பகுபதங்களாம். நடந்தான் வந்தான். எனவருகின்றவை காலங்காட்டும்போது தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களாம் காலங்காட்டுதலுடனே வேற்றுமை யேற்கும்போது தெரிநிலை வினைமுற்றாலணையும் பெயர்ப்பகுபதங்களாம் இவையெல்லா மொன்றுக்கொன்று வேறுபாடாம் (௰௩)

௱௪௧. இலக்கியங்கண்டதற் கிலக்கணமியம்பலிற், பகுதிவிகுதி பகுத்திடைநின்றதை, வினைப்பெயரல்பெயர்க்கிடை நிலையெனலே... *

இ-து. இடைநிலையாமாறு அறிவிக்கத்தொடங்கிப் பெயர்க்கு இடைநிலை உணர்த்துகின்றது. (இ-ள்) இலக்கியம்- அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கியத்தை—கண்டு-பார்த்து—அதற்கு - அவ்விலக்கியத்திற்கு — இலக்கணம் - அவ்விலக்கியத்தி னமைதியே யிலக்கணமாக—இயம்பலின்-சொல்லுதலால்—பகுதி முன் சொல்லப்பட்ட பகுதியையும்—விகுதி-விகுதியையும்—பகுத்து-பிரித்து — இடைநின்றதை-நடுநின்றதை—வினைப்பெயரல்பெயர்க்கு - வினையாலணையும் பெயரல்லாதபெயர்களுக்கு — இடைநிலையென-இடைநிலையென்று சொல்லுக-எ-று. (உ-ம்) அறிஞன் ஞகரவிடைநிலை. ஓதுவான் வகரவிடைநிலை. வலைச்சி சகரவிடைநிலை. வண்ணாத்தி தகரவிடைநிலை. மற்றவையுமிப்படியேவருதல்காண்க. (௰௪)

௱௪௨. தடறவொற்றின்னே யைம்பான்மூவிடத், திறந்தகாலந்தருந்தொழிலிடைநிலை ... ... ... ... ... ... ... ... *

இ-து. இறந்தகாலவினைக்கு இடைநிலை உணர்த்துகின்றது (இ-ள்) தடறவொற்று - தகர டகர றகரமெய்களும் — இன் - இன்னும் —

ஐம்பான்மூவிடத்து ஐம்பான்மூவிடங்களிலும் — இறந்தகாலம்-இறந்தகாலத்தை — தரும் - காட்டுகின்ற — தொழில் - வினைப்பகுபதங்களினுடைய — இடைநிலை - இடைநிலைகளாகும்.எ-று. (உ-ம்) நடந்தான் நடந்தாள் நடந்தார் நடந்தது நடந்தன நடந்தேன் நடந்தேம்-நடந்தாய் நடந்தீர் எ-ம்.உண்டான் எ-ம். சென்றான். எ-ம். உறங்கினான். எ-ம். வரும். இன்னிடைநிலை எஞ்சியது எனக்கடை குறைந்தும் போனது எனமுதல் குறைந்தும்வரும் மற்றவையும்இப்படியே (௰௫)

௱௪௩. ஆநின்று கின்று கிறுமூவிடத்தி, னைம்பானிகழ் பொழு தறைவினையிடைநிலை ... ... ... ... ... ... ... ... ✻

இது. நிகழ்கால வினைக்கு இடைநிலைஉணர்த்துகின்றது.(இ-ள்) ஆநின்று ஆநின்றென்பதும் — கின்று-கின்றென்பதும் — கிறு கிறுவென்பதும் — ஐம்பான் மூவிடத்தின் - ஐம்பான்மூவிடங்களிலும் — நிகழ்பொழுது-நிகழ்காலத்தை — அறை - காட்டுகின்ற — வினை-வினைப்பகுபதங்களினுடைய — இடைநிலை - இடைநிலைகளாகும்.எ-று.(உ-ம்) நடவாநின்றான் நடக்கின்றான் நடக்கிறான் எனவரும். மற்றவைகளுமிப்படியே (௰௬)

௱௪௪. பவ்வமூவிடத் தைம்பா லெதிர்பொழு, திசைவினையிடைநிலையாஞ் சிலவில ... ... ... ... ... ... ... ... ✻

இது, எதிர்காலவினைக்கு இடைநிலையும் - முக்காலவிடைநிலைகளுக்கும் அவற்றோர்புறனடையும் - உணர்த்துகின்றது (இ-ள்) பவ்வ-பகரமெய்யும் வகரமெய்யும் — ஐம்பான் மூவிடத்து-ஐம்பான் மூவிடங்களிலும் — எதிர்பொழுது-எதிர்காலத்தை — இசை - காட்டுகின்ற — வினை - வினைப்பகுபதங்களினுடைய - இடைநிலையாம் - இடைநிலைகளாகும், இவை - இம்முக்காலவிடைநிலைகளும் — சில சில முற்றெச்சங்களுக்கு — இல-இல்லை-எ-று, (உ-ம்,) நடப்பான் வருவான் எனவரும்-மற்றவைகளுமிப்படியே, இவை சிலவில வென்றதனால் விகுதியாவது பகுதியாவது வேறிடைநிலையாவது காலங்காட்டுமென்பதுபெறும் அவைபின்வருஞ்சூத்திரத்திற் காண்க (௰௭)

௱௪௫, றவ்வொடுகரவும்மை நிகழ்பல்லவுந், தவ்வொடிறப்புமெதிர்வுமட்வ்வொடு, கழிவுங்கவ்வோ டெதிர்வுமின்னேவல், வியங்கோளிம்மா ரெதிர்வும்பாந்தஞ், செலவொடுவரவுஞ்செய்யு நிகழ்பெதிர்வு, மெதிர்மறைமும்மையுமேற்குமீங்கே ... ... ... ... ... ✻

இது, முன்சூத்திரத்தில் இவைசிலவில வென்றார் அவையிவை யெய் [illegible] உணர்த்துகின்றது (இ-ள்) றவ்வொடு - றகரமெய்யோடு கூடிய — உகரவும்மை-உகரவீற்று [illegible] — [illegible]

ம் இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் — தவ்வொடு - தகரமெய்யோடுகூடிய — (உகரவும்மை)-உகரவிகுதியும் உம்விகுதியும் — இறப்புமெதிர்வும் - இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் — டவ்வொடு - டகரமெய்யோடுகூடிய — (உகரவும்மை) - உகரவிகுதியும்உம்விகுதியும் — கழிவும் - இறந்தகாலத்தையும் — கவ்வோடு - ககரமெய்யோடுகூடிய — (உகரவும்மை) உகரவிகுதியும் உம்விகுதியும் — எதிர்வும் - எதிர்காலத்தையும் — மின் - மின்விகுதியும் — ஏவல் - முன்னிலையேவல்விகுதிகளும் — வியங்கோள் - வியங்கோள்விகுதிகளும் — இ-இகரவிகுதியும் — மார்-மார்விகுதியும் — எதிர்வும் - எதிர்காலத்தையும் — பாந்தம்-பகரவிகுதி — செலவொடுவரவும் - இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் — செய்யும் - செய்யுமென்னும் வாய்பாட்டுமூற்றுவிகுதி — நிகழ்வெதிர்வும் - நிகழ்காலத்தையும் எதிர் காலத்தையும் — எதிர்மறை எதிர்மறை ஆகாரவிகுதி — மும்மையும் - மூன்றுகாலத்தையும் — ஏற்கும் ஏற்றவரும் — ஈங்கு - இவைசிலவிலவென்றவைக ளுள்-எ-று, (உ-ம்) சென்று சென்றும் இ - சேறுசேறும்எ, வந்துவந்தும் இ, வருதுவருதும் எ. உண்டு உண்டும் இ, உண்கு உண்கும எ, உண்மின் உணணு உணக சேதி உண்மார் எ, உண்ப இ எ, உண்ணும் நி எ, உண்ணுன் இ நி எ, எனவரும் [காலங்காட்டும் விகுதிகளை மட்டுஞ்சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிறவிடைநிலையையுஞ் சொல்லாமையால் அவைசிறுபான்மைவரும் - வந்தவிடங்களிற்கண்டு கொள்கவென்றாராயிற்று, அவைவருமாறு தொட்டான் உற்றான்புக்கான் - என-டு-கு று- எ ட் கறழூன்மெழுத்துகளுள்ஒன்று ஈறாகியசில குதிலினைப்பகுதிகள் விகாரப்பட்டு இறந்தகாலங்காட்டும் — என்மனா என்றிசினோர் - போயது என - மன் இசின்யகரமெய் இம்மூன்றிடை நிலைகளும் இறந்தகாலங்காட்டும் — உண்ணாநின்றான் உணணுவிருந்தான் என ஆநின்று ஆவிருந்து இரண்டிடை நிலைகளும் நிகழ்காலமும், காட்டும் — என்மர் - எனமகரவிடைநிலை இறந்தகாலமும், காட்டும் — ஈங்கே யென்றமிகையால் வருதிஎன இகரவிகுதி நிகழ்காலங் காட்டுதலும் எச்சவிகுதிகள்காலங்காட்டுதலையும் அமைத்துக்கொள்க,

## இனிப் பகுதி விகுதிமுதலிய வுறுப்புகளாற் பகுபத முடிக்குமாறு.

பொன்னன் என்கிற உயர்திணை யாண்பாலொருமைப் படர்க்கைப் பொருட்பெயர்ப பகுபதத்தை முடிக்கு மிடத்து - பொருளிடங் காலமென்னுஞ் சூத்திரவிதியால், பொன் - என்றும் பகுதியை முதலில்வைத்து, அதன்பின் அன் ஆன் அள் ஆளென்னுஞ்சூத்திரவிதியால உயர்திணையாணபா லொருமைப் படர்க்கையைக் காட்டுகிற அன்விகுதியை வருவித்து, பொன்-அன் எனவைத்து, தனிய

குறின் முன்னொற்றுயிரொன்னுஞ் சூத்திரவிதியால் அந்த னகரமெய்யை இரட்டித்து, பொன்.ன்-அன்- எனவைத்து, உடன்மேலுயிரொன்னுஞ் சூத்திரவிதியால் அகரவுயிரை மிகுந்த னகரமெய்யின் மேலேற்றி-பொன்னன்-எனமுடிக்க,—நடந்தனனென்கிற உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கை யிறந்தகால வியற்றும் வினைமுதற் றெரிநிலை வினைமுற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்து நடவாமென்னுஞ் சூத்திரவிதியால் நடவென்னும் பகுதியைமுதலில்வைத்து, அன் ஆன் அள் ஆளென்னுஞ் சூத்திரவிதியால் உயர்திணையாண்பா லொருமைப்படர்க்கையைக்காட்டுகிற அன்விகுதியை அதன்பின்வருவித்து, நட-அன்-எனவைத்து, தடறவொற்றின்னேயென்னுஞ் சூத்திரவிதியால் இறந்தகாலங்காட்டுந் தகரவிடைநிலையை அவ்விரண்டற்கும் நடுவிலேவருவித்து,நட-த் அன் எனவைத்து, அன் ஆன் இன்னலென்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைக்கும் விகுதிக்கு மிடையிலே அன்சாரியையை வருவித்து நட-த்-அன்-அன்-எனவைத்து, உடன்மே லுயிர்வந்தொன்றுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகரமெய்யின்மேலே சாரியை அகரவுயிரையேற்றி-நட-தன்-அன்-எனவைத்து இன்னும் அச்சூத்திரவிதியால் சாரியை னகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரையேற்றி,நட-தனன்-எனவைத்து,இயல்பினுமென்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத்தகரத்தை மிகுவித்து,நட-த்தனன்-எனவைத்து, வலித்தன்மெலித்தலென்னுஞ் சூத்திரவிதியால் அந்த தகரவல்லொற்றை மெல்லொற்றாக்கி,நடந்தனன் எனமுடிக்க

நட-உண்- எனவருகிற முன்னிலையேவல்வினைகளிலே ஆய்விகுதியும்,நடவான்- நடவேன்- நடவாய்- என்கிற எதிர்மறைவினைகளிலே ஆவென்னு மெதிர்மறைவிகுதியும், கொல்களிறு- ஓடாக்குதிரை - என்பவைகளிலே கொன்ற கொல்கின்ற கொல்லும் ஓடாத எனவருகிற பெயரெச்ச வினைவிகுதிகளும், வரிப்புனைபந்து இதில் வரிந்து எனவருகிற வினையெச்சவிகுதியும்,சொள்வாருக்கள் வருநேர் இதில் நேர்வா எனவருகிற முற்றுவினை விகுதியும்,முடி அடி என்பவைகளிலே முடித்தல் அடித்தல் எனவருகிற தொழிற்பெயர்விகுதியும், காய் தளிர் இவைகளில் வினைமுதற்பொருளுணர்த்தும் இகரவிகுதியும்,ஊண் எழுத்து இவைகளிலே செயப்படுபொருளுணர்த்தும் ஐவிகுதியும், புணர்ந்துகுன்றின் அவ்விகுதிகள் புணர்ந்தகுறைவும் புணர்ந்து நின்றாற் போலவே பொருளுணர்த்தும் (௰௮)

௱௪௬ இடையினான்குமீற்றிலிரண்டு, மல்லாவச்சைவருக்கமுதலீறி, யவ்வாதிநான்மைளவ்வாகுமையம், பொதுவெழுத்தொழிந்த நாலேழுந்திரியும் ... ... ... ... ... ... ... ... ...*

இது ஆரியமொழி விகாரப்பட்டுத் தமிழில் வடமொழிபாமாறு அறிவிக்கத்தொடங்கி அவற்றின் பொதுவிதி உணர்த்துகின்றது. (இ-ள்.) இடையில் - ஆரியத்தில் அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிற உயிர் பதினாறனுள் நடுவிலிருக்கின்ற—நான்கும்- என்கிறநாலெழுத்துகளும்—ஈற்றில்-கடையிலிருக்கின்ற—இரண்டும்-என்கிற இரண்டெழுத்துகளும்—அல்லா- நீங்கலாகிய—அச்சு - அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிற பத்துஉயிர்களும்— ஐவருக்கம் - க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ஷ ஸ ஹ ள க்ஷ என்கிற மெய் முப்பத்தேழனுள் ககரமுதலைந்தைந்தெழுத்துகளாகிய ஐந்துவருக்கங்களுடைய—முதல் முதலிலிருக்கின்ற கசடதப என்கிற வைந்துமெய்களும் — ஈறு - கடையிலிருக்கின்ற ஙஞணநம என்கிற வைந்துமெய்களும்—யவ்வாதிநான்மை-யரலவ என்கிற நான்குமெய்களும்—ள-ளகரமெய்யும்—ஆகுமையையெழுத்து-ஆகிய இருபத்தைந்தெழுத்துகளும்—பொது- தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துகளாகும்— ஒழிந்த - அவையொழிந்த—நாலேழும்-இருபத்தெட்டெழுத்துகளும்—திரியும்- ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துகளாய்த் தமக்கேற்ற பொதுவெழுத்துகளாகத் திரிந்துவரும்-எ-று. (௰௧)

௱௪௭. அவற்றுள் - ஏழாமுயிரிய்யுமிருவுமைவருக்கத், திடையின்மூன்று மவ்வம்முதலு, மெட்டேயவ்வு முப்பதுசயவு, மேலொன்றுசடவுமிரண்டுசதவு, மூன்றேயகவு மைந்திருகவ்வு, மாவீறைறயு மீயுதிகாமும் ... ... ... ... ... ... ... ... ... *

இது முன்சொல்லப்பட்டதற்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது. (இ-ள்) அவற்றுள்-முன்னேதிரியுமென்றவெழுத்துகளுள்—ஏழாமுயிர்-சிறப்பெழுத்தாகிய வேழாமுயிரானது—இய்யுமிருவும் - இகரமாகவானாலும் இருவாகவானாலும்வரும்—ஐவருக்கத்து ஐந்துவருக்கங்களிலும்—இடையின்மூன்றும்- நடுநின்றமூன்றெழுத்துகளும்—அவ்வம்முதலும்-அவ்வவ்வருக்கங்களின் முதலெழுத்துகளாகும்—எட்டு-எட்டாவதாகிய சகரவருக்கத்துமெய்யானது—யவ்வும்-ஒரோவிடத்துயகரமுமாகும்—முப்பது - முப்பதாமெய்யானது — சயவும்-மொழிக்கு முதலிலே சகரமும் நடுவிலேயகரமுமாகும்— மேலொன்று-முப்பத்தோராமெய்யானது--சடவும்-மொழிக்குமுதலிலேசகரமும் நடுவிலே டகரமுமாகும்— இரண்டு முப்பத்திரண்டாமெய்யானது—சதவும்- மொழிக்குமுதலிலே சகரமும் நடுவிலே தகரமுமாகும்—மூன்று-முப்பத்துமூன்றாமெய்யானது—அகவும்- மொழிக்குமுதலிலே அகரமும்நடுவிலேககரமுமாகும்--ஐந்து- முப்பத்தைந்தாமெய்யானது—இருகவ்வும்- இரண்டுககரமாகும்—ஆவீறு பொதுவெழுத்து

யிலே மொழியிறுதி ஆகாரமானது—ஐயும் - ஐகாரமாகும் — ஈற்று-மொழியிறுதி ஈகாரமானது-இகரமும் இகரமாகும்-எ-று. (உ-ம்) இடபம்-எ-ம் மிருகம்-எ-ம். ஏழாமுயிர் இகரமும் இருவுமாயிற்று நகம்-நாகம்-மேகம் எ-ம் சலவாதி-விசயம்-சருச்சனை-எ-ம் பீடம்-பீடை-இடம்-எ-ம். தலம்-தினம்-தளை எ-ம் பலம்-பந்தம்-பாரம்-எ-ம். ஐந்துவருக்கங்களினும் உரப்பியும் எடுத்துங்கனைத்துஞ் சொல்லப்படுகிற மும்மூன்றும் அவ்வவ்வருக்க முதலெழுத்தாயின-பங்கயம் எட்டாமெய் யகரமுமாயிற்று சாலை எ-ம் மயானம எ-ம் முப்பதாமெய் முதலிற் சகரமும் நடுவில் யகரமுமாற்று சட்டி-எ-ம். இடபம்-எ-ம் முப்பத்தொன்றாமெய் முதலிற் சகரமும் நடுவில்டகரமுமாயிற்று சித்தி-எ-ம் வாதனை-எ-ம். முப்பத்திரண்டாமெய் முதலிற்சகரமும் நடுவில் தகரமுமாயிற்று. அரசு-எ-ம் மோகம் எ-ம். முப்பத்துமூன்றுமெய் முதலில் அகரமும் நடுவிற்ககரமுமாயிற்று பக்கம் எனமுப்பத்திரண்டாமெய் இரண்டுககரமாயிற்று. மாலை என ஆவீறு ஐயாயிற்று புரி என ஈகாரவீறு இகரமாயிற்று. (௨௰)

௱௪௮. ரவ்விற்கம்முதலா மூக்குறிலும், லவ்விற்கிம்முதலிரண்டும் யவ்விற், கிய்யுமொழிமுதலாகிமுன்வருமே ... ... ... ... *

இதுவுமது (இ-ள்) ரவ்விற்கு ரகரத்திற்கு—அம்முதலா மூக்குறிலும்- அ இ உ என்கிறமூன்று குற்றெழுத்துகளிலொன்றும்—லவ்விற்கு-லகரத்திற்கு— இம்முதலிரண்டும்- இ உ என்கிற விரண்டிலொன்றும்—யவ்விற்கு-யகரத்திற்கு— இய்யும்-இகரமும்— மொழிமுதலாகி-அவ்வெழுத்துகளை முதலிலுடையவடமொழிகளுக்கு முதலாகி—முன்வரும்-அம்மூன்றெழுத்துகளுக்கு முன்னே வரும்-எ-று. (உ-ம்) அரங்கம் - இராமன் - உரோமம் - எ-ம். இலாபம் - உலோபம் - எ-ம். இயக்கன்-எ-ம் வரும். (௨௧)

௱௪௯. இணைந்தியல்காலையரலக்கிகரமு, மவ்வக்குகரமுநகரக்ககரமு, மிசைவரும்ரவ்வழியுவ்வுமாம்பிற ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) இணைந்து- ஆரியமொழியர் இரண்டெழுத்து இணைந்து—இயல்காலை- ஓரெழுத்தைப்போல நடக்கும்போது—யரலக்கு பின்னின்ற யகர ரகர லகரங்களுக்கு—இகரமும்- இகாரமும் —மவ்வக்கு - மகரவகரங்களுக்கு—உகரமும் - உகாரமும்—நகரக்கு-நகரத்திற்கு—அகரமும்-அகாரமும்—மிசை-மேலே—வரும்-வந்தவடமொழிகளாகும்—ரவ்வழி - இணைந்துமுன்னின்ற ரகரத்திற்குப்பின் —உவ்வுமாம்-உகாரமும்வரும்.எ-று. (உ-ம்) வாக்கியம்-வச்சிரம் சுக்கி

லம்-எ ம் ப.துமம்-பக்குவம் எ-ம் ஆரதநம் எ-ம். அருத்தம்-எ ம் வரும். [பிறவென்றதனால்-சத்தி-கட்கி-காப்பியம் பருப்பதம்- இவைமுதலாகிய திரிபும்.நூலம்-அத்தம் ஆதித்தன்- இவைமுதலாகியகேடும் மற்றும் விகாரத்தால் வருவனவுங்கொள்க] (உ௨)

௱௩௰. றனழ எ ஒ வ்வுமுயிர்மெய்யுமுயிரளபல்லாச்சார்புந்தமிழ்பிறபொதுவே ... ... ... ... ... ... ... ... *

இது தமிழெழுத்துகளிற் சிறப்பெழுத்துகளும் பொதுவெழுத்துகளும் உணர்த்துகின்றது. (இ-ள்) றனழஎ ஒவ்வும்- முதலுஞ்சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதுகளிலே றகர னகர ழகர எகர ஒகரங்களைந்தும்—உயிர்மெய்யு முயிரளபல்லாச்சார்பும்-உயிர்மெய்யும உயிரளபெடையுமல்லாத சார்பெழுத்தெட்டும்—தமிழ் - தமிழுக்கே சிறப்பெழுத்துகளாம்—பிற-ஒழிந்தவிருபத்தேழெழுத்துகளும்—பொது-பொதுவெழுத்துகளாம்.எ-று. (உ௩)

(*)❁(*)

இரண்டாவது.
பதவியல்முற்றுப்பெற்றது.

மூன்றாவது.

# உயிரீற்றுப்புணரியல்.

௱௩௧. மெய்யுயிர்முதலீறாமிருபதங்களுந் தன்னொடும்பிறிதொடுமல்வழிவேற்றுமைப் பொருளிற்பொருந்துழி நிலைவருமொழிகளியல்பொடுவிகாரத்திலைவதுபுணர்ப்பே ... ... ... ... ...*

இது- நிறுத்தமுறையினாலே புணர்ச்சியை அறிவிக்கத்தொடங்கிப்புணர்ச்சி இன்னதென்பதும்பொதுப் புணர்ச்சியும் ஆகியவிரண்டுடனே உயிரீற்றுப்பதம்புணருஞ் சிறப்புப்புணர்ச்சி இவ்வியலாற் சொல்லப்படுதலால் இவ்வியலிலே வைத்தமுறைப்படி புணர்ச்சி இப்படிப்பட்டதென்று உணர்த்துகின்றது (இ-ள்) மெய்யுயிர் மெய்யாவது உயிராவது—முதலீறும் - முதலுமீறுமாகிய— இருபதங்களும் - பகாப்பதம் பகுபதம் என்கின்றவிரண்டுபதங்களும் — தன்னொடும் பிறிதொடும் - தன்னொடுதானும் பிறிதொடுபிறிதுமாய் — அல்வழிவேற்றுமைப்பொருளின்-அல்வழிப் பொருளினாலாவதுவேற்றுமைப்பொருளினாலாவது—பொருந்துழி - பொருந்துமிடத்து—நிலைவருமொழிகள் - நிலைமொழியும் வருமொழியும் — இயல்பொடு

விகாரத்து - இயல்போடாயினும் விகாரத்தோடாயினும் — இயைவது - பொருந்துவது — புணர்ப்பு - முன்சொல்லப்பட்ட புணர்ச்சியாம். எ-று. [மெய்யுயிர்முதலீறுமெனவே மெய்ம்முதன் மெய்யீறு - உயிர்முதலுயிரீறு - மெய்ம்முதலுயிரீறு - உயிர்முதன்மெய்யீறு - என நான்குவகையாம்.] (௧)

௱௫௨. வேற்றுமையைம் முதலாறுமல்வழி, தொழில்பண்புவமையும்மையன்மொழி, யெழுவாய்விளியீ ரெச்சமுற்றிடையுரி, தழுவுதொடரடுக்கெனவீரேழே ... ... ... ... ... ... ...*

இது, முன்சொன்ன அல்வழிவேற்றுமை இவையென்பது உணர்த்துகின்றது. (இ-ள்) வேற்றுமை - வேற்றுமைப் புணர்ச்சியாவது —ஐம்முதலாறும் - ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறுருபுகளும் மறைந்தாகிலும் வெளிப்பட்டாகிலும்வரப், பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம் — அல்வழி - அல்வழிப் புணர்ச்சியாவது — தொழில் - வினைத்தொகையும் — பண்பு - பண்புத் தொகையும்— உவமை - உவமைத்தொகையும் — உம்மை - உம்மைத் தொகையும் அன்மொழி - அன்மொழித்தொகையும் — எழுவாய் - எழுவாயும்— விளி - விளியும் — ஈரெச்சம் - பெயரெச்ச வினையெச்சங்களும்— (ஈர்) முற்று - தெரிநிலைவினை - குறிப்பு வினைமுற்றுகளும் —இடை இடைச்சொல்லும்—உரி-உரிச்சொல்லும் — அடுக்கு - அடுக்கும்— தழுவுதொடர் - பொருந்துந்தொடர்ச்சியாம். எ-று.

(உதாரணம்.)

| (வேற்றுமைத்தொகை) | (வேற்றுமைவிரி.) |
|---|---|
| ஐ நிலங்கடந்தான் ... ...* | நிலத்தைக்கடந்தான் ... * |
| ஆல் கல்லெறிந்தான் ... * | கல்லாலெறிந்தான் ... ... * |
| கு கொற்றன்மகன் ... * | கொற்றனுக்குமகன் ... ... * |
| இன் மலைவீழருவி ... ...* | மலையின்வீழருவி ... ...* |
| அது சாத்தன்கை ... * | சாத்தனதுகை ... ... * |
| கண் குன்றக்கூகை ... ...* | குன்றத்தின்கட்கூகை ... * |

(அல்வழிப்புணர்ச்சி.)

| | |
|---|---|
| வினைத்தொகை ... ... ... | கொல்யானை-அடுகளிறு ... ... * |
| பண்புத்தொகை .....* | கருங்குதிரை-செந்தாமரை ...* |
| இருபெயரொட்டு ... * | |
| பண்புத்தொகை ... ...* | சாரைப்பாம்பு-ஆயன்சாத்தன் * |

உவமைத்தொகை... மதிமுகம்-பவளவாய் ... ... ... ...
உம்மைத்தொகை... சோழசோழபாண்டியர்-இராப்பகல் ... ...
அன்மொழித்தொகை பொற்றொடி-தாழ்குழல் ... ... ... ...
எழுவாய்... ... ... சாத்தன்வந்தான்-கொற்றன்கண்டான் ... ...
விளி ... ... ... சாத்தாவா-கொற்றாகொள் ... ... ... ...
பெயரெச்சம்... வந்தசாத்தன்-வருகின்றசாத்தன் ... ...
வினையெச்சம் ... வந்துபோனான்-வரப்போனான் ... ... ...
தெரிநிலைவினைமுற்று. வந்தான்சாத்தன்-கண்டான்கொற்றன் ... ...
வினைக்குறிப்புமுற்று குழையன்கொற்றன் பெரியன்சாத்தன் ... ...
இடைச்சொல் ... மற்றொன்று-கொன்னேகழிந்தன்று ... ...
உரிச்சொல் ... ... நனிபேதையே கடிக்கமலம் .. ... ...
அடுக்கு ... ... யாம்புபாம்பு-நெருப்புநெருப்பு ... ...

ஆடி ௰௪

இவை தழுவுதொடரனவே - அவ்விருவழியிலுந் தழாத்தொடருஞ் சிலவுண்டென்ப தாயிற்று கைக்களிறு என்பது கையையுடையகளிறு எனவிரிக்கப்படுதலாகக என்பது களிறு என்பதை தழுவாமையால் இப்படிவருகின்றவைக ளெல்லாந் தழாத்தொடராகிய வேற்றுமைப்புணர்ச்சியாம், சுனையாழவம்மி மிதப்ப என்பது சுனைமிதப்ப அம்மியாழ எனக்கூட்டப் படுதலால், சுனை என்பது ஆழ என்பதையும் அம்மிஎன்பது மிதப்ப என்பதையுந் தழுவாமையால் இப்படிவருகிறவைக ளெல்லாந் தழாத்தொடராகிய அல்வழிப் புணர்ச்சியாம் ...

௱௫௩. விகாரமனைத்துமேவலதியல்பே ... ... ... ...

இது முன்சொல்லப்பட்ட இயல்புவிகாரங்களில் இயல்பு உணர்த்துகின்றது, (இ-ள்) விகாரமனைத்தும் - மேல்வரும் விகாரவகையனைத்தும்—மேவலது - அடையாதது — இயல்பு-இயல்பாகும்-எ-று, (உ-ம்) பொன்மலை-புகழ்பூகிது-ஒளிமணி-எனவரும் ... ... (௩)

௱௫௪, தோன்றறிதல் கெடுதல்விகார, மூன்றுமொழி மூவிடத்துமாகும்... ... ... ... ... ... ... ... ... ...

இது. விகார முணர்த்துகின்றது, (இ-ள்.) தோன்றல் - எழுத்தாவது சாரியையாவது தோன்றுதலும் — திரிதல் -வேறுபடுதலும்— கெடுதல் - கெடுதலும் — விகாரம் - முன்சொன்னவிகாரமாகும்— மூன்றும் - இம்மூவகைவிகாரமும்—மொழி - நிலைமொழி வருமொழிகளுடைய—மூவிடத்தும்- முதலிடைகடை - என்கின்ற மூன்றிடத்தும் — ஆகும்-ஏற்றபடிவரும்-எ-ம். (உ-ம்) பூ - கொடி - பூங்கொடி வருமொழிமுதலில் - மெய்தோன்றிற்று, பல்-தலை-பஃறலை, வருமொ

ழிமுதலினும் - நிலைமொழி யீற்றினுமுள்ள மெய்கள்திரிந்தன, நிலம்-வலயம்-நிலவலயம்- நிலைமொழியீற்று மெய்கெட்டது, ஆறு - பத்து-அறுபது, நிலைமொழிமுதலுயிர்திரிந்து வருமொழி யிடை யொற்றுக்கெட்டது, பல - பொருள் - பல்பொருள், நிலைமொழி யீற்றுயிர் கெட்டது; நாழி-உரி-நாடுரி, நிலைமொழியீற்றுயிர் மெய்கெட்டு டகர மெய்தோன்றிற்று, பனை-காய்-பனங்காய், சாரியைதோன்றிற்று.(௮)

௱௫௫, வலித்தன்மெலித்தனீட்டல் குறுக்கல், விரித்தறொகுத்தலும் வருஞ்செய்யுள்வேண்டுழி ... ... ... ... ... ... *

இது, செய்யுள்விகார முணர்த்து கின்றது, (இ-ள்) வலித்தல் - மெல்லொற்றை வல்லொற்றாக்கலும் — மெலித்தல் - வல்லொற்றை மெல்லொற்றாக்கலும் — நீட்டல் - குற்றெழுத்தைநெட்டெழுத்தாக்கலும் — குறுக்கல் - நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும் — விரித்தல் - இல்லாதவெழுத்தைவருவித்தலும் — தொகுத்தல்-உள்ளவெழுத்தைநீக்கலும் — வரும் - வருவனவாம் — செய்யுள் . செய்யுளிடத்து — வேண்டுழி - அடிதொடை முதலானவைகளைநோக்கி அமைக்கவேண்டுமிடத்து, -எ-ம்- (உ-ம்,) குறுத்தாட்பூதஞ் சுமந்தவறக்கதிராழியெம்மண்ணலைத் தொழினே குறுந்தாளில் - நகரமெல்லொற்று வல்லொற்றாக்கப்பட்டது. தண்டையி னினக்கிளிகடிவோள் பண்டையளல்லண் மானோக்கினளே - தட்டையில் - டகரவல்லொற்று மெல்லொற்றாக்கப்பட்டது, தீத்தொழிலேக ன்றித்திரிதந் தெருவைபோற் போத்தரார்புல்லறிவினார், பொத்தில் - குற்றெழுத்து நெட்டெழுத்தாக்கப்பட்டது, யானை யெருத்தத்திருந்த விலங்கிலைவேற் றென்னன் திருத்தார் நன்றென்றேன் றியேன், தீயேனில்-நெட்டெழுத் துக்குற்றெழுத்தாக்கப்பட்டது, சிறியிலைவெதிரினெல் விளையும்மே என்பதில்-மகரமெய்விரிக்கப்பட்டது, சிறியவிலையில் - அகரவுயிர் தொகுக்கப்பட்டது, (௩)

௱௫௬, ஒருமொழிமூவழிக்குறைதலுமனைத்தே ... ... *

இதுவுமது, (இ-ள்) ஒருமொழி - ஒருசொல்லினுடைய — மூவழி - முதலிடைகடையென்கிறமூன்றிடத்து — குறைதலுங்-குறைந்துவருதலும் —- அனைத்து - அச்செய்யுள் விகாரமாம் - எ-று (உ-ம்) மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி, தாமரையில் முதலெழுத்துக்குறைந்தது, வேதினவெரிநினோதி முதுபோத்து, ஓந்தியில் - இடையெழுத்துக்குறைந்தது, நீலுண்டுகிலிகை கடுப்ப, நீலத்திற் கடையெழுத்துக் குறைந்தன, [இன்னுங் குறைதலு மென்ற வெச்ச வும்மையால் விதியின்றி வருகிற விகாரங்களா [illegible]

அவைவருமாறு - யாது - யாவது, எனத்தோன்றலும், மாகி - மாசி எனத்திரிதலும், யார் - ஆர், எனக்கெடுதலும், பொழுது போழ்து எனநீளலும், மிஞிறு - ஞிமிறு - தசை - சதை, எனவெழுத்தும் நகர்ப்புறம் - புறநகர், இன்முன் - முன்றில், எனச்சொல்லும் - நிலை மாறுதலும் ஆகியவிவைமுதலாயினவாம்,] (௬)

௱௫௭, ஒருபுணர்க்கிரண்டுமூன்றுமுறப்பெறும் ... ... *

இது, புணர்ச்சி விகாரத்தில் வருவதோராயம் ஒழிக்கின்றது (இ-ள்,) ஒருபுணர்க்கு - ஒருபுணர்ச்சிக்கு — இரண்டுமூன்றும் - ஒன்றேயல்லாம லிரண்டுமூன்றும் — உறப்பெறும் - வரப்பெறும்-எ-று, (உ-ம்) யானை - கோடு - யானைக்கோடு, ஒருவிகாரம், நிலம் - பனை - நிலப்பனை, இரண்டுவிகாரம், பனை - காய் - பனங்காய், மூன்றுவிகாரம்,

( ஞ, ந, ம, ய, வ், [illegible] )

௱௫௮, எண்மூவெழுத்தீற் றெவ்வகைமொழிக்கு, முன்வருஞ் நமயவக்களியல்புங், குறில் வழியத்தனியைந்நொதுமுன் மெலிமிகலு மாம்ணளனலவழிநத்திரியும் ... ... ... ... ... ... ...*

இது, பொதுப்புணர்ச்சி புணர்த்துகின்றது, (இ-ள்,) எண்மூவெழுத்து-இருபத்துநான்கெழுத்துகளையும் —ஈற்று-இயல்பினாலாயினும் விதியினாலாயினும் ஈறாகவுடைய — எவ்வகை மொழிக்கும்-பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல்திசைச்சொல் வடசொல்என்கின்ற பலவகைப்பட்ட சொற்களுக்கும்—முன் - முன்னே —வரும் - வருகிற— ஞநமயவக்கள்-ஞகர நகர மகர யகர வகரங்கள் —இயல்பும் - அல்வழிவேற்றுமை யிரண்டினு மியல்பாதலும் — குறில்வழிய - குற்றெழுத்தின் பின் னின்ற யகர மெய்யே — தனியை-உயிர் உயிர்மெய் என்கிறஐகாரமே — நொ-நொவ்வே—துதுவ்வே — முன் - என்பவைகளுக்குமுன்வருகிற—மெலி-ஞகார நகாரமகாரங்கள் — மிகலும் - பிறசொற்களுக்குமுன் இயல்பாதலன்றிமிக்குமுடிதலும்—ஆம் - ஆகும்—ணளனலவழி - ணளனலக்களின் முன்வருகிற — ந - நகரமானது — திரியும் - மற்றையீறுகளுக்குமுன்னியல்பாதலன்றித்திரியும் எ-று. [புணரியலிலெங்கும் அல்வழி வேற்றுமைகளிலொன்றைக்குறிப்பாக வாளுலும், வெளிப் படையாக வாளுலுங் காட்டாமற்போனால் அவ்விரண்டையுங்கொள்க,] (உ-ம்) விள பலா கிளி தீ கடு பூ சே பனை கோ கௌ உரிஞ் மண் பொருந் மரம பொன் வேய் வேர் வேல் தெவ் யாழ் வாள் எஃகு இவற்றின்முன் ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வலிமை, இவற்றைவருவித்து,

(அல்வழி.) (வேற்றுமை.)

விள—ஞான்றது-விளஞான்றது. விள—ஞாற்சி-விளஞாற்சி.
நீண்டது-விளநீண்டது. நீட்சி-விளநீட்சி.
மாண்டது-விளமாண்டது. மாட்சி-விளமாட்சி.
யாது-விளையாது. யாப்பு-விளயாப்பு.
வலிது-விளவலிது. வலிமை-விளவலிமை.

என முறையே கூட்டி எல்லாவீற்றின் முன்னும் ஞநமயவக்களி யல்பாதல்காண்க. உரிஞ் ஞான்றது உரிஞ்ஞான்றது பொருந்-ஞான்றது. பொருஞ்ஞான்றது வேல் ஞான்றது. வெஞ்ஞான்றது வாள்-ஞான்றது. வாண்ஞான்றது மரம்-ஞான்றது. மரஞான்றது. எனநிலைமொழியீறுகள் விகாரப்படுதல் அவ்வவ்வீற்றுச்சிறப்புவிதிகளிற் காண்க.

(அல்வழி.) (வேற்றுமை.)

மெய்-ஞான்றது மெய்ஞ்ஞான்றது-மெய்-ஞாற்சி-மெய்ஞ்ஞாற்சி.
நீண்டது-மெய்ந்நீண்டது. நீட்சி-மெய்ந்நீட்சி.
மாண்டது-மெய்ம்மாண்டது. மாட்சி மெய்ம்மாட்சி.

கை—ஞான்றது-கைஞ்ஞான்றது. கை—ஞாற்சி-கைஞ்ஞாற்சி.
நீண்டது-கைந்நீண்டது. நீட்சி கைந்நீட்சி
மாண்டது-கைம்மாண்டது. மாட்சி-கைம்மாட்சி.

எனக்குறின் முன்னின்ற யகரத்தின்முன்னுந் தனி ஐம்முன்னு மெலிமிகுதல்காண்க. நொ து முன் மெலி மிகலுமாம் என்றவெச்சவும் மையால் அவ்விரண்டன் முன்னும் இடையெழுத்து மிகலுமென்ற தாயிற்று.

நொ—ஞெள்ளா-நொஞ்ஞெள்ளா. து—ஞெள்ளா-துஞ்ஞெள்ளா.
நாகா-நொந்நாகா. நாகா-துந்நாகா.
மாடா-நொம்மாடா. மாடா-தும்மாடா.
யவனா-நொய்யவனா. யவனா-துய்யவனா.
வளவா-நொவ்வளவா. வளவா-துவ்வளவா.

இவை வினைச்சொற்களாதலால் அல்வழியிலே மிகுந்தன. வினை யல்வழிநத்திரியுமென்றது பின்வரும் னலமுன்றனவும் என்னுஞ்சூத் திரத்துலேகாண்க. இச்சூத்திரமுதலாக வொன்றற்கொன்று தொடர்ச் சிபடப் புணர்த்தலால் தொடர்சொற்புணர்த்தலென்னுமுத்தி. (௧)

**௱௫௯.** பொதுப்பெயருயர்திணைப்பெயர்களீற்றுமெய், வலிவரி னியல்பாமாவியரமுன், வன்மைமிகாசிலவிகாரமாமுயர்திணை... ...*

இதுவுமது. (இ-ள்) பொதுப்பெயர்- இருதிணைகளுக்கும் பொதுவானபெயர்களுக்கும்—உயர்திணைப்பெயர்கள்-உயர்திணைப்பெயர்களுக்கும்—ஈற்றுமெய்-ஈற்றிலுள்ளமெய்கள்—வலி-வல்லெழுத்துமுதன்மொழிகள்—வரின்-வந்தால்—இயல்பாம்-இயல்பாகும்—ஆவி உயிரையும்—யர-யகர ரகரமெய்களையுமீறாகவுடைய அவ்விருவகைப்பெயர்களுக்கும்—முன்-முன்வருகிற—வன்மை-வல்லெழுத்துகள்—மிகா-மிகாவாம்—உயர்திணை-உயிரீறு மெய்யீறுமாகிய உயர்திணைப்பெயர்கள் நாற்கணங்களோடும்புணருமிடத்து—சிலவிகாரமாம்-நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுவனவுஞ் சிலவுளவாம்-எ-று. (உ-ம்) சாத்தன்-கொற்றன்-ஆண்-இவற்றின்முன்-குறிது-,சிறிது-தீது-பெரிது-குறியன்-சிறியன்-தீயன் பெரியன்-கை-செவி-தலை-புறம்-இவற்றை வருவித்து-சாத்தன்குறிது-சாத்தன்குறியன்-சாத்தன்கை- எனமுறையே கூட்டிப்பொதுப்பெயரீற்றுமெய் இயல்பாதல்காண்க—ஊரான்-அவன்-இவற்றின்முன்-குறியன்-சிறியன்-தீயன்-பெரியன்-கை-செவி-தலை-புறம்-இவற்றைவருவித்து-ஊரான்குறியன்-ஊரான்கை எனமுறையேகூட்டி உயர்திணைப்பெயரீற்றுமெய் இயல்பாதல்காண்க.—மற்றவையுமிப்படியே—சாத்தி-கொற்றி-தாய்- இவற்றின்முன்- குறிது-சிறிது-தீது-பெரிது-குறியள்-சிறியள்-தீயள்-பெரியள்-கை-செவி-தலை-புறம்-இவற்றைவருவித்து-சாத்திகுறிது- சாத்திகுறியள்- சாத்திகை-எனமுறையே கூட்டிப்பொதுப்பெயரீற்று உயிர்-யகரமும் வலி-இயல்பாதல்காண்க.—நம்பி-விடலை- இவற்றின்முன்- குறியன்-சிறியன்-தீயன்-பெரியன்-கை-செவி-தலை-புறம்-இவற்றையும் அவர்-ஒருவர் இவற்றின்முன்-குறியர்-சிறியர்-தீயர்-பெரியர்-கை-செவி-தலை-புறம்-இவற்றையும் வருவித்து நம்பி-குறியன்-நம்பிகை-அவர்குறியர்-அவர்கை- எனமுறையேகூட்டி உயர்திணைப்பெயரீற்று உயிர் ரகரமுன் வலி இயல்பாதல் காண்க.மற்றவையுமிப்படியே.

கபிலன்—பரணன்-கபிலபரணர்.
வடுகன்—நாதன்-வடுகநாதன்.
அரசன்—வள்ளல்-அரசவள்ளல்.
ஆசிவகன்—பள்ளி-ஆசிவகப்பள்ளி.
குமரன்-கோட்டம் { குமர கோட்டம். குமரக்கோட்டம். }
} எனவிருவழியும் உயர்திணையுட் சிலதமக் கேற்ற விகாரமாயின

மற்றவைகளுமிப்படியே. (௯)

**௱௬௰** நற்றியாவினாவிளிப்பெயர்முன்வலியியல்பே ... *

இதுவுமது. (இ-ள்) ஈற்று (வினைமுன்) -ஆ ஏ ஓ என்கின்ற மூன்றீற்றி வினைமுன்னும்—யாவினா (முன்) - யாவினாமுன்னும் — விளிப்பெயர்முன்—உயிரீறு மெய்யீறுமாகிய விளிப்பெயர்முன்னும் — வலி-வருகிறவல்லெழுத்துகள்—இயல்பு-இயல்பாகும்-எ-று. (உ-ம்) நம்பியாகொண்டான்-சென்றான்-தந்தான்-போயினான்-எனவும். யாகுதியன-சிறியன-தீயன-பெரியன-எனவும் வினைமுன் வலியியல்பாதல்காண்க —நம்பி-நம்பீ-விடலை-விடலாய்-கிள்ளை-கிள்ளாய்- தாய்-தாயே-இவற்றின்முன்-கொள்-செல்-தா-போ-இவற்றைவருவித்து-நம்பிகொள்-நம்பிசெல்-நம்பிதா-நம்பிபோ-எனமுறையே கூட்டி விளிப்பெயர்முன்வலி இயல்பாதல்காண்க [ஏகார ஓகார வினாக்களுக்கு இடைச்சொல்லே யோவென்னுஞ் சிறப்புச் சூத்திரத்தில் உதாரணம் பெறப்படும்]

௱௬௧. ஆவியரழவிறுதிமுன்னிலைவினை, யேவன்முன்வல்லின மியல்பொடுவிகற்பே ... ... ... ... ... ... ... ... .

இதுவுமது. (இ-ள்) ஆவி உயிர்களையும்—யரழ-யரழ என்கின்ற மூன்றுமெய்களையும்—இறுதி- இறுதியாகவுடைய—முன்னிலைவினை- முன்னிலைவினைமுன்னும்—ஏவன்முன் - ஏவல்வினைமுன்னும்—வல்லினம்-வருகிறகசதபக்கள்—இயல்பொடு- இயல்புடனே—விகற்பு- விகற்பமாம் எ-று. (உ-ம்) உண்டி-உண்டனை-உண்டாய்-எ-ம். உண்டனிர்- உண்டீர்-எ-ம். நிறுத்தி சாத்தா-கொற்றா-தேவா-பூதா- எ-ம். சாத்தரோ-கொற்றரோ-தேவரோ-பூதரோ-எ-ம்.வருவித்து-உண்டிசாத்தா- உண்டனிர்சாத்தரோ- எனக்கூட்டி- முன்னிலைவினைமுன் னியல்பாதல்காண்க — கொணா-எறி-விடு-ஆய்-சேர்-தாழ் எனநிறுத்தி-சாத்தா-கொற்றா- தேவா-பூதா-எனவருவித்து-கொணா-சாத்தா-எனமுறையேகூட்டி- ஏவல்வினைமுன் னியல்பாதல் காண்க- விகற்பமாதல் வந்தவிடத்திற்காணக- நடகொற்றா-நடக்கொற்றா எய்கொற்றா-எய்க்கொற்றா-என ஏவலின்முன் விகற்பிக்குமென்று கொள்ளினுமாம். (௰௧)

௱௬௨. இ ஈ ஐ வழியவ்வுமேனை, யுயிர்வழிவவ்வுமே முனிவ்விருமையு, முயிர்வரினுடம்படுமெய்யென்றாகும்... ... ... ... .

இது. உயிரீற்றுப்பதம் புணருஞ் சிறப்புப்புணர்ச்சி சொல்லத்தொடங்கி உயிரீற்றுமுன் உயிரீற்றுப்பதம் வந்துபுணருமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) இ ஈ ஐ வழி-இகர ஈகார ஐகாரங்களின்முன்னே—யவ்வும்-யகரமும்—ஏனையுயிர்வழி-அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்கின்ற விவ்வேழுயிர்களின் முன்னே—வவ்வும்-வகரமும்—ஏமுன்- ஏகாரத்தின்முன்னே—இவ்விருமையும்-யகரமும் வகரமும்—உயிர்வரின்-உயிர்

முதன் மொழிவந்தால்—உடம்படு மெய்யென்றாகும்-உடம்படுமெய்யென்று வரப்பெறும் —எ-று.(உ-ம்) மணி- தீ- பனை- இவைகளுக்கு முன்னே அழகிது-அழகு- முதலாகியவுயிர் முதன்மொழிகளை வருவித்து மணியழகிது-மணியழகு- எனக்கூட்டி இ ஈ ஐம் முன்யகரம்பெறுதல்காண்க விள-பலா-கடு பூ-நொ-கோ-கௌ- இவைகளுக்கு முன்னே அழகிது - அழகுமுதலாகிய உயிர்முதன்மொழிகளை வருவித்து-விளவழகிது- விளவழகு- எனக்கூட்டி மற்றையுயிர்களின்முன் வகரம் பெறுதல் காண்க-அவனே-இவன்-அவனேயிவன்- சே- அழகிது சேவழகிது-என ஏமுன்-அவ்விருமெய்களும் வருதல்காண்க. (௰உ)

௱௬௭. எகரவினாமுச் சுட்டின்முன்னர், உயிரும்யகரமு மெய்தின் வவ்வும், பிறவரினவையுந் தூக்கிற்சுட்டு, நீளின்யகரமுந் தோன்றுத னெறியே ... ... ..... ... ... ... ... ... ... *

இது. இ ஈ ஐவழி என்னுஞ் சூத்திரத்தாலும் எண்மூ வெழுத்தீற்றென்னுஞ் சூத்திரத்தாலும் எய்தியது விலக்கிப்பிறிதுவிதி வகுக்கின்றது. (இ-ள்) எகரவினா முன்னர் - எகரவினாவிடைச்சொலலின்முன்னும்—முச்சுட்டின்முன்னர் - மூன்றுசுட்டிடைச்சொல்லின் முன்னும்—உயிரும்-உயிரும்—யகரமும்-யகரமும்—எய்தின்-வந்தால்—வவ்வும்-வகரமும்—பிற யகரமொழிந்தமெய்கள்—வரின்-வந்தால்—அவையும்-அவ்வந்தமெய்களும்—தூக்கில்-செய்யுளிடத்து—சுட்டு-சுட்டுக்கள்—நீளின்-நீண்டுவருமிடத்து—யகரம்-யகரமும்—தோன்றுதல்-மிகுதல்—நெறி-முறையாம் எ-று. (உ-ம்) எ-அணி-எவ்வணி-எ-யானை-எவ்யானை-எனவும் எ-குதிரை-எக்குதிரை-எ-சேனை-எச்சேனை- எ-தண்டு எத்தண்டு-எ-படை-எப்படை-எ-ஞாலம்-எஞ்ஞாலம்- எ-நாடு எந்நாடு-எ மனை-எம்மனை-எ-வளை-எவ்வளை எ ஙனம்- எங்ஙனம்- எனவும்- ஆ-இடை-ஆயிடை-எனவும் வகரமும்வந்தமெய்களும் யகரமுந்தோன்றினமைகாண்க அ இ உ இவற்றின்முன்னும்அப்படியேகூட்டுக [நெறியென்றமையால்- யாங்ஙனம்-எனயாவினாமுன்னும்- ஆங்ஙனம்-ஈங்ஙனம்-ஊங்ஙனம் என நீண்டசுட்டின்முன்னும்- ஙகரமிகுதலும்- ஈது- ஆங்கு-ஈங்கு-ஊங்கு-ஆண்டு-ஈண்டு-எனச்சுட்டுப்பெயர் நீளலும்- விண்வத்துக்கொட்கும் செல்விழிச்செல்க எனமெய்யீற்றின்முன் உயிர்வர இப்படி உடம்படுமெய்யல்லாதவகரம் பெறுதலுங்கொள்க] (௰௩)

௱௬௮. உயிர்வரினுக்குறண்மெய் விட்டோடும், யவ்வரினியாமுற் றுமற்றொரோவழி ... ... ... ... ... ... ... ...*

இது. குற்றியலுகரத்திற்கு இ ஈ ஐவழி என்னுஞ் சூத்

த்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதிவகுத்தலும் முற்றிய லுக ரத்திற்கு அச்சூத்திரத்தா லெய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது. (இ-ள்) உக்குறள் - குற்றிய லுகரமானது — உயிர் - உயிர்முதன்மொழி — வரின் - வந்தால் — மெய்விட்டு தனக்கிடமாகிய மெய்யைவிட்டு — ஓடும் - கெடும் — ய - யகரமுதன்மொழி — வரின் - வந்தால் — இய்யாம் - அது இகரமாகத்திரியும் — முற்றும் - முற்றிய லுகரமும் — அற்று - அவ்விருவிதியும்பெறும் — ஒரோவழி - ஒவ்வோரிடத்து. எ-று. (உ-ம்) நாகு - அரிது - நாகரிது. நாகு யாது - நாகியாது எனவும். நாகு - வளர்ச்சி - நாகின்வளர்ச்சி நாகு - யமன் - நாகியமன். எனவும். கதவு - அழகிது - கதவழகிது. கதவு - யாது - கதவியாது. அது ஐ - அதை எனவும் வரும். கெடுமென்னாது ஓடுமென் றமையால் கன்முகமாகத் தானழைப்பதுமே எனக்குற்றிய லுகரம் பொதுவிதி பெறுதலுங்கொள்க. (௰௬

௱௬௫. இயல்பினும்விதியினு நின்றவுயிர்முன், கசதபமிகும்விதவாதனமன்னே ... ... ... ... ... ... ... ... ...

இது. உயிரீற்றுமுன் வல்லினம் புணருமாறு அறிவிக்கத் தொடங்கி உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்க்கு ஆவியாமுன் வன்மை மிகாவென எய்தியதன்மேற் சிறப்பு விதியும் அஃறிணைப் பெயர்க்கும் வினைமுதலியவைகளுக்கும் எய்தாத தெய்துவித்தலுஞ் சொல்லுகின்றது. (இ-ள்,) இயல்பினும் - இயல்பினாலும் — விதியினும் - விதியினாலும் — நின்ற - இறுதியாகநின்ற — உயிர்முன் - உயிர்களின்முன் — கசதப - வருகிறகசதபக்கள் — மிகும் - பெரும்பாலுமிகும் — விதவாதன சிறப்புவிதியிற் சொல்லாதவைகள். எ-று.

(உ-ம்) ஆடூஉக்குறியன் - நம்பிக்கொற்றன் - சாத்திப் பெண் - தாராக்கடிது - ஒற்றைக்கை - வட்டக்கடல் - தாழக்கோல் - எனவும். ஆடூஉக்கை - நம்பிப்பூ - கடுக்காய் - ஆட்டுக்கால் - எனப் பெயர்களின்முன் இருவழியிலும் வல்லெழுத்து மிகுந்தன. ஆடிக்கொண்டான் - ஆடாக்கொண்டான் - ஆடூக்கொண்டான் - ஆடெனக்கொண்டான் - ஆடக்கொண்டான் - உண்பாக்குச்சென்றான் - பூத்துக்காய்த்தது - பொள்ளெனப் பரந்தது - சாலப்பகைத்தது - எனவும், இருளின்றிக்கண்டார் - எனவும் வினையெச்சங்களின் முன்மிக்கன - மற்றைச்சாதி என இடைச் சொன் முன்னும். கடிக்கமலம் என உரிச்சொன்முன்னும். சொன்றிக் குழிசி எனத் திசைச்சொன்முன்னும். கங்கைச்சடை என வடசொன் முன்னும் வலிமிக்கன, [விதவாதன பெரும்பாலு மிகுமெனவே விதந்தன சிறுபான்மை மிகுமெனவும் விதவாதன சிறுபான்மை மிகாவெனவும் கூறியதாயிற்று. (உ-ம்) நொக்கொற்றா - துக்கொற்றா - ...

ன்முன் வல்லினம் மியல்பொடுவிகற்பே, எனச்சொல்லிய சிறப்பு விதிபெறாமல் வல்லெழுத்துமிக்கன ஏரிகனா குழந்தைகை - பழ முதிர்சோலை மலைகிழவோனே-கூப்புகரம் - நாட்டுபுகழ் என விதவா தன மிகாவாயின. (௰௫)

௱௬௬. மரப்பெயர் முன்ன ரினமெல்லெழுத்து, வரப்பெறு னவுமுள வேற்றுமைவழியே ... ... ... ... ... ... *

இது உயிரீற்றுச்சில மரப்பெயர்முன்வரும் வல்லெழுத் திற்கு எய்தியது ஒருவழிவிலக்கிப் பிறிதுவிதி உணர்த்துகின்றது (இ-ள்,) மரப்பெயர்முன்னர்-உயிரீற்றுச்சிலமரப்பெயர்களுக்குமுன் — இன மெல்லெழுத்துவர முன்சொன்னபொது விதியால்வருகிற வல்லெழு த்து மிகாமல் அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்துமிக — பெறுன வும்-பெறுவனவும் — உள-சிலவுளவாம் வேற்றுமைவழி - வேற்று மைவழியில் -எ-று. (உ-ம்) விள-காய்-விளங்காய், மா-கொம்பு - மாங் கொம்பு எனவரும். (௰௬)

௱௬௭. செய்யியவென்னும் வினையெச்சம்பல்வகைப், பெயரி னெச்சமுற்றாறனுருபே, யஃறிணைப்பன்மை யம்ம முன்னியல்பே *

இது உயிரீறுகளுக்குத் தனித்தனி சிறப்புவிதி சொல்லத்தொ டங்கி அகரவீற்றுச்சொற்களுக்குள்ளே சிலவற்றிற்கு எய்தியது விலக்குகின்றது. (இ-ள்) செய்யியவென்னும் வினையெச்சம், செய்ய வென்னும் வினையெச்சவினையும் — பல்வகைப்பெயரினெச்சம்- பல வகைப்பட்ட பெயரெச்சவினையும் — (பல்வகை) முற்று-பல்வகைப் பட்டமுற்றுவினையும் — ஆறனுருபு - ஆறாம்வேற்றுமை அகரவுருபு ம் — அஃறிணைப்பன்மை - அஃறிணைப்பன்மைப்பெயரும் — அம்ம அம்மவென்கின்ற வுரையசையிடைச்சொல்லும் — முன் - ஆகிய அகர வீற்றுச் சொற்களாறன் முன்னும் — இயல்பு- வல்லெழுத்துக்களியல் பாம் எ-று.

(உ - ம்) உண்ணியகொண்டான் - சென்றான் தந்தான் போ யினான்-எனச் செய்யியவென்னும் வினையெச்ச முன்னியல்பாயின — உண்ட உண்ணாநின்ற உண்ணாத, எ-ம். கடைக்கணித்த சித்திரித்த வெளுத்த சினவிய சுறவிய அமரிய. எ-ம். திண்ணென்ற பொன் போன்ற. எ-ம். சான்ற உப்ற. எ-ம். வருகிற நால்வகைத் தெரிநிலைப் பெயரெச்ச வினைமுன்னும் - அமர்முகத்த - சடுங்கண்ண சிறிய பெரிய உள இல பல சில, எ-ம். பொன்னன்ன. எ-ம். கடிய. எ-ம். வருகிற மூவகை வினைக்குறிப்புப் பெயரெச்ச முன்னும் - குதிரை சென்றாய் தகர் பன்றி - இவற்றை வருவித்து - உண்டகுதிரை உண்

டசெந்நாய் உண்டதகர் உண்டபன்றி என முறையே கூட்டிப் பலவகைப்பெயரெச்சமுன்னியல்பாதல்காண்க. — பொருள் வேறுபாடல்லாமற் சொல் வேறுபாடில்லாமையால் முற்றிற்கும் இவையே உதாரணமாகும் வாழ்க கொற்றா - சாத்தா தேவா பூதா என வியங்கோண்முற்றின் முன்னியல்பாயின வாழியவென்பத னேடுமிப்படியேகூட்டுக. முற்றின்முன்னியல் பாமெனவே அருத்தாபத்தியால் - உண்டகண்டன அமர்முகத்தகுதிரைகள் அமர்முகத்தகலக்கின என வினைமுற்று வினையெச்சமாகியுங் குறிப்பு முற்றீரெச்சமாகியும் வந்தவிடத்தும் இயல்பாமென்றறிக. — தன கைகள் - செவிகள் தாங்கள் பதங்கள் என ஆறனுருபின்முன்னியல்பாயின. — பல குதிரைகள்-செந்நாய்கள் தகர்கள் பன்றிகள். எ-ம். பலகொடுத்தான் செய்தான் தந்தான் போயினன். எ-ம். அஃறிணைப்பன்மைப்பெயர் முன்னிரு வழியுமியல்பாயின — அம்ம கொற்றா-சாத்தா தேவா பூதா எனவுரையசை யிடைச்சொன் முன்னியல்பாயின. (௰எ)

௱௬௮ வாழிய வென்பத னீற்றினுயிர்மெய், யேகலு முரித்தஃ தேகினு மியல்பே ... ... ... ... ... ... ... ... ...

இது, வியங்கோண்முற்றிற்கு எய்தாததெய்துவித்தலும் எய்தியவழிப்புணரும் வல்லினத்திற்கு எய்தியதிகந்து படாமைக்காத்தலுஞ் சொல்லுகின்றது. (இ-ள்) வாழியவென் பதன்- வாழியவென்னும் வியங்கோண்முற்றினுடைய — ஈற்றின்- இறுதியிலுள்ள — உயிர்மெய்-யகர வுயிர்மெய்யானது — ஏகலும் - குறைதலும் — உரித்து உரித்தாகும் — அஃது-அவ்வுயிர்மெய்யானது — ஏகினும் -குறைந்து இகரவீறாய்நின்றாலும் — இயல்பே - வல்லினம் பொதுவிதியினுமிகாமற் சிறப்புவிதியிற்கூறிய இயல்பேயாம். எ-று. (உ-ம்.) ஆவாழி - எனவீற்றுயிர் மெய்குறைந்தது- வாழிகொற்றா - சாத்தா தேவா பூதா குறைந்தவிடத்தும் வல்லினமியல்பாயின. (௰அ)

௱௬௯. சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி ... ...

இது, சாவவென்கிறவினைமொழிக்குளெய்தாத தெய்துவிக்கின்றது (இ-ள்.) சாவவென்மொழி - சாவவென்னுஞ் செயவெனெச்சவினைச் சொல்லினுடைய — ஈற்று-இறுதியிலிருக்கின்ற — உயிர்மெய் வகரவுயிர்மெய்யானது — சாதலும்-கெட்டுப்புணர்தலும் — விதி - விதியாகும். எ-று (உ-ம்) சாவ குத்தினன்-சாக்குத்தினன்-எனவரும் [இப்புணர்ச்சிசாவக்குத்தினன் என்னும் புணர்ச்சிபோற்சிறந்ததல்லாமையாற் சாதலும் விதியென்றார். (௰௯

௱எ0. பலசில வெனுமிவை தம்முன் றாம்வரி, னியல்பு மிகலு

௱௬௮. பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின் இயல்பு மிகலு மகரமேக லகரம்றகர மாகலும்பிறவரின், அகரம்விகற்ப மாகலுமுள பிற ... ... ... ... ... ... ... ... ... ... ... *

இது வருமொழிக்கு எய்தியது இகந்துபடாமைக் காத்தலும் அதன்மேற் சிறப்புவிதியும் நிலைமொழிக்கு எய்தாத தெய்துவித்த லுஞ் சொல்லுகின்றது (இ-ள்.) பலசிலவெனுமிவை - பலசில என்கி ன்ற விவ்விருசொல்லும் — தன்முன் - தமக்குமுன்னே—தாம்வரின் தாம்வருமாயின் — இயல்பும்-இயல்பாதலும்—மிகலும் -மிகுதலும் —அகரம்-அகரமானது — ஏக-கெட — லகரம் - லகரமானது—றகர மாகலும் றகரமாகத்திரிதலும்—பிற-இவற்றின்முன் பிறமொழிகளு ள் யாதாயினுமொன்று—வரின்-வந்தால் — அகரம்.அகரமானது— விகற்பமாகலும்-நிற்றலுநீங்கலும்—உள-உளவாம். எ-று.

(உ-ம்) பலபல சிலசில இயல்பாயின பலப்பல சிலச்சில மிக்கன பற்பலசிற்சில அகரங்கெடலகரம்றகர மாயிற்றுபலகலை - பல்கலை- பல சாலை-பல்சாலை-பலதாழிசைபஃறாழிசை-பலபடை-பல்படை -பலஞா னம்-பன்ஞானம்-பலநாள்-பன்னாள்-பலமணி-பன்மணி-பலவளைபல் வளை-பலயாழ்-பல்யாழ்-பலவணி-பல்லணி-பலவாயம் - பல்லாயம்-பிற வர அகரம் விகற்பமாயிற்று [பிறவென்றதனையால் - பல்பல-சில்சி ல என அகரங்கெடலகரம் றகரமாகாம லொரோவிடத்து வருதலும் இன்னும் அகரவீற்றுப்புணர்ச்சியுள் அடங்காதுவருவனவுங்கொள்க]

௱௬௯. அல்வழியாமா மியாமுற்றுமுன் மிகா ... ... ... *

இது, ஆகாரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியதொருமருங்கு வில க்குகின்றது, (இ-ள்.) அல்வழி-அல்வழியில்—ஆமா - ஆவுமாவுமாகிய விருபெயரும்—மியா-மியாவென்னுமுன்னிலை யசையிடைச் சொல் லும்—முற்று - ஆகாரவீற்றஃறிணைப்பன்மையெதிர் மறைமுற்றுவி னையுமாகிய — முன்-இவற்றின்முன்—மிகா-வருகிற வல்லினம் இயல் பாகும் எ-று (உ-ம்) ஆகுறிது-மாகுறிது - சிறிது - தீது - பெரிது எ-ம். கேண்மியாகொற்ற-சாத்தா தேவா பூதா, எ-ம்,உண்ணாகுதிரை க-செந்நாய்கள்-தகர்கள் பன்றிகள்-எனவரும், [இரட்டுற மொழித லாற் சுட்டுப்பகவென்னும் பொருளைத்தருகிற ஆமாவென்பதன்மு ன்னும் ஆமா குறிது எனவியல்பாமெனக்கொள்க.] (உக)

௱௭௦. குறியதன்கீழாக் குறுகலுமதனோ டுகரமேற்றலு மியல்புமாந்தூக்கின் ... ... ... ... ... ... ... ... *

இது, ஆகாரவீற்றுட் சிலசொல்லிற்கு எய்தாதன வெய்துவித் தலும் அவ்விடத்துவருவதோராய மொழித்தருஞ் சொல்லுகின்றது.

(இ-ள்) குறியதன்கீழா - குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரம் — குறுகலும் - அகரமாதலும் — அதனோடு - அவ்வகரமாதலுடனே — உகரமேற்றலும் - உகரம்பெறுதலும் — இயல்பும் - அவ்விரண்டுமில்லாமலியல்பாதலும் ஆகிய மூன்றுவிதியும் — ஆம் - ஆகும் — தூக்கின் - பாட்டிடத்து. எ-று. (உ-ம்) நிலவிரிகானல் - மருவினென் செய்யுமோ நிலவு - நிலா வணங்குவெண் - மணன்மேனின்று - எனவரும் [செய்யுளிலே மூன்றுமெனவே - இரா - இரவு - புறா - புறவு - சுறா - சுறவு - எனவியல்புங்குறுகி யுகரமேற்றலும் வழக்கில்வருமெனக்கொள்க.] (௨௨)

௱எ௩ அன்றியின்றியென் வினையெஞ்சிகரந், தொடர்பினுளுகர மாய்வரினியல்பே ... ... ... ... ... ... ... ... ... ..... *

இது - அன்றியின்றியென்னும் வினையெச்சக்குறிப்பிற்கு எய்தாததெய்துவித்தலும் எய்தியவழிப்புணரும் வல்லினத்திற்கு எய்தியதுவிலக்கலுஞ் சொல்லுகின்றது. (இ-ள்) அன்றியின்றியென் - அன்றி இன்றி என்கின்ற — வினையெஞ்சிகரம் வினையெச்சக்குறிப்புச்சொற்களினீற்றிலிருக்கின்ற இகரம் — தொடர்பினுள் - செய்யுளில் — உகரமாய்வரின் - உகரமாய்த்திரிந்துவரின் — இயல்பு - வருகிற கசதபக்கள் இயல்பாகும். எ-று. (உ-ம்) நாளன்றுபோகி - உப்பின்று புற்கையுண்கமா - எனவரும் (௨௩)

௱எ௪, உரிவரினாழியினீற்றுயிர்மெய்கெட, மருவும்டகரமுரியின் வழியே, யகரவுயிர்மெய்யாமேற்பனவரினே ... ... ... ... *

இது. எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுக்கின்றது. — (இ-ள்) உரிவரின் - உரியென்னுமளவுப்பெயர்வந்தால் — நாழியின் - நாழியென்னுமளவுப்பெயரினது — ஈற்றுயிர்மெய் - ஈற்றிலுள்ள ழிகரமானது — கெட - நீங்க — டகரம் - டகரமெய்யானது — மருவும் - வரும் — உரியின்வழி - உரியென்னுமளவுப்பெயரின்பின் — யகரவுயிர்மெய்யாம் - யகரவுயிர்மெய்வரும் — ஏற்பன - அவ்வுயிர்மெய் வருதற்கு ஏற்றமொழிகள் — வரின் - வந்தால். எ-று உ-ம் நாழி - உரி நாடுரி - எ-ம். உரி உப்பு - உரியவுப்பு உரியபயறு - உரியமிளகு. உரியவீரகு. எ-ம் வரும். ஏற்பனவரினெனவே ஏலாதனவரின் உரியரிசி - எனப்பொதுவிதி பெறுதல் கொள்க. நாடுரி என்பது நாவுரியென இக்காலத்து மருவிற்று] (௨௪)

௱எ௫. சுவைப்புளிமுன்னின மெல்லையுந்தோன்றும் ... *

இது. எய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துகின்றது. (இ-ள்) சுவை - அறுசுவையுளொன்றை யுணர்த்துகின்ற — புளிமுன் - புளியெ

ன்னும்பெயர்முன் — இனமென்மையும்-வருகிறவல்லெழுத்துகள் மிகுதலல்லாமல்- அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துகளும் — தோன்றும் ஒரோவிடத்துமிகும். எ-று. உ-ம் புளிங்கறி புளிஞ்சோறு-புளிந்தயிர்-புளிம்பாளிதம்-என வரும் [புளிப்பாகியகறி எனவும் புளிப்பையுடையகறி-எனவும். விரிக்கப்படுதலால் இருவழிக்குமாம். உம்மையால் புளிக்கறி-எனப் பொதுவிதிபெறுதலே சிறப்புடைத்தாகும்.] (௨௫)

௱௭௬. அல்வழி இஐம்முன்னராயி, னியல்புமிகலும் விகற்பமுமாகும் ... ... ... ... ... ... ... ... ... ... ... *

இ-து. இகர ஐகாரவீற்றஃறிணைப்பெயர் முன் வருகிற வல்லினத்திற்கு ஒருவழி எய்தியது விலக்கலும் எய்தியதிகந்துபடாமைக் காத்தலும் எய்தியது விலக்கலுடன் விலக்காமையும் உணர்த்துகின்றது — (இ-ள்) இஐம்முன்னர்-இகர ஐகாரவீற்றஃறிணைப்பெயர்முன் — அல்வழி-அல்வழியினிடத்து — ஆயின்- வல்லினம்வருமாயின் — இயல்பும்- இயல்பாதலும் — மிகலும் - பொதுவிதியான் மிகுதலும் — விகற்பமும் - ஒன்றற்கே ஒருகான்மிகாமையும் ஒருகான் மிகுதலும் — ஆகும்- ஆகும். எ-று. [ஒப்பின்முடித்தலால் ஐகாரவீறுமுடன்கூறினர்] உ-ம்) பருத்தி ஒதி-யானை-குதிரை-இவற்றின்முன் குறிது சிறிது தீது பெரிது-இவற்றைவருவித்து-பருத்திகுறிது எனமுறையேகூட்டி இயல்பாதல்காண்க — கிளி குறிது குளிக்குறிது-தினை- குறிது- தினைக்குறிது- விகற்பித்தன. (௨௬)

௱௭௭. ஆமுன்பகரவீயனைத்தும்வரக்குறுகு, மேலனவல்வழி யியல்பாகும்மே ... ... ... ... ... ... ... ... ... *

இ-து. ஆமுன்னின்ற பகரவீகாரத்திற்கு எய்தாததெய்துவித்தலும் எய்தியவழி வருகிற வல்லினத்திற்கு எய்தியதிகந்துபடாமைக் காத்தலுஞ் சொல்லுகின்றது (இ-ள்) ஆமுன்பகரவீ- ஆமுன்னின்ற பகரவீகாரம் — அனைத்தும்- நாற்கணமும் — வர- வந்தால் — குறுகும்- குறுகும் — அல்வழி- அல்வழியில் — மேலன- மேலைச்சூத்திரத்தினுட் கூறியவிதிமூன்றனுள் — இயல்பாகும் - வருகிறவல்லினம் இயல்பைப்பெறும். எ-று உ-ம்) ஆப்பியரிது-ஆப்பிசுளிரும்-ஆப்பிநன்று-ஆப்பிவலிது-எ-ம் ஆப்பியருமை-ஆப்பிக்குளிர்ச்சி- ஆப்பிநன்மை-ஆப்பிவன்மை- எ-ம். வரும். (௨௭)

௱௭௮. பவ்வீ நீமீ முன்னரல்வழி, யியல்பாம்வலிமெலிமிகலுமாமீக்கே ... ... ... ... ... ... ... ... ... ... *

இது. பவ்வீ நீ மீ என்கிற பெயர்களுக்குமுன் வருகிறவல்லினத்

திற்கு ஒருவழி இயல்பினு மென்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கலும் இவற்றுள்ளே பவ்வீக்குமுன் வருகிறவல்லினத்திற்கு அச்சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தலும் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதியும் உணர்த்துகின்றது. (இ-ள்) பவ்வீ-பகரமெய்யின்மேலே நின்ற ஈகாரவீற்றிடக்கர்ப்பெயரும்—நீ நீஎன்கிறமுன்னிலைப்பெயரும்—மீ-மீ என்கிறமேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும் பெயருமாகிய—முன்னர்-இம்மூன்றன்முன்னும்—அல்வழி-அல்வழியில்—இயல்பாம்- வருகிறவல்லினமியல்பாகும்—மீக்கு- இவற்றுள்ளேமீயென்னுஞ்சொல்லுக்கு—வலி - வல்லெழுத்து—(மிகலுமாம்)-மிகுதலுமாகும்—மெலி-மெல்லெழுத்து—மிகலுமாம்- மிகுதலுமாகும் எ-று (உ-ம்) பீகுறிது சிறிது-தீது-பெரிது-எ-ம். நீகுறியை சிறியை-தீயை-பெரியை-எ-ம். மீகண்-எ-ம். இயல்பாயின—மீக்கூற்று எனவெய்தியதிகந்துபடாமல்வலிமிகுந்தது மீந்தோல் எனமெலிமிகுந்தது. [மீக்கூற்று-மேலாயசொல்லாற் பிறந்தபுகழ். மீந்தோல் மேலாயதோல். இதுஇக்காலத்துப் மீந்தோலெனவழங்குகின்றது. நீஎன்னும் பொதுப்பெயர் அல்வழியிலே நீயென்றும் வேற்றுமையிலே நின்னென்றும் நிற்கையினாலே பொதுப்பெயருயர் திணைப்பெயரொன்னுஞ் சூத்திரத்துளடங்கவில்லை] (௨௮)

௱௭௩. மூன்றாறுருபெண் வினைத்தொகைசுட்டு, ஈறாகு முகரமுன்னரியல்பாம் ... ... ... ... ... ... ... ... ...

இது முற்றுகரவீற்றுட்சிலவற்றின்முன் வருகிறவல்லினத்திற்கு இயல்பினும் விதியினுமென்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்குகின்றது. (இ-ள்) மூன்றாறுருபு - மூன்றாம்வேற்றுமையுருபிற்கும்—ஆறுருபு-ஆறாம்வேற்றுமையுருபிற்கும்—எண் இயல்பாயும் விகாரமாயும்வருகிறஎண்ணிற்கும்—வினைத்தொகை வினைத்தொகைக்கும்—சுட்டு-சுட்டுப்பெயருக்கும்—ஈறாகும்- ஈறாகிய—உகரமுன்னர்- முற்றியலுகரத்தின்முன்னே—இயல்பாம்-வருகிறவல்லினம் இயல்பாகும் எ-று.

(உ-ம்) சாத்தனொடுகொண்டான்-சென்றான்- தந்தான்- போயினான்-எ-ம் சாத்தனது கை-செவி-தலை-புறம்-எ-ம் மூன்றாமுருபின்- முன்னும்-ஆறாமுருபின்-முன்னுமியல்பாயின—ஒருகை-செவி-தலை-புறம்-என எண்ணுப்பெயர்முன்னியல்பாயின. இரு-அறு-எழு-எழு-இவற்றோடும் அப்படியேகூட்டுக.—அடுகளிறு-சேனை-தானை-படை-என வினைத்தொகை முன்னியல்பாயின தரு-புகு-தெறு-எழு-விரவுமுதலியவற்றோடு மொட்டுக.—அதுகுறிது-சிறிது-தீது-பெரிது-எ-ம்

அதுகண்டான்-செகுத்தான்-தந்தான்-படைத்தான்-எ-ம், சுட்டுப்பெயர் முன்னிருவழியு மியல்பாயின [இது உது என்பவற்றோடு மிப்படியே யொட்டுக- உதுகாண் உதுக்காணென விகற்பித்துவருவது இயல்பின் விகாரமுமென்னுஞ் சூத்திரத்தில் அன்னபிறவு மென்பதனாலமையும்] (௨௯)

௱அ௰, அதுமுன்வருமன் றான்றாந்தூக்கின் ... ... ... *

இது. அது வென்பதற்குமுன்வரும் அன்றென்பதற்கு எய்தாததெய்துவிக்கின்றது. இ-ள். அதுமுன்-அதுவென்னுஞ்சுட்டுப்பெயர்முன்—வரும்-வருகிற—அன்று-அன்றென்னும்வினைக்குறிப்புமுற்றானது—தூக்கின்-பாட்டினிடத்து—ஆன்றாம்- முதனீளும். எ-று. (உ-ம் அதான்று எனவரும். [ஆன்றேயாமெனவியல்பை விலக்காமையால் அதன்று. அதுவன்று-எனவும்வரும்] (௩௰)

௱அ௧ வன்றொடரல்லன முன்மிகாவல்வழி ... ... ... *

இது குற்றியலுகரவீற்றுட்சிலவற்றிற்கு இயல்பினுமென்னுஞ் சூத்திரத்தால எய்திய விகாருவழிவிலக்குகின்றது இ-ள்) வன்றொடரல்லனமுன்-வன்றொடரொழிந்த ஐந்துகுற்றியலுகரவீற்றின்முன்னும்— அல்வழி-அல்வழியில் -மிகா-வருகிறவல்லினம்இயல்பாகும் எ-று. (உ-ம்) நாகுகடிது- எஃகுசிறிது- வரகுதீது குரங்குபெரிது தெள்குகொடிது எனவும்-ஏகுகால்-அஃகுபிணி-பொருதுசென்றான்- அறிந்துதந்தான்-எய்துகொன்றான்- எனவும். அல்வழியிலே யியல்பாயின.

௱அ௨. இடைத்தொடராய்தத்தொடரொற்றிடையின், மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகாவேற்றுமை ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) இடைத்தொடர் (முன்) இடைத்தொடர் முன்னும்—ஆய்தத்தொடர் (முன்) - ஆய்தத்தொடர்முன்னும்—ஒற்றிடையின் மிகாநெடிற் (றொடர்முன்)-ஒற்றிடையேமிகாத நெடிற்றொடர்முன்னும்—உயிர்த்தொடர்முன்-உயிர்த்தொடர்முன்னும்—வேற்றுமை-வேற்றுமையில்—மிகா வருகிறவல்லினம் இயல்பாம் எ-று (உ-ம் தெள்கின்கடுமை- எஃகின்கடுமை- நாகின்கடுமை- வரகின்கடுமை- சிறுமை-தீமை-பெருமை-எனவல்லெழுத்துமிகாது இதற்கிது சாரியையென்னுஞ் சூத்திரத்தால் இன்சாரியைபெற்றுவந்தது வரகு கதிரெனச் சாரியைபெறாது வருதலுங்கொள்க. (௩௨)

௱அ௩. நெடிலோடுயிர்த்தொடர்குற்றுகரங்களுட், டறவொற்றிரட்டும், வேற்றுமைமிகவே .. ... ... ... ... ... (...) ... *

இது. மேலை நிலைமொழிக் கோர்புறனடையாக எய்தாத தெய்துவித்தலும் உயிர்வந்தபோது அந்நிலைமொழிக்கு உயிர் வரினுக்குறளென்னுஞ் சூத்திரத்தால் எய்திய தன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது. (இ-ள்.) நெடிற் (றொடர்)-நெடிற்றொடர்களும் —உயிர்த்தொடர்-உயிர்த்தொடர்களுமாகிய— குற்றுகரங்களுள்-குற்றியலுகர மொழிகளுள் — டறவொற்று-அவ்வுகரமேறிநின்றடகாரறகரமெய்கள் —வேற்றுமை-வேற்றுமையில்-மிக-பெரும்பாலும் — இரட்டும் இரட்டும்.எ-று [வருமெழுத்தைச்சொல்லாமையால்நாற்கணமுங்கொள்க ]

(உ-ம்,) ஆடு-கால்-ஆட்டுக்கால்—பாறு-கால்·பாற்றுக்கால்—மூருடு-கால்-மூருட்டுக்கால்—மூயிறுகால்· மூயிற்றுக்கால்எனவரும். செவி தலை புறம் ஞாற்சி நிறம் மயிர் யாப்பு வலிமை அடி என்பவற்றை யொட்டிக்காண்க, [இவ்விரண்டொற்றும் வேற்றுமையிலிரட்டுமெனவே காவிரிபுரக்குநாடு கிழவோனே எனச்சிறுபான்மை வேற்றுமையிலிரட்டாமையும்-காடு - அரண்-காட்டரண், களிறு·யானை- களிற்றியானை-எனச்சிறுபான்மை அல்வழியிலிரட்டுதலும் — வெருகு-கண்-வெருக்குக்கண்எனவேற்றுமையிலும், எருது-மாடு- எருத்துமாடு எனவல்வழியிலுஞ்சிறுபான்மை பிறவொற்றிரட்டலுங்கொள்க. (௧௫)

௱௮௪ மென்றொடர்மொழியுட் சிலவேற்றுமையிற், றம்மினவன்றொடராகாமன்னே ... ... ... ... ... ... ... ...*

இது. மென்றொடர் குற்றியலுகர மொழிகளுட் சிலநிலை மொழிக்கு மூவினமும்வரின் எய்தாத தெய்துவித்தலும் உயிர்வரின் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது (இ ள்.) மென்றொடர் மொழியுள் -மென்றொடர்குற்றியலுகரமொழிகளுள்—சில-சிலமொழிகள்—வேற்றுமையில்-வேற்றுமைக்கண்—தம்மினம்- தமக்கினமாகிய — வன்றொடர்-வன்றொடர்குற்றியலுகரமொழிகளாக—ஆகா-ஆதலையொழிந்தன—மன் - பெரும்பாலன. எ-று. [வரு மெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங்கொள்க.] (உ-ம்) மருந்து-பை-மருத்துப்பை. கரும்பு-வில்-கருப்புவில். கன்று-ஆ-கற்றா. எனவரும். [சிலவாமெனவே ஆகாதனபலவென்பதும் மன்னே யென்றமையால் அன்பு-தளை-அற்புத்தளை.] எனச்சிறுபான்மை அல்வழிக்கண் வன்றொடராதலுங்கொள்க. (௧௬)

௱௮௫. ஐயீற்றுடைக் குற்றுகரமுமுளவே ... ... ... *

இது. முன்சொன்ன நிலைமொழிக்கு எய்தாத தெய்துவித்தலும் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது. ((இ-ள்.) ஐ-ஐகாரச்சாரியையை—ஈற்றுடை-இறுதியிலே பெற்றுவருகிற — குற்

றுகரமும் - மென்றொடர்குற்றியலுகரமொழிகளும்— உள - சிலவுண்டு. எ-று. [வருமெழுத்தைச்சொல்லாமையால்நாற் கணமுங்கொள்க.] (உ-ம்) பண்டு-காலம் - பண்டைக்காலம். இன்று -நாள் - இற்றைநாள் எ-ம். அன்று-கூலி-அற்றைக்கூலி. இன்று - நலம்- இற்றைநலம். எ-ம். இருவழியிலும் வரும். [மேலைச்சூத்திரத்தைச் சாரவைத்தலால் மென்றொடரொன்றும் ஆயினுங்குற்றுகரமெனப் பொதுப்படச் சொன்னமையால்-நேற்று - பொழுது - நேற்றைப் பொழுது. எனவன்றொடர் ஐகாரச்சாரியை பெறுதலும், ஐயீற்றுடைக் குற்றுகரமும் என உடைமையாக்கிக் கூறினமையால் ஒற்றை வேட்டை ஈராட்டை என வருமொழிநோக்காது அச்சாரியைபெறுதலுங்கொள்க. (௬௫)

௧௮௬. திசையொடுதிசையும்பிறவுஞ்சேரினிலையீற்றுயிர் மெய் கவ்வொற்றுநீங்கலும், றகரம்னலவாத்திரி தலுமாம்பிற ... ... *

இது. குற்றியலுகரவீற்றுத் திசைப்பெயர்களுக்கு எய்தாததெய்துவிக்கின்றது. (இ-ள்.) திசையொடு -திசைச்சொல்லோடு — திசையும்-திசைச்சொல்லும் — பிறவும் - பிறசொல்லும்— சேரின் - புணருமிடத்து—நிலையீற்று - நிலைமொழியீற்றிலேநின்ற—உயிர்மெய்-உயிர்மெய்யும் — கவ்வொற்று-அதன்பின்னின்ற ககரமெய்யும்—நீங்கலும் - கெடுதலும்—றகரம் - அவ்விடத்து நின்றறகரமெய்—னலவா னகரமெய்யாகவும் லகரமெய்யாகவும்—திரிதலும் - திரிதலும்—ஆம் ஆகும். எ-று. *

(உ-ம்.) வடக்கு-கிழக்கு-வடகிழக்கு, மேற்கு-திசை-மலை - வேங்கடம் - எனஉயிர்மெய்யுங்ககரமெய்யுங்கெட்டன—குடக்கு - திசை-குடதிசை, குணக்கு-கடல்-குணகடல்-இவையுமப்படியே—தெற்கு - கிழக்கு-தென்கிழக்கு-தென்மேற்கு; தென்மலை, எனஉயிர் மெய்கெட றகரமெய்னகரமெய்யாயிற்று—மேற்கு-பால்-மேல்பால் -மேற்கு-நாடு-மேனாடு எனஉயிர்மெய்கெட றகரமெய் லகரமெய்யாயிற்று, [பிறவென்றதால் மேற்கு-சேரி-மேல்சேரி மேற்சேரி மேலைச்சேரி, கிழக்கு-திசை கீழ்திசை கீழ்த்திசை கிழைத்திசை, எனவும், கீழ்மேற்றென்வடல், எனவும் விகாரப்பட்டும்- சிறுபான்மை - கிழக்கு மேற்குத் தெற்கு வடக்கு-வடக்கூர்-தெற்குமலை, எனவிவ்விகாரமில்லாமலும்வரும், (௬௬)

௧௮௭, தெங்குநீண்டீற்றுயிர் மெய்கெடுங்காய்வரின் ... *

இது, தெங்கு என்னும்பெயர்க்கு எய்தாததெய்துவிக்கின்றது, (இ-ள்) காய்-காயென்னுஞ்சொல் — வரின்-வந்தால் — தெங்கு-தெங்கென்னுநிலைமொழி — நீண்டு-முதனீண்டு—ஈற்றுயிர்மெய்-ஈற்றிலுள்ளவுயிர்மெய் — கெடும்-நீங்கும் எ-று, (உ-ம்) தெங்கு - கா

ய்-தேங்காய், எனவரும், [கெட்டேவரு மென்னுமையால் தெங்கங்கா ய் எனவருவதுங்கொள்க.] (அஎ)

௱அஅ, எண்ணிறையளவும்பிறவுமெய்தி, னொன்றுமுதலெட் டீறாமெண்ணுண், முதலீரெண்முதனீளுமூன்று, மாறுங்குறுகுமாறே ழல்லவற்றி, னீற்றுயிர்மெய்யுமேழனுயிரு, மேகுமேற் புழியென்ம னார்புலவர் ... ... ... ... ... ... ... ... ... ...*

இது, ஒன்றிமுதலெட்டீறாமெண்ணுப் பெயர்களுக்கு உயிர்வரின் எய்தியதன்மேற்சிறப்புவிதியும் மெய்வரின் எய்தாத தெய்துவித்தலுஞ்சொல்லுகின்றது, (இ-ள்) எண் - எண்ணுப்பெயரும் — நிறை-நிறைப்பெயரும் — அளவும் அளவுப்பெயரும் — பிறவும் - பிறபெயர்களும்—எய்தின்-வந்தால்—ஒன்றுமுதல்-ஒன்றுமுதல் — எட்டீறும்-எட்டீறாகும்,— எண்ணுள்-எண்களுள் - முதலீரெண் - முதலிலுள்ள இரண்டெண்களும் — முதனீளும் - முதற்குறினீளும்—மூன்றுமாறும் - மூன்றும்ஆறும்எழும் — (முதல்)குறுகும்-முதனெடில் குறுகும் — ஆறேழல்லவற்றின் - ஆறுமேழுமல்லாத ஆறெண்களினுடைய — ஈற்றுயிர்மெய்யும் - இறுதியிலுள்ள உயிர்மெய்களும் — ஏழன்-ஏழனுடைய — (ஈற்) றுயிரும்-இறுதியிலுள்ளஉயிரும்—ஏகும் கெடும்—ஏற்புழி-ஏற்குமிடங்களில்—என்மனார் - என்றுசொல்லுவார் —புலவர்-புலவர் எ-று.[இவ்விகாரம்பண்புத்தொகைக்கேயுரியவாகும் ஏழு என்பது முற்றியலுகரவீறாயினும் ஒன்றினமுடித்தன்னினமுடித்தலென்பதனால் இங்கேசொல்லப்பட்டது.]

(உதாரணம்.)

| | | |
|---|---|---|
| ஆறு.பத்து-அறுபது - * | ஏழு பத்து - எழுபது - * | [illegible] |
| கழஞ்சு அறுகழஞ்சு * | கழஞ்சு - எழுகழஞ்சு - * | |
| நாழி - அறுநாழி - * | நாழி - - எழுநாழி - * | |
| மீன் - அறுமீன் - - * | மீன் - எழுமீன்- - - * | |

ஏழு - கடல் - எழ்கடல் - எழனீற்றுயிர் கெட்டது. மற்றவைகளுக்கு உதாரணம் பின்னேகாட்டப்படும். ஏற்புழியென்றதனால் - பொருவி தியால் இரண்டாயிரம் எழாயிரம் இரண்டுகழஞ்சு மூன்றுபடி நான்குபொருள் எழுகடல் எனதிற்பனவும் உண்டென்றுகொள்க.

௱அகூ. ஒன்றன்புள்ளிரகரமாக, விரண்டனொற்றுயி ரேகவுவ்வருமே... ... ... ... ... ... ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) ஒன்றன் - ஈற்றுயிர்மெய்கெடநின்ற வொன்றென்னு மெண்ணினது — புள்ளி - னகரமெய்யானது — ரகரமாக - ரகரமெய்யாக — இரண்டன் - இரண்டனுடைய — ஒற்று-

ணகரமெய்யும் — உயிர் - அகரவுயிரும் — ஏக - கெட — உவ்வரும் - அவ்விரண்டு ரகரமெய்மேலும் உகரம்வரும் எ - று. (உ - ம்.) ஒன்று - ஆயிரம் - ஓராயிரம். இரண்டு - ஆயிரம் - ஈராயிரம் எனவுயிர்வரமுதனீண்டு ஈற்றுயிர் மெய்கெட்டு உகரம்பெற்று முற்றுமற்றொரோ வழியென்பதனால் அவ்வுகரமுங்கெட்டு வந்தன. ஒன்று - பத்து - ஒருபது. இரண்டு - பத்து - இருபது. எனமெய்வர முதனீளாது ஈற்றுயிர் மெய்கெட்டு உகரம்பெற்றுவந்தன - இங்கேசொல்லியபடிமற்றைத்திரிவுமுதலானவைவருதலுங்காண்க. [சிறுபான்மை ஓராயிரம் இராயிரம் எனவருதலுமுண்டு.] (௩௯)

௱௯௰. மூன்றனுறுப்பழிவும்வந்ததுமாகும் ... ... .... *

இதுவுமது (இ-ள்.) மூன்றன் - இறுதியுயிர்மெய்கெட நின்றமூன்றென்னுமெண்ணினது — உறுப்பு - மெய்யானது — அழிவும்-கெடுதலும் — வந்ததும் - வருகிறமெய்யாகத்திரிதலும் — ஆகும்-ஆகும் எ-று (உ-ம்.) மூன்று - ஒன்று - மூவொன்று. எனஉயிர்வரமுதல்குறுகாது ஈற்றெழுத்தும் னகரமெய்யுங்கெட்டன. மூன்று - பத்து - முப்பது எனமெய்வர ஈறுகெட்டுனகரமெய்வந்தமெய்யாய்த் திரிந்தது மற்றவைகளுமிப்படியே. (௪௰)

௱௯௧. நான்கன்மெய்யேலறவாகும்மே ... ... ... ... *

இதுவுமது (இ-ள்.) நான்கன் - இறுதியுயிர்மெய்கெட நின்றநான்கென்னு மெண்ணினது — மெய் - னகரமெய் — லறவாகும் - லகரமெய்யாகவும் றகரமெய்யாகவுந்திரியும். எ - று (உ - ம்.) நான்கு - ஆயிரம் - நாலாயிரம். நான்கு - வழி - நால்வழி என உயிரும் இடையெழுத்தும்வர ஈற்றுயிர்மெய் கெட்டுனகர மெய்லகர மெய்யாயிற்று நான்கு - மணி - நான்மணி. எனலகரமெய்யோடு மயங்காத மெல்லெழுத்துவரின் னகரமெய் இயல்பாமென்க நான்கு - பத்து - நாற்பதுஎன வல்லெழுத்துவரஈற்றுயிர் மெய்கெட்டுனகரமெய் றகரமெய்யாயிற்று - மற்றவைகளுமிப்படியே. (௪௧)

௱௯௨. ஐந்தனொற்றடைவதுமினமுங்கேடும் ... ... ..... *

இதுவுமது. (இ-ள்.) ஐந்தன் - இறுதியுயிர் மெய்கெடநின்றஐந்தென்னுமெண்ணினது — ஒற்று - நகரமெய்யானது — அடைவதும் - வருகிறமெய்யாகியும் — இனமும் - அதற்கினமாகியும் — கேடும் - கெட்டும்வரும் எ-று. (உ-ம்) ஐந்து - மூன்று - ஐம்மூன்று. எனமெல்லெழுத்து வாஈற்றுயிர் மெய்கெட்டு நகரமெய்வந்த மெய்யாய்த்திரிந்தது. ஐந்து - கழஞ்சு - ஐங்கழஞ்சு. என வல்லெழுத்து வாஈற்றுயிர் மெய்கெட்டு நகரமெய் வந்தவெழுத்திற்கு இனமாய்த்

திரிந்தது. ஐந்து-ஆயிரம்-ஐயாயிரம்-ஐந்துவழி - ஐவழி-என உயிரும் இடையெழுத்தும்வர ஈற்றுயிர்மெய்யுடன் நகரமெய்யுங்கெட்டது. மற்றவைகளு மிப்படியே. [ஒரோவிடத்து ஐவ்வண்ணம் எனவரும். அடைவது மினமுமென்றமையால் அருத்தாபத்தியால் ஐந்நூறு-ஐந்நூணி என நகரமெய்யியல்பாதல்கொள்க.]
(௪௨)

௱௯௫. எட்டனுடம்புணவ்வாகுமென்ப... ... ... ... *

இதுவுமது (இ-ள்) எட்டன் - இறுதியுயிர்மெய்கெடநின்ற எட்டென்னுமெண்ணினது—உடம்பு- டகரமெய்யானது—ணவ்வாகும்- ணகரமெய்யாகும்—என்ப-என்றுசொல்லுவர் புலவர். எ-று. (உ-ம் எட்டு-ஆயிரம்- எண்ணாயிரம்- என ஈற்றுயிர்மெய்கெட்டு டகரமெய் ணகரமெய்யாயிற்று-மற்றவைகளுமிப்படியே.
(௪௩)

௱௯௬. ஒன்பானொடுபத்து நூறுமொன்றின், முன்னதினேனைய முரணியொவ்வொடு, தகரநிறீஇப்பஃதகற்றினவ்வை, நிரலேணளவாத்திரிப்பதுநெறியே... ... ... ... ... ... ... ....*

இது. ஒன்பதிற்கு எய்தாததெய்துவித்தலும் அதனொடு புணரும் பத்திற்கும் நூற்றிற்கும் இயல்பினுமென்பதனாலும் எண்முவெழுத்தென்பதனாலும் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதியும் உணர்த்துகின்றது —(இ-ள்) ஒன்பானொடு ஒன்பஃதுடனே—பத்தும்-பஃதென்பதும்—நூறும்- நூறென்பதும்—ஒன்றின்- வந்துபுணருமாயின் —முன்னதின்-முன்னதாகிய நிலைமொழியினின்றும்—ஏனைய-மற்றைவருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும்—முரணி- முறையே நூறெனவும் ஆயிரமெனவுந்திரித்து—ஒவ்வொடு- நிலைமொழிமுதலிலுள்ள ஒகரவுயிரோடு—தகரம்- தகரமெய்யை—நிறீஇ- அதற்கு ஆதாரமாகநிறுத்தி—பஃது-அந்நிலைமொழியிறுதியிலுள்ளபஃதை-அகற்றி-கெடுத்து—னவ்வை- அம்மொழிமுதற்கயனின்ற னகரமெய்யை—நிரலே முறையே—ணளவா- ணகரமெய்யாகவும் ளகரமெய்யாகவும்—திரிப்பது-திரிப்பது—நெறி-முறையாகும் எ-று. [நெறியேயென்ற விலேசானே தனிக்குறின் முன்னொற் றிரட்டித்தலுங்கொள்க.] (உ-ம்) ஒன்பஃது-பத்து-தொண்ணூறு-ஒன்பஃது- நூறு- தொள்ளாயிரம்- எனவரும். தொளாயிரமென விக்காலத்திற் வழங்குகின்றது. [பஃதகற்றி யென்பதனோடு பொருந்த ஒன்பஃதனொடென்னாது ஒன்பானொடென்றமையால் ஒன்பதுநின்று புணரினு மிவ்விதியேபெறுமென்றறிக]
(௪௪)

௱௯௭. முதலிருநான்காமெண்முனர்ப்பத்தி, னிடையொற்றேகலாய்தமாக லெலுவிருவிதியுமேற்குமென்ப ... ... ... ...*

இ-து. ஒன்றுமுதலெட்டெண்களின் முன்வருகிற பத்தென்னு மெண்ணிற்கு இயல்பினுமென்பதனால் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது (இ-ள்) முதல்-ஒன்றுமுதலாகிய—இருநான்காமெண் முனர்-எட்டெண்களின்முன்னும்வருகிற—பத்தின்-பத்தென்னுமெண்ணினது—இடை-நடுநின்ற—ஒற்று-தகரமெய்யானது—ஏகல்-கெடுதலும்—ஆய்தமாகல் - தகரநின்றவிடத்து அதுகெட ஆய்தம்வருதலும்—எனவிருவிதியும்-என்னுமிவ்விரண்டுவிதியையும்—ஏற்கும்-ஏற்கும்—என்ப-என்றுசொல்லுவர் புலவர். எ-று. (உ-ம்) ஒன்று-பத்து-ஒருபது-ஒருபஃது-இரண்டு- பத்து- இருபது- இருபஃது- எனவரும். மற்றவைகளுமிப்படியே. (௬௫)

௱௯௬. ஒருபஃதாதிமுன் னொன்றுமுதலொன்பா னெண்ணுமவையூர்பிறவுமெய்தி, னாய்தமழியவாண்டாகுந்தவ்வே... ... ... *

இ-து. மேலைச்சூத்திரத்தாலெய்திய ஒருபஃதுமுதலாகிய நிலைமொழிகளுக்கு உயிர்வரின் உயிர்வரினுக்குறளென்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் மெய்வரின் எய்தாததெய்துவித்தலுஞ்சொல்லுகின்றது (இ-ள்) ஒருபஃதாதின்முன்-ஒருபஃதுமுதலாகிய எட்டெண்களின்முன்—ஒன்றுமுதல் - ஒன்றுமுதலாகிய—ஒன்பானெண்ணும்-ஒன்பதெண்களும்—அவை- அவ்வெண்களை—ஊர்-ஊர்ந்த—பிறவும்- மற்றவையும்—எய்தின் - வந்துபுணருமாயின்—ஆய்தம் - நிலைமொழியிடையிலேநின்ற வாய்தமானது—அழிய-கெட—த-இயல்பாகிய தகரம்—ஆண்டு அவ்வாய்தநின்றவிடத்து—ஆகும்- வரும். எ-று. (உ-ம்) ஒருபஃது-ஒன்று ஒருபத்தொன்று—இருபஃது- மூன்றனா-இருபத்துமூன்றனா- எனவரும் மற்றவைகளுமிப்படியே. [ஆய்தங்கெடத் தகரம்வருமென்றமையால் அருத்தாபத்தியால் ஆய்தமில்லாத ஒருபதுமுதலானவைகளும் தகரம் பெறுமென்றதாயிற்று] (௬௬)

௱௯௭ ஒன்றுமுதலீரைந் தாயிரங்கோடி, யெண்ணிறையளவும் பிறவரிற்பத்தி, னீற்றுயிர்மெய்கெடுத் தின்னுமிற்று, மேற்பதேற்கு மொன்பதுமினைத்தே ... ... ... ... ... ... ... *

இ-து. பத்தென்னுநிலைமொழிக்கு உயிர்வரின்- உயிர்வரினுக்குறளென்பதனால் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதியும், மெய்வரின் எய்தாததெய்துவித்தலும், ஒன்பதென்னு நிலைமொழிக்கு உயிர்வரின் அச்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதியும், மெய்வரின் எய்தாததெய்துவித்தலும் உணர்த்துகின்றது. (இ-ள்.) 'ஒன்றுமுதலீரைந்து-ஒன்றுமுதலாகிய பத்தெண்களும்— ஆயிரம் - ஆயிரமும் — கோடி-கோடியுமாகிய—எண்-எண்ணுப்பெயரும்—நிறை- நிறைப்பெயரும்—அளவும்-அளவுப்பெயரும்—பிற-பிறபெயரும்—வரின்-வந்துபுண

ருமாயின் — பத்தின் - நிலைமொழியாகிய பத்தினது — ஈற்றுயிர் மெய் - இறுதியிலுள்ள தகரவுயிர்மெய்யை — கெடுத்து - அழித்து — இன்றும் - இன்சாரியையாயினும் — இற்றும் - இற்றுச்சாரியையாயினும் — ஏற்பது - அவ்விடத்திற்கேற்பது — ஏற்கும் - ஏற்றுநிற்கும் — ஒன்பதும் - ஒன்பதென்னும் நிலைமொழியும் — இனைத்து - இப்படியே எண்ணுப்பெயர்முதலானவை வந்து புணருமாயின் இன்றாயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்றுநிற்கப்பெறும். எ-று.

(உ-ம்.) பத்து - ஒன்று - பதினொன்று - பதிற்றொன்று. ஒன்பது - ஆயிரம் - ஒன்பதினாயிரம் - ஒன்பதிற்றாயிரம். எனவரும். மற்றவைகளும் இப்படியே. [பதினொன்று - உம்மைத்தொகை. பதிற்றொன்று - பண்புத்தொகை - ஏற்பதேற்குமென்றதனாற் பத்துக்கோடி ஒன்பதுகோடி எனப்பொதுவிதிப்படியே முடிந்துநிற்றலுங்கொள்க.] (சஎ)

௱கூஅ. இரண்டுமுன்வரிற்பத்தி னீற்றுயிர்மெய், கரந்திடவொற்றனவ்வாகுமென்ப ... ... ... ... ... ... ... ... ✽

இதுவுமது. பத்தென்னுநிலைமொழிக்கு உயிர்வரினுக்குறளெல்பதனால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுக்கின்றது. (இ-ள்.) இரண்டு - இரண்டென்பது — முன்வரின் - முன்வருமாயின் — பத்தின் - பத்தென்னுநிலைமொழியினது — ஈற்றுயிர்மெய் - ஈற்றிலுள்ள துகரவுயிர்மெய்யானது — கரந்திட - கெட — ஒற்று - தகரமெய் — னவ்வாகும் - னகரமெய்யாகத்திரியும் — என்ப - என்றுசொல்லுவர்புலவர் எ-று. (உ-ம்) பத்து - இரண்டு - பன்னிரண்டு - எனவரும். (சஅ)

௱கூகூ. ஒன்பதொழித்தவெண் ணொன்பதுமிரட்டின், முன்னதின்முன்னலவோடவுயிர்வரின், வவ்வுமெய்வரின் வந்ததுமிகனெறி. ●

இது ஒன்பதைநீக்கிய ஒன்பதெண்களாய நிலைமொழிகளுள் மூன்றுமேழுக்கு மூன்றுமேழுங்குறுகுமெனஎய்தியதன்மேற்சிறப்புவிதியும், உயிர்வரின் எல்லாவற்றிற்கும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதியும் - மெய்வரின் எய்தாததெய்துவித்தலுஞ் சொல்லுகின்றது. இ-ள், ஒன்பது ஒன்பதென்கிறஎண்ணொன்றனையும் — ஒழித்த ஒழித்துநின்ற — எண்ணொன்பதும் - ஒன்று [illegible]தற்பத்தீறாகிய ஒன்பதெண்ணினையும் — இரட்டின் - இரட்டித்துச்சொன்னால் — முன்னதின் - நிலைமொழியினது — முன்னல - முதலெழுத்தல்லாதவைகளெல்லாம் — ஓட - கெட — உயிர்வரின் உயிர்முதலானவெண்வரின் — வவ்வும் - வகரமெய்யும் — மெய்வரின் - மெய்முதலானவெண்வரின் — வந்ததும் - வந்தமெய்யும் — மிகல் - மிகுதல் — நெறி - முறையாம். எ-று. (உ-ம்.) ஒன்று - ஒன்று - ஒவ்வொன்று - இரண்டு - இரண்டு - இவ்விரண்டு - நான்கு - நான்கு - நந்நான்கு -

பத்து - பஃது - பப்பத்து - எனவரும் நெறியென்றமையால் - நந்நான்கு - எனநான்கிற்குக்குறுக்கமும், ஒரோவொன்று - ஒன்றொன்று - கழக்கழுஞ்சு - எனவிரட்டித்தலும், இன்னுங்குற்றியலுகரப்புணர்ச்சியுள் அடங்காதனவுங்கொள்க. (௬௧)

உ௱. பூப்பெயர்முன்னினமென்மையுந்தோன்றும்... ... ✻

இது. பூவென்கிற ஊகாரவீற்றுச் சொன்முன்வருகிற வல்லினத்திற்கு - இயல்பினுமென்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துகின்றது (இ-ள்.) பூப்பெயர்முன் - பூவென்னும்பலபொருளொருசொன்முன் — இனமென்மையும் - வருகிறவல்லினமிகுதலல்லாமல் அவற்றிற்கினமாகிய மெல்லினமும் — தோன்றும் - மிகும். எ-று. உ-ம்) பூங்கொடி - பூஞ்சோலை - பூந்தடம் - பூம்பணை - எனவரும் [மலராயின் இரண்டாம் வேற்றுமைத் தொகையும் அழகாயிற் பண்புத்தொகையுமாம்]

உ௱க. இடைச்சொல்லேயோ முன்வரினியல்பே ... ... ✻

இது ஏகார ஓகார இடைச்சொற்களின் முன்வருகிற வல்லினத்திற்கு இயல்பினு மென்பதனால் எய்தியது விலக்குகின்றது. (இ-ள்) இடைச்சொல் - இடைச்சொல்லாகிய — ஏ (முன்) ஆறேகாரத்தின்முன்னும் — ஓமுன் - எட்டோகாரத்தின் முன்னும் — வரின் - வல்லினம்வந்தால் — இயல்பு - பொதுவிதியான்மிகாது இயல்பாகும். எ-று. (உ-ம்) அவனேகொண்டான் - இதுபிரிநிலையும் - வினாவும் - ஈற்றசையுந்தேற்றமுமாம் — அறமேபொருளேகாமமே மேதுறம்வ. என் — ஏயெதனையென்றோரிருடிவினவ - இசைநிறை — அவனோகொண்டான் - என்பது - ஒழியிசைமுதலிய வெட்டுமாம். (௯௧)

உ௱உ. வேற்றுமையாயினை கானிறுமொழி, யீற்றழிவோடுமம் மேற்பவுமுளவே ... ... ... ... ... ... ... ... ✻

இது. ஐயீற்று நிலைமொழிக்கு எய்தாத தெய்து விக்கின்றது (இ-ள்.) ஐகானிறுமொழி - ஐகாரவீற்றுச்சொற்கள் — வேற்றுமையாயின் - வேற்றுமைக்கண்வருமாயின் — ஈற்றழிவோடும் - ஈற்றைகாரங்கெடுதலுடனே — அம் - அம்முச்சாரியை — ஏற்பவும் - பெற்றுமுடிவனவும் உள - சிலவுள. எ-று. [அழிவோடுமென்றமையால் அழியாமையோடும் அம் ஏற்பவுமுளவெனக்கொள்க. வருமெழுத்துச் சொல்லாமையால் நாற்கணமுங்கொள்க] (உ-ம்.) புன்னை - கானல் - புன்னையங்கானல் - முல்லை - புறவம் - முல்லையம்புறவம் — வழுதுணை - காய் - வழுதுணங்காய் - ஆவிரை - வேர் - ஆவிரம்வேர் - எனவரும். [ஏற்பவுமுளவென்றதனால் - முல்லைப் புறவு எனவரினுங்கொள்க.] (௯௨)

**௨௱௩.** பனைமுன்கொடிவரின் மிகலும்வலிவரி, னைபோயம்முந் திரள்வரினுறழ்வு, மட்டுறினைகெட்டந்நீள்வுமாம்வேற்றுமை. *

இது. பனையென்கிற நிலைமொழிக்கும் -அதனோடு புணருஞ் சிலவருமொழிக்கும் இயல்பினுமென்பதனலு; மேலைச் சூத்திரத்தாலும் எய்தியவற்றை யிகந்துபடாமைக் காத்தலும் - இ ஈ ஐ வழியென்பதனால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தலுஞ் சொல்லுகின்றது. (இ-ள்.) பனைமுன்-பனையென்னும்பெயர்முன்— கொடிவரின் - கொடியென்னும்பெயர்வருமாயின் — மிகலும் - வந்தது மிகுதலும் —வலிவரின் - கசதபக்கள்வருமாயின் — ஐபோய் - நிலைமொழியீற்றைகாரங்கெட்டு—அம்மும் - அம்முப்பெறுதலும் — திரள்வரின்-திரளென்னும் பெயர்வருமாயின் — உறழ்வும் - வந்ததுமிகுந்தும் ஐபோய் அம்முப்பெற்றும் விகற்பித்தலும் — அட்டுறின். அட்டென்னும்பெயர்வருமாயின் — ஐகெட்டு - ஐகாரங்கெட்டு—அந்நீள்வும் - வருமொழி அகரம் ஆகாரமாதலும் — ஆம்-ஆகும்—வேற்றுமை - வேற்றுமைக்கண். எ-ம். (உ-ம்.) பனைக்கொடி. எ-ம். பனங்காய்-செறும்பு-தூண்-பழம் எ-ம். பனைத்திரள் -பனந்திரள் எ-ம். பனாட்டு எ-ம் வரும். (௫௩)

உயிரீற்றுப்புணரியன்முற்றுப்பெற்றது.

நான்காவது.

# மெய்யீற்றுப்புணரியல்.

**௨௱௪.** உடன்மேலுயிர்வந்தொன்றுவதியல்பே ... ....

இது. மெய்யீற்றுப்பதம் புணருஞ் சிறப்புப்புணர்ச்சி இவ்வியலாற் கூறப்படுதலின் மெய்யீற்றுமுன் உயிர்முதல்வந்து புணருமாறு உணர்த்துகின்றது, (இ-ள்.) உடன்மேல்-நிலைமொழியீற்றினின்ற மெய்யின்மேல்—உயிர் - வருமொழிமுதலுயிர்—வந்து - வந்து —ஒன்றுவது- ஒன்றுபட்டிணங்கிநிற்பது—இயல்பே-இயல்புப்புணர்ச்சியேயாம் எ-று. (உ-ம்.) தோன்றல்-அழகன்-தோன்றலழகன், உரின் அழகிது-உரினழகிது-புகழ்-அழகிது-புகழழகிது. எ-ம். வேல்-எறிந்தான்-வேலெறிந்தான். எனவும்வரும். மற்றவைகளுமிப்படியே (௧)

**௨௱௫.** தனிக்குறின்முன்னொற்றுயிர்வரினிரட்டும் ... ... *

இது. எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது (இ-ள்.) தனிக்குறின்முன்-தனிக்குற்றெழுத்தின்முன்னின்ற—ஒற்று-மெய்யா

னது—உயிர்-உயிரானது—வரின்-வந்தால் — இரட்டும் - இரட்டித்து நிற்கும். எ-று. (உ-ம்) மண்-அரிது-மண்ணரிது. பொன்-அரிது-பொன்னரிது. எ-ம். மண்-அகம்-மண்ணகம். பொன் - ஒளி - பொன்னொளி. எ-ம். வரும். மற்றவைகளுமிப்படியே (௨)

௨௱௬. தன்னொழிமெய்ம்முன்யவ்வரினிகரந், துன்னு மென்று துணிநருமுளரே ... ... ... ... ..... ... ... ... *

இது. யகரமொழிந்தபத்து மெய்களின்முன் வருகிறயகரத்திற்கு என்றூஉவெழுத் தென்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துகின்றது. (இ-ள்.) தன்னொழி-தன்னை யொழிந்த—மெய்ம்முன்-ஞணநமனரலவழள என்கிறபத்து மெய்களின்முன்னும் — ய - யகரமானது—வரின்-வந்தால்—இகரம்-இகரச்சாரியையை — துன்னுமென்று-தன்முன் பொருந்துமென்று — துணிநரும்- அறுதிற்கொள்வாரும்—உளர்-சிலருளர். எ-று. (உ-ம்,) வேளியாவன் - மண்ணியாது-என வரும். மற்றவைகளுமிப்படியே. [துணிநருமென்ற எதிர்மறை யாய இழிவுசிறப்பும்மையால் - வேள்யாவன் மண்யாது எனப்பொது விதி பெறுமென்பார் பலருளரெனக்கொள்க] (௬)

௨௱௭. ஞணநமல்வளன, வொற்றிறுதொழிற்பெய, ரேவல்வினைநனியவ்வன்மெய்வரி, னுவ்வுறுமேவலுறாசிலசில்வழி ... ... ..*

இது, முதனிலைத்தொழிற்கும் ஏவற்கும் பொதுவாகிய சிலநிலைமொழிகளுக்குஎய்தாததெய்துவிக்கின்றது. (இ-ள்.) ஞணநமலவளன-ஞணநமலவளன என்கிற—ஒற்று எட்டுமெய்களும்—இறு- இறுதியாகிய—தொழிற்பெயர் - முதனிலைத்தொழிற் பெயர்களும் — ஏவல்வினை-ஏவல்வினைகளும்—யவவன்மெய்-,யகரமொழிந்தமெய்கள் — வரின் - வருமாயின் — நனி - பெரும்பாலும்—உ - உகரச்சாரியையை உறும்-இறுதிக்கட்பொருந்தும்—சிலவேவல்-சிலவேவல்வினைகள்—சில்வழி- சிலவிடங்களிலே—உறா- அவ்வுகரச்சாரியையைப்பொருந்தாவாம். எ-று. (உ-ம்.) உரிஞுக்கடிது - உண்ணுக்கடிது - பொருநுக் கடிது- திருமுக்கடிது-தின்னுக்கடிது- நீண்டதுவலிது எ-ம் கடுமை நீட்சி வன்மை எ-ம். தொழிற்பெயரிருவழியும் உகரம்பெற்றன மற்றவையும் இப்படியே. உரிஞுகொற்றா-உண்ணுகொற்றா - பொருநு கொற்றா-திருமுகொற்றா-தின்னுகொற்றா - நாகா வளவா - எனவேவல்வினை உகரம்பெற்றன. மற்றவையுமிப்படியே. [சிலவேவலுறாசில் வழியென்றதனால்-உண்ணுகொற்றா-உண்கொற்றா - எனவுகரம்பெற்றும் பெறாதும்வருவனவும் - உரிஞுகொற்றாவெனவுகரம் பெற்றே வருவனவும் உளவென்றறிக ... ... ... ... ... ... ... ... ([illegible])

**௨௱௮. நவ்விறுதொழிற்பெயர்க்கவ்வுமாம் வேற்றுமை ... ***

இது. நகரவீற்றுத் தொழிற்பெயர்க்கு எய்திய தன்மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது. (இ-ள்) நவ்விறு - நகரவிறுதியாகிய — தொழிற்பெயர்க்கு-முதனிலைத்தொழிற்பெயர்க்கு — அவ்வுமாம் -உகரச்சாரியை யல்லாமலும் அகரச்சாரியையு மாகும் — வேற்றுமை-வேற்றுமைக்கண். எ-று (உ-ம்) பொருநக்கடுமையெனவரும். (ரு)

**௨௱௯. ணனவல்லினம் வரட்டறவும்பிறவரி, னியல்புமாகும்வேற்றுமைக்கல்வழிக்-கனைத்துமெய்வரினுமியல்பாகும்மே ... ...***

இதுமேலைச்சூத்திரம்வரைக்கும் மெய்யீற்றுப் பொதுப் புணர்ச்சிகூறிஅவற்றிற்கேயுரிய ஞகரநகரங்களையொழித்து மற்றவைகளுக்குமுறையே சிறப்புவிதி சொல்லத்தொடங்கி ணகரனகர வீறுபுணருமாறுஉணர்த்துகின்றது. (இ-ள்.) ணன-ணகாரனகாரங்கள் — வேற்றுமைக்கு-வேற்றுமைக்கண் - வல்லினம் - வன்கணம்—வர - வந்தால் —டறவும்- முறையேடகாரமும் றகாரமும்—பிற - மெல்லினமும் இடையினமும்—வரின்-வந்தால்—இயல்பும்-இயல்பும் — ஆகும்-ஆம் —அல்வழிக்கு-அல்வழிக்கண் — அனைத்துமெய்-மூவினமெய்களும் —வரினும்-வந்தாலும்—இயல்பாகும்-இயல்பேயாகும்.எ-று. *

(உ-ம்) சிறுகண்- களிறு-சிறுகட்களிறு. பொன்-கடு-பொற்கடு எனவேற்றுமையிலே வல்லினம் வரணனக்கள் திரிந்தன. மண்ஞாற்சி-பொன்ஞாற்சி-நீட்சி மாட்சி யாப்பு-வன்மையென வேற்றுமையிலே மெல்லினமும் இடையினமும்வர ணனக்கள் இயல்பாயின —மண்கடிது - பொன்கடிதுசிறிதுதீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டதுயாது வலிது என அல்வழியிலே மூவினமும்வர ணனக்கள் - இயல்பாயின மற்றவைகளுமிப்படியே. [ஒப்பின்முடித்தலால்னகரமும் உடன்கூறினர் பின்னேகூட்டிச் சொல்லப்படுமெழுத்துகளுக்கும் இவ்வுத்தியேகொள்க ... ... ... ... ... ... ...(௬)

**௨௱௰ குறிலணைவில்லாணனக்கள்வந்த, நகரந்திரிந்துழி நண்ணுங்கேடே ... ... ... ... ... ... ... ... ... ***

இது. ணகரனகரவீறுகளுள் ஒருசாரனவற்றிற்கு எய்தியது விலக்கிப்பிறிது விதிவகுக்கின்றது. (இ-ள்.) குறில்-தனிக்குறிலொன்றனையும்—அணைவில்லா-சாராமல் ஒருமொழிதொடர் மொழிகளைச் சார்ந்த—ணனக்கள்-ணகார னகாரமெய்களானவை—வந்த - வருமொழிக்குமுதலாகவந்த—நகரம்- நகரமானது — திரிந்துழி - மயக்கவிதியில்லாமையினாலே திரிந்தவிடத்து — கேடு-கெடுதலை — நண்ணும்-பொருந்தும். எ-று. (உ-ம்.) தூண் - நன்று- தூணன்று. பசுமண்-நன்று பசு

மனன்று எ-ம். நன்மை-எ-ம்-ணகரம் இருவழியுங்கெட்டது. அரசன்-நல்லன்- அரசனல்லன். செம்பொன்-நன்று, செம்பொனன்று- எ-ம். நன்மை-எ-ம்,னகரம்இருவழியுங்கெட்டது. (எ)

உ௱௰௧. சாதிகுழூஉப்பரண்கவண்பெயரிறுதி, யியல்பாம்வே ற்றுமைக்குணவெண்சாண்பிற, டவ்வாகலுமா மல்வழியும்மே... *

இது ணகரவீற்றுட்சிலவற்றிற்கு வேற்றுமைக்க ணெய்தியதுவி லக்கலுஞ் சிலவற்றிற்கு அல்வழிக்கணெய்தியதன்மேற் சிறப்புவிதி யும் உணர்த்துகின்றது. (இ-ள்) சாதிப்(பெயர்) - சாதிபற்றிவரும் பெயர்களுக்கும்—குழூஉப்(பெயர்)திரள்பற்றிவரும் பெயர்களுக்கு ம் — பரண்கவண்பெயர்-பரண்கவணென்னும்பெயர்களுக்கும் — இறுதி-ஈற்றுணகரமானது —வேற்றுமைக்(கும்)-வேற்றுமைக்கண்ணு ம்—இயல்பாம்-வல்லினம்வந்தாலியல்பாகும்—உணவெண் (பெயர்,) உணவிற்குரிய வெள்ளின் றிரிசொல்லாகிய வெண்ணென்னும் பெய ருக்கும் — சாண் பெயர்)-சாணென்னும் நீட்டலளவைப் பெயருக்கு ம்—(இறுதி)-ஈற்றுணகரமானது—அல்வழியும் - அல்வழிக்கண்ணும் —டவ்வாகலுமாம் - வல்லினம்வந்தால் திரிந்துடகரமாதலும் பொருந் தும்- எ-று.

(உ-ம்.) பாண்குடி. எ-ம். அமண்குடி, எ-ம். பரண்கால்-எ-ம் கவண்கால் - எ-ம். வேற்றுமையினு மியல்பாயிற்று — எண்-கடிது எட்கடிது சாண்-கோல்-சாட்கோல். என அல்வழியினுந்திரிந்தது[டவ் வாகலுமாமென்றவும்மையால்-எண்கடிது-சாண்கோல் எனவியல்பாத லே சிறப்பாம். பிறவென்றமிகையால் - வேற்றுமையில் - பாணக்குடி என அகரச்சாரியைபெறுதலும், அட்டூண்டூழனி என்னுமியல்பும், ம ட்குடம் - மண்குடம், என்னுமூறழ்வும் இருவழியிலும் இன்னும்ணக ரவீற்றுள் அடங்காதவையுண்டேல் அவையுங்கொள்க,] (அ)

உ௱௰௨, ணஃகான்கிளைப்பெயரியல்புமஃகா, னடைவுமாகும்வே ற்றுமைப்பொருட்கே ... ... ... ... ... ... .... *

இது. னகரவீற்றுச்சாதிப்பெயர்க்கு வேற்றுமைக்கண் எய்திய து விலக்கலும் பிறிதுவிதிவகுத்தலுஞ்சொல்லுகின்றது. (இ-ள்) ன ஃகான்-னகரத்தையிறுதியிலுடைய— கிளைப்பெயர்-சாதிப்பெய ர— இயல்பும்-வல்லினம்வர வீறுதிரியாதியல்பாதலும் — அஃகானடையு ம் - அகரச்சாரியை பெறுதலும்—வேற்றுமைப்பொருட்கு - வேற் றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்—ஆகும் - ஆகும். எ-று (உ-ம்.) எயின்குடி-எயினக்குடி - சேரி - தோட்டம்-பாடி-எனவரும்.[பொரு ட்கேயென் றமிகையால் - எயினமரபு-எயினவார்வு எயினவணி - என

மற்றைக்கணம்வரினும் அகரச்சாரியை பெறுதலும் எயினக்கன்னி என அல்வழியில் அகரச்சாரியை பெறுதலுங்கொள்க. (௯)

**௨௱௰௩. மீன்றவ்வொடுபொருஉம்வேற்றுமைவழியே ... ***

இது மீனென்னுஞ்சொல்லுக்கு வேற்றுமைக்கண் எய்தியதொருவாற்றால் விலக்குகின்றது. (இ-ள்.) மீன்-மீனென்னுமொழியிறுதி னகரம்—வேற்றுமைவழி-வேற்றுமைக்கண்வல்லெழுத்துவரின்—றவ்வொடு-றகரத்தோடு—பொருஉம்-உறழ்ந்துவரும்.எ-று. (உ-ம்) மீன்கண்-மீற்கண்-செவி-தலை-புறம்-எனவரும். (௰)

௨௱௰௪, தேன்மொழிமெய்வரினியல்புமென்மை, மேவினிறுதியழிவும்வலிவரி;னீறுபோய்வலிமெலிமிகலுமாமிருவழி ... ... *

இது தேனென்னுஞ் சொல்லுக்கு னவ்வல்லினம் வரட்டறவும் எனஎய்தியது விலக்கலும் பிறவரினியல்புமாகும் வேற்றுமைக்கல் வழிக்கனைத்து மெய்வரினுமியல்பாகும் எனஎய்தியதிகந்து படாமற்காத்தலும் இச்சூத்திரத்தில் இயல்பும் எனஎய்தியதன்மேற் சிறப்புவிதியும்வருகிற வல்லினத்திற்கு இயல்பினுமென்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.(இ-ள்) தேன்மொழி-தேனென்னுஞ்சொல்—மெய்வரின்-மூவினமெய்களுட்வரின்—இயல்பும்- இறுதினகரமெய்யியல்பாதலும்—மென்மைமேவின் - மெல்லினம்வரின்—இறுதி- அம்மெய்—அழிவும்- இயல்பாதலேயன்றிக்கெடுதலும்—வலிவரின்-வல்லினம்வரின்—ஈறு- அம்மெய்—போய்- இயல்பாதலேயன்றிக்கெட— வலிமெலிமிகலும்- வந்தவல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும்—ஆம்-ஆகும்—இருவழி- இருவழிக்கண்ணும். எ-று. (உ-ம்) தேன்கடிது-தேன்ஞான்றது-தேன்யாது-எ-ம். தேன்மொழி-தேமொழி எ-ம் தேன்குழம்பு தேக்குழம்பு-தேங்குழம்பு-எ-ம். அல்வழியில்வந்தன-தேன்கடுமை-தேன்மலிவு-தேன்யாப்பு-எ-ம். தேன்மலர்-தேமலர்-எ-ம் தேன்குடம்-தேக்குடம்-தேங்குடம்-எ-ம். வேற்றுமையில்வந்தன-மற்றவைகளுமிப்படியே. (௰௧)

**௨௱௰௫. மரமெல்லெகின்மொழி யியல்புமகர, மருவவலிமெலி மிகலுமாகும் ... ... ... ... ... ... ... ... ... ***

இது. எகினென்னுஞ்சொல்லுக்கு வேற்றுமைக்கண்ணன வல்லினம் வரட்டறவும் எனஎய்தியது விலக்கலும் அகரமருவவென்றதனால் அச்சூத்திரத்தால் இருவழிக்கண்ணும் எய்தியது விலக்கிப்பிறிது விதிவகுத்தலும் வருகிறவல்லினத்திற்கு இயல்பினு மென்பதனால் ப

ய்தியதன்மேற் சிறப்புவிதியும்-உணர்த்துகின்றது (இ-ள்) மரமல்-மரமல்லாத — எகின்மொழி - அன்னத்தையுணர்த்து மெகினென்னுஞ்சொல்—இயல்பும்-வேற்றுமையிலும் வல்லினம்வர இறுதியல்பாதலும்—அகரமருவ-இருவழியிலும் அகரச்சாரியைபொருந்த—வலிமெலிமிகலும்- வல்லெழுத்தாவது அதற்குஇனமாவது மிகுதலும்— ஆகும்-ஆகும் எ-று உ-ம்) எகின்கால்-சிறைதலைபுறம்-எனவேற்றுமையிலுமியல்பாயிற்று எகினப்புள்-எகினம்புள்-எ-ம். எகினக்கால்- எகினங்கால்-எ-ம்.இருவழியிலும் அகரம்வர வலிமெலிமிகுந்தன. [அகரம்வருதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங்கொள்க எகினமாட்சி - எகினவாழ்க்கை - எகினவழகு - எனவரும். மற்றவைகளுமிப்படியே.] (௰௨)

**௨௱௰௬. குயினூன்வேற்றுமைக் கண்ணுமியல்பே ... ***

இது. குயின் ஊன் என்னுஞ்சொற்களுக்கு னவ்வல்லினம்வரட்டறவும் எனஎய்தியது விலக்குகின்றது. (இ-ள்) குயின் குயிலென்னும்பெயரும்—ஊன்- ஊனென்னும்பெயரும்—வேற்றுமைக்கணணும்-வேற்றுமையினிடத்தும்—இயல்பு- இயல்பாகும். எ-று. (உ-ம்.) குயின்கடுமை ஊன்கடுமை- சிறுமை- தீமை- பெருமை- எனவரும். [குயின்மேகம்.] (௰௩)

**௨௱௰௭. மின்பின்பன்கன் றொழிற்பெயரனைய, கன்னவ்வேற்றமென்மையோடுறழும் ... ... ... ***

இது. மின் பின் பன் கன் என்கிற நான்குசொற்களுக்கும் னவ்வல்லினம் வரட்டறவுமென்பதால் எய்தியது விலக்கிப்புதிதுவிதிவகுத்தலும் அகரச்சாரியை முன்வருகிற வல்லினத்திற்கு இடல்பினு மென்பதனல் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது (இ-ள் மின் பின் பன் கன்-மின்முதலிய நான்குசொற்களும் —தொழிற்பெயரனைய- தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்களிவரின் உகரச்சாரியை பொருந்தும்—கன் - இவற்றுட்கன்னென்னுஞ்சொல் —அவ்வேற்று- அகரச்சாரியையும்பெற்று—மென்மையோடுறழும் வருகிறவல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப்பெறும் எ-று, (உ-ம்) மின்னுக்கடிது-பின்னுக்கடிது- பன்னுக்கடிது- கன்னுக்கடிது-நன்று-வலிது எ-ம். கடுமை- நன்மை- வன்மை- எ-ம், கன்னதகட்டு-கன்னந்தட்டு- எ-ம். கன்னத்தூக்கு- கன்னந்தூக்கு- எ-ம் அவ்வழிவேற்றுமைகளில் முறையேவந்தன மற்றவைகளுமிப்படியே [கன்-சிறுதராசுத்தட்டு.] (௰௪)

**௨௱௰௮. தன்னென்னென்பவற் றீற்றனவ்வன்மையோ, டுறழு நின்னீறியல்பாமுறவே ... ... ... ... ... ... ... ***

இது, தன் என் என்கிற விகாரமொழிகளுக்கு னவ்வல்லினம் வரவுறழவும் என எய்தியதொருவாற்றால் விலக்கலும் நின் என்பதற்கு எய்தியதுவிலக்கலுஞ் சொல்லுகின்றது (இ-ள்.) தன்னென்னென்பவற்று- தன் என் என்பவைகளினுடைய—ஈற்று - இறுதியிலுள்ள—ன- னகரமெய்யானது—வன்மையோடுறழும்-வல்லினம்வரிற் பொதுவிதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதியேலா தியல்பாதலுமாம்—நின்- நின்னென்பதனது — ஈறு- இறுதியிலுள்ளனகரமெய்யானது — இயல்பாம்-வல்லினம்வரிற்றிரியாதியல்பேயாகும் எ-று (உ-ம்.) தன்பகை-தற்பகை-என்பகை-எற்பகை-எ-ம்.நின்பகை. எ-ம். வரும் [உறழ்வேயென்றமையால் மின்பின் முதலியவை மின்கடிது- மின்கடுமை- எனவிருவழியுஞ் சாரியைபெறுதலுந் திரிதலுமில்லாமல் வருதலும். மான்குளம்பு-அழன்கை- யென வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லாதவைகள் இயல்பாதலும். வரிற்கொள்ளும் எனச்செயினென்னும் வாய்பாட்டுவினையெச்சம் பொதுச்சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும். இன்னும் னகரமெய்யீற்றுள் அடங்காதவையிருந்தால் அவையுங் கொள்க] (௰௫)

**௨௱௰௯. மவ்வீறொற்றழிந்துயிரீறொப்பவும், வன்மைக்கினமாத் திரிபவுமாகும் ... ... ... ... ... ... ... ... ...***

இது மகரமெய்யீறுபுணருமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) மவ்வீறு மகரவீற்றுச்சொற்கள்—ஒற்று - இறுதியிலுள்ளமகரமெய் — அழிந்து-கெட—உயிரீறொப்பவும்-விதியுயிரீறாய்நின்று இயல்புயிரீறு போலப் புணர்வனவும்—வன்மைக்கினமாத்திரிபவும்-வல்லினம்வரிற் கெடாது அவற்றிற்கு இனமாகத்திரிவனவும்—ஆகும்- ஆகும். எ-று. [உயிரீறொத்தல் உயிர்வரின் உடம்படுமெய்பெறவும் வல்லினம்வரின் மிகவும்மெல்லினமும் இடையினமும் வரினியல்பாகவும் புணர்தல்] (உ-ம்) வட்டம்-ஆழி வட்டவாழி-வட்டக்கடல் வட்டநேமி- வட்டவாரி- எ-ம் மரம்-அடி-மரவடி-மரக்கால்-மரநார்-மரவேர்-எ-ம் நாம்-கடியம்- நாங்கடியம்-தம்-கை-தங்கை-எ-ம் வரும். மற்றவைகளுமிப்படியே. [இனமாத்திரியு மென்றமையின் அருத்தாபத்தியால்- நாம்பெரியம் எனப்பகரம் வருவழித்திரியாதெனக் கொள்க] (௰௬)

**௨௱௨௰. வேற்றுமைமப்போய் வலிமெலியுறழ்வு, மல்வழியுயிரிடைவரினியல்பும்முள ... ... ... ... ... ... ... ... ***

இது. சிலமகர வீற்றிற்கு மேலைச்சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமற்காத்தலும் விலக்கலும் வருகிற வல்லினத்திற்கு இயல்பினுமென்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

(இ-ள்) வேற்றுமை-வேற்றுமைக்கண்—ம-மகரவிறுதி—போய்-கெட—வலிமெலிவுறழ்வும்-வல்லினமாவது அவற்றிற்கு இனமாவதுமிகுதலும்—அல்வழி-அல்வழிக்கண்—உயிர்-உயிரும்—இடை-இடையினமும்—வரின்-வந்தால்—இயல்பும்-கெடாதியல்பாதலும்—உள-உளவாம்-எ-று. உ-ம்) குளம்-கரை-குளக்கரை-குளங்கரை-எ-ம். குளம்-அழகிது-குளமழகிது-குளம்-யாது-குளம்யாது-எ-ம். வரும்-மற்றவைகளுமிப்படியே. (௰௭)

௨௨௧. நுந்தம்,எம்நம்மீறுமவ்வருஞநவே ... ... ... *

இது சிலபொதுப்பெயர்களுக்கு மவ்வீறொற்றழிந்தென எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுக்கின்றது.(இ-ள்) நுந்தம்எம்நம்-நும்முதலியநான்குவிகாரமொழிகளுக்கும்—ஈறும்-இறுதியாகிய—ம-மகரமெய்யானது—வருஞந-வருகிற ஞகர நகரங்களாகத் திரியும். எ-று (உ-ம்) நும்-ஞாண்-நுஞ்ஞாண்-நும்-நூல்-நுந்நூல்-எனவரும் தம்முதலியவற்றிற்கும் இப்படியேகூட்டுக. [ஞநவரின் அவையாகத் திரியுமெனவே ஒழிந்தமகரம்வரின்-நும்மணி-எனவியல்பாமென்பதுபெற்றாம்.] (௰௮)

௨௨௨. அகமுனர்ச்செவிகைவரினிடையனகெடும் ... ... *

இது. அகமென்னுஞ்சொல்லுக்கு வன்மைக்கினமாத்திரியுமென எய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துகின்றது. (இ-ள்.) அகமுனர். அகமென்னுமிடப்பெயர்முன்—செவிகை-செவிகை என்கிறசினைப்பெயர்கள்—வரின்-வந்தால்—இடையன-நிலைமொழிநடுநின்ற ககரமெய்யும்அதன்மேலேறிய அகரவுயிரும்—கெடும்-அழியும்எ-று.(உ-ம்) அகம்-செவி-அஞ்செவி-அகம்-கை-அங்கை-எனவரும்.[கெட்டேவருமென்றமையால்-அகஞ்செவி-அகங்கை-எனவருவனவுங்கொள்க.] (௰௯)

௨௨௩. ஈமுங்,கம்முமுருமுந்தொழிற்பெயர்மானு, முதலனவேற்றுமைக்கவ்வும்பெறுமே ... ... ... ... ... ... ... *

இது. ஈம் என்பதுமுதலிய மூன்று சொற்களுக்கும் மவ்வீறொற்றழிந்தென்பதனால் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது. (இ-ள்.) ஈமுங்கம்முமுருமும்-ஈம் கம் உரும் என்கின்றமூன்றும்—தொழிற்பெயர்மானும்-இருவழியிலுந் தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள்வந்தால் உகரச்சாரியை பெற்றுமுடியும் — முதலன-இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமுங்கம்மும்—வேற்றுமைக்கு-வேற்றுமைக்கண் — அவ்வும்பெறும் - உகரச்சாரியையல்லாமலும் அகரச்சாரியையும் பெறும்.எ-று. (உ-ம்) ஈமுக்கடிது - கம்முக்கடிது

உருமுக்கடிது-நீண்டது-வலிது.எ-ம்.கடுமை-நீட்சி-வலிமை-எ-ம். நமக்குடம்-கம்மக்குடம்-எ-ம். வரும் மற்றவைகளுமிப்படியே. [நம்-சுடுகாடு-கம்-கம்மியராதுதொழில்-உரும்-இடி] (உ௰)

**உஉச** யாழமுன்னர்க்கசதபவல்வழி, யியல்புமிகலு மாகும்வேற்றுமை,மிகலுமினத்தோடுறழ்தலும்விதிமேல் ... ... ... ✻

இது.யாழமெய்பீற்றுமுன் கசதபக்கள் புணருமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) யாழமுன்னர்-யகர ரகர ழகர மெய்களின்முன்—கசதப-ககர சகர தகர பகரங்கள்வரின்—அல்வழி-அல்வழியில்—இயல்பும்-இயல்பாதலும்—மிகலும்-மிகுதலும்—வேற்றுமை-வேற்றுமையில்—மிகலும்-மிகுதலும்—இனத்தோடுறழ்தலும்-வல்லினமாவது-மெல்லினமாவதுமிகுதலும்—விதியாகும்-விதியாகும்-எ-று. (உ-ம்) வேய்கடிது-வேர்கடிது-வீழ்கடிது-எ-ம்.மெய்க்கீர்த்தி-சார்ப்புருவம்-புழ்ப்பறவை-எ-ம் அல்வழியில் இயல்புமிகலுமாயின— நாய்க்கால்-தேர்க்கால்-புழ்க்கால்-எ-ம் வேய்ச்குழல்- வேய்ங்குழல்- ஆர்க்கோடு-ஆர்ங்கோடு-எ-ம் வேற்றுமையின்மிகுந்தும் உறழ்ந்தும் வந்தன. மற்றவைகளுமிப்படியே. [மேலென்றமிகையால்- வாய்புகுவதனினும் என வேற்றுமையி லியல்பாதலும்.பாழ்க்கிணறு-பாழ்ங்கிணறு-எனப்பண்புத்தொகையி லுறழ்தலும் இன்னும்அடங்காதவைகளிருந்தால் அவைகளுங்கொள்க,] (உக)

**உஉரு.** தமிழவவுறவும் பெறும்வேற்றுமைக்கே, தாழுங்கோல் வந்துறுமேலற்றே ... ... ... ... ... ... ... ... ✻

இது· தமிழ் தாழ் என்கிற இருசொற்களுக்கும் எய்தாதனவெய்துவிக்கின்றது (இ-ள்) தமிழ்-தமிழென்கிற சொல்—வேற்றுமைக்கு—வேற்றுமைக்கண்ணே நாற்கணமும்வந்தால்—அவ்வுறவும்-அகரச்சாரியைபொருந்தவும்—பெறும்-பெறும்—தாழும்-தாழென்றுஞ்சொல்லும்—கோல்-கோலென்னுஞ்சொல்லானது—வந்து-வந்து—உறுமேல்-பொருந்துமாயின்—அற்று-அவ்வகரச்சாரியைபெறும்· எ-று. (உ-ம்) தமிழப்பல்லவதரையர்-தமிழநாகன்-தமிழவளவன்-தமிழவரையன்-எ-ம்.தாழக்கோல்-எ-ம். வரும். [அவ்வுறவுமென்பதிற் கூறியவும்மையெச்சவும்மையால் - தமிழின்சுவையென இன்சாரியை பெறுதலுங்கொள்க.] (உஉ)

**உஉசா.** ஏழின்முன்வன்மை விகற்பமுமாகும... ... ...

இது. ஏழென்பதன்முன் வருகிற வல்லினத்திற்கு யாழமுன்னென்பதனால் எய்தியது பெரும்பாலும் விலக்குகின்றது.— (இ-ள்)

[மக]

கீழின்முன்-கீழென்கிற சொல்லின்முன்வருகிற—வன்மை-வல்லினம் —விகற்பமுமாகும்-ஒருகாலியல்பாகியும் ஒருகால்மிக்கும் வருகிற விகற்பத்தையும் பொருந்தும்.எ-று.(உ-ம்) கீழ்குலம்-கீழ்க்குலம்-கீழ்சாதி-கீழ்ச்சாதி எனவரும். மற்றவைகளுமிப்படியே [விகற்பமுமென்னுமிழிவுசிறப்பும்மையால்- இவற்றினியல்பேசிறப்புடைத்தென்றறிக.

[illegible]

௨௨௭. ளவேற்றுமையிற் றடவுமல்வழி,யவற்றோடுறழ்வும்வலிவரினுமெலி,மேவினணவுமிடைவரினியல்பு,மாகுமிருவழியானுமென்ப

இது லளமெய்யீறுகள் புணருமாறு உணர்த்துகின்றது. இ-ள்) லள-லகார ளகாரமாகிய விரண்டுமெய்யீறுகளும்—வலிவரின்-வல்லினம் வந்தால்—வேற்றுமையில்-வேற்றுமைக்கண்—றடவும்- முறையே றகாரடகாரமெய்களும்—அல்வழி- அல்வழிக்கண்—அவற்றோடுறழ்வும் றகாரடகாரங்களுடனே யுறழ்வனவும்—ஆம் - ஆகும்—இருவழியானும்-இருவழிக்கண்ணும்— மெலிமேவின்- மெல்லினம்வந்தால்—னணவும்-முறையே னகாரணகாரமெய்களும்—இடைவரின்-இடையினம்வந்தால்—இயல்பும்-இயல்பும்—ஆகும்-ஆகும்—என்ப- என்றுசொல்லுவர் புலவர்.எ-று (உ-ம்) கற்குறை-முட்குறை-எ-ம். கல்குறிது-கற்குறிது-முள்குறிது-முட்குறிது எ-ம் கன்ஞெரிந்தது-முண்ஞெரிந்தது-கன்ஞெரி-முண்ஞெரி-எ-ம். கல்யாது-முள்யாது- கல்யாப்பு-முள்யாப்பு-எ-ம்.முறையேவந்தன. மற்றவைகளும். இப்படியே [அல்வழியவற்றோடுறழ்வு மென்றதும் இவற்றோடுமயங்காத தகரம்வரின் வருபுழிக்கோடலால் கற்றீது-முட்டீது- எனத்திரிபொன்றமேகொள்க.]()

௨௨௮. குறில்வழிலளத்தவ்வணையினாய்த, மாகவும்பெறூஉமல்வழியானே ... ... ... ... ... ... ... ... ... ... *

இது. இவ்விரண்டீற்றிற்கும் மேலேச்சூத்திரத்தா லெய்தியதன் மேற் சிறப்புவிதியுணர்த்துகின்றது. இ-ள் குறில்வழி-தனிக்குறிலின் பின்னின்ற —லள-லகாரளகாரமெய்களானவை— அல்வழியான்- அல்வழிக்கண்—த-தகரமானது—அணையின்- வருமாயின்—ஆய்தமாகவும்- றகரடகரங்களாகத்திரிதலல்லாமலும் ஆய்தமாகத்திரிதலையும்— பெறூஉம்-பொருந்தும் எ-று. (உ-ம்) கல்-தீது-கஃறீது-முள்-தீது-முஃடீது- எனவரும்.

[illegible]

௨௨௯. குறில்செறியாலளவல்வழிவந்த, தகரந்திரிந்தபிற்கேடுமீரிடத்தும், வருநத்திரிந்தபின்மாய்வும்வலிவரி, னியல்புந்திரிபு மாவனவுளபிற ... ... ... ... ... ... ... ... ... ... ... *

இது லளவேற்றுமையிற்றடவுமென்பதனால் எய்தியது விலக்கிப் பிறிது விதிக்கின்றது இ-ள் குறில்செறியா-தனிக்குறிலொன்றனை யுஞ்சாராத—லள-லகாரளகார மெய்களானவை——அல்வழி-அல்வழிக்கண்—வந்த-வருமொழிக்குமுதலாய்வந்த—தகரம்-'தகரமானது—திரிந்தபின்-திரியுமிடத்து—கேடும்-கெடுதலும்—ஈரிடத்தும்- இருவழிக்கண்ணும்—வரு- வருமொழிக்குமுதலாய்வந்த—ந- நகரமானது—திரிந்தபின்-திரியுமிடத்து—மாய்வும்-கெடுதலும்—வலி- வல்லெழுத்துமுதன்மொழி—வரின்- வந்தால்—இயல்புந்திரிபும் - அல்வழிக்கண்ணுறழாதியல்பாதலுந்திரிதலும்வேற்றுமைக்கண்ணேதிரியாதியல்பாதலும்—ஆவனவுள-பொருந்துவனவுள, எ-று. *

(உ-ம்) தோன்றல் தீயன்-தோன்றறீயன் வேள்- தீயன்-வேடீயன்-அல்வழியிலேதகரந்திரியுமிடத்துக்கெட்டன.—தோன்றல்-நல்லன் தோன்றநல்லன்-வேள்-நல்லன்-வேணல்லன்-எ-ம். தோன்றல்-நன்மை-தோன்றனன்மை-வேள்- நன்மை- வேணன்மை எ-ம் இருவழியிலும் நகரந்திரியுமிடத்துக்கெட்டன—கால்கடிது-மரங்கள்கடிய-எ-ம். வேற்படைக்குமரன்-வாட்படைக்கையன்-எ-ம். அல்வழியில் வல்லினம்வாவுறழாதியல்புந்திரிபுமாயின—கால்குதித்தோடிக்கடல்புகமண்டி- வாள் போழ்ந்தட்டதீள்கழன்மறவர் - எ-ம் வேற்றுமையிலே வலிவரத்திரியா தியல்பாயின. [பிறவென்றமிகையால்- தோன்றறீமை-வேடீமை என வேற்றுமையிலுந் தகரந்திரியுமிடத்துக்கெடுதலும் காற்றீனை-தாட்டீனை-எனக்கெடாமையும், விற்படை எனஉறழாது திரிதலும்- கொட்டனீறு-கொள்பொருள்-எனவினைத்தொகையியல்பாதலும். இன்னுமிவ்விரண்டற்றுள் அமையாதன பிறவுங்கொள்க உயர்திணையிற்காட்டிய உதாரணங்கள்-மயக்கவிதியில்லாவிடத்துவருதலால் சிலவிகாரமாமுயர்திணை யென்றதற்றுளடங்காவாம் ] (௨௯)

௨௯௰. லளவிறுதொழிற்பெயரீரிடத்துமுவ்வுறு, வலிவரினல்வழி யியல்புமாவனவுள ... ... ... ... ... ... .. *

இது. லகர ளகர மெய்யீற்றுத் தொழிற்பெயர்களுக்கு வருவதோராயமறுத்தலும் ஒருவாறு அல்வழி யவற்றோடுறழ்வுமெனவெய்தியது விலக்கலும் உணர்த்துகின்றது.(இ-ள்) லளவிறுதொழிற்பெயர் - லகாரத்தையிறுதியாகவுடைய, விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகாரத்தையிறுதியாகவுடைய முதனிலைதிரிந்த தொழிற்பெயரும்—ஈரிடத்தும்- இருவழியிலும்—உவ்வுறு-யகரமல்லாதமெய்கள்வந்தாலுகரம்பெறுவாம்—வலி வல்லினம்—வரின்- வந்தால்—அல்வழி- அல்வழிக்கண்—இயல்புமாவன உறழாதியல்பாவனவும் - உள சில-எ-று.

(உ-ம்) ஆடல்சிறந்தது-ஆடற்சிறந்தது- ஆடனன்று- ஆடல்வலிது-எ-ம் ஆடற்சிறப்பு-ஆடனன்மை-ஆடல்வன்மை-எ-ம். கோள்கடிது கோட்கடிது-கோணன்று-கோள்வலிது-எ-ம் கோட்கடுமை-கோணன்மை-கோள்வன்மை-எ-ம். இருவழியும் உகரம்பெறாது பொதுவிதியான் முடிந்தன—நடக்கல்கடிது- நடப்பித்தல்கடிது- எனச்சிலவுறழாது அல்வழியிலியல்பாயின. [இயல்புமென்றவும்மையால்- பின்னல்கடிது- பின்னற்கடிது-உன்னல்கடிது-உன்னற்கடிது- எனப்பொதுவிதியானுறழ்தலே பெரும்பான்மையென்க.] (உஎ)

உகக. வல்லேதொழிற்பெயரற்றிருவழியும், பலகைநாய்வரினும் வேற்றுமைக்கவ்வுமாம் ... ... ... ... ... ... ... *

இது. லளவேற்றுமையிற் றடவுமென்பதனால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுக்கின்றது. (இ-ள்) வல்-வல்லென்கிற சூதாடுகருவிப் பெயர—இருவழியும்-இருவழிக்கண்ணும்—தொழிற்பெயர்ற்று யகரமல்லாத மெய்கள்வந்தால் தொழிற்பெயர்போல உகரச்சாரியைபெறும்—பலகைநாய்வரினும்-பலகைநாயென்கிற விருபெயர்வரினும் பிறபெயர்கள்வரினும்—வேற்றுமைக்கு- வேற்றுமைக்கண—அவ்வுமாம்-உகரச்சாரியையல்லாமலும் அகரச்சாரியையும்பெறும் எ-று. உ-ம்) வல்லுககடிது-நன்று-வலிது-எ-ம். வல்லுக்கடுமை- நன்மை- வன்மை- எ-ம் வல்பலகை- நாய்- புலி- குதிரை- எ-ம். வல்லுபலகை நாய்-புலி- குதிரை- எ-ம். வரும். [வல்லினத்தைவந்த பலகை-வல்லினுறுப்பு-மெனவிரிப்பும்.] (உஅ)

உகஉ. நெல்லுஞ்செல்லுங் கொல்லுஞ்சொல்லும், அல்வழியானும் றகரமாகும் ... ... ... ... ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) நெல்லுஞ்செல்லுங் கொல்லுஞ்சொல்லும்-நெல்முதலிய நான்குசொற்களினீற்றுலகரமெய்யானது— அல்வழியானும்-அல்வழிக்கண்ணும்— றகரமாகும்- பொதுவிதியானுறழாது வேற்றுமைபோல றகரமெய்யாகத்திரியும் எ-று. (உ-ம்.) நெற்கடிது- செற்கடிது சொற்கடிது-கொற்கடிது-சிறிது-தீது-பெரிது-எனவரும். [செல்-மேகம்-கொல்-கொல்லன்.] (உகூ)

உகங. இலவெனின்மைச் சொற்கையடைய, வன்மைவிகற்பமுமாகாரத்தொடு, வன்மையாகலுமியல்புமாகும் ... ... ... *

இது. இல்லென்னும் பண்புச்சொற்கு வேற்றுமையிற் றடவுமல்வழியவுறழ்ந்தமும் மெய்தியது விலக்கிப்பிறிதுவிதி வகுத்தலும் அவற்றின்முன் வருகிறவல்லினத்திற்கு அவ்வழி இஐயவ்வடைவும் இவ்விறுமென்பதனுலும் எய்தியதுசந்து படாமற் காத்தலுங் [illegible] (இ-ள்) இன்மை இல்லைப்பண்மையுள

ர்த்துகின்ற—இல்லென்சொற்கு - இல்லென்கிறசொல்லுக்கு—ஐ - ஐ காரச்சாரியையானது—அடைய - பொருந்த—வன்மை - அவ்விடத் துவருகிறவல்லினம் — விகற்பமும் - விகற்பித்தலும் — ஆகாரத்தொ டு - ஆகாரச்சாரியை பொருந்த வன்மையாகலும் அவ்விடத்து வரு கிறவல்லின மிகுதலும் — இயல்பும்-இவ்விருவிதியும் பெறாதியல்பா தலும் — ஆகும்-பொருந்தும்.எ-று. [சாரியைபெறுதற்கு வருமெ ழுத்தைச்சொல்லாமையால் - நாற் கணமுங்கொள்க.] (உ-ம்) இல்லைப் பொருள் இல்லைபொருள் இல்லாப்பொருள் இல்பொருள் ஞானம்-வ ன்மை அணிஎனவரும். (கூ0)

**உகூச.** புள்ளும்வள்ளுந்தொழிற்பெயருமானும் ... ... *

இது. ளவேற்றுமை யிற்றடவு மென்பதனால் எய்தியதன்மே ற்சிறப்புவிதியுணர்த்துகின்றது. (இ-ள்) புள்ளும் வள்ளும் - இவ்விரு சொற்களும்—தொழிற்பெயருமானும் - யகரமல்லாத மெய்கள் வந் தாற்பொதுவிதியான்முடிதலல்லாமலுந் தொழிற்பெயர்போல உகா சசாரியையும்பெற்றுப்புணரும் எ-று. (உ-ம்.) புள்ளுக்கடிது - வள்ளு க்கடிது நன்று வலிது-எ-ம். புள்ளுக்கடுமை-வள்ளுக்கடுமை - நன்மை வன்மை-எ-ம்.வரும். (கூக)

**உகூரு** சுட்டுவகாரமூவினமுறமுறையே யாய்தமுமென்மையுமி யல்புமாகும்... ... ... ... ... ... ... ... ... ... *

இது. வகரவீற்றுச்சுட்டுப்பெயர்கள் மூவினத்தோடும் புணரு மாறு உணர்த்துகின்றது. (இ-ள்) சுட்டுவகரம் - அவ் இவ் உவ் என் கிற அஃறிணைப்பன்மைச் சுட்டுப்பெயர்களீற்று வகரமெய் — மூவி னம் - வல்லினமும் மெல்லினமும் இடையினமும் — உற - வர — முறை - முறையாக — ஆய்தமும்-தனிநிலையும் — மென்மையும்-மெ ல்லினமும் — இயல்பும் - இயல்பும்—ஆகும் ஆகும்-எ-று (உ-ம்) அ ஃ-கடிய-அஃகடிய-அவ் ஞானம் - அஞ்ஞானம் அவ்-யானை - அவ்யா னை. எனவரும் இவ உவ் என்பவைகளுடனேயும் இப்படியேகூட்டுக

**உகூசா.** தெவ்வென்மொழியே தொழிற்பெயரற்றே மவ்வரின் வஃகான்மவ்வுமாகும் ... ... ... ... ... ... ... ... *

இது. தெவ்வென்கிறசொல் யகரமல்லாத மெய்களோடு புண ருமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) தெவ்வென்மொழி - தெவ்என்கி றபகைகையையுணர்த்தும்பெயரானது—தொழிற்பெயரற்று - யகரமல் லாத மெய்களோடு புணருமிடத்துத் தொழிற் பெயர்போல. வகரக்

சாரியை பெற்றுமுடியும் — ம-மகரமெய்யானது — வரின்-வந்தால் —வ்வ்கான் வகரமெய்யானது—மவ்வுமாகும் - உகரச்சாரியை பெறு தலல்லாமலும் ஒரோவிடத்துமகரமெய்யாகவுந்திரியும். எ-று (உ-ம்.) தெவ்வுக்கடிது - தெவ்வுமாண்டது - வெவ்வுவலிது.எ-ம் தெவ்வுக்கடுமை-தெவ்வுமாட்சி - கெவ்வுவலிமை எ-ம் தெவ்வுமன்னர் - தெம்மன்னர் - -எ-ம். தெவ்வுமுனை-தெம்முனை-எ ம் வரும். (௯௯)

ன and ல after [illegible], [illegible], [illegible] and [illegible] changed into [illegible], [illegible], [illegible] respectively

௨௯௭. னலமுன் றனவும் ணளமுன் டணவு, மாகுந்தநக்க ளாயுங் காலே ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

இது· முன்னேபுணர்த்தியவரு மொழிகளுக்கு முதலாகிய மெய்களுக்குள்ளே திரிதற்பாலனவிவையென விதந்து உணர்த்துகின்றது. (இ-ள்) னலமுன்-னகரலகரமெய்களின்முன்—(த)-வருகிறதகரம் —ற (வ்வும்) றகரமும் — ந)-வருகிறநகரம்— ன (வ்வும்) - னகரமும் —ணளமுன் - ணகரளகரமெய்களின்முன் — த - வருகிறதகரம் —ட (வ்வும்)-டகரமும்—ந-வருகிறநகரம்—ணவ்வும்- ணகரமும் — ஆகும்-ஆகும்—ஆயுங்கால்-ஆராயுமிடத்து-எ-று.

(உதாரணம்)

| | | |
|---|---|---|
| பொன்-தீது-பொன்றீது | பொன்-நன்மை - பொற்னன்மை | உதாரணம். |
| கல்——-தீது - கற்றீது | கல்—— நன்று - கன்னன்று | |
| மண்——-தீது - மண்டீது | மண்——நன்று - மண்ணன்று | |
| முள்——-தீது - முட்டீது. | முள்—நன்று - முண்ணன்று. | |

[ஆயுங்காலென்றதனால் மடக்கவிதி யில்லாமையால் இப்படிப்புணருமுதலீ ரிரண்டனுள் ஒன்றாவது இரண்டுமாவது விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமென்பதும் மயக்கவிதி யுள்ளனவற்றிற்கு வருகிறவிகாரம் அல்வழி வேற்றுமைப் பொருளேறுக்கத்தால் வருமென்பதும்பெற்றாம்.] (௯௪)

௨௯௮. உருபின்முடிபவை யொக்குமப்பொருளினும்

இது· உயிரீற்றுப்புணரியற் கண்ணும் இவ்வியற்கண்ணும்முடிந்தவேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கு எய்திய தன்மேற் சிறப்புவிதியுணர்த்துகின்றது. (இ-ள்.) உருபின்முடிபவை - மேலுருபுபுணர்ச்சிக்கண் முடியுமுடிபுகள்—அப்பொருளினும்- அப்பொருட் புணர்ச்சிக்கண்ணும்—ஒக்கும்-ஒத்துமுடியும் எ-று. (உ-ம்) எல்லாவற்றதும் எல்லாவற்றுக்கோடும். என அஃறிணைக்கண் அற்றும் உருபின்மேல் உம்மும்பெற்றாற்போலப்பொருட் புணர்ச்சிக்கும் பெற்றன எல்லா நமதும், எல்லா நங்கையும் எனஉயர் திணைக்கண் நம்மும் உருபின்மே

ல் உம்மும் பெற்றாற்போலப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் பெற்றன. எல்லார்தமதும். எல்லாரீதங்கையும், எல்லீர்நுமதும், எல்லீர்நுங்கையும், தனது-தன்கை, தமது - தங்கை, நமது-நங்கை, எனது- என்கை, எமது-எங்கை-நினது-நின்கை - நுமது -நுங்கை-என வுருபுபுணர்ச்சிபோற் பொருட்புணர்ச்சியு முடிந்தவாறு காண்க. மற்றவைகளுமிப்படியே (௧௫)

௨௧௬. இடையுரிவடசொலினியம்பியகொளாதவும், போலியுமரூஉம் பொருந்திய வாற்றிற், கியையப்புணர்த்தல் யாவர்க்குநெறியே

இது இப்புணரியல்களுக்காவதோர் புறனடை யுணர்த்து கின்றது. (இ-ள்.) இடை (ச்சொலின்) - இடைச்சொற் களுள்ளும் — உரி (ச்சொலின்) - உரிச்சொற்களுள்ளும்—வடசொலின்-வடசொற்களுள்ளும்— இயம்பிய-உயிரீறு மொற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்சொல்லிய புணர்ச்சியி லக்கணங்களுள் — கொளாதவும்-பொருந்தாதுவேறுபட்டுவருவனவும்—போலியும்-இலக்கணப்போலிமொழிகளும்—மரூஉம் - மரூஉ மொழிகளும்—பொருந்திய-இருவகைவழக்கினு நடக்கின்ற —ஆற்றிற்கு - முறைமைக்கு—இயைய பொருந்துமாறு — புணர்த்தல்-புணர்க்கை—யாவர்க்கும்-அறிவுடையோரெல்லார்க்கும்—நெறி-முறை .எ-று. (உ-ம். ஆன்கன்றுவண்டின்கால்-எனவேற்றுமைப் புணர்ச்சிக்கட்சாரியை யிடைச்சொற்கள் திரியாதியல்பாயின மழகளிறு-தடந்தோள்- என அகரவீற்று உரிச்சொற்களின்முன் வல்லெழுத்து மிகாதியல் பாகியும் மெல்லெழுத்து மிகுந்தும்வந்தன அளிகுலம் -தனதடம் - ஆதிபகவன்-எனநிலை மொழிவரு மொழியிரண்டும் வடமொழியாகி யகாலத்து உயிரீற்றின்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயின,

இன்னும் நிலைமொழிவருமொழிகளுள் வடநூலுட் புணர்க்கப்பட்டபடியே சிறுபான்மை தமிழில்வந்து வழங்குகின்ற - தீர்க்கசந்தி-குணசந்தி-விருத்திசந்தி-முதலாயினவுங்கொள்க, அவற்றுட் சிலவருமாறு, அஆக்களிலொன் றன்முன் அவ்விரண்டிலொன்று வந்தால் ஆவும்-இஈக்களி லொன்றன்முன் அவ்விரண்டிலொன்று வந்தால் ஈயும்-உஊக்களிலொன்றன்முன் அவ்விரண்டி லொன்றுவந்தால் ஊவும் முறையே அந்நிலைமொழியீறும் வருமொழி முதலுங் கெடத்தோன்றுதல் தீர்க்கசந்தியாம், (வரலாறு) பத-அம்புயம் - பதாம்புயம் பரம-ஆனந்தம்-பரமானந்தம்-கங்கா-அமிர்தம்-கங்காமிர்தம், சதா - ஆனந்தம். சதானந்தம் எ-ம். சசி-இந்திரம்-சசீந்திரம், கிரி-ஈசன் - கிரீசன், மகி-இந்திரன்-மகிந்திரன், மகி-ஈசன்-மகீசன், எ-ம், குரு-உதயம்

குரூதயம், தரு-ஊனம்-தரூனம், சுயம்பூ-உபதேசம் -சுயம்பூபதேசம், சுயம்பூ-ஊர்ச்சிதம் - சுயம்பூர்ச்சிதம்-எ - ம் -வரும், அ ஆக்களிலொன்றன்முன் இ ஈக்களிலொன்று வந்தால் ஏயும் - அவ்விரண்டிலொன்றன்முன் உ ஊக்களிலொன்றுவந்தால் ஓவும்-முறையே அந்நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெடத் தோன்றுதல் குணசந்தியாம், (வரலாறு, நர-இந்திரன்-நரேந்திரன், சுர- ஈசன் - சுரேசன் தரா-இந்திரன்-தரேந்திரன், உமா-ஈசன்-உமேசன். -எ-ம், பாத-உதகம்-பாதோதகம், ஞான-ஊர்ச்சிதன்-ஞானோர்ச்சிதன், தயா - உற்பத்தி-தயோற்பத்தி, தயா - ஊர்ச்சிதன் - தயோர்ச்சிதன், -எ-ம்.வரும், அ ஆக்களிலொன்றன்முன் எ ஐக்களிலொன்று வந்தால் ஐயும் - அவ்விரண்டிலொன்றன்முன் ஒ ஔக்களிலொன்று வந்தால் ஔவும் - முறையே அந்நிலைமொழியீறும்வரு மொழிமுதலுங் கெடத் தோன்றுதல் விருத்திசந்தியாம், (வரலாறு) சிவ-ஏகம்-சிவைகம், சிவ - ஐக்கியம்-சிவைக்கியம், தரா-ஏகவீரன் - தைகவீரன், மகா-ஐசுவரியம் - மைசுவரியம்-எ-ம், கோமள-ஓடதி-கோமளௌடதி, திவ்விய - ஔடதம் - திவ்வியௌடதம் - மகா ஓடதி - மகௌடதி - மகா - ஔடதம் - மகௌடதம்-எ-ம்.வரும், ஒருமொழியுள்ளே மொழிக்குமுன்னே நின்ற இ ஈ ஏக்கள் ஐயாகவும்-உ ஊ ஓக்கள் ஔவாகவும்-அகரம் ஆகாரமாகவும் ஏழாமுயிர் ஆர் ஆகவுந்திரிந்துவருதல் ஆதிவிருத்தி சந்தியாம், (வரலாறு,) சிவனைத்தொழு வோன்சைவன், வீரத்தின்றன்மை-வைரம்-கேவலத்தன்மை- கைவல்லியம்.எ-ம்.புத்தனைத் தொழுவோன் பௌத்தன்-சூரன்றன்மை-சௌரியம-கோசலன் - புத்திரி- கௌசலை எ-ம். தசரதன்புத்திரன்-தாசரதி-எ-ம் கிருத்திகையின்புத்திரன் - கார்த்திகேயன்-எ-ம்.வரும், மற்றவைகளுமிப்படியே வருதல்காண்க,

இல்-முன்-முன்றில்-பொது-இல்-பொதியில்-எனவருகிறஇலக்கணைப்போலிகளும்-அருமருந்தன்னபிள்ளை - அருமந்தபிள்ளை. குணக்குள்ளது-குணாது, தெற்குள்ளது- தெனாது, வடக்குள்ளது - வடாது சோழநாடு - சோணாடு-பாண்டியநாடு-பாண்டிநாடு, மலையமாநாடு - மலாடு, தஞ்சாவூர்-தஞ்சை, ஆற்றூர்-ஆறை, ஆதன்றந்தை - ஆந்தை, பூதன்றந்தை-பூந்தை-வடுகன்றந்தை - வடுகந்தை, எனவருகிற மரூஉமொழிகளும் - நிலைமொழிவருமொழிகளுள் ஏற்குஞ்செய்கை யறிந்துமுடித்துக்கொள்க மற்றவைகளும் இப்படியே. (௩௪)

மெய்யீற்றுப்புணரியல்முற்றும்.

# உருபுபுணரியல்.

௨௪௰ ஒருவனொருத்தி பலரொன்றுபலவென, வருபெயரைந்
தொடுபெயர்முதலிருநான்,குருபுமுறழ்தரநாற்பதாமுருபே ...

இது. வேற்றுமையுருபுகள் நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருமாறு இவ்விடலாற் சொல்லத் தொடங்கி அவ்வேற்றுமையுருபுகளும் சாருமிடவகையால் இத்தனையாமென்பது உணர்த்துகின்றது.। இ-ள் ஒருவன் ஒருவனும்—ஒருத்தி ஒருத்தியும்—பலர் பலரும்—ஒன்று-ஒன்றும்—பல-பலவும்—என என்றுசொல்லப்பட—வரு- வருகின்ற—பெயரைந்தொடு- ஐந்துபெயரோடும்—பெயர்முதல் எழுவாய்வேற்றுமையான பெயர்முதல் விளியீறாகநின்ற—இருநான்குருபும்-எட்டுருபுகளையும்—உறழ்தர - பெருக்க—உருபு - வேற்றுமையுருபுகளானவை—நாற்பதாம் நாற்பதாகும்-எ-று வரலாறு நம்பி சாத்தி மக்கள் மரம் மரங்கள்-என்கிற இவற்றுள்-நம்பி நம்பியை நம்பியால்- நம்பிக்கு-நம்பியின்-நம்பியது நம்பிகண்- நம்பீ- எனவொருவனென்னும் வாய்பாட்டுயர்திணையாண்பாற்பெயரோடு எட்டுருபுகளும்வந்தன-மற்றை நான்கு பெயர்களோடும் இப்படியே கூட்டுக. (௧)

௨௪௧. பெயர்வழித்தம்பொருடரவருமுருபே ... ...

இது வேற்றுமையுருபுகள் வருதற்குக்காரணமும் வருமிடமும் உணர்த்துகின்றது ( இ-ள். உருபு-வேற்றுமையுருபுகளானவை—தம் பொருள்-தம்பொருளை—தர-கொடுக்க—பெயர்வழி-பெயர்க்குப்பின்—வரும்-வரும்-எ-று உ-ம் நம்பிபெற்றான்-நம்பியைப்பெற்றான் எனவரும்.மற்றவைகளுமப்படியே. (௨)

௨௪௨. ஒற்றுயிர்முதலீற் றுருபுகட்புணர்ச்சியி,னொக்குமன்ன பெயர் வேற்றுமைப்புணர்ப்பே ... ... ... ... ...

இது. ஐம்முதலிய வாறுருபுகளும் நிலைமொழி வருமொழியோடு புணருமாறு உணர்த்துகின்றது. ( இ-ள் ஒற்றுயிர் முதலீற்று-நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருகிறமெய்யுயிர்களை முதலுமீறுமாகவுடைய—உருபுகள் - ஐம்முதலியவாறுருபுகளும் இடைச்சொல்லாயினும்—புணர்ச்சியின்- இயல்பொடுவிகாரத்தையும் புணர்ச்சிவகையால்—மன்- பெரும்பாலும்—ஒக்கும் - ஒக்கும்—வேற்றுமைப்புணர்ப்பு போனவிரண்டியலுள்ளும வேற்றுமைப்புணர்ச்சிக்கண்—அப்பெயர்-இயல்பொடுவிகாரத்தையுந்த |மெய்யுயிர்முதலீற்று

ப்பெயர்களை.—ஆர் பன்னென்றமையால் இருபாலுக்கும் ஒவ்வாவென்பதாம்.] உ-ம். நம்பியன்வாழ்வு இக்கேழ்வியாருள் கல்லைமாசாவென்றும்- னைகல்லினைக் கட்டரகம் பிறவினையிப்புடாகும் மேதற்றுமைக்கென்றும்- சொல்லிடப்படியே கல்லுருபின் முதலுடீறாம் இயல்பாயின.—உறிதகட்டயிர் இக்கே இடல்பிறும் விகயிறுநிற்கும்நின் முன் சதுப ரிதுமென்றும் னைவல்வினைவரட் டறயுமை க்ஷும் சொல்லிடப்படியே சன்றுருபின் முதலுடீறும் விகாரமாயின.—பழிக்கறிசி- இக்கே இடல்பிறு விகயிறுநிற்றயிமுன் பாடட்டுருமென்றும்- முற்றமற்றெரும் வழிமைடைம்- சொல்லிடப்படியே ருயவருபின் முதலு மீறும்விகாரமாயின—தப்பக்குட்பிள்ளோ ம்ப்ப ழ் விபாமுக கன்னமறிகாவென்ற விதடோதவைமற் றுக்குருபின் முவல்லவல்லொற்றுமிக்குமுற்றுலவுமப்படிமேவருதலைஅறாடி க்கக கூ.

சாரியை வந்தும், வாராமலும், வருகிறது

உசங. பதமுன் விகுதியும் பதமு முருபும், புணர்வழி யொன்றும்பலவுஞ் சாரியை, வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்... ..

இ-ள். உருபுபுணர்ச்சிக்கு எய்தியதன்மேற் சிறப்பு விதியாகச் சாரியைப்பல விதிக்கும்படியாகத் தொடக்கி அவைவருமாறு ணர்வுறுன அறிவிக்கு மிடத்துப்பின் முடித்தலால் விகுதிப்புணர்ச்சிக்கும் பதப்புணர்ச்சிக்கும் உடனுணர்த்துகின்றது. இ-ள். பதமுன் டைக்கன்முன்—விகுதியும்-இதுசொல்லாவது—பதமும்- பதமாவது—உருபும்-உருபாவது—புணர்வழி புணருமிடத்து—சாரியையொன்றுமே ஒருசாரியையாயினும்—சாரியைபலவும் பலசாரியையாயினும்—வருதலுமவருதலும—தவிர்தலும் வாராதொழிதலும்—விகற்பமும்-இவ்விரண்டுமாகிய விகற்பமும்—ஆகும் ஆகுமெ-று. உ-ம். நடந்தனன்- எ-ம். நடந்தான்-எ-ம். நடந்தனை நடந்தை-எ-ம் விகுதிப்புணர்ச்சிக்குச் சாரியைவேண்டியும் வேண்டாமலும் விகற்பித்தும்வந்தன—புளியங்காய்- எ-ம். புளிக்காய்-எ-ம். வெல்லிற்குப்பை-நெற்குப்பை-எ-ம்பதப்புணர்ச்சிப்புட்சாரியை வந்தனவாயின—அதற்கு-எ-ம். தன்னை-எ-ம். தமக்கு ஆவன-எ-ம் உருபுபுணர்ச்சிப்புட்சாரியை வந்தனவாயின—இவ்வுதாரணத்திருள் மரத்திறுக்கு-இவைகள் பல சாரியைபெற்றன. (கூ)

உசச. அன் ஆன் இன் அல் அற்று இற்றத்த, தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன, இன்னபிறவும் பொதுச்சாரியையே ... ... ... *

இ-ள். பொதுச்சாரியை யென்றூர் அவைஇவையென்பது உணர்த்துகின்றது. இ-ள். அன்-ஆன்-அன் முதலிய னகரமெய் ஈறுசெசால்லிட்டடபதினேழும்—இன்னபிறவும்-இவைபோல்வனபிறவும்—பொதுச்சாரியை- விகுதிபதமுருபென்கிற மூன்றுபுணர்ச்சிகளுக்கும் பொதுவா

ழிகளினும் வருகவிறுமேல பொருப்சாரியையாகும். எ-று. (உ-ம்) ஒன்றன்கூட்டம்- அன் ஒருபாற்கு-ஆன் கண்டின்கால் இன்- தொடையல். அல் பலவற்றை- அற்று பதிற்றுப்பத்து இற்று-மரக்கிளை-அத்து மன்றம் அம்-எல்லார்தம்மையும்- தம்- எல்லார்நம்மையும் நம்-எல்லீர்நும்மையும் நும்-கலனைதுணிவ நடந்தது அ-சாத்தனுக்கு-உ- எற்றை- ஐ உப்தைய-து ஆன் ன்-என முறைமையகாண்க இவ்வாறுவே றுநலல் அயன்றன என்-அவன்றன்-தான்-அவர் தாம்- தாம் புர்றுத் தேசாறு ஆம் இல்ல ப்பொருள்-ஆ எனவருகின்றவையும் மற்றமிப்படி வருமவைகளையுங்கொள்க.

([illegible])

௨௪௫ எல்லாமென்ப திழிதிணையாயி, னற்றோடுருபின்மேலும் முறுமேயன்றேனம்மிடையடைந்தற்றாகும் ... ... ... ...

இது ஒருசாரிமொழிக்கு [illegible] புணர் [illegible] மே [illegible] ருபுகளென்பதனுல் எய்தா [illegible] சிறப்புவிதியுணர்த்து கிறது. [illegible] எல்லாமென்பது [illegible] ல்லாமென்னும் பொதுப்பெயர் — இழி திணையாயின் — அஃறிணையின் கண்வரும் பொருட்டாயின் — அற்றோடுருபின் மேல் — அற்றுச்சாரியையும் — உருபின்மேல் — உம் — முற்றும்மையும் — உம்மை — அன்றேல் உயர்திணையில்வரும்பொழுது — இடையிலே — நம் — நம்முச்சாரியை — அடைந்து — அடைந்து — அற்றாகும் உருபின்மேல்முற்றும்மையும்பெறும் எ-று. உ-ம் எல்லாவற்றையும் எல்லாநம்மையும் எனவாம். மற்றவுருபுகளோடும் இப்படியே யொட்டிக. [எல்லாநம்மையும் உயர்திணைத்தன்மைப்பன்மை இட்டுறவொழி லல் இழிகிணையாய் இன் அற்றோடு எனக்கொண்டு எல்லாவற்றினையும் எனவருமெனினுமாம்]

(Declension of [illegible])

௨௪௬. எல்லாருமெல்லீரு மென்பவற் றும்மை, தள்ளிநிரலே தம்நுஞ்சாரப், புல்லுமுருபின் பின்னரும்மே ... ... ... ... ...

இதுவுமது (இ-ள்) எல்லாருமெல்லீருமென்பவற்று ஆறுருபும் புணருமிடத்து எல்லாருமெல்லீருமென்னும் இருவிதப் பெயர்களினுடைய இறுதியில் — உம்மை முற்றும்மையை — தள்ளி — நிரல் முறையாக — தம் தம்முச்சாரியையும் — நும் நும்முச்சாரியையும் — சார அவைபொருந்தவிடங்களில் பொருந்த — உம் — புல்லுமுருபின் பின்னர் உருபுகளின்பின்பு — உம்மும் வந்துபுணரும் எ-று. உ-ம் எல்லார்தம்மையும் எல்லீர் நும்மையும் எல்லீரையும் [illegible]

மை எனப்படர்க்கைக்குரிய தம்முச்சாரியை [தன்மைமுன்னிலைகளில் வருதல் ஓரிடம்பிறவிடந்தழுவலுமுளவே(யென்னும்வழுவமைதி] (எ)

௨௪௭. தான்தாம்நாம்முதல்குறுகும்யான்யாம்,நீ நீர் என் எம் நின் நுமாம்பிற குவ்வினவ்வருநான்காறிரட்டல ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) [தான்தாம்நாம்-தான்முதலிய மூன்றுபெயர்களும்—முதல்குறுகும்- உருபுகள் புணருமிடத்து நெடுமுதல்குறுகிமுறையே தன்னைதம்மை நம்மைஎனவரும்—யான் யாம் நீ நீர்- யான்முதலியநான்குபெயர்களும்—என்எம்நின்நுமாம் - உருபுகள் புணருமிடத்துமுறையே என்னை எம்மை நின்னை நும்மை எனவரும்—குவ்வின்-இவ்வேழுபெயரோடுகுவ்வுருபுபுணருமிடத்து—அவ்வரும்- நமலேதனக்கு என அகரச்சாரியைவரும்—நான்கு- குவ்வுருபின் அகரச்சாரியைவரினும்—ஆறு ஆறுமுருபுகள்வரினும்—இரட்டல- அவ்வேழுசொற்களின் மிறுதியாகிய தனிக்குறில்[முன்னொற்றுக்கள் இரட்டாவாம் எ-று. ஒழிந்த உருபுகளோடும் இப்படியே ஒட்டுக [பிறவென்றமையால்- நீ உன்னை- எனவும்- நீர் உம்மை எனவுந்திரிந்து வருதலுங் கொள்க] (அ)

௨௪௮ ஆமாகோனவ்வணையவும்பெறுமே ... ... ... *

இதுவுமது. (இ-ள் ஆ-ஆவென்கிறபசுவின்பெயரும்—மா-மாவென்கிறவிலங்கின்பொதுப்பெயரும்—கோ-கோவென்கிறவிறைவனை யுணர்த்திநிற்கும்பெயரும்—னவ்வணையவும்- உருபுகள்புணருமிடத்து னகரச்சாரியை பொருந்தவும்—பெறும்-பெறும் எ-று. உ-ம் ஆனை-ஆவை மானை-மாவை கோனை-கோவை-எனவிகற்பித்துவருதல்காண்க. மற்றவைகளோடுமிப்படியே ஒட்டுக. [அணையவுமென்றவும்மையால் குவ்வுருபுபுணரும்போது ஆனுக்கு- எனஉகரச்சாரியையுமுடன்பெறுதலும், ஆவுக்கு எனவுகரச்சாரியையொன்றேபெறுதலும், ஆவினுக்கு என இன்சாரியையுடன் உகரச்சாரியைபெறுதலும், ஆவினை-என மற்றையுருபுகள் புணரும்போது இன்சாரியையொன்றுமே பெறுதலும், ஈரெட்டுறமொழிதலால் ஆமாவொருசொல்லாய்க் காட்டப்படுகவை புணர்த்தி நின்றவிடத்தும், ஆமானை-ஆமானுக்கு-ஆமாவினுக்கு எனஇவ்விதம்பெறுதலும், அணையுமென்மொழியாது பெறுமென்றமையால் ஆன்மான் கோன் எனத்தனிமொழிக்கண்ணும் னகரச்சாரியை வருதலுங்கொள்க.] (௯)

௨௪௯ ஒன்றுமுதலெட்டீறுமெண்ணூர்,பத்தின்முன்னும்வரிற்பவ்வொற்றொழியமேலெல்லாமோடுமொன்ப [illegible] ... ...

இதுவுமது. (இ-ள்) ஒன்றுமுதல் - ஒன்றுமுதல்—எட்டீறு-

எட்டுருகிய—எண்-எண்களோடு—உளர்-புணர்ந்த—பத்தின் முன் -பத்தென்கிறவெண்முன் உருபுகள் புணருமிடத்து — ஆன் - ஆன்சாரியை—வரின் - வருமாயின்—பவ்வொற்று - பகரமெய்—ஒழிய நிற்க—மேல் - அதன் மேலேநின்ற—எல்லாம் - எல்லாவெழுத்தும் —ஒடும் - கெடும்—ஒன்பதும் - ஒன்பதென்கிற வெண்முன்றும்—இற்று-உருபுகள் புணருமிடத்து ஆன்சாரியைவரின் அதன்பகரமெய் நிற்க மேலேநின்ற வெல்லாவெழுத்துங்கெடும். எ-று. ஒருபானை - ஒருபஃதை - ஒருபஃதை எ-ம். ஒன்பானை - ஒன்பதை - ஒன்பஃதை. எ-ம். விகற்பித்துவரும். மற்றவைகளோடும் இப்படியே யொட்டுக. [ஒருபது ஒருபஃது எனவிகாரப்பட்டுவருகிற பத்தென்பார் எண்ணூர்பத்தென்றார் ஆன் வருதலைப் பாராமுகமாகச் சொன்னமையால் உகரச்சாரியை இன்சாரியைகளும் வேண்டியவிடத்து வருமெனக்கொள்க

௨௫௰. வவ்விறுசுட்டிற்கற்றுறல்வழியே ... ... ... ... *

இதுவுமது (இ-ள்) வவ்விறுசுட்டிற்கு - வகர மெய்யீற்று மூன்றுசுட்டுப்பெயர்களுக்கும் — அற்றுறல் - உருபுகள் புணருமிடத்து அற்றுச்சாரியைபொருந்தல்—வழி - முறைமையாம். எ-று. (உ-ம்) அவற்றை - இவற்றை உவற்றை-என அற்றுச்சாரியை வேண்டியே வருதல்காண்க [வழியேயென்றமிகையால் அவற்றினை இவற்றினை என இன்சாரியைவருதலுந் தனிக்குறின் முன்னொற்று உயிர்வரினிரட்டாமையுங்கொள்க, மற்றவைகளுமிப்படியே. (௰௧)

(Declension of அவ், இவ், உவ்)

௨௫௧. சுட்டின்முன்னாய் தமன்வரிற்கெடுமே ... ... ... *

இதுவுமது. (இ-ள்.) சுட்டின்முன்-அஃது இஃது உஃது என்கிற சுட்டுப்பெயர்களில் மொழிமுதற் சுட்டெழுத்தின் முன்னின்ற—ஆய்தம் ஆய்தமானது—அன்வரின் - அச்சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து அன்சாரியைவரின்,— கெடும் - கெடும்—எ-று. (உ-ம்) அஃது ஐ-அதனை-அஃதை எனச்சாரியை விகற்பித்து வருதலும் வந்தபுரி ஆய்தங்கெடுதலுங் காண்க. [அன்சாரியைவருதலைநோக்கி ஆய்தங்கெட்டவழி அது இது உது எனவாய்தமில்லாச்சுட்டுப்பெயர்களாய்ப் பின்பு அன்சாரியை பெறுதலால் ஆய்தமில்லாச்சுட்டுப்பெயர்களுக்கும் இதுவே விதியெனக்கொள்க அன்வருதலைப்பாராமுகமாகக்கூறலால் அவ்வுருபு புணரும்போது அதற்கு என அன்சாரியைதனித்து வருதலல்லாமலும் அதனுக்கு என உகரச்சாரியையுடன் வருதலுங்கொள்க.] (௰௨)

— the ஃ drops its initial after அ.

௨௫௨. அ[illegible]மகரமுனையில்லை ... ... ... ... *

இது. அத்துச்சாரியைக்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது இ-ள் அத்தின் அத்துச்சாரியையினது — அகரம் - அகரவுயிரானது — அகரமுன்னை - இயல்பினும் விதியினும் நின்ற அகரவுயிரீற்றின்முன்வரின் — இல்லை - வகரவுடம்படு மெய்பெறாது கெடும் எ-று உம் மக-அத்து ஐ மகத்தை மர அத்து குன்றம் - மரத்துக்குன்றம் என இருவழியும் அகரவீற்றின்முன்னுங் கெட்டது. (யசு)

உருங. இசைந்திருசாரியை யெனினளவின்மையின், விகுதியும் பதமு முருபும் பகுத்திடை, நின்றவெழுத்தும் பதமுமிடைநிலையுமொ ன்றவுணர்த்த லுரவோர்நெறியே ... ... ... ... ... ..

இது. சாரியைக்காவதோர் புறனடையுணர்த்துகின்றது (இ-ள்) இசைந்திருசாரியை யெனின் - விகுதிமுதலிய புணர்ச்சிக்கண் இசைந்து இரு சாரியையென்று அளவுசெய்து விதித்தனவற்றோடும் ஒழிந்தவைகளுந் தனித்தனி சொல்லப்புகின் — அளவின்மையின் அளவுபடாமையால் — விகுதியும் - விகுதிப்புணர்ச்சியையும் — பதமும், பதப்புணர்ச்சியையும் — உருபும் - உருபுபுணர்ச்சியையும் — பகுத்து-சாரியைவிடத்துப்பகுத்து— இடைநின்ற - நடுவேநின்ற — எழுத்தும்-எகரம் அகரம்முதலிய வெழுத்துச்சாரியையினையும் — பதமும்-அன் ஆன் முதலிய பதச்சாரியையினையும் - இடைநிலையும் - இவ்விரண்டுசாரியையுந் தோன்றுகவிடமாயினையும் — ஒன்றவுணர்த்தல் - தெரியவறிவித்தல் — உரவோர்-பெரியோரது — நெறி - கடனாகும். எ-று. வாறு ஆனந்தப் [illegible] - விகுதிப்பொருட் புணர்ச்சிக்கண் உருபின் முடிபுகளை முன்பதனால் அமைந்து [illegible] சாரியையன்றியும் அகரச்சாரியையு முடன்வந்தது — இன்னியல்பாமொழிந்தவற்றின்கண் பாடுமிக்கபொருள் எனக்குற்றிய [illegible] இல் சாரியை வந்தது தன்னை எனச்சாரியையின் [illegible] பிறவாக வந்தது இப்படிமூவகைய புணர்ச்சியையும் பகுத்துணர்த்துமெனக.

உருச. விகுதிபதஞ்சாரியையுருபனைத்தினுமுன்னோதிய திரியந்தொப்பனகொளலே ... ... ... ... ... ... ...

இது இந்நான்குபுணர்ச்சிகளுக்கு மாவதோர் புறனடை யுணர்த்துகின்றது இ-ள். விகுதி விகுதியும்—பதம் - பதமும்—சாரியை சாரியையும்—உருபு உருபும் ஆகிய — அனைத்தினும் நான்கு புணர்ச்சியிடத்தும்—உயர்த்த [illegible] [illegible] முன்னோதிய — விகாரங்கள் — ஒர்த்து இவ்விகாரவிதத்தல் [illegible] [illegible] தப்பொருந்தாமெனப் புணர்ந்து — ஒப்பன - ஒப்பனவற்றைப் பொருத்துமோ அவ்விதமே—கொளல் - அறிந்துகொள்ளவேண்டும் எ-று

(வரலாறு)

விகுதிப் புணர்ச்சியுள் நடவாநின்றகால வினைமுதனிகழ்பல்லவும் எனப் பொருள்பட விச்சயமோடும் சென்று என்கிற விடத்து இறந்தகாலமுமே ... இடத்து எதிர்காலமும் பொருந்துமென்று கொள்க.

பதப்புணர்ச்சியுள் அ வழி இ ஐ ம் முன்னாமினியடிப்பு மிகவும் விகற்பமு மாகும் எனப் பொருள்பட விதித்தாரேனும், பாத்தி ... என வருகிற எழுவாய்ப் புணர்ச்சிக்கண் இடையே னவும் ஆடி ... எனவாகிற பண்புத் தொகைக்கண் மிகுமெனவுங் கொள்க.

சாரியைப் புணர்ச்சியுள் பகுதி விகுதியும் பகுதி முதற்புணர்ச்சியையால் நூம் பலவுஞ்சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமுமாகும் எனப் பொருள்பட விதித்தாரேனும் - நாட்டின் கணின்றுநீதான் எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வருமென்றும் நாட்டின் கண்ணின்றான் என இன்னுருபிற்கு இன்சாரியை வாராதென்றுங் கொள்க.

உருபுபுணர்ச்சியார் ஒற்றுமிர் முதலிற் றுருபுகள் புணர்ச்சியினைக்குமென்றாப் பெயர் வேற்றுமைப் புணர்ப்பே எனப் பொருள்பட விதித்தாரேனும் நம்பிகண் எனக்கண்ணுருபு மிகாதென்றும் நம்பிக்கு என் குவ்வுருபு மணனென்றமையால் மிகுமென்றுங்கொள்க மற்றவை ஊகித்துக் கொள்க. (௰௫)

௨௫௫ இயல்பின்விகாரமும் விகாரத்தியல்பும், உயர்திணையிடத்து விரிந்து தொக்கும். விரவுப்பெயரின் விரிந்து நின்றும், மன்னவிர் மாறுமையுருபே ... ... ... ... ... ... ... .... .

இ-ள். வேற்றுமைப்புணர்ச்சிக்கண் வேற்றுமை யுருபு ... ஏற்று ) இயல்பின்விகாரமும் பொதுவிதியால் முடிந்தவேயன்றி அப்படிவிதித்த இயல்பிலே விகாரமாகியும் — விகாரத்தியல்பும் விகாரத்திலே இயல்பாகியும் — உயர்திணையிடத்து உயர்திணையினிடத்து — விரிந்தும் வெளிப்பட்டும் — தொக்கும் மறைந்தும் — விரவுப்பெயரின் பொதுப்பெயரின்கண் — விரிந்தும் வெளிப்பட்டும் — நின்றும் மறைந்தும் — அன்னபிறவும் - அவைபோல்வன பிறவேறுபாடுகளும — ஆகும் ஆகுவன — ஐயுருபு இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி எ-று. வழிபட்டெய்வ நிரப்புறக்காட்டு என இயல்பின் விகாரமாயிற்று. மணங்கொணர்ந்தான் என விகாரத்தியல் பாயிற்று. நம்பியைக்கொணர்ந்தான் என உயர்திணையிடத்து விரிந்ததுபல் ... யுஞ்சொல் என அதனிடத்தே தொக்கது. கொற்றனைக் கொணர்ந்த

ன்எனவிரவுப்பெயரிடத்து விரிந்தது. ஆண்பெற்றாள் எனவிரவுப்பெயரிடத்தே தொக்கது [அன்னபிறவுமென்றமையால், தற்கொண்டான் எனவுறழப்படுவது திரிந்தேவருதலும் பிறவுங்கொள்க. இறந்த தழீஇய விழிவு சிறப்பும்மைகளால் வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோடொருங் கொத்துவரகு கட்டினான் என இயல்பினவாகியும் பலாக்குறைத்தான் என விகாரத்தில்விகாரமாகியும் வருதலும் பெரும்பாலனவென்க.] (௰௬)

உ௫௬. புள்ளியு முயிருமாயிறுசொன்முன், றம்மினாகியதொழின்மொழிவரினே, வல்லினம்விகற்பமுமியல்புமாகும் ... ... *

இ-ளவுமது. (இ-ள்.) புள்ளியு முயிருமாயிறுசொன்முன், மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சி யுள்ளே. மெய்யும் உயிரும் இறுதியாகநின்றசொற்களின்முன் — தம்மினாகிய - கருத்தாவாகிய நிலைமொழிப்பொருள்களாலாகிய — தொழின்மொழி - தொழிற்சொல் — வரின் வந்தால் — வல்லினம் - அவ்விடத்து வருகிறவல்லினம் — விகற்பமும் உறழ்ச்சியும் — இயல்பும் - இயல்பும் — ஆகும் - ஆகும் எ-று [இவ்விதியும் இரண்டாம்வேற்றுமைப் புணர்ச்சிபோல ஒப்பனகொள்க] (வரலாறு.) பேய்கோட்பட்டான் - பேய்க் கோட்பட்டான். சூர்கோட்பட்டான் - சூர்க்கோட்பட்டான் - எ-ம். பேய்பிடிக்கப்பட்டான் - புலி கடிக்கப் பட்டான் - எ-ம். வரும் - [உம்மையால் அராதீண்டப்பட்டான் - சுறாப்பாயப்பட்டான். எனவேற்றுமைப் பொதுவிதியான் முடிவனவே பெரும்பாலன வென்க. (௰௭)

உ௫௭. இதற்கிதுமுடிபென்றெஞ்சாதியாவும், விதிப்பளவின்மையின்விதித்தவற்றியலான், வகுத்துரையாதவும் வகுத்தனர்கொளலே. *

இது. இவ்வதிகாரத்திற் காவதோர் புறனடை யுணர்த்துகின்றது. (இ-ள். இதற்கிதுமுடிபென்று - இதற்கு இதுமுடிபென்று — டாவும் - இவ்வதிகாரத்துள் விதிக்கத்தகுவனவற்றையெல்லாம் — எஞ்சாது - குறையாமல் — விதிப்பு - தனித்தனி அளவுசெய்துவிதிக்கப்புகின் — அளவின்மையின் - அதற்கு ஓரளவில்லாமையால் — விதித்தவற்று - வகுத்துவிதித்தவற்றினுடைய — இயலான் - இலக்கணங்களையே ஏதுவாகக்கொண்டு — வகுத்துரையாதவும் - வகுத்துவிதி யுரையாதனவற்றையும் — வகுத்தனர்கொளல் - கருதலளவையால் வகுத்துவிதியுரைத்துக்கொள்க. எ-று.

(வரலாறு.)

எழுத்தியலுள் - மொழிமுதற்காரணமா மணுத்திரளொலி யெ

ழுத்தென உரைத்தமையால். கட்புலனில்லாக் கடவுளைக் காட்டுஞ் சட்டகம்போலச்செவிப் புலவொலியை யுட்கொளற்கிடுமுருபாம் வடிவெழுத்தே எனப்பிறர்கூறியவாறு இவ்வொலிவடிவைக் காட்டுதற்கு ஓர்கருவியாகவெழுதிக்கொள்ளப்பட்டதுவரிவடிவெழுத்தெனக்கொள்க.

பதவியலுள்-அன் ஆன் அள் ஆள் என்னுஞ் சூத்திரத்திலே முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென வுரைத்தமையால் பெருமாள் என்கிறபதம்பெருமையை யுடையானென்னும் பொருள்தோன்றநின்றபெருமான் என்கிறபதத்தினது ஆன்விகுதி ஆள்விகுதியாகவோரோவிடத்தேதிரிந்துஆண்பாலையேயுணர்த்திநின்றதெனக் கொள்க.

உயிரீற்றுப்புணரியலுள் - இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன் கசதபமிகும் என்று சொன்னமையால் ணனவல்லினம் வரட்டறவுமென்றவிடத்துடகாரமும்வல்லினமாதலின் மிகுந்ததெனக் கொள்க.

மெய்யீற்றுப்புணரியலுள் - நுந்தம்எம்நம்மீறுமவ் வருஞநவே எனவுரைத்தமையால் அம்மென்கிற சொல்லிறுதிமகாரமுங் குறைவுற்றதாதலின் தன்னுடையசாதமெல்லினம்வரின் அதுவாயத்திரிந்து அந்நலம்என அழகினதுநலமென்னும்பொருளதாய் வருமெனக்கொள்க.

உருபுபுணரியலுள் - வவ்விறுசுட்டிற் கற்றுறல்வழியே யென வுரைத்தமையால் அதுபோலும் வினாவும் எவற்றைஎன அற்றுச்சாரியை பெறுமெனவும் இரண்டாம்வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை யுரைத்தமையால் ஏழாம் வேற்றுமையும் மண்புகுந்தும் விண்பறந்து மாலுமயனுங் காணுவொருபொருள் எனவேற்றுமைப்பொதுவிதியேலாதசிறபான்மை வருமெனவுங்கொள்க | இன்னும் இவ்வைந்தியலுள்ளும் வகுத்துரையாதன வற்றையெல்லாம்துன்பப்படாமல் இதுவேஇடமாக முடித்துக்கொள்க. (ய௪)

ஐந்தாவது-உருபுபுணரியல் முற்றுப்பெற்றது.

---

கட்டளைக்கலித்துறை.

அடையெண்பெயர்முறைதோற்றம்வடிவளவாதியந்த
மிடைநிலைபோலியென்றீரைந்தெழுத்துமிருபதமும்
படுபுணர்மூன்றினியல்பும்விகாரமுஞ்சாரியையு
முடனுணர்வாரையெழுத்தறிவாரென்பருத்தமரே

எழுத்ததிகாரமுற்றிற்று.

[ய௫]

# சொல்லதிகாரம்.

* சொல்லதிகாரமாவது - சொல்லினதிகாரத்தை யுடையதென அன்மொழித்தொகையாய்ப் படலத்திற்குக் காரணக்குறி யாயிற்று. சொல்லென்றதெழுத்தினாலாக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும் ஒருவனுணர்தற்குக்கருவியாமோசை யாகிய பெயர் வினை இடை உரி என்னும்நால்வகைச்சொல்லும்பிறவுமாம்.

## முதலாவது-பெயரியல்

**உ௫௬.** முச்சகநிழற்று முழுமதிமுக்குடை, யச்சுதனடிதொழு தறைகுவன்சொல்லே ... ... ... ... ... ... ... ...*

இ-து. கடவுள்வணக்கமும் அதிகாரமும் உணர்த்துகின்றது (இ-ள்) முச்சகம்-மூன்றுலகத்திற்கும்—நிழற்றும் - நிழலைச்செய்கின்ற—முழுமதி-நிறைந்தமதிபோலும்—முக்குடை - மூன்றுகுடையையுடைய—அச்சுதன்-அழியாதகடவுளுடைய — அடி-அடிகளை — தொழுது வணங்கி—அறைகுவன் - சொல்லுவேன் —சொல்-முன்னதிகாரத்துட் சொல்லியவெழுத்தினாலாகிய சொல்லிலக்கணத்தை. எ-று. ஏகாரம் ஈற்றசை. (க)

**உ௫௭.** ஒருமொழிதொடர்மொழி பொது மொழியென்று, இருதிணையைம்பாற் பொருளையுந் தன்னையு, மூவகையிடத்தும் வழக்கொடு செய்யுளின், வெளிப்படை குறிப்பின்விரிப்பதுசொல்லே...*

இ-து. முன்னேசொல்லென்றது இஃதென்பது உணர்த்துகின்றது (இ-ள்) ஒருமொழி-ஒருமொழியும் — தொடர்மொழி-தொடர்மொழியும்—பொதுமொழி - பொதுமொழியும்—என்று - என மூன்றுபிரிவினதாகி —இருதிணை-இருதிணையாகிய—ஐம்பாற்பொருளையும்-ஐம்பாற்பொருளையும் — தன்னையும்-அப்பொருளையன்றித்தன்னையும் — மூவகையிடத்தும்-மூன்றிடத்திலும் — வழக்கொடு- வழக்கினிடத்தும் — செய்யுளின் - செய்யுளிடத்தும் — வெளிப்படை-வெளிப்படையாலும்—குறிப்பின் - குறிப்பினாலும் — விரிப்பது - விளக்குவது — சொல்-சொல்லாகும். எ-று [பொருளையுந் தன்னையுமென்றதனால்-உயிர்க்கு அறிவானதுகருவியாய் நின்றுதன்னையும் பொருளையுமுணர்த்துமாறுபோல ஒருவருக்குச் சொல்லானது கருவியாய்நின்று தன்னையும் இருதிணையைம்பாற் பொருளையுமுணர்த்துமென்பதுபெற்றாம்.] (உ)

**உ௫௮.** ஒருமொழியொருபொருளனவாந் தொடர்மொழி, பலபொருளனபொதுவிருமையுமேற்பன ... ... ... ... ...*

இது. மூன்சூத்திரத்திலேநிறுத்த முறையான் மூவகை மொழிகளாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) ஒருமொழி - ஒருமொழிகளாவன — ஒருபொருளனவாம்- பகாப்பதமாவது பகுபதமாவதுஒன்றுநின்று தத்தமொரு பொருளைத்தருவனவாம்—தொடர்மொழி - தொடர்மொழிகளாவன—பலபொருளன - அவ்விருவகைப் பதங்களுந்தன்னுருபும் பிறிதோடும் அல்வழிவேற்றுமைப் பொருளுணர்க்கத்தால் இரண்டுமுதலியவாகத்தொடர்ந்துநின்று இரண்டுமுதலிய பலபொருளைத் தருவனவாம்—பொது மொழி - பொதுமொழிகளாவன— இருமையுமேற்பன - ஒன்றாய்நின்று ஒருபொருளைத் தந்தும் அதுவே தொடர்ந்துநின்று பலபொருளைத்தந்தும் இவ்விரண்டற்கும் பொதுவாய்நிற்பனவாம். எ-று (வரலாறு) நிலம் - நிலத்தன் - நட-நடந்தான்- தில் - மன் - தவ -நனி-எனவருவன ஒருமொழிகள் — நிலம்வலிது-அதுகொல் - சாலப்பகை - நிலங்கடந்தான் - நிலத்தைக்கடந்தான்-நிலத்தைக்கடந்தநெடுமால் எனவருவனதொடர்மொழிகள் — எட்டு- தாமரை-வேங்கை - எழுந்திருந்தான். எனவருவன பொதுமொழிகள். இவை ஒருமொழிகளாய் ஒருபொருளைத் தருதலன்றியும் - எள்ளைத்து- தாவுகின்றமரை. வேகின்றகை - எழுந்துபின்னிருந்தான் - எனத்தொடர்மொழிகளாய்ப்பல பொருளைத் தருதலுங் காண்க து - உணைணெக்கிறவேவல். (ரு)

௨௱௰௧. மக்கடேவர் நரகருயர்திணை, மற்றுயிருள்ளவு மில்லவு மஃறிணை ... ... ... ... ... ... ... ... ... ... ... ...*

இது நிறுத்தமுறையால் இருதிணையாமாறு உணர்த்து கின்றது (இ-ள்.) மக்கள்-மக்களும்—தேவர்-தேவரும்—நரகர் - நரகரும்—உயர்திணை-உயர்திணையாகும்—மற்றுயிருள்ளவும் - அவரொழிந்தவிலங்குமுதலாகியவுயிருள்ளவைகளும்— இல்லவும் - நிலம்நீர்முதலாகியவுயிரில்லாதவையும்—அஃறிணை - அஃறிணையாகும். எ-று. [இம்மூவகையோருடைய உடம்பையும் உயிரையும்வேறாகக் குறிக்கும் போது அவையும் அஃறிணையாம்—உயர்திணை - உயர்வாகியகுலம்-அஃறிணை அதுவல்லாதகுலம்.] (சு)

௨௱௰௨ ஆண்பெண்பலரென முப்பாற்றுயர்திணை ... ...*

இது. நிறுத்தமுறையால் ஐம்பாலுட் சிலபாலும் அவற்றிற்குரியதிணையும் உணர்த்துகின்றது. (இ-ள்.) ஆண்-ஆண்பாலும் — பெண்-பெண்பாலும்—பலர்-பலர்பாலும்—என-என்று — முப்பாற்று மூன்றுபாலினையுடைத்தாகும்—உயர்திணை-உயர்திணை -எ-று. [ஆடவரென்கிறதுமுதலாகிய ஆணபன்மையையும் - பெண்டிர் என்கிறதுமுதலாகிய பெண்பன்மையையும் - மக்கள் என்கிறதுமுதலாகிய அவ்விருவர்பன்மையையும்அடக்கிப்பலரொன்றார்.பின் 'லவென்பதும் ஆது.

( [illegible] )

௨௬௩. ஒன்றேபலவென்றிருபாற்றஃறிணை ... ... ... *

இதுவுமது. (இ-ள்) ஒன்று ஒன்றன்பாலும் —பல - பலவின்பாலும்—என்று-என்று—இருபாற்று - இரண்டுபாலினை யுடைத்தாகும்—அஃறிணை-அஃறிணை-எ-று. [அஃறிணையிலே சேவலென்கிறதுமுதலாகிய் ஆண்பாலும்-பெடையென்கிறது முதலாகிய பெண்பாலும்-இருந்தாலும் உயிருள்ளவைகளிலே சிலவற்றிற்கும் உயிரில்லாதவைகளுக்கும் இல்லாமையால் அப்பகுப்பொழித்து எல்லாவற்றிற்கும் பொருந்த ஒன்றென்றார் ] (ள)

௨௬௪. பெணமைவிட்டாண வாவுவபேடாண்பா, லாண்மைவிட்டல்லதவாவுவபெண்பா, லிருமையுமஃறிணையன்னவுமாகும் ... *

இது· திணைபால்களுக்காவதோர் புறனடையுணர்த்துகின்றது. (இ-ள்.) பெணமை-பெண்டன்மையை — விட்டு - விட்டு—ஆண்-ஆண்டன்மையை—அவாவுவ-அவாவுவனவாகிய — பேடு·பேடுகள்—ஆண்பால்-உயர்திணையாண்பாலாகும்—ஆண்மை - ஆண்டன்மையை—விட்டு-விட்டு — அல்லது-பெண்டன்மையை—அவாவுவ- அவாவுவனவாகிய — (பேடு -பேடுகள்—பெண்பால்-உயர்திணைப்பெண்பாலாகும் — இருமையும்-இவ்விருவகைப்பேடுகளும் —அஃறிணையன்னவும்-அஃறிணையையொப்பனவும் — ஆகும்-ஆகும்-எ-று (வரலாறு) பெண்ணவாயாணிழந்த பேடியணியாளோ கண்ணவாத் தக்ககலம்-[illegible]ப்பெண்ணிலக்கணஞ் சிறந்தமையினாலே பெண்பாற்பட்டது· ஆண்பாற் பட்டதற்கும் அஃறிணையையொத்து நின்றதற்கும் இலக்கியம் வந்தவழிக்காண்க ] (எ)

௨௬௫. படர்க்கைவினைமுற்று நாமங்குறிப்பிற், பெறப்படுந்திணைபாலனைத்துமேனை, யிடத்தவற்றொருமைப்பன்மைப்பாலே... *

இது· நிறுத்தமுறையால் மூன்றிடத்திலுஞ்சொல் - தன்னையும் பொருளையும் உணர்த்துமாறு உணர்த்துகின்ற. (இ-ள்) படர்க்கைவினைமுற்று-படர்க்கைவினைமுற்றுச்சொல்லையும் — (படர்க்கை) நாமம் படர்க்கைப் பெயர்ச்சொல்லையும்—குறிப்பின்-முன்குறித்தால் — திணை பாலனைத்தும் - இருதிணையைம்பாலும் — பெறப்படும் - பின் அவ்விருவகைச்சொல்லாலும் பெறப்படும்—ஏனையிடத்து - ஒழிந்த தன்மைமுன்னிலைகளின் — (வினைமுற்று) - வினைமுற்றுச்சொல்லையும்—(நாமம்)-பெயர்ச்சொல்லையும்—(குறிப்பின்)-முன்குறித்தால்—அவற்ற-அவ்விருதிணையைம்பாலுள் — ஒருமைப் பால் - ஒருமைப்பாலும்—பன்மைப்பால்-பன்மைப்பாலும் — (பெறப்படும்) - அந்நால்வகைச்சொல்லாலும் பெறப்படும்-எ-று. (உ-ம்) நடந்தான்-நடந்தாள்-நடந்தார்-நடந்தது-நடந்தன-எ-ம் அவன்-அவள்-அவர்-அது - அவை-எ-ம் படர்க்கையவினைமுற்றுச்சொல்லும் - படர்க்கைப் பெயர்ச்சொ

லும் - முன்பு தம்மையுணர்த்திப் பின்பு இருதிணையைம்பாற் பொருளையுமுணர்த்தின - நடந்தேன் - நடந்தேம் - எ-ம். யான் - யாம் - எ-ம். தன்மைவினைமுற்றுச்சொல்லும் - தன்மைப்பெயர்ச்சொல்லும் - நடந்தாய் - நடந்தீர் - எ-ம். நீ - நீர் - எ-ம் முன்னிலைவினைமுற்றுச்சொல்லும் முன்னிலைப்பெயர்ச்சொல்லும - முன்னே தம்மையுணர்த்திப் பின்பு இருதிணையைம்பாலுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலுமுணர்த்தின. [மூவிடங்களிலொன்றற்குரிய வினைமுற்றும்பெயரும் தம்மையும் பொருளையும் இப்படியுணர்த்துமெனவே இவ்விடங்களுக்குப் பொதுவாகிய வினைமுற்றுக்களும்பெயர்களும்பொதுமைநீங்கியோரிடத்திற்குரியவாகியும் எச்சவினைமுதலியனவும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர்வினைகளைச்சார்ந்தும் இப்படியேதம்மையும் பொருளையும் உணர்த்துமெனக்கொள்க] (௮)

௨௬௬. தன்மைமுன்னிலைபடர்க்கைமூவிடனே ... ...

இது. நிறுத்தமுறையால் மூவிடமாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) மூவிடன் - மூவிடமாவன — தன்மை - தன்மையும் — முன்னிலை - முன்னிலையும் — படர்க்கை - படர்க்கையும் ஆம் - எ-று. (வரலாறு.) யான் - நீ - அவன் - எ-ம். வந்தேன் - வந்தாய் - வந்தான் - எ-ம். வரும். (௯)

௨௬௭. இலக்கணமுடைய திலக்கணப்போலி, மரூஉவென்றாகு மூவகையியல்பு, மிடக்கரடக்கன் மங்கலங்குழூஉக்குறி, யெனுமுத்தகுதியோ டாறும்வழக்கியல் ... ... ... ... ... ... ...

இது. நிறுத்தமுறையால் வழக்காமாறு உணர்த்துகின்றது.— (இ-ள்) இலக்கணமுடையது - இலக்கணவழியால் வருவதும் — இலக்கணப்போலி - இலக்கணமில்லையாயினும் இலக்கணமுடையதுபோல வருவதும் — மரூஉ - இலக்கணஞ்சிதைந்துமரீஇயதும் — என்றாகும் - என்றுவழங்குகிற — மூவகையியல்பும் - மூவகையியல்புவழக்கும் — இடக்கரடக்கல் - சொல்லத்தகாததை மறைத்துச்சொல்வதும் — மங்கலம் - மங்கலமில்லாததையொழித்து மங்கலமாகக்கூறுவதும் — குழூஉக்குறி - ஒருகூட்டத்திலுள்ளோர் யாதாயினுமொருகாரணத்தால் ஒருபொருளின் சொற்குறியையொழித்து வேறொருசொற்குறியாற்கூறுவதும் — எனும் - என்றுவழங்குகின்ற — முத்தகுதியோடு - மூன்றுதகுதிவழக்குடனே — ஆறும் - ஆறுகும் — வழக்கியல் - வழக்கிலக்கணம் - எ-று.

வரலாறு

நிலம் - நீர் - தீ - காற்று - வானம் - நன்னிலம் - தண்ணீர் - வெந்தீ - இவை முதலானவை இலக்கணமுடையன.

இன்மூன். என்பதைமூன்றில் என்றும். நகர்ப்புறம் என்பதைப்புறநகர்என்றும். கண்மீஎன்பதை மீகண் என்றும்-கோவில் என்பதைக்கோயில் என்றும்-வழங்குகின்ற இவைமுதலானவை இலக்கணப்போலி.

அருமருந்தன்னபிள்ளை என்பதை அருமந்தபிள்ளைஎன்றும்- மலையமாநாடு என்பதை மலாடுஎன்றும்.சோழநாடு என்பதைச் சோணாடுஎன்றும் பாண்டியநாடுஎன்பதைப் பாண்டிநாடுஎன்றும்-அ இ என்கிற சுட்டுக்களை அந்த இந்த என்றும். மரவடி என்பதை மராடி என்றும். குளவாம்பல் என்பதைக் குளாம்பல் என்றும் யார்என்பதை ஆர்என்றும் தஞ்சாவூர்என்பதைத் தஞ்சைஎன்றும்- வழங்குகிற இவைமுதலானவை மரூஉ.

கால்கழீஇவருதும்-ஆமூன்பகாஷீ-பவ்ஷீ - எனவழங்குகிற இவைமுதலானவை இடக்கரடக்கல்.

செத்தாரைத்துஞ்சினரென்றும் ஓலையைத்திருமுகமென்றும்-காராட்டைவெள்ளாடென்றும-வழங்குகிற இவைமுதலானவை மங்கலம்

பொற்கொல்லர் பொன்னைப்பறியென்றும். யானைப்பாகர் ஆடையைக்காரையென்றும் வேடர் கள்ளைச்சொல் விளம்பியென்றும்.வழங்குகிற இவைமுதலானவை குழூஉக்குறி மற்றவைகளுமிப்படியே வருதல்காண்க (௰)

௨௬௮ பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல்போற்பல, சொல்லாற் பொருட்கிடனாகவுணர்வினின்,வல்லோரணிபெறச் செய்வனசெய்யுள்.

இது நிறுத்தமுறையால் செய்யுளாமாறு உணர்த்துகின்றது.—(இ-ள்) பல்வகைத்தாதுவின்- தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேதநீர் என்கிற எழுவகைத்தாதுக்களினாலே— உயிர்க்கு-உயிர்க்கு இடமாகச்செய்யப்பட்ட—உடல்போல் - உடம்புபோல—பலசொல்லால்- இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்கிறநால்வகைச்சொற்களால்—பொருட்கு-பொருளுக்கு—இடனாக-இடமாக—உணர்வினின்-கல்வியறிவினால்—வல்லோர்-செய்யுள்செய்ய வல்லவர்—அணிபெற அலங்காரம்பெற—செய்வன- உண்டாக்குவன—செய்யுள்-செய்யுளாம்-எ-று.[இப்படிச்சொல்லவே எழுத்தாலானது சொல்லாதலால் எழுத்துச்சொற்பொருளணிநான்கினாலும்உண்டாவது செய்யுளென்பதாயிற்று ]. வரலாறு) வருக்குன்றமொன்றுரித்தொன் றில்லையம்பலவன்மலயத் - திருங்குன்றவாணரிளங்கொடியே யிடரெய்த வெம்மூர்ப்- பருங்குன்றமாளிகை நூண்களபத்தொளி பாயநும்

ம்மூர்க்-கருங்குன்றம்வெண்ணிறக்கஞ்சுகமேய்க்குங்,கனங்குழையே.
இக்கட்டளைக்கலிப்பா இடமணித்தென்கிற பொருளுக்கிடமாகித் தன்
மையுவமை யுருவகவணிகளும் பிறவுமுடைத்தாய் வருதல்காண்க மற்
றவைகளுமிப்படியே. (௰௧)

௨௬௯ ஒன்றொழிபொதுச்சொல் விகாரந்தகுதி,யாகுபெயரன்
மொழிவினைக்குறிப்பே,முதறொகைகுறிப்போடின்னபிறவுங், குறிப்
பிற்றருமொழி யல்லனவெளிப்படை ... ... ... ... ... *

இது. நிறுத்தமுறையானே வெளிப்படையுங்குறிப்புமாமாறு உண
ர்த்துகின்றது. (இ-ள்) ஒன்றொழிபொதுச்சொல்-இருதிணையாண்பெ
ண்ணு ளொன்றனை யொழிக்கும்பொதுச்சொல்லும்—விகாரம்-வலித்
தன்முதலாகிய விகாரச்சொற்களும்—தகுதி-மூவகைத்தகுதி வழக்கு
ச்சொற்களும்—ஆகுபெயர்-ஆகுபெயர்ச்சொல்லும்—அன்மொழி-
அன்மொழித்தொகைச்சொல்லும்—வினைக்குறிப்பு-வினைக்குறிப்புச்
சொல்லும்—முதல்-முதற்குறிப்புச்சொல்லும்—தொகை-தொகைக்
குறிப்புச்சொல்லும்—குறிப்பு-இம்முதறொகையல்லாதபலவழியாலு
ம் வருங்குறிப்புச்சொல்லும்—இன்னபிறவும்-இவைபோல்வனபிறவு
ம்—குறிப்பின்-குறிப்பினால்-தரு-இருதிணையைம்பாற்பொருள்களையு
ந்தருகிற—மொழி-சொற்களாம்—அல்லன- இவையல்லனவெல்லாம்
—வெளிப்படை-வெளிப்படையால்—(தரு)-அப்பொருளைத்தருகிற—
(மொழி)-சொற்களாம்-எ-று.

(உ-ம்.) ஆயிரமக்கள்பொருதார்-இதில் மக்கள் என்கிறபொதுப்
பெயரும்-பொருதார் என்கிற பொதுவினையும் உயர்திணைப்பெண்பா
லையொழித்து ஆண்பாலைக்காட்டின—குறுத்தாட்பூதம்-மரைமலர்-இவ்
விகாரச்சொற்கள்—குறுந்தாட்பூதம்- தாமரை-என்பவற்றைக் குறிப்
பினாற்காட்டின.—கால்கழீஇவருதும்-திருமுகம்-பரி-இத்தகுதி வழக்
குகள்-மலங்கழிவிவருதும்-ஓலை பொன்-என்பவற்றைக்குறிப்பாலுண
ர்த்தின—புளித்தின்றான்-இவ்வாகுபெயர் அதன்பழத்தைக்குறிப்பா
லுணர்த்திற்று.—பொற்றொடிதந்த புனைமடல் இங்கேபொற்றொடி
என்கிற அன்மொழித்தொகை அதனையுடையாளையுணர்த்திற்று.—இவ
ளிப்போதுபொன்னன்-இங்கேபொன்னன் என்கிறது பெயர்ப்பொ
ருளையொழித்து வினைக்குறிப்புப்பொருளைக் குறிப்பாலுணர்த்திற்று
—அறத்தாறிதுவெனவெள்ளைக்கிழிபு-இங்கே இம்முதற்குறிப்பு அற
த்தாறிதுவெனவேண்டா சிவிகை பொறுத்தானொடூர்ந்தானிடை. என்கி
றபாட்டைக்குறிப்பாலுணர்த்திற்று—அலங்குளைப்புரவி யைவரொடு
சினை இ-இங்கே ஐவர் என்கிறதொகைக்குறிப்பு- பாண்டவரைக்குறிப்
பாலுணர்த்திற்று.—கற்கறித்துநன்கட்டாய் -பாயாவேங்கை-உவர்க்க

டலன்ன செல்வருமுள்ரோ கிணற்றூற்றன்ன நீயுமாருளையே பல்சா ன்றீரோ பல்சான்றீரே கயன்முள்ளன்ன நரைமுதிர் திரை கவுட்பயனி ல் மூப்பிற்பல்சான்றீரோ-இவைமுதலானவையெல்லாம் பலவழியானு ம் வருங்குறிப்புச்சொற்கள் —[இன்னபிறவுமென்றதனால் தெரிநிலை வினைகுறிப்பு வினையாலணையும்பெயர்களும்- வினைமுற்றானுங்குறிப்பு முற்றாலும்வருமெச்சங்களும் செய்யுமென்முற்றும்- கேட்குநபோல முதலியவாகஅஃறிணையிடத்துச்சொல்லப்படுவனவும்-ஆகியவிவைமு தலானவை குறிப்பாற்பொருளுணர்த்துமெனக்கொள்க ]இப்படியல் லாமல்-நிலம் நீர்-தீ- காற்று- வானம்- எனவருவன வெளிப்படையாற் பொருளுணர்த்துவனவாம். (௰௨)

௨௭௰ அதுவே-இயற்சொற்றிரிசொலியல்பிற்பெயர்வினை,யென விரண்டாகு மிடையுரியடுத்து, நான்குமாந்திசைவடசொலணுகாவழி,

இது. முன்சூத்திரம்வரைக்குஞ் சொல்லாவது இதுவெனக்காட் டக்கண்டசொல் இத்தனையாமென்பது உணர்த்துகின்றது (இ-ள்.) அது முன்னேகாட்டியசொல்—இயற்சொல்- இயற்சொல்லும்—திரி சொல்-திரிசொல்லுமென்கிற—இயல்பின்-தன்மையையுடைய—பெ யர்ச்(சொல்)-பெயர்ச்சொல்லும்—வினைச்(சொல்)- வினைச்சொல்லும் —என- என்று—இரண்டாகும்- இரண்டாகும்—இடைச்(சொல்)- இ டைச்சொல்லும்—உரிச் சொல்-உரிச்சொல்லும்—அடுத்து-அவற்று டனடுத்து—நான்குமாம்- நான்குமாகும்—திசைவடசொல் - திசைச் சொல்லும் வடசொல்லும்—அணுகாவழி - அவற்றுடன்சேராதவிடத் து-எ-று.[எனவே அதுவே யெனக்குறித்தசொல்-பெயரியற்சொல்- பெயர்த்திரிசொல்- வினையியற்சொல்- வினைத்திரிசொல்- இடையியற் சொல்-இடைத்திரிசொல்-உரியியற்சொல்-உரித்திரிசொல்- எனவெண் வகைப்படுமென்றும்-திசைச்சொல்லும்-வடசொல்லும்-சேர்ந்தவிடத் துப் பத்துவகைப்படுமென்றுமாம்.] (௰௩)

௨௭௧ செந்தமிழாகித் திரியாதியார்க்குந்,தம்பொருள்விளக்குந் தன்மையவியற்சொல் ... ... ... .. ... ... ...

இது. முன்சூத்திரத்திலே நிறுத்தமுறையால் இயற்சொல்லாமா றுணர்த்துகின்றது. இ-ள்.) செந்தமிழாகி - செந்தமிழ் நிலத்து மொழியாகி—திரியாது- திரிசொற்போலாகாது—யார்க்கும்- கற்றோ ருக்குங் கல்லாதோருக்கும்—தம்பொருள் - தம்பொருளை—விளக்கு ம் - ஒப்பவிளக்குகின்ற—தன்மைய - தன்மையையுடைய வுலகவழக் கே—இயற்சொல்- இயற்சொல்லாகும்- எ-று. (வரலாறு.) மண்- பொ ன்-மரம்-இவைமுதலானவைபெயரியற்சொல்—நடந்தான்- வந்தான்-

இவைமுதலானவை வினையியற்சொல்—அவனை- அவனால் - இவைகளி லேவந்த வேற்றுமையுருபுமுதலானவை இடையியற்சொல்—அழகு- அன்பு - இவைமுதலானவை உரியியற்சொல். [செந்தமிழ்நாடாவது- பாண்டிவளநாடென்றறிக] (௰௪)

௨௭௨. ஒருபொருள்குறித்த பலசொல்லாகியும், பலபொருள்கு றித்த வொருசொல்லாகியுமரிதுணர்பொருளன திரிசொல்லாகும்....✻

இ-து. நிறுத்தமுறையால் திரிசொல்லாமாறு உணர்த்துகின்றது. (இ-ள். ஒருபொருள்- ஒருபொருளை—குறித்த- கருதிய—பலசொல் லாகியும்-பலசொற்களாயும்—பலபொருள்- பலபொருள்களை—குறித் த-கருதிய—ஒருசொல்லாகியும்- ஒருசொல்லாகியும்—அரிது- அரிதாக —உணர்-கற்றோர் அறிகின்ற—பொருளன- பொருளினவாய்வருவன — திரிசொல்லாகும்- திரிசொல்லாகும்- எ-று. [அரிதுணர்பொருளன வென்றதனால் ஒருபொருள் குறித்தபலசொற்களிலும் பலபொருள் குறித்த ஒருசொற்களிலும் இயற்சொல் லொழியக்கொள்க.]

(வரலாறு.)

கிள்ளை-சுகம்-தத்தை- இவைகிளி என்கிறவொருபொருள் குறித் த பலபெயர்த்திரிசொல் வாரணம்- இது யானையுங் கோழியுஞ் சங்கு முதலாகிய பலபொருள் குறித்த ஒருபெயர்த்திரிசொல்.

படர்ந்தான்-சென்றான்- இவை போயினான் என்கிற ஒருபொரு ள்குறித்த பலவினைத்திரிசொல்—வரைந்தான்-இது நீக்கினான் கொண் டான் என்கிற பலபொருள் குறித்த ஒருவினைத்திரிசொல்.

சேறும்- வருதும்-இவற்றினுண்டயறும் தும் விகுதிகள்தன்மை ப்பன்மை யெதிர்காலம் என்கிற ஒருபொருள்குறித்த பலவிடைத்திரி சொல்—கொல் இது- ஐயம்- அசைநிலை- என்கிறபலபொருள்குறித்த ஓரிடைத்திரிசொல்.

சால் - உறு - தவ - நனி- கூர் - கழி - இவை மிகல் என்கிற ஒரு பொருள் குறித்த பலவுரித்திரிசொல்—கடி என்கிறது-காப்பு-கூர்மை அச்சம்-கரிப்பு-விளக்கம்-சிறப்பு-மணம்-முதலிய பலபொருள் குறித் த ஒருரித்திரிசொல் மற்றவையுமிப்படியே வருதல்காண்க. (௰௫)

௨௭௩. செந்தமிழ்நிலஞ்சேர்பன்னிருநிலத்தினுமொன்பதிற்றி

ண்டினிற்றமிழொழிநிலத்தினுந், தங்குறிப்பின வேதிசைச்சொலென்ப

இது. நிறுத்தமுறையால் பெயர்வினை யிடையுரிகளை இடுகுறிகாரணமென்னுஞ் சூத்திரமுதலாக இவ்வதிகாரத்தி னுந்தியல்களாலு முணர்த்திவைத்து ஒழிந்த திசைவடசொற்களிலே திசைச்சொல்லாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) செந்தமிழ்நிலம் - செந்தமிழ்நிலத்தை— சேர்-சேர்ந்த— பன்னிரு நிலத்தினும்-பன்னிரண்டு கொடுந்தமிழ்நிலங்களிலும்— ஒன்பதிற்றிரண்டினில் பதினெண்மொழிகளுள்— தமிழ் தமிழ்நீங்கலானது— ஒழி ஒழிந்த— நிலத்தினும்-நிலங்களிலுமுள்ளோர் —தங்குறிப்பின- தங்குறிப்பினவாய் அத்திசைகளினின்றுஞ் செந்தமிழ்நிலத்துவந்துவழங்குவன— திசைச்சொலென்ப-திசைச்சொலென்று சொல்லுவர்புலவர்-எ-று.

(கொடுந்தமிழ்நாடுபன்னிரண்டாவன.)

தென்பாண்டிகுட்டங் குடங்கற்காவேண்பூழி, பன்றியருவாவதன்வடக்கு, நன்றாய, சீதமலாடு புனனாடுசெந்தமிழ் சேரேதமில்பன்னிருநாட்டெண்.

தென்பாண்டிநாட்டார்-ஆவினைப்பெற்றமென்பர்— குட்டநாட்டார் தாயைத்தள்ளையென்பா— குடநாட்டார் தந்தையை அச்சனென்பர்— கற்காநாட்டார்-வஞ்சரைக்கையரென்பர்— வேணாட்டார்- தோட்டத்தைக்கிழாரென்பர்— பூழிநாட்டார் - சிறுகுளத்தைப் பாழியென்பர் — அருவாநாட்டார் - செறுவைச்செய்யென்பர்— அருவாவடதலையார் புளியையெகினென்பர்— சீதநாட்டார்- தோழனையெலுவனென்பர்— இவைமுதலானவையும்-தமிழ்மேற்கூறும் வடமொழியுமொழிந்த பதினாறுநிலத்து மொழிகளுள்ளேற்பனவுஞ் செந்தமிழோடுகலந்து வருதல்காண்க. (௰௬)

௨௭௪. பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானு, மீரெழுத்தானு மியைவனவடசொல் ... ... ... ... ... ... ... *

இது வடசொல்லாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) பொதுவெழுத்தானும்-ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தானும்— சிறப்பெழுத்தானும்-ஆரியத்திற்கே யுரிய சிறப்பெழுத்துத்திரிந்தவெழுத்தானும்— ஈரெழுத்தானும்-இவ்விரண்டெழுத்தினானும்— இயைவன- செந்தமிழ்ச்சொல்லையொப்பனவாகி வடதிசையிலிருந்துசெந்தமிழ்நிலத்துவந்துவழங்குவன— வடசொல்-வடசொல்லாம்- எ-று. (வரலாறு) அமலம்- கமலம்-காரணம்- காரியம்- இவைபொதுவெழுத்தானியைந்தன— சுகி போகி-சுத்தி- இவைசிறப்பெழுத்தானியைந்தன— அரன்-அ

ரி-கடினம்-கலம்-இவை யிரெழுத்தாலு மியைந்தன-மற்றவையு மிப்படியே. (யள)

(பெயர்க்கிளவி)

௨௭௫. இடுகுறி காரண மரபோ டாக்கந், தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா, வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன், றேற்பவும் பொதுவு மாவன பெயரே ..... ... ... ... ... ... *

இது இவ்வதிகாரத்தைந்தியலானு முணர்த்தவைத்த பெயர்வினையிடையுரி என்கிற நான்கினுள்ளே பெயரிலக்கண முணர்த்துகின்றபடியாகத் தொடங்கி அதன் பொதுவிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்,) இடுகுறி இடுகுறியும்—காரணக்குறி-காரணக்குறியும்—மரபு மரபினையும்—ஆக்கம்-ஆக்கப்பாட்டினையும்—தொடர்ந்து - தொடர்ந்து—தொழிலல- வினையாலணையுங்காரணக்குறியல்லாதவை—காலம்- காலத்தை—தோற்றா காட்டாமல்—வேற்றுமைக்கு- எட்டுவேற்றுமையுஞ் சார்தற்கு—இடனாய் இடமாகி—திணை இருதிணையிலும்- பால் ஐம்பாலிலும்—இடத்து-மூவிடத்திலும்—ஒன்று ஒன்றனை—ஏற்பவும்- ஏற்பனவும்—பொதுவும் பலவற்றினையேற்பனவும்— ஆவன-ஆகிவருவன—பெயர் பெயர்களாம்-என்று

(வரலாறு.)

மரம்-வினை பனை-இவை முதலானவை இடுகுறிமரபு—அவன்-அவள் பறவை- விலங்கு இவை முதலானவை காரணக்குறிமரபு—பொன்போலுங் கள்ளிப்பொறிபறக்குங்கானிலே பொன்பேழைசெல்வத்தையீந்தனளே-மின்போலு-மான வெண்மூட்டைக்கு மாறுபடுகவ்வர் போங்-கானவெண்மூட்டைக்குங்காடு- இப்பொய்யாமொழிப்புலவன் பாட்டில்வெட்டுக்குமான் தன்பெயர்மூட்டையென்றுபாடச்சொல்லுதலால் இது முதலானவை இடுகுறியாக்கம்—பொன்னன்- பூணன்-மலைமகன்மகனென்மாற்றோர்கூற்றே. இவை முதலானவை காரணக்குறியாக்கம்—நடந்தவனை நடந்தோனை இவை முதலாகிய வினையாலணையுங்காரணக்குறி காலங்காட்டும்— [மரம்-பனை-முதலாகிய விடுகுறிப்பெயரும்- அவன் அவள்- முதலாகியகாரணப்பெயரும் அவ்விலக்கணங்களோடுதோற்றிய பொருள்களுக்கெல்லாந் தொன்றுதொட்டு மரபாற்றிவருவன-மூட்டை முதலாகிய விடுகுறிப்பெயரும் பொன்னன் முதலாகியகாரணப்பெயரும்-நடுவிலேஒருவரால் ஆக்கப்பட்டுவருவனவாம்

௨௭௬. அவற்றுள்- இனையெண்குறூஉமுதற்பலபொருடிணைந்தே யூர்வானகப்புற முதலதிலன்யாண், டிருதுமதிநாளாதிக்காலந், தோள்குழன்மார்புகண் காதுமுதலுறுப், பளவறிவொப்புவடிவுநிறங்கதி

சாதிகுடிசிறப்பாதிப்பல் குணனே, யோதலீத லாதிப்பல்வினை, யிவையடைசுட்டு வினாப்பிறமற்றோ, டுற்றனவ்வீறு நம்பியாடூஉ, விடலைகோ வேள் குரிசிறோன்ற, லின்னனவாண்பெய ராகுமென்ப ... *

இ-து. முன்னே திணைபாலிடத்தொன்றேற்பவுமென்றவற்றுளுயர்திணையாண்பாற்குரியபெயருணர்த்துகின்றது (இ-ள்.) அவற்றுள்- மேற்பெயரொன்றவற்றுள் — கிளை- சுற்றமும் — எண்- எண்ணும் — குழூஉ- கூட்டமும் — முதல் முதலாகிய — பலபொருளோடு - பலபொருள்களோடும் — திணை ஐந்திணையும் — தேம்- தேயமும் — ஊர்- ஊரும — வான்- வானும் — அகம்- அகமும் — புறம்- புறமும் — முதல்- முதலியனவாகிய — நிலனொடு- இடங்களோடும் — யாண்டு- வருடமும் — இருது- பருவமும் — மதி- மாதமும் — நாள்- நாண்மீனும் — ஆதி- முதலாகிய — காலமோடு- காலங்களோடும் — தோள்- புயமும் — குழல்- மயிரும் — மார்பு- மார்பும் — கண்- கண்ணும் — காது- காதும் — முதல் முதலாகிய — உறுப்போடு- அவயவங்களோடும் — அளவு- அளவும் — அறிவு- அறிவும் — ஒப்பு- ஒப்பும் — வடிவு- வடிவும் — நிறம்- நிறமும் — கதி- நாற்கதியும் — சாதி- குலமும் — குடி- குடியும் — சிறப்பு- சிறப்பும் — ஆதி- முதலாகிய — பல்குணனொடு- பலகுணங்களோடும் — ஓதல்- ஓதுதலும் — ஈதல்- கொடுத்தலும் — ஆதி- முதலாகிய — பலவினையொடு- பலதொழில்களோடும் — இவை- இவற்றை — அடை- அடைந்த — சுட்டுவினாப்பிறமற்றொடு- சுட்டும் வினாவும் பிறவும் மற்றும் ஆகியநான்கனோடும் — உற்ற- பொருந்திய — னவ்வீறு- னகரமெய்யீற்றுப்பெயர்களும் — நம்பி யாடூஉவிடலைகோவேள்குரிசிறோன்றல்- நம்பிமுதலாகச்சொல்லப்பட்டவிப்பெயர்களும் — இன்னன- இவைபோல்வனபிறவும் — ஆண்பெயராகும்- உயர்திணையாண்பாற்பெயர்களாகும் — என்ப- என்று சொல்லுவர்புலவர்-எ-று.

(வரலாறு)

பொருளால்வருபெயர்களாவன.

தமன்-நமன்-நுமன்-எமன்-தம்மான்- நம்மான்- நும்மான்-எம்மான்-கிளையால்வருபெயர்.—ஒருவன்- எண்ணால்வருபெயர்.—அவையத்தான்-குழூஉவால்வருபெயர் —பொருளன்-பொன்னன்- முடியன்-இவைமுதலானவை முதலென்றதனால்வருபெயர்.

இடத்தால்வருபெயர்களாவன.

வெற்பன்-பொருப்பன்- குறிஞ்சித்திணையால்வருபெயர் —மறவன்-எயினன்- பாலைத்திணையால்வருபெயர்.—இடையன்-ஆயன்-முல்லைத்திணையால்வருபெயர்.—ஊரன்- மகிழ்நன்- மருதத்திணையால்வரு

பெயர்.—சேர்ப்பன் - துறைவன் - நெய்தற்றிணையால்வருபெயர்.—சோழியன்-கொங்கன்-தேயத்தால்வருபெயர்.—கருவூரான்-மதுரையான்-ஊரால்வருபெயர் —வானத்தான்-அகத்தான்-புறத்தான்-என்பனவான்முதலாகிய மூன்றுமும்வருபெயர் —மண்ணகத்தான்-பாதலத்தான்-இவைமுதலானவை முதலவென்றதனால் வருபெயர்.

(காலத்தால் வருபெயர்களாவன.)

மூவாட்டையான் - பிரபவன்-வருடத்தால்வருபெயர்.— வேனிலான்-காரான்-பருவத்தால்வருபெயர்.—தையான்-மாசியான் - மாதத்தால்வருபெயர். — ஆதிரையான்-ஓணத்தான்-நாண்மீனால்வருபெயர்—நெருநலான்-காலையான்-மாலையான் - ஆதியென்றதனால் வருபெயர்.

(சினையால் வருபெயர்களாவன.)

திணிதோளான்-செங்குஞ்சியான்-வளமார்பான் - செங்கண்ணன்-குழைக்காதன்-என்பனதோண்முதலிய வைந்துறுப்பாலும் வருபெயர் — குறுந் தாளன் - நெடுங்கையான் - முதலென்றதனால் வருபெயர்.

(குணத்தால் வருபெயர்களாவன.)

பெரியன்-சிறியன்-அளவினால்வருபெயர்.—அறிஞன் -புலவன்-அறிவால்வருபெயர்—பொன்னனையான்-மணியனையான் -ஒப்பால்வருபெயர்.—கூனன்-குறளன்-வடிவால்வருபெயர்.—கரியன் - செய்யன்-நிறத்தால்வருபெயர்.—மானுடவன் - தேவன்-கதியால்வருபெயர்—அந்தணன்-அரசன்- வணிகன்-வேளாளன்-சாதியால்வருபெயர்.—சேரன்-சோழன்-பாண்டியன்-குடியால்வருபெயர் .— ஆசிரியன் -படைத்தலைவன்-சிறப்பால்வருபெயர்.—நல்லன்-தீயன் -இவைமுதலானவை ஆதியென்றதனால் வருபெயர்.

(தொழிலால்வருபெயர்களாவன )

ஓதுவான்-ஈவான் -ஓதன்முதலாகிய விரண்டாலும் வருபெயர்.—கணக்கன்-தச்சன்-என்பன ஆதியென்றதனால் வருபெயர்.

(சுட்டால்வருபெயர்முதலானவை)

அவன்-இவன்-உவன்-எ-ம். எவன்-ஏவன் - யாவன்-எ-ம். பிறன் எ-ம். மற்றையான். எ-ம். வருவன் சுட்டுமுதலாகிய நான்காலும் வருபெயர். நம்பிமுதலாகிய வேறுபெயர்களும் உலகத்திடையிற் காண்க, இன்னனவென்றதனால் வில்லி-வாளி-கிள்ளி-சென்னி-எந்தல்- செம்

மல்-ஏருஇ-காவிதி-குமரி-தோன்றல் - அண்ணல் - என உயர்திணையா ண்பாற்பொருள்குறித்து வருவனவெல்லாங்கொள்க (௰௯)

௨௭௭ இளைமுதலாக் கிளந்தபொருள்களு, ளவ்வொற்றிகரக்கே ற்றவீற்றவுந், தோழிசெவிலிமகடூஉநங்கை, தையலோடின்னன பெ ண்பாற்பெயரே ... ... ... ... ... ... ... ... ...*

இ-து. உயர்திணை பெண்பாற்குரிய பெயருணர்த்துகின்றது (இ-ள்.) இளைமுதலாக-ஈற்றுமுதலாக—கிளந்த - முன்சூத்திரத்திலெடுத்துச்சொல்லப்பட்ட—பொருள்களுள் - அறுவகைப்பொருள்களுள் — ளவ்வொற்றிகரக்கு - ளகரமெய்யும் இகரவுயிரும் பொருந்துதற்கு—ஏற்ற ஏற்ற—ஈற்றவும்-ஈற்றுப்பெயர்களும்—தோழி செவிலி மகடூஉ நங்கை தையலோடு - தோழிமுதலாக வெடுத்துச் சொல்லப்பட்ட பெயர்களும் ஆகிய விவற்றுடனே—இன்னன- இவைபோல்வனபிறவும் — பெண்பாற்பெயர் - உயர்திணைப் பெண்பாற் பெயர்களாம்-எ-று.

(வரலாறு.)

தமள்-நமள்-நுமள்- எமள் - எ-ம் ஒருத்தி எ-ம் அவையத்தாள் அவையத்தி-எ-ம் பொன்னாள் பொன்னி எ-ம். வருவன பொருட்பெயர் —குறத்தி எயிற்றி-ஆய்ச்சி உழத்தி-பரத்தி-எ-ம் சோழிச்சி-எ-ம். கருவூராள்-கருவூரி-எ-ம் வானத்தாள்-வானத்தி எ-ம். அகத்தாள் - அகத்தி எ-ம் புறத்தாள் - புறத்தி-எ-ம். மன்னகத்தாள் - மன்னகத்தி - எ-ம் வருவன இடப்பெயர் — மூவாட்டையாள் - எ-ம் வேனிலாள்-எ-ம். தையாள் எ-ம் ஆதிரையாள் - எ-ம் நெருநலாள் - எ-ம் வருவன காலப்பெயர்— திணிதோளாள்- திணிதோளி எ-ம் சுரிகுழலாள்-சுரிகுழலி-எ-ம். நெடுமார்பாள்-நெடுமார்பி-எ-ம் தடங்கண்ணாள்- தடங்கண்ணி-எ-ம். குழைக்காதாள்-குழைக்காதி எ-ம் குறுந்தாளாள் - குறுந்தாளி - எ-ம் வருவன சினைப்பெயர் — பெரியள் - எ-ம். புலமையள்- எ-ம். பொன்னொப்பாள்- எ-ம் கூனள்-கூனி எ-ம் - கரியள் எ-ம், மாறுடத்தி எ-ம்- பார்ப்பினி - எ-ம். படைத்தலைவி - எ-ம். நல்லள்-எ-ம். வருவன குணப்பெயர்- குடிப்பெயர் வந்தவிடத்துக் காண்க — ஓதுவாள்- எ-ம். ஈவாள்-எ-ம், தச்சிச்சி- எ-ம். வருவனதொழிற்பெயர். — அவள்-இவள்-உவள்-எ-ம் எவள்-ஏவள்-யாவள்-எ-ம். பிறள்-எ-ம் மற்றையாள் - எ-ம். வருவனசுட்டு முதலியவற்றானவரும்பெயர், தோழிமுதலிய வைந்துபெயரும் உரைக்கிடையிற்காண்க. இன்னனவென்றதனால் பேதை-பெதும்பை செவிலி-இருளை-மாது-எனவுயர்திணைப்பெண்பால் குறித்துவருவனவெல்லாங்கொள்க, (௨௰)

௨௭௮ கிளந்தகிளைமுத லீற்றாக்கீற்றவுங், கள்ளொனீற்றினோம்

றவும்பிறவும், பல்லோர் பெயரின்பகுதியாகும் ... ... ... ... *

இது, பலர்பாற்குரியபெயர் உணர்த்துகின்றது, (இ-ள்) கிளந்த-முன்னேசொல்லப்பட்ட—கிளைமுதல்-சுற்றமுதலாகிய வறுவகைப் பொருளையும்—உற்ற பொருந்திய —ரவ்வீற்றவும்-ரகர மெய்யீற்றுப் பெயர்களும்—கள்ளெனீற்றின்-கள்ளென்னும்விகுதியையீறாகவுடைய பெயர்களுள்—ஏற்பவும் - இவ்விடத்துக்குப்பொருந்தி வருவனவும் —பிறவும்-இவைபோல்வனபிறவும் —பல்லோர்பெயரின் பகுதியாகும்-பலர்பாலின்பெயர்களாம் எ-று, [கள்விகுதி அஃறிணைப்பன்மைக்கும்வருதலால் ஏற்பவுமென்றார்,] (வரலாறு, தமர் நமர்-நுமர்- எமர்-ஒருவர்-எனப்பொருளாதியாறனோடும் ஒட்டுக — கோக்கள் -மனுக்கள் எனப்பகுதிப்பொருள்விகுதியாகவும் — தமர்கள்-நமர்கள் -என விகுதிமேல்விகுதியாகவும் - கள்விகுதி வருமென்றறிக — பிறவென்றமையால் மாந்தர்-மக்கள் -எனப்பலர் பாலைக்குறித்துவருவன வெல்லாங்கொள்க. (௨௧)

௨௭௯, வினைச்சுட்டுடனும் வேறுமாம்பொரு, ளாதி யுறுதுச்சுட்டணையாய்து, மொன்றனெண்ணின்னனவொன்றன்பெயரே ... *

இது, அஃறிணையொருமைப் பாற்குரிய பெயருணர்த்துகின்றது, (இ-ள்) வினைச்சுட்டுடனும்- வினாவினுஞ் சுட்டினுமமைந்து அவற்றுடனாகியும் — வேறுமாம் வினாவுஞ் சுட்டவும் படாது வேறாகியும்வருகிற —பொருளாதி-பொருளாதியாறனையும்—உறு-பொருந்திய —து-துவவிகுதியீற்றுப்பெயரும்—சுட்டணையாய்தம்- சுட்டோடு கூடிய வாய்தத்தைப்பொருந்திய துவ்விகுதியீற்றுப் பெயரும் — ஒன்றனெண் ஒன்றென்கிற வெண்ணுப்பெயரும் — இன்னன- இவைபோல்வனபிறவும்— ஒன்றன்பெயர்-அஃறிணை யொருமைப்பாற் பெயராகும் எ-று. வரலாறு எது எது-யாது எம். அது-இது உது-எம் குழையது-நிலத்தது-மூலத்தது- கோட்டது-குறியது- ஆடலது- எ-ம் அஃது- இஃது-உஃது-எம். ஒன்று-எம் -வரும் [இன்னனவென்றமையால்-பிறிது, மற்றையது - என அஃறிணைப்பொருளைக் குறித்து வருவனவெல்லாங்கொள்க.] (௨௨)

௨௮௰. முன்னாய்வொடுவருவையவ்வுஞ், சுட்டிறுவவ்வுங் கள்ளிறுமொழியு, மொன்றலவெண்ணுமுள்ளவில்ல, பல்லசில்லவுளவில பல சில, வின்னவும்பலவின் பெயராகும்மே ... ... ... ... *

இது, அஃறிணைப்பன்மைப்பாற்குரிய பெயருணர்த்துகின்றது. (இ-ள்.) முன்னை-முன்னேசொல்லப்பட்ட — அவ்வொடு-வினைச்சுட்டுடனும் வேறுமாம் பொருளாதியாறனோடும் — வரு-ஏற்றபடிவருகிற—வை(யும்)-வைவிகுதியீற்றுப்பெயர்களும்—அவ்வும் -அகரவீ

ற்றுப்பெயர்களும்—சுட்டிறுவவ்வும் - வகரமெய்யீற்றுச்சுட்டுப் பெயர்களும்—கவ்விறுமொழியும்-கள்ளென்னும்பகுதிப்பொருள் விகுதியீற்றுப்பெயர்களும் — ஒன்றலெண்ணும் - இரண்டு முதலாகியவெண்ணுகுபெயர்களும் — உள்ள வில்ல பல்ல சில்ல வுள வில பல சில- உள்ளவென்பது முதலாகிய குறிப்புவினை யாலணைந்த வெட்டுப்பெயர்களும்—இன்னவும்-இவைபோல்வனபிறவும் — பலவின்பெயராகும்-அஃறிணைப்பன்மைப்பாற் பெயர்களாகும்-எ-று,

(வரலாறு) எவை - ஏவை - யாவை-எ-ம். அவை - இவை - உவை எ-ம். நெடியவை - கரியவை - எ-ம். வைவிகுதிப் பெயர்கள் வரும்—பொருள - பொருளன- அகத்த-அகத்தன- மூலத்த மூலத்தன- கோட்ட-கோட்டன - கரிய-கரியன- ஓதுவ- ஓதுவன - என - அன்சாரியைபெற்றும் பெறாதும் அகரவிகுதிப் பெயர்கள்வரும்.—அவ் - இவ்-உவ்-எனவகர மெய்யீற்றுச்-சுட்டுப் பெயர்கள்வரும்.— யானைகள் குதிரைகள்- எனக்கள்விகுதிப்பெயர்கள்வரும். — இரண்டு - மூன்று- பத்து -நூறு - எனஎண்ணுகுபெயர்கள் வரும் —உள்ளமுதலாகியவெட்டும் உரைக்கிடையிற்காண்க. [இன்னவுமென்றமையால் - யா - பிற- மற்றைய-எனஅஃறிணைப்பன்மைப்பொருள் குறித்துவருன வெல்லாக்கொள்க. — இவ்வைம்பாற்பெயர்களுள்-ஆண்பாற்பெயர்க்குனவ்வீறெனவே அன்-ஆன் - மன் - மான் - ன் - இவ்வைந்தும்.பெண்பாற்பெயர்க்கு - ளவ்வொற்றெனவே அள் - ஆள்-ள் - இம்மூன்றும். பலர்பாற்பெயர்க்கு - ரவ்வீற்றவுமெனவே அர் ஆர் - மார் - ர்-இந்நான்குமடங்குதலறிக. (௨௬)

- பால் பகா அஃறிணைப் பெயர் -

௨௮௧, பால்பாகவஃறிணைப்பெயர்கள்பாற்பொதுமைய ... *

இது, முன்னேபொதுவுமாவன பெயரொன்றூர் அவற்றுள்அஃறிணையிருபாற்குமுரிய பொதுப்பெயருணர்த்துகின்றது, (இ-ள்) அஃறிணை-அஃறிணைப்பெயர்களுள்— பால்பகா - பால்பகுக்கப் படாத—பெயர்கள்-பெயர்களனைத்தும்—பால்-அத்திணையிருபாலுக்கும்—பொதுமைய-பொதுப்பெயர்களாம்,எ-று, வரலாறு) பறவைவந்தது- பறவைவந்தன-மாய்வளர்ந்தது-மறம்வளர்ந்தன-எனவரும் இவைபறவை-அலரி-எனப்பகுபதமும்,மரம்-பனை,எனப்பகாப்பதமுமாகவரும்.

௨௮௨, முதற்பெயர்நான்குஞ்சினைப்பெயர்நான்குஞ், சினைமுதற்பெயரொருநான்குமுறையிரண்டுந், தன்மைநான்கு முன்னிலையைந்து, மெல்லாந்தாந்தானின்னனபொதுப்பெயர் ... ... ... *

இது.இருதிணைக்குமுரியபொதுப்பெயர்களைத்தொகுத்து உணர்த்துகின்றது. (இ-ள்,) முதற்பெயர் நான்கும் முதற்பெயராகிய நா

ன்குபெயரும்- சினைப்பெயர் நான்கும் - சினைப்பெயராகிய நான்கு பெயரும்—சினைமுதற்பெயரொருநான்கும் - சினைமுதற்பெயராகிய நான்குபெயரும் — முறைப் (பெய) ரிரண்டும்-முறைப் பெயராகிய விரண்டுபெயரும்—தன்மைப் (பெயர்) நான்கும்-தன்மைப் பெயராகிய நான்குபெயரும் — முன்னிலைப் (பெய) ரைந்தும் - முன்னிலைப் பெயராகிய வைந்துபெயரும் — எல்லாந்தாந்தான் - எல்லாம் - தாம் தான்என்கிறமூன்று பெயரும்—இன்னன - இவைபோல்வனபிறவும் —பொதுப்பெயர்- இருதிணைக்கும் பொதுப்பெயர்களாம். எ-று [இன்னன வென்றமையால் - சூரியனுதித்தான் - சூரியனுதித்தது - என வொருபொருளே இருதிணையிலும் வரும்பொதுப்பெயர் முதலானவையும். ஊமைவந்தான் - ஊமைவந்தாள் - எனவுயர்திணை யிருபாலிலும் வரும்பொதுப்பெயர்முதலானவையும்-தன்மை முன்னிலைவினையாலணையும்பெயர்களுங்கொள்க. (௨௫)

௨௮௫. ஆண்மைபெண்மையொருமைபன்மையினுமந் நான்மைகளாண்பெண்முறைப்பெயர் ... ... ... ... ... ... ...*

இதுமுன்னேதொகுத்துச்சொல்லப்பட்டவைகளுள்ளேமுதற்பெயர்முதல்முறைப்பெயரீறாகக்கிடந்தவைகளைவகுத்து உணர்த்துகின்றது (இ-ள்) ஆண்மைபெண்மை யொருமைபன்மையின்-ஆண்மைமுதலாகியவிந் நான்குபாலுங்காரணமாக— அம் - அம்முதற் பெயருஞ்சினைப்பெயருஞ் சினைமுதற்பெயரும் — நான்மைகளாம் - நந்நான்காகும்—ஆண்பெண்-ஆண்மைபெண்மை என்கிறவிருபாலுங்காரணமாக —முறைப்பெயர் - முறைப்பெயர்—இரண்டாம்-இரண்டாகும் எ-று.

(வூலாறு சாத்தன் -"ஆண்மைமுதற்பெயர் சாத்தி - பெண்மைமுதற்பெயர், கோதை- ஒருமைமுதற்பெயர் கோதைகள் - பன்மைமுதற்பெயர், ஆ-சு, முடவன் - ஆண்மைச்சினைப்பெயர் முடத்தி பெண்மைச்சினைப்பெயர், செவியிலி - ஒருமைச் சினைப்பெயர். செவியிலிகள்- பன்மைச் சினைப்பெயர் ஆ-சு, முடக்கொற்றன் - ஆண்மைச்சினைமுதற்பெயர், முடக்கொற்றி - பெண்மைச்சினை முதற்பெயர் கொடும்புறமருகி - ஒருமைச்சினை முதற்பெயர் கொடும்புறமருதிகள், பன்மைச்சினை முதற்பெயர் ஆ-சு, தந்தை - ஆண்மைமுறைப்பெயர். தாய் பெண்மை முறைப்பெயர் ஆ-உ.] (௨௬)

௨௮௪. அவற்றுள் ஒன்றேயிருதிணைத்தன்பாலேற்கும் ... *

இது திணைப்பொதுவாய் நின்ற பெயர்கள் பாற் பொதுவாய் நிற்குமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) அவற்றுள் - முதற்பெ

யர் முதலாகச் சொல்லப்படு மிருபத்தாறும் பிறவுமாகிய பொது
பெயர்களுள் — ஒன்றே - ஒவ்வொன்றே — இருதிணை - இருதிணை
யிலும் — தன்பால்-தன்றன்பாலை — ஏற்கும் - ஏற்றுவரும்—எ-று
[எனவே ஆண்மைப்பொதுப்பெயர் இருதிணையாண்பாலையும் - பெ
ண்மைப் பொதுப்பெயர் இருதிணைப் பெண் பாலையும் - ஒருமைப்
பொதுப்பெயர் உயர்திணையாணொருமை பெண்ணொருமை களையும்
அஃறிணையொருமையையும்- பன்மைப் பொதுப்பெயர் இருதிணைப்
பன்மையையும்-ஏற்குமென்றுணர்ந்தாயிற்று.] — (வரலாறு.) சாத்
தனிவன் - சாத்தனிவ்வெருது-எ-ம், சாத்தியிவள்- சாத்தியிப்பசு எ-ம்.
கோதையிவன் - கோதையிவள் - கோதையிது. எ-ம். கோதைகளி
வர் கோதைகளிவை எ-ம். தந்தையிவன் - தந்தையிவ்வெருது எ-ம்
தாயிவள் - தாயிப்பசு எ-ம். யானம்பி யானங்கை - யான்பூதம்-எ-ம்.
யாமைந்தர்-யாம்பூதங்கள்-எ-ம். நீநம்பி நீ நங்கை - நீபூதம் - எ-ம்நீர்ம
க்கள் - நீர் பூதங்கள்-எ-ம் அவரெல்லாம் - அவையெல்லாம்-எ-ம் அவ
ர்தாம்-அவைதாம் எ-ம். அவன்றான்.-அவடான் - அதுதான். எ-ம். வ
ரும்-மற்றவைகளு மிப்படியே யிருதிணையிலுங் கூட்டுக. (உஎ)

உஅரு. தன்மை யான்யா நாமுன்னிலை, யெல்லிர்நீயிர் நீவிர்நீர்
நீ, யல்லன படர்க்கை யெல்லா மெனல்பொது... ... ... ... *

இ-ள். தன்மைநான்கும் முன்னிலையைந்தும் என்னப்பட்டவை
களையும் இடத்தொன்றேயாம் பொதுவுமென்னப் பட்டவைகளையு
ம் உணர்த்துகின்றது - (இ-ள்) தன்மை - தன்மைப்பெயர் நான்காவ
ன—யானும்யாநாம்-யான் - நான் யாம்- நாமென்பனவாம்— முன்னிலை
முன்னிலைப்பெயரைந்தாவன — எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ-எல்லீர் நீ
யிர் நீவிர் நீர் நீ என்பனவாம் — அல்லன-இவ்வொன்பதுமல்லாதபெ
யர்களெல்லாம்—படர்க்கை- படர்க்கையிடத்திற்குரியனவாம்—எல்லா
மெனல்- அவற்றுள் எல்லாமென்னும் பெயரொன்றும்—பொதுமூவி
டத்திற்குமுரித்தாம் எ-று எல்லாமென்பது மூவிடத்திலும்வருமாறு-
யாமெல்லாம்-நீமெல்லாம்-அவரெல்லாம்- அவையெல்லாம்- எனவரும்.

உஅ௬. வினையின்பெயரே படர்க்கைவினையா - லணையும்பெய
ரே யாண்டுமாகும் ... ... ... ... ... ... ... ... *

இது, வினையின்பெயர்க்கு எய்தியவிடமிகந்து படாமற் காத்
தலும் வினையாலணையும்பெயர்க்கு அதனைவிலக்கி யிடம்வகுத்தலும்
உணர்த்துகின்றது. (இ-ள்) வினையின்பெயரே-தொழிற்பெயர்களே
படர்க்கை- படர்க்கை யிடத்திற்குரியவாகும் — வினையாலணையும்
பெயர் - வினைமுற்றுமேலணையும்பெயர்களானவை — யாண்டுமாகும்·த

னித்தனி மூவிடத்திற்கு முரியவாகும்-எ-று. (வரலாறு.) உணல்- நின ல்-யானுண்டேன்-நீயுண்டாய்-அவனுண்டான் -எனவரும். [யானுண ல்-நீயுணல்-அவனுணல். எனமூவிடவினைபோ லொற்றுமைப்பட நிற் பனவற்றிக்கேயல்லாமல் எனதுணல்-நினதுணல்-அவனதுணல் - என் றாற்-உணல்-என்றும்-வேற்றுமைப்பட்டுநிற்கும். வினையின்பெயர்க ட்கு எய்திய விடமிருந்து படுதலில்லை யெனவுணர்க. (௨௬)

உ௩௭ தான்யானானீ யொருமை பன்மைதாம்; யாநாமெலாமெ லிர்நீயிர் நீர் நீவிர் ... ... ... . .. ... .... ... *

இது. தான்முதலாகிய பன்னிரண்டு பொதுப் பெயர்களும் ஆ ணைமை பெண்மை யொருமை பன்மை என்கிற நான்குபொதுப்பா லகளுள் இப்பாலினமைந்து கிடந்தனவென்பது உணர்த்துகின்றது (இ-ள்.) தான்யானாநீ தான் யான் நான் நீ என்கிறநான்கும்—ஒரு மை-இருதிணை முக்கூற்றொருமைப் பெயர்களாம் — தாம்யாநாமெ லெல்லீர் நீயிர் நீர் நீவிர் - தாம் யாம் நாம் எல்லாம் எல்லீர் நீயிர் நீர் நீவிர் என்கிறவெட்டும் — பன்மை - இருதிணை யிருகூற்றுப்பன் மைப்பெயர்களாம் எ-று. - (௩௰)

உ௩௮ ஒருவனொருத்தி பெயர்மேலெண்ணில ... ... *

இது எண்ணல்வரு முயர்திணை பெயர்களாகோர் புறனடை புணர்த்துகின்றது. (இ-ள்.) ஒருவனொருத்தி ... ஒருவன் ஒருத்தி எனவருவனவன்றி — மேல்- ... மேல்— ... இரண்டுமுதலாகியவெண்களால் — பெயர் - இவ்வாண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும்—இல-வருவன இல்லாம்- எ-று. (௩௧)

உ௩௯ ஒருவரென்ப துயர்திருபாற்றாய்ப் பன்மைவினைகொளு ம் பாங்கிற்றென்ப ... ... ... ... ... ... ... ... ....*

இதுவுமது. (இ-ள்) ஒருவரென்பது ஒருவ ரெனவருமுயர்திணைச்சொ ல் —உயர்திருபாற்றாய் உயர்திணையாண் பெண்ணிவ்விருபாற்கும் பொ துவாய்—பன்மைவினை-அத்திணைப் பன்மைவாய்பாட்டுவினையை— யொருவரும் - சொல்லிமுடிகின்ற —பாங்கிற்று-பாங்கினையுடைத்தாகும் —எனப-என்றுசொல்லுவர்புலவர். எ-று.[1] வரலாறு ஆடவருளொரு வரறத்தின்வழிநிற்பார், பெண்டிருளொருவர் கொழுநன்வழிநிற்பார் எனவரும். (௩௨)

௨௪௰. பொருண்முதலாறோ டளவைசொற்றானம், கருவிகாரிய ங்கருத்தனுதிய, வொன்றன்பெயரானதற்கியைபிறிதைத், தொன்மு றையுரைப்பனவாகுபெயரே ... ... ... ... ... ... .. *

இது • முன்சொல்லப்பட்ட காரணப்பெயர்களுள் ஆகுபெயராமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) பொருண்முதலாறோடு-பொருளிடங்காலஞ் சினைகுணந்தொழிலென்னுமாறுடனே — அளவை- இவற்றின்பகுதியவாகிய நால்வகையளவையும்— சொல்-சொல்லும்—தானி-தானியும்—கருவி-காரணமும்—காரியம்-காரியமும்— கருத்தன் -வினைமுதலும்— ஆதியுள்-ஆகியாகவரும்பொருள்களுள் — ஒன்றன் -ஒருபொருளினது—பெயரான்-இயற்பெயரால் — அதற்கு- அப்பொருளினுக்கு — இயை-இயைந்த — பிறிதை-பிறிதொருபொருளை— தொன்முறை-தொன்றுதொட்டுவருமுறையே — உரைப்பன-சொல்லப்பட்டுவருவன—ஆகுபெயர்-ஆகுபெயர்களாம்-என்று.

(வரலாறு.)

தாமரைபுரையுங் காமர்சேவடி- என்கிறவிடத்தே தாமரையென்கிற முதற்பொருளின்பெயர் அதன் மலராகிய சினைப்பொருளுக்கு ஆதலாற் பொருளாகுபெயராம.

அகனமர்ந்து செய்யாளுறையும் - என்கிற விடத்தே அகமென்கிற வுள்ளிடப்பெயர் அங்கிருக்கிற மனதிற்கு ஆதலால் இடவாகுபெயராம்.

காரறுத்தது-என்கிறவிடத்தே காரென்கிற மழைக்காலப்பெயர் அக்காலத்து விளையும்பயிருக்கு ஆதலால் காலவாகுபெயராம்.

வெற்றிலைநட்டான்- என்கிறவிடத்தே வெற்றிலையென்கிற சினைப்பெயர் அதன்முதலாகியகொடிக்கு ஆதலாற் சினையாகுபெயராம்

நீலஞ்சூடினாள்-என்கிறவிடத்தே நீலமென்கிற நிறப்பெயர் அதனையுடைய குவளைமலருக்கு ஆதலாற்குணவாகுபெயராம்.

வற்றலுடனுண்டான்-என்கிறவிடத்தே வற்றலென்கிறதொழிற்பெயர் அதனையுடையவுணவிற்குஆதலாற்றொழிலாகுபெயராம்

காலாலே நடந்தான் என்கிறவிடத்தே காலென்கிற எண்ணலளவைப்பெயர் அவ்வளவைக்கொண்ட வுறுப்பிற்கு ஆதலால் எண்ணலளவையாகுபெயராம் — துலாக்கோல் - என்கிறவிடத்தே துலாவென்கிற எடுத்தலளவைப்பெயர், நிறைகோலிற்கு ஆதலால் எடுத்தலளவையாகுபெயராம் — அன்றியுமிது இருபெயரொட்டுமன்மொழியாகுபெயராம், — நாழியுடைந்தது- என்கிறவிடத்தே நாழியென்கிற முகத்தலளவைப்பெயர் அவ்வளவைக் கருவிக்கு ஆதலால் முகத்தலளவையாகுபெயராம் — கீழைத்தடி விளைந்தது - என்கிறவிடத்தே கீழைத்தடியென்கிற நீட்டலளவைப் பெயர் அதனாலளக்கப் பட்ட பூமிக்கு ஆதலால் நீட்டலளவையாகுபெயராம்,

இந்நூலுக்குரைசெய்தான் - என்கிறவிடத்தே உரையென்கிற சொல்லின்பெயர் நூற்பொருளுக்காதலாற் சொல்லாகுபெயராம்.

விளக்குமுரிந்தது - என்கிறவிடத்தே விளக்கென்கிற தீபத்தின் பெயர் அதற்கிடமாகிய தண்டினுக்கு ஆதலால் தானியாகுபெயராம்.

திருவாசகம் என்கிறவிடத்தே அடையடுத்தவாசமென்கிற முதற் காரணத்தின்பெயர் அதன்காரியமாகிய செட்டுக்கு ஆதலாற் காரியவாகுபெயராம்

இந்நூலலங்காரம் என்கிறவிடத்தே அலங்காரமென்கிற காரியத்தின்பெயர் அதையுணர்த்துதற்குக் கருவியாகிய நூலுக்கு ஆதலாற் காரணவாகுபெயராம்.

இந்நூல் திருவள்ளுவர் என்கிறவிடத்தே திருவள்ளுவர்-என்கிற கருத்தாவின்பெயர் அவராற்செய்யப்பட்டநூலுக்கு ஆதலாற் கருத்தாவாகுபெயராம்.

ஆதியென்றதனால்-காளைவந்தான்- பாவைவந்தாள்- எனவருமுவமையாகுபெயர் முதலானவையுந் தேவர்முதலியோர்பெயரை மக்களுக்கு இட்டுவழங்குவனவுங்கொள்க.

இன்னும் இவ்வாகுபெயர் பலவகைப்பட்டுவழங்கும். அவைவருமாறு. கார்என்கிற கருநிறத்தின்பெயர் அதனையுடையமேகத்தை யுணர்த்தும்போது ஆகுபெயராம் அம்மேகம் பெய்யும் பருவத்தை யுணர்த்தும்போது-இருமடியாகுபெயராம். அப்பருவத்தில் விளையும்பயிரையுணர்த்தும்போது மும்மடியாகுபெயராம். இப்படியே நான்மடியாகுபெயர் முதலானவையும் வருதல்காண்க.

வெற்றிலை நட்டான். இதில் இலை என்கிற சினைப்பெயர் வெறுமை என்கிற அடையடுத்துமுதலாகிய கொடிக்கு ஆகையால் அடையடுத்தவாகுபெயராம்.

வகரக்கிளவி. இதில்-வகரமாகிய வடமொழியானது கிளவியென்பதனியற்பொருளை விசேடித்துநில்லாது எழுத்தாகிய ஆகுபெயர்ப்பொருளைவிசேடித்து நிற்கக் கிளவியென்பதே ஆகுபெயர்ப் பொருளையுணர்த்த அவ்விருபெயருமொட்டி - நிற்கையால் இருபெயரொட்டாகுபெயராம் இதுபின்மொழியாகுபெயர்.

வெற்றிலை என்கிறது முதலானவைகளைப் பொற்றொடி முதலானவைகளைப்போல அன்மொழித்தொகைப் பெயரென் கொள்ளல்

காதோவென்றால் அன்மொழித்தொகைப்பெயர் பாடுகிற புலவன் தா ன்சொல்லியதாகவாவது பிறர்சொல்லியதாகவாவது விரப்புமுதலாகிய காரணத்தாற் சொல்லுமிடத்து அங்கங்கேவருவதல்லாமல் இ[illegible]போல நியதிப்பெயராய்வருவதன்றாதலால் அப்படிக்கொள்ளலாகாது

அல்லாமலும் ஆகுபெயரும் அன்மொழித்தொகையுந் தம்பொருளுணர்த்தாது பிறிதுபொருளுணர்த்துதலால் ஒக்குமாதலின் தம்முள் வேற்றுமையென்னையென்றால் ஆகுபெயர் ஒன்றன்பெயரால் அதனோடியைபுபற்றிய பிறிதொன்றனை யுணர்த்தி யொருமொழியிலே நிற்கும் அன்மொழித்தொகை யியைபுவேண்டாமல் இருமொழியுந் தொக்கதொகையாற்றலாற் பிறிது பொருளுணர்த்தி யிருமொழியிலே நிற்கும் இவை தம்முள்வேற்றுமையாம்.

வடநூலின்படி சொற்களும் பொருள்களும் மும்மூன்று வகைப்படும்-செஞ்சொல், ஆக்கச்சொல், குறிப்புச்சொல், செம்பொருள், ஆக்கப்பொருள், குறிப்புப்பொருள், என —செயல்களும் மூவகைப்படும்-செஞ்செயல் அல்லது ஆற்றல், ஆக்கச்செயல், குறிப்புச்செயல், என.—இவற்றுள்ளே செஞ்செயல் உரியபொருளை யுணர்த்தல் ஆக்கச்செயல் செம்பொருளுக்குப் பொருத்தமில்லாமையால் அப்பொருளின் சம்பந்தியை யுணர்த்தல் குறிப்புச்செயல் அவ்விரண்டு செயல்களினும் வேறுப்பொருளையுணர்த்தல் —முறையே இச்செயல்களை யுடையவையே அச்சொல்லுகளாம்.—முறையே அச்சொல்லுகளாலே உணர்த்தப்படுபவைகளே அப்பொருள்களாம் —செஞ்சொல் மூவகைப்படும்-காரணக்குறி இடுகுறி-காரணவிடுகுறி-என. உறுப்புப் பொருளைத்தருவது காரணக்குறி பறவைமுதலியவைபோல —உறுப்புப் பொருளையில்லாமற் சமுதாயவாற்றன் மாத்திரத்தாற் பொருளை யுணர்த்துவது இடுகுறி- பனைமுதலியவைபோல —உறுப்பாற்றலுக்கிடமாகிய பொருளைச் சமுதாயவாற்றலா லுணர்த்துவது காரணவிடுகுறி-முள்ளிமுதலியவைபோல —ஆக்கச்சொல் மூவகைப்படும் அவையாவன- ஊர் வந்தது என்றால் ஊரென்பது அதிலுள்ள மனிதரை யுணர்த்துதலால் விடவாக்கச்சொல், பூனைகுடியாமற் பாலைக்காப்பாற்று என்றால் பூனையென்பது தன்செம்பொருளைவிடாமல் பாலைக்கவரவருங் காக்கை முதலியவற்றையும் உணர்த்துதலால் விடாதவாக்கச்சொல் - அவனிவன்- என்றால் அவனென்பதற்கு அக்காலத்து அவ்விடத்தோடு கூடியவனென்பதும் இவனென்பதற்கு இக்காலத்து இவ்விடத்தோடு கூடியவனென்பதுஞ் செம்பொருள்களாம். இவ்விடத்து இக்காலத்தோடு கூடியிருக்கிறவனிடத்தே அவ்விடத்து அக்காலத்தோடு கூடியிருத்தல் பொருந்தாமைபற்றி அவனென்பது விசேடணத்தைவிட்டு விசேடிய

ர்வதை யுணர்த்தலால் விட்டும்விடாத வாக்கச்சொல்லாம். — குறிப்புச் சொல்வருமாறு இவன் காசிவாசிஎன்று ஒருவனையுயர்த்திக் கூறயிடத்தே செம்பொருளுக்குப் பொருத்தமிருந்தும் பயனில்லாமையால் அவனிலுள்ள தூய்மையை யுணர்த்திப் பயன்படு மாதலால் இதுபோல்வன வெல்லாங்கொள்க. (௬௬)

உகக ஏற்குமெவ்வகைப்பெயர்க்கு மீறுய்ப்பொருள், வேற்றுமைசெய்வன வெட்டேவேற்றுமை ... ... ... ... ... ௯

இது முன் வேற்றுமைக்கிடனு மென்னப்பட்ட வேற்றுமைகள் இப்படிபபட்டவை யென்பதும் இத்தனையென்பதும் உணர்த்துகின்றது (இ-ள்) ஏற்கும்-தம்மையேற்றுக்கொள்ளுதற்குரிய — எவ்வகை பெயர்க்கும்- எவ்வகைப்பட்டபெயர்களுக்கும் — ஈறாய்- இறுதியாய் — பொருள்- அப்பெயர்ப்பொருளை — வேற்றுமைசெய்வன- வேற்றுமைபடுத்துவனவாகிய — வேற்றுமை - வேற்றுமைகள் — எட்டே- எட்டேயாகும் எ-று [தன்னையேற்றபெயர்ப்பொருளை வேற்றுமைசெய்கிறவுருபை வேற்றுமையென்றது காரியவாகுபெயர்.] (௬௭)

உகஉ. பெயரே ஐ ஆல் கு இன் அது கண், விளியென்றுகுமவற்றின்பெயர்முறை ... ... ... ... ... ... ... ... ௬

இது. முன்னே யெட்டுவேற்றுமை என்று சொல்லப்பட்டவற்றின் பெயருமுறையு முணர்த்துகின்றது. (இ-ள்.) அவற்றின் - முன்னெட்டுவேற்றுமை யென்னப்பட்டவைகளினுடைய — பெயர்- பெயர்களும் — முறை- முறையுமாவன — பெயர்- பெயரும் — ஐ-ஐயும் — ஆல்-ஆலும் — கு-குவ்வும் — இன்-இன்னும் — அது- அதுவும் — கண-கண்ணும் — விளி- விளியும் — என்றாகும்-என்றிப்படிசொல்லப்பட்டவையாகும் எ-று. (௬௮)

உகங ஆறனுருபு மேற்குமவ்வுருபே ... ... ... ...

இது முன்னே சொல்லப்பட்ட உருபுகளெட்டனுள் ஆறாவதுருபு மற்றையுருபுகளை யேற்குமென்பது உணர்த்துகின்றது (இ-ள்.) அவ்வுருபே-பெயராய் நிற்கின்ற அவ்வாறாவதுருபே — ஆறனுருபும்- ஐம்முதலாகிய வாறுவேற்றுமையுருபுகளையும் — ஏற்கும்-ஏற்கும். எ-று

உகச. நீயிர் நீவிர் நா னெழுவாயலபெறா ... ... ...

இது. ஏற்குமெவ்வகைப்பெயர்க்கு மென்றதனால் ஐம்முதலாகிய வுருபுகளையேலாதபெய ரிவையெனவுணர்த்துகின்றது. (இ-ள்.) நீயிர்

நீவிர் நான்-நீயிர்முதலாகிய விம்மூன்றுபெயர்களும்—எழுவாயல-எழுவாயல்லாதவேற்றுமைகளை—பெறு-எலாவாம்.எ-று (௬௭)

எழுவாய் வேற்றுமை—

௨௯௫. அவற்றுள். எழுவாயுருபு திரிபில்பெயரே, வினைபெயர் வினாக்கொள லதன்பயனிலையே ... ... ... ... ... ...

இ-ஞ. நிறுத்தமுறையாலே பெயர்வேற்றுமையினிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள் அவற்றுள்- முன்சொல்லப்பட்ட வெட்டுவேற்றுமைகளுள்—எழுவாய்-முதல்வேற்றுமையினது—உருபு-உருபாவது—திரிபில்- ஐம்முதலாகிய வுருபேற்றுத்திரிதலில்லாத—பெயரே-பெயரேயாம்—வினை-வினையையும்—பெயர்-பெயரையும்—வினா- வினாவையும்—கொளல்- கொள்ளவருதல்—அதன்- அவ்வுருபினது—பயனிலை-பொருணிலையாய்வருதலாம். எ-று [எனவே அத்திரிபில்லாத பெயர்தானே தன்பொருளை வினைமுதற்பொருளாக வேற்றுமை செய்யுமென்பதாயிற்று. வினைமுதல்-செய்பவன்-ஒருபொருட்சொற்கள். இதனை வடநூலார் கருத்தாவென்பர்.]

(உதாரணம்.)

| | | | | |
|---|---|---|---|---|
| சாத்தன்வந்தான் | | இவை உதாரணம். | ஆகொன்று | இவைபெயர் |
| கொற்றன்வாழ்க. | | | அரசனிவன். | கொளவந்தன |
| அவன்பெரியன். | | | அவன்யார் | இவைவினாக் |
| ஆவுண்டு ... | | | ஆயாது | கொளவந்தன, |

வினைமுதற் பொருளாவது தனதுபுடைபெயர்ச்சியாகிய தொழிற்கு சுதந்தரமுடையபொருளாம் சாத்தன்வந்தான் என்கிறவிடத்தே சாத்தனென்கிற பெயர்பொருளாகிய வொருவன் தன்புடைபெயர்ச்சியாகிய வருகைத்தொழிலிலே சுதந்தரமுடையனாதல் காண்க.

இவ்வெழுவாய்க்கு ஐம்முதலானவைபோன்ற வுருபில்லாதிருந்தாலும் உரையிற்கோடலென்கிற வுத்தியால்- ஆனவன்-ஆகின்றவன்-ஆவான்- முதலானவைம்பாலிலும் வருகிற சொல்லுருபுகளுண்டெனக்கொள்க. அவை சாத்தனானவன்-சாத்தியானவள்- சாத்தரானவர்- ஆவானது-ஆக்களானவை-எனச் சிலவிடங்களிலேவரும். அல்லாமலும் சிறுபான்மை சாத்தனென்பவன்-எனவருவதுங்கொள்க.இன்னுமிவ்வுத்தியைப் பின்வரும் வேற்றுமைகளிலே காட்டப்படுஞ் சொல்லுருபுகளுக்கெல்லாங்கொள்க. (௬௮)

இரண்டாம் வேற்றுமை—

௨௯௬. இரண்டாவதனுருபையேயதன்பொரு, ளாக்கலழித்தலடைதனீத்த, லொத்தலுடைமையாதியாகும்... ... ... ... *

இது இரண்டாம்வேற்றுமைய திலக்கணை முணர்த்துகின்றது.

(இ-ள்) இரண்டாவதன் - இரண்டாம்வேற்றுமையினது—உருபு- உருபாவது —ஐயே- முன்சொல்லப்பட்ட ஐயொன்றேயாம்—அதன் அதனுடைய—பொருள் - பொருள்களாவன—ஆக்கல் - ஆக்கப்படுபொருளும்—அழித்தல் - அழிக்கப்படுபொருளும்—அடைதல் - அடைப்படுபொருளும்—நீத்தல் - துறக்கப்படுபொருளும்—ஒத்தல்- ஒக்கப்படுபொருளும்—உடைமை - உடைமைப் பொருளும் — ஆதியாகும்-முதலியனவாகஅவ்வுருபையேற்றபெயர்ப்பொருள்கள் வேறுபட்ட செயப்படுபொருள்களாம் எ-று

| | | |
|---|---|---|
| குடத்தைவனைந்தான். | மரத்தைவளர்த்தான். | ஆக்கப்படுபொருள். |
| கோட்டையையிடித்தான் ... ... ... | வேலியைப்பிரித்தான் ... ... | அழிக்கப்படுபொருள். |
| ஊரையடைந்தான். | தேனையுர்ந்தான். | அடையப்படுபொருள். |
| மனைவியைத்துறந்தான். | பகையைநீத்தான். | துறக்கப்படுபொருள். |
| புலியையொத்தான் | வேளைநிகர்த்தான். | ஒக்கப்படுபொருள். |
| பொன்னையுடையான் | புலியையுடையான். | உடைமைப்பொருள். |

செயப்படுபொருளாவது வினைமுதற்றொழிற்பயனுறுவது. குடத்தைவனைந்தான் என்கிறவிடத்தே மண்கூட்டுகை திரிகை சுற்றுகைமுதலானவை வினைமுதலினுடையதொழிலாம் குடத்தினது தோற்றுதல் அத்தொழிலின் பயனும் அப்பயனுறுவது குடமாதலாற் குடஞ்செயப்படுபொருளாகும்.—கோட்டையையிடித்தான் என்கிறவிடத்தே கோட்டையையிடித்தல் செய்பவனதுதொழிலாம் அதனது வடிவுகுலைதல் அத்தொழிலின்பயனும் அப்பயனுறுவது கோட்டையாதலாற் கோட்டை செயப்படுபொருளாகும்.—ஊரையடைந்தான் என்கிறவிடத்தே நடந்துசெல்லுதல் கருத்தாவினது தொழிலாம் ஊரைச்சேர்தல் அத்தொழிலின்பயனும் அப்பயனுறுவது ஊராதலால் ஊர்செயப்படுபொருளாகும் —மனைவியைத்துறந்தான் என்கிறவிடத்தே வெறுத்துவிடுதல் வினைமுதலின்றொழிலாம உரிமைக்கேடு அதன்பயனும் அப்பயனுறுவது மனைவியாதலான் மனைவி செயப்படுபொருளாகும்—புலியையொத்தான் என்கிறவிடத்தே அஞ்சாது பாய்ந்துசெல்லுதலாற் புலியை உபமானமாகக் கொள்ளுதல் கருத்தாவினது தொழிலாம் உபமானமாகக்கொள்ளப்படுதல் அத்தொழிலின் பயனும் அப்பயனுறுவது புலியாதலால் அதுசெயப்படுபொருளாகும்—பொன்னையுடையான் - என்கிறவிடத்தே சம்பாதித்தல் வினைமுதலின்றொழிலாம் தனதாகுகை அத்தொழிலின்பயனும். அப்பயனுறுவது பொன்னாதலாற் பொன் செயப்படு பொருளாகும். மற்றவையுமப்படியே.

இன்னுஞ் செயப்படுபொருள் குன்றாதமுதனிலைகளின்மேல்வி முதலியவிகுதிகள் சேர்ந்துவருவனவாகிய பிறவினைகளிலே சிலவற்றிற்கு இயற்றும்வினைமுதல் இரண்டாம்வேற்றுமையில் வருதலால் அரசன்படைகளைச் சிறைச்சாலையை யடைவித்தான் எனவிரண்டுசெயப்படுபொருள்வரும் சிலவற்றிற்கு அது மூன்றாம்வேற்றுமையிலே வருதலால் சாத்தன்கொற்றனாற் பசுவைப்புரப்பித்தான்- என அப்படிவாராவாம்.—செயப்படுபொருள் குன்றாதவினைகளி லெங்குமிரண்டு செயப்படுபொருள் வருதலில்லையோவென்றால் பசுவைப்பாலைக்கறந்தான்- யானையைக் கோட்டைக்குறைத்தான்- எனச்சிலவிடங்களிலே வருதலுமுண்டு. ஆனால் இப்பசுவையும் யானையையுஞ் செயப்படுபொருளாகக் குறியாமல் நீக்கப்பொருளாகக் குறித்தால்- பசுவினின்றும் பாலைக்கறந்தான்- யானையினின்றுங் கோட்டைக்குறைத்தான்- எனவும். சம்மந்தப்பொருளாகக்குறித்தால் பசுவினது பாலைக்கறந்தான் - யானையினது கோட்டைக்குறைத்தான் - எனவும் வருதலால் சிறப்பில்லையென்றறிக மற்றவைகளுமிப்படியே.

ஆதியென்றதனால் வீட்டைவிரும்பினான்- நூற்பொருளை யறிந்தான்- எனவிரும்புதலும் அறிதலுமாகிய வினைமுதற்றொழில்களுக்கு விடயமாகிய வீடும் நூற்பொருளும் செயப்படுபொருளாகுகை முதலானவையுங்கொள்க அல்லாமலும் அச்செயப்படுபொருள் கருத்திற் செயப்படுவதும் கருத்தின்றிச் செயப்படுவதும் இருமையிற் செயப்படுவதும். என மூன்றுவகையாம். அவைமுறையே சோற்றையுண்டான் சோற்றைக்குறைத்தான் - பதரையு நெல்லையும் பணத்திற்குக் கொண்டான்- என வரும். (௯௯)

(மூன்றாம் வேற்றுமை)

௨௯௭. மூன்றாவதனுருபாலானோடொடு, கருவிகருத்தா வுடனிகழ்வதன்பொருள் ... ... ... ... ... ... ... ... *

இது. மூன்றாம்வேற்றுமையிலக்கணமுணர்த்துகின்றது (இ-ள்) மூன்றாவதன்- மூன்றாம்வேற்றுமையினுடைய—உருபு- உருபுகளானவை—ஆலானோடொடு- முன்சொல்லப்பட்ட ஆலேயன்றி ஆனும் ஓடும்ஒடுவும்ஆகும்—அதன் -அவ்வுருபுகளுடைய—பொருள்-பொருள்களானவை—கருவி- கருவிப்பொருளும்—கருத்தா- வினைமுதற்பொருளும்—உடனிகழ்வு - உடனிகழ்ச்சிப்பொருளும் ஆகிய அவ்வுருபுகளேற்றபெயர்ப்பொருள்கள்வேறுபட்ட மூன்றுமாகும் எ-று [இந்நான்குருபுகளுக்கும் மூன்றுபொருள்களுமா மெனக்கூட்டிச் சொன்னாராயினும் - ஏற்புழிக்கோடலென்கிற உத்தியால் அவ்வுருபுகளுள் ஆல் ஆன் உருபுகளுக்குக் கருவியும் வினைமுதலும். ஓடு ஒடு உருபுகளுக்கு உடனிகழ்ச்சியுஞ் சிறந்தன வென்றுகொள்க.]

(வரலாறு.) வாளாற்பகைவனைவெட்டினான்-இது கருவிப்பொருளாம் கருவியாவது வினைமுதற்றொழிற் பயனைச் செயப்படுபொருளிற் சேர்ப்பது. வாளாற்பகைவனைவெட்டினான் என்கிறவிடத்தே வாளைப்பற்றிவீசுதல் வினைமுதலினதுதொழிலாம் பகைவனுடம்பு அறுகல அத்தொழிற்குப் பயனும்வாள் அப்பயனைப் பகைவனாகிய செயப்படுபொருளிலே சேர்க்கையால்-அதுகருவியாகும்.—இன்னும் அக்கருவிப்பொருள் முதற்கருவியுந் துணைக்கருவியும் எனவிருவகைப்படும் அவற்றுள்- முதற்கருவியாவது செய்யப்படும்பொருளோடொற்றுமையுடையது. அது மண்ணாற்குடத்தைவனைந்தான்-என வரும். துணைக்கருவியாவது முதற்கருவிக்குத் துணையாய் அதுகாரியப்படுமளவுமுடனிகழ்வது அது தண்டசக்கரங்களாற் குடத்தைவனைந்தான் எனவரும்.

அரசனாற் பகைவன் கொல்லப்பட்டான் இது வினைமுதற்பொருள். வினைமுதலிப்படிப்பட்டதென்று முன்னே யெழுவாய்ச் சூத்திரவுரையிற் காட்டப்பட்டது அவ்வெழுவாய் வேற்றுமையில் வருகிற வினைமுதற்பெயர் தன்விகுதி வினையினாலேமுடியும். இம்மூன்றும் வேற்றுமையில்வருகிற வினைமுதற்பெயர் செயப்படுபொருள் விகுதிவினையினாலேமுடியும். இதுவே அவ்விரண்டற்கும் வேறுபாடாம்.—இன்னும் அவ்வினைமுதற்பொருள் இயற்றும் வினைமுதலும் ஏவும் வினைமுதலும் எனவிருவகைப்படும். அவற்றுள் இயற்றும் வினைமுதலாவது கருவியைத்தொழிற்படுத்துவது அது தச்சனாற் கோயில்கட்டப்பட்டது எனவரும். ஏவும்வினைமுதலாவது அவ்வியற்றும் வினைமுதலினது தொழிலையுண்டாக்குந் தொழிலையுடையது அது அரசனாற் கோயில் கட்டுவிக்கப்பட்டது எனவரும் அரசனாற் கட்டப்பட்டது கோயில் எனவந்தால்-தச்சனை நிமித்தகாரணமாகக்கொள்க.

மைந்தனோடு தந்தைவந்தான் இது உடனிகழ்ச்சிப்பொருளாம். உடனிகழ்ச்சிப்பொருளாவது வினைகொண்டுமுடிகிறபொருளினது தொழில்போன்ற தொழிலைத் தன்னிடத்து முடனிகழ்கிறதாகவுடையது மைந்தனோடுதந்தைவந்தான் என்கிறவிடத்தே தந்தை வினைகொண்டுமுடிகிறபொருளாம் வருதல் அப்பொருளினது தொழிலாம் அத்தொழில்போன்ற தொழில்வருதலாம் இவ்வருதலைத் தன்னிடத்து முடனிகழ்கிறதாகவுடைய பொருளாதலால் மைந்தனுடனிகழ்ச்சிப் பொருளாகும்—அவ்வுடனிகழ்ச்சிப்பொருள்-தலைமைப்பொருளுந் தலைமையில்பொருளும், என விருவகைப்படும் அவற்றுள்- தலைமைப் பொருளாவது வினைகொண்டுமுடிகிற பொருளினுயர்வுடையது. அது மன்னவனோடு மந்திரிவந்தான் எனவரும் தலைமையில் பொருளாவது வினைகொண்டுமுடிகிறபொருளினிழிவுடையது. அதுமாணாக்கனோடாசிரியன்வந்தான் எனவரும்.

சிறுபான்மை ஆல் ஆன் உருபுகள் முதற்பொருளின் மேலேற்றிச்சொல்லப்பட்ட விகாரத்தையுடைய சினைப்பொருளிலும்வரும். அது கண்ணாற்குருடன்- காலான்முடவன்- எனவரும் — அல்லாமலும் ஓரோவிடத்து ஏதுவென்கிற பொருளையுந்தரும். ஊராலொருகோயில் என்கிறவிடத்து- ஊரார் ஏதுவாய்வொருகோயில் எனப்பொருள் படுதல்காண்க

சிறுபான்மை ஒடு ஓடு உருபுகள் வேறுவினைப்பொருள் முதலாகிய பிறபொருள்களிலும்வரும் — தொடியொடு தொல்கவின்வாடியதோள்- தொடிக்குக்கழலுதலாகிய வேறுவினையுடனிகழ்தலாலே வேறுவினையுடனிகழ்ச்சிப் பொருளாம் — மலையொடு பொருதமால்யானை- பொருதல்யானைக்கல்லது மலைக்கில்லாமையால் வினையில்வுடனிகழ்ச்சிப்பொருளாம்.— பாலொடுதேன் கலந்தற்றே- தேனைக்கலக்கப்படுதலால் பால்கலப்புறுபொருளாம்.— எழுத்தொடு புணர்ந்தசொல் எழுத்துசசொல்லுக்கு முதற்கருவியாதலால் ஒற்றுமைப்பொருளாம்— கோபத்தோடுவந்தான்-வருதற்குவிசேடணமாதலால் கோபம் அடையாளப்பொருளாம்.

இந்நான்குருபுகளும்- தனித்தன்றிஎகாரம்பெற்றுவரும். அவற்றுள்- ஆல் ஆன் உருபுகளிலொன்று நிற்றற்குரியவிடத்தே கொண்டு- என்கிறது முன்ஐகாரம்பெற்றும் பெறாமலுஞ்சொல்லுருபாகவரும் ஒடு ஓடு உருபுகளிலொன்று நிற்றற்குரியவிடத்தே உடன் என்கிறது தனித்தும் எகாரம்பெற்றுஞ் சொல்லுருபாகவரும் அலைவாளாலே வெட்டினன்- வாளைக்கொண்டுவெட்டினன்- வாள்கொண்டுவெட்டினன்.— மகனோடேதந்தைவந்தான்- மகனுடன்றந்தைவந்தான். மகனுடனே தந்தைவந்தான். எனவரும். (௯௰)

(நான்காம் வேற்றுமை)

**௨௬௮.** நான்காவதற்குரு பாகுங்குவ்வே, கொடைபகைநேர்ச்சி தகவதுவாதல், பொருட்டுமுறையாதியி னிதற்கிதெனல்பொருளே.

இது, நான்காம்வேற்றுமையது இலக்கணமுணர்த்துகின்றது. இ-ள்) நான்காவதற்கு- நான்காம்வேற்றுமைக்கு — உருபு- உருபாவது — குவ்வேயாகும்- முன்சொல்லப்பட்ட குவ்வொன்றுமேயாகும்— பொருள்-அவ்வுருபின் பொருள்களாவன —கொடை-கொடையும்— பகை-பகையும்—நேர்ச்சி- நட்பும்—தகவு- தகுதியும்— அதுவாதல்-முதற்காரணமும்— பொருட்டு- நிமித்தகாரணமும்— முறை- முறையும்— ஆதியின்- முதலானபொருட்சொற்களின் புணர்ச்சியில்— இதற்கிதெனல்- இதற்கு இதுவென்கிறது படவருகின்றனவாகிய அவ்வுருபேற்ற பெயர்ப்பொருள் வேறுபட்ட பலவுமாம். எ - று. [கொடையென வேறோடறபொருளும், பகைநேர்ச்சியெனவே பகைநொடர்பொரு

ளும், நட்புத்தொடர்பொருளும், தகுதியெனவே தகுதியுடைப்பொருளும், அதுவாதலெனவே முதற்காரண காரியப்பொருளும், பொருட்டெனவே நிமித்தகாரணகாரியப் பொருளும், முறையெனவே முறைக்கிழமைப்பொருளும், குவ்வுருபின் பொருள்களா மென்பதுபெறும்.]

(வரலாறு)

இரவலர்க்குப் பொன்னைக்கொடுத்தான் - இது கோடற்பொருளாம். கோடற்பொருளாவது கொடுத்தற்றொழிலின் செயப்படுபொருளைத்தனக்குரிய தாக்கிக் கொள்ளுதலையுடைய பொருளாம் இரவலர்க்குப் பொன்னைக்கொடுத்தான் - என்கிற விடத்தே கொடுத்தலின் செயப்படுபொருள்பொன்னும். அதனைத்தனக் குரியதாக்கிக் கொள்ளுதலையுடைய பொருளாதலால் இரவலர்கோடற்பொருளாகும் —இன்னும் - மாணாக்கனுக் கறிவைக் கொடுத்தான் என்கிறவிடத்தே அறிவாகிய செயப்படுபொருள்-கொடுப்போன் பொருளாய்க் கொள்வோனிடத்துச்செல்லாமற்போனாலும் அதனைத் தனக்குரிய தாக்கிக்கொள்ளுதலாற் கோடற்பொருளேயாம்.—அல்லாமலும் - மாணாக்கனுக்கு நூற்பொருளுணர்த்தான்; என்கிறவிடத்தே சொல்லுதலின் செயப்படுபொருளாகிய நூற்பொருளை அறிதலையுடைய பொருளாகியமாணாக்கனுங் கோடற்பொருளேயாம்.—இன்னும் - அவர்கொடுத்தற்குடம்பட்டார் எனவுடம்படுதற்கு விடயமானபொருளும் ஒருகோடற்பொருளாகவேவரும்.

கோடல் பலவகைப்படும். அவை-ஆவிற்கு நீர்விட்டான் எனக் கேளாதேற்றலும் — வறியவர்க்கீந்தான் எனக்கேட்டே யேற்றலும் —மாணாக் கனுக்கறிவு கொடுத்தான் எனவேலாதேற்றலும். — தமைக் குச்சோறிட்டான் என ஈவோனேற்றலும் — அரனுக்குக்கண் ணைக் கொடுத்தானரி என வுயர்ந்தோனேற்றலும்.— அரிக்குச்சக்கரங்கொடுத்தானரன் என இழிந்தோனேற்றலும். — சோழனுக்கு விருந்திட்டான்சேரன்எனவொப்போனேற்றலும். — சோற்றிற்குநெய்விட்டான்-எனவுணர்வின்றியேற்றலும்.— மாணாக்கனுக்குக்கசையடி கொடுத்தானாசிரியன் எனவிருப்பாயேற்றலும்.— கள்ளனுக்குக் கசையடி கொடுத்தானரசன் எனவெறுப்பாயேற்றலு முதலியனவாம்.

கொடுத்தலும் பலவகைப்படும். அவை மருமகனுக்கு மகளைக் கொடுத்தான் எனவழக்கத்திற்கொடுத்தலும். — மகனுக்கரசு கொடுத்தான் எனவுரிமையிற் கொடுத்தலும்.— அரசனுக்குத் திறைகொடுத்தான் என அச்சத்திற்கொடுத்தலும்.—தந்தைதாய்க்குத் திதிகொடுத்தான் எனப்பாவனையிற் கொடுத்தலுமாம்.

பாம்புக்குப் பகைகருடன் என்பது பகைதொடர் பொருளாம்—சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன் என்பது நட்புத்தொடர் பொருளாம்.—கருடனிடத்துள்ள பகை தொடர்தற்குப் பாம்பும்—கொற்றனிடத்துள்ள நட்புத் தொடர்தற்குச் சாத்தனும் இடமாதலறிக அவனுக்கு நல்லவனிவன்—அவனுக்குத் தீயவனிவன்—என்கிறவைகளும் அவை போல்வனவாம்.—அன்றியும் வாழ்த்தினன்மை தொடர்பொருளும், வைவின்றீமை தொடர் பொருளும், பகைநேர்ச்சிகளில் அடங்குமெனக்கொள்க.—அவை-நல்லோர்க்குச் செல்வமுண்டாகுக, தீயோர்க்குக் கேடுண்டாகுக, எனவரும்.

அருங்கல மரசர்க்குரித்து இது தகுதிப்பொருளாம் தகுதிப்பொருளாவது ஒரு பொருளோடு பொருந்துதற்குத் தகுதியையுடையதாம். அருங்கலமானது அரசரோடு பொருந்துதற்குத் தகுதியையுடையபொருளாதல்காண்க.

குண்டலத்திற்குப்பொன் இது முதற்காரணகாரியப் பொருள். கூலிக்குவேலைசெய்தான் இது நிமித்தகாரணகாரியப்பொருள் பொன்னாகிய முதற்காரணத்தாற் குண்டலமாகிய காரியமும், வேலையாகிய நிமித்தகாரணத்தாற் கூலியாகியகாரியமும்-உண்டாதலறிக,

சாத்தனுக்குமகனிவன் இது முறைக்கிழமை பொருளாம், முறைக்கிழமைபொருளாவது பிறப்பினொலொருபொருளின் முறைக்குத்தானியைந்து நிற்கும் பொருளாம், மகனாதலாகிய முறைக்குச் சாத்தனியைதலறிக,

ஆகியென்றதனால் மழைக்குமின்னல்-என உற்பாதத்தாற் குறிக்கப்படுவதூஉம், அவனுக் கிதுபோதும் எனக்குறை வில்லாமையைக் கொள்வதூம், பிறவுங்கொள்க,

குவ்வுருபு நிற்றற்குரிய சிலவிடங்களிலே பொருட்டு நிமித்தம், என்கிற சொல்லுருபுகள்வரும், அவைகூலியின் பொருட்டு வேலைசெய்தான்-கூலியினிமித்தம் வேலைசெய்தான்-எனவரும், அல்லாமலும், கூலிக்காகவேலைசெய்தான்-எனக்குவ்வுருபிற்குப் பொருட்டுப்பொருளிலே ஆகவென்கிறதுஞ் சொல்லுருபாக அவ்வுருபின்மேல்வரும்,

உகூகூ, ஐந்தாவதனுருபில்லுமின்னு, நீங்கலொப் பெல்லையேதுப்பொருளே ... ... ... .. .. ... ... ... ...

இது, ஐந்தாம் வேற்றுமைய திலக்கண முணர்த்து கின்றது (இ-ள்,) ஐந்தாவதன்-ஐந்தாம்வேற்றுமையினுடைய—உருபு-உருபுகளானவை — இல்லுமின்னும்-இல்லும்முன்சொல்லப்பட்டவின்னுமா

ம்—பொருள்-அவ்வுருபுகளின் பொருள்களாவன — நீங்கல் - நீக்கப்பொருளும்—ஒப்பு-ஒப்புப்பொருளும்—எல்லை - எல்லைப்பொருளும் — ஏது - ஏதுப்பொருளுமாகிய அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட விந்நான்குமாம்-எ-று,

(வரலாறு,)

மலையின்வீழருவி - இது நீக்கப்பொருளாம், நீக்கப் பொருளாவது பிரிவையுண்டாக்குந் தொழிலின்றிப் பிரிவைமட்டுந் தன்னிடத்திலுடைய பொருளாம், மலையின்வீழருவி யென்கிறவிடத்தே - அருவியின்வீழ்ச்சி பிரிவையுண்டாக்குந் தொழிலாம், அது தன்னிடத்தில்லாமற் பிரிவொன்றையே தன்னிடத்துடையதாதலால் மலைநீக்கப்பொருளாமெனக்கொள்க,

காக்கையிற் கரிதுகளம்பழம் - இது ஒப்புப்பொருளாம், ஒப்புப்பொருளாவது புகழ்பொருளிலுந்தன்னிலுமிருக்கின்ற பொதுத்தன்மையால் உபமானமாகிறபொருளாம், காக்கையிற்கரிது களம்பழம்-என்கிறவிடத்தே களம்பழம் - புகழ்பொருளாம், புகழ் பொருளினுந் தன்னிலுமுள்ள பொதுத்தன்மை-கருமையாம், அதனுலுபமானமாகியபொருள் காக்கையாதலறிக,

மதுரையின்வடக்குச் சிதம்பரம் - இது எல்லைப்பொருளாம் எல்லைப் பொருளாவது ஒருபொருளினது திசையளவைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும்பொருளாம் - மதுரையின் வடக்குச் சிதம்பரம் - என்கிறவிடத்தே அறியப்படாத பொருளாகிய சிதம்பரத்தினது திசையைக் குறிப்பித்தற்கு அறியப்பட்ட பொருளாகிய மதுரை எல்லைப் பொருளானமையறிக, இன்னும் கச்சியிற் திருத்தணிகை முக்காவதம், எனவழியளவிலும், அவனிலிவனிரண்டாண்டு மூத்தவன் எனக்காலவளவிலும் எல்லைப்பொருள் வருமெனக் கொள்க. அல்லாமலும் அரசரிற்பெரியரந்தணர் - ஆவினிழிந்தது மேதி-என்றாற்போல வுயர்வுதாழ்வுகளைப்பற்றியும் எல்லைப்பொருள் வரும், இவற்றுள், அந்தணரது பெருமைக்கு அரசரும் மேதியினிழிவிற்கு ஆவும் எல்லைகளாதல்காண்க, இவ்வுயர்வுதாழ்வுகளை நீக்கப் பொருளென்பாருமுளர்,

கல்வியிற் பெரியன்கம்பன்-இது ஏதுப்பொருளாம் கம்பன்பெரியனுதற்குக்கல்வி ஏதுவாதலறிக,—இன்னும்-கடவுளிற்றோன்றியதுலகம்-என முதற்காரணப் பொருளாகுகை முதலானவையுங்கொள்க,

இன்னும்-மண்ணுலகின்வேறுவிண்ணுலகம் - தீவினையின் வெறு

க்கின்றான்-எனவிப்படி இதனினிற்றிது - என்பதுபடவருவன வெல்லாங்கொள்க,

இல்-இன்-உருபுகள் - சிலவிடங்களிலே உம்மைபெற்றும் வரும் அவை அவனினும் பெரியனிவன்-இவனினுஞ் சிறியனவன் —எனவருதல்காண்க, நீக்கப் பொருளிலே இல் இன் உருபுகளின்மேல் நின்று இருந்து என்னப்பட்டவை தனித்தாவது உம்பெற்றாவது ஓரோவிடத்துச்சொல்லுருபுகளாகவரும், ஊரினின்றுநீங்கினான்-ஊரிலிருந்துபோனான்-ஊரினின்றுவந்தான்-ஊரிலிருந்தும்போனான் -எனவரும்,

ஆறாம் வேற்றுமை —

கூா, ஆறனொருமைக்கதுவுமாதுவும் - பன்மைக்கவ்வு முருபாம் பண்புறுப், பொன்றன்கூட்டம்பலவினீட்டந், திரிபினொக்கமாந்தற்கிழமையும், பிறிதின்கிழமையும் பேணுதல்பொருளே... ... ... *

இது, ஆறும்வேற்றுமையதிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்) ஆறன்-ஆறும்வேற்றுமையினது — ஒருமைக்கு-வருமொழியினொருமைப்பொருண்மைக்கு — அதுவுமாதுவும்-முன் சொல்லப்பட்ட அதுவேயன்றி ஆதுவுமாம் — பன்மைக்கு - வருமொழியின்பன்மைப் பொருண்மைக்கு — அவ்வும் - அகரமும் — உருபாம் - உருபுகளாகும் —பொருள்-அவற்றின் பொருள்களாவன — பண்பு - குணமும் — உறுப்பு - அவயவமும் — ஒன்றன் கூட்டம் - ஒருபொருட் கூட்டமும் — பலவினீட்டம் - பலபொருட் கூட்டமும் — திரிபி னொக்கம்-ஒன்றுதிரிந்தொன்றாதலும் — ஆந்தற்கிழமையும் - ஆகியவைந்து தற்கிழமைப்பொருள்களையும் — பிறிதின்கிழமையும் - அவையல்லாத பிறிதின்கிழமைப் பொருள்களையும் — பேணுதல் - உடையனவாக அவ்வுருபுகளையேற்ற பெயர்ப் பொருள்கள் வேறுபட்ட இவ்விருவகைச்சம்பந்தப் பொருள்களுமாகும்-எ-று. [தற்கிழமைப் பொருளாவது தன்னோடொற்றுமையுடையது, பிறிதின்கிழமைப் பொருளாவது தன்னின்வேறாயது, தற்கிழமைப்பொருளிவையெனவே இவையல்லாத பொருளுமிடமுங்காலமுமாகிய மூன்றும்பிறிதின்கிழமைப்பொருளென்றாகும், ஆகவே இப்படிபலவகையாலும் வருகின்றசம்பந்தப் பொருளே இடவேற்றுமையுருபுகளின் பொருளென்பதாயிற்று ]

தற்கிழமைப் பொருளுக்கு உதாரணம். சாத்தனது கருமை-எனக்குணம்பற்றியும் சாத்தனதுவரவு-எனத்தொழில் பற்றியும், வருகின்றவைபண்பு—சாத்தனதுகை-புலியதுவால்- உறுப்பு. — மாந்தரதுதொகுதி-நெல்லதுகுப்பை - ஒன்றன்கூட்டம் — படைகளதுதொகுதி-பறவைகளதுகூட்டம்-பலவின்கூட்டம் — நெல்லினதுபொரி -ம

ஞ்சளதுபொடி - ஒன்றுதிரிந்தொன்றாயது.—எனவை வகைத்தற்கிழ
மையுங்காண்க.

பிறிதின்கிழமைப்பொருளுக்கு உதாரணம். சாத்தனதுபசு-மு
ருகனதுவேல்-பொருள்.—சாத்தனதுவீடு-முருகனதுகுறிஞ்சி- இட
ம் —சாத்தனதுநாள்-மாரனதுவேனில்-காலம் —என மூவகைப்பிறிதி
ன்கிழமையுங்காண்க இன்னுஞ்சிறுபான்மை- எனதுயிர்- எனவுடைய
தும் உடைமைப்பொருளும் வேறாகாத வொற்றுமைப்பொருளில் வ
ருதலுங்கொள்க.

ஆதுருபு-எனதுகை-நினதுசெவி-எனவும். அகரவுருபு-எனகைக
ள்- நினகைகள்- எனவும்- வருதல்காணக.— உயர்திணைப்பெயர்வரும்
போது-சாத்தனுக்குமகன்- எனக்குவ்வுருபுவருமென்றறிக — சிறுபா
ன்மை-அரனதுதோழன்-எனஉயர்திணை யொருமைப்பொருண்மைக்
கும்-நினதடியாரோடல்லால்-எனதுகைகள்என-இருதிணைப்பன்மைப்
பொருண்மைக்கும்-அதுவுருபுவரும்—ஒரோவிடத்து-இவ்வீடிவன
துஎன்றாற்போலஉருபைத்தொடருஞ்சொல்லின்றிவருதலுங்கொள்க.

இவ்வாறனுருபுகளிலொன்று நிற்றற்குரிய்விடத்தே உடையவெ
ன்கிறது சொல்லுருபாகவரும் அது என்னுடையவீடு-என்னுடையத
ம்பி-எனவரும். (௬௪)

— ஏழாம் வேற்றுமை —

௱௪ ஏழனுருபுகண் ணாதியாகும், பொருண்முதலாறு மோரி
ருகிழமையி,னிடனாய்நிற்ற விதன்பொருளென்ப ... ... ... *

இது ஏழாம்வேற்றுமைய திலக்கணமுணர்த்துகின்றது. (இ-ள்)
ஏழன்- ஏழாம்வேற்றுமையினுடைய—உருபு - உருபுகளானவை—க
ண்ணாதியாகும்- முன்சொல்லப்பட்டகண்ணேயன்றி அதுமுதலாகிய
பிறவுமாம்—இதன்-இவ்வுருபுகளுடைய—பொருள்-பொருளாவது—
பொருண்முதல்-பொருளாதியாகிய—ஆறும்-ஆறும்—ஓரிருகிழமை
யின் ஆறாம்வேற்றுமைச்சூத்திரத்திலே சொல்லப்பட்ட விருகிழமை
ப்பொருள்களுக்கும் — இடனாய்நிற்றல் - இடமாய்நிற்கிற வுருபேற்ற
பெயர்ப்பொருள் வேறுபட்ட அவ்விடம்பொருளாம்—என்ப-என்று
சொல்லுவர்புலவர்-எ-று.

| | | |
|---|---|---|
| மணியின்கணிருக்கின்றவொளி... ...தற்கிழமை | } | பொருளிட |
| பனையின்கண்வாழ்கின்றதன்றில்... பிறிதின்கிழமை | } | மாயிற்று. |
| ஊரின்கணிருக்குமில்லம் ... ... தற்கிழமை | } | இடமிட |
| ஆகாயத்தின்கட்பறக்கின்றதுபருந்து-பிறிதின்கிழமை | } | மாயிற்று. |

நாளின்கணாழிகையுள்ளது ... ... தற்கிழமை } காலவிட
வேனிற்கட்பாதிரிபூக்கும் ... ... பிறிதின்கிழமை } மாயிற்று.

கையின்கணுள்ளதுவிரல்... ... ...தற்கிழமை } சினையிட
கையின்கண்விளங்குகின்றதுகடகம் ... பிறிதின்கிழமை } மாயிற்று.

கறுப்பின்கண்மிக்கதழகு ... ... தற்கிழமை } குணவிட
இளமையின்கண்வாய்த்ததுசெல்வம்... பிறிதின்கிழமை } மாயிற்று

ஆடற்கணுள்ளதுசதி ... ... தற்கிழமை } தொழிலிட
ஆடற்கட்பாடப்பட்டதுபாட்டு ... பிறிதின்கிழமை } மாயிற்று.

இடப்பொருளாவது வினைமுதற்றொழிற்காயினுஞ் செயப்படுபொருட்காயினும்- இடமாகிய பொருளாம் மணியின்கணிருக்கின்றதொளி-என்கிறவிடத்தே-ஒளி- வினைமுதலாம். இருத்தல்- அதன்வினையாம். மணி அத்தொழிலுக்கிடமாம் ஆதலால் - அது இடப்பொருளாமென்றறிக. கழுவின்கட்கள்ளனை யேற்றினனென்கிறவிடத்தே-கள்ளன்-செயப்படுபொருளாம் அவனுயிர்ப்பிரிவு- அதன்பயனும். கழு-அப்பயனுக்கிடமாம். ஆதலால். அதுவிடப்பொருளாமென்றறிக.

அவ்விடப்பொருள் ஊர்க்கணிருந்தான்- எனத்தன்னிற் சிறிதிடமாவதும் தீயின்கணுள்ளது சூடு-தான் முழுதுமிடமாவதும்-கல்வியின்கணிசைவைத்தான்-எனவிடயமாவதும் ஆகமூன்றுவகைப்படும்.

இன்னுமிவ்வுருபுகளுக்குக்-குறிலைந்தனுள் அ இ உ இம்மூன்றுஞ்சுட்டு- அவர்களு ளிவன்வல்லவன்- எனக்கூட்டிப்பிரிக்கு மெல்லைப்பொருளுங், கல்வியறிவில்லாதவனை விலங்கினுள்வைத்தெண்ணுவார்கள்- எனவருகிற பிரித்துக்கூட்டுங் கூட்டப்பொருளும், பால்கறக்கையில் வந்தான். எனவருகிற ஒருதொழிற்காலத்தைக் குறிக்கும்பிறிதுதொழிலும், சிறுபான்மை பொருள்களாகும். (௩௪)

௩௱௨. கண்கால்கடையிடை தலைவாய்திசைவயின், முன்சார்வலமிட மேல்கீழ்புடைமுதல், பின்பாடளைதே முழைவழியுழியுளி, யுள்ளகம் புறமில் லிடப்பொருளுருபே ... ... ... ... ... ... *

இது - முன்சூத்திரத்திலே கண்ணாதியாகுமென்றார் அவையிவையென்கிறதை உணர்த்துகின்றது. (இ-ள்) கண்- இல்- கண்முதலாகஇல்லீறாகச்சொல்லப்பட்ட இவ்விருபத்தெட்டும்— இடப்பொருளுருபு- தம்மையேற்ற பெயர்ப்பொருளை யிடப்பொருளாக வேற்றுமை செய்கின்ற வுருபுகளாம்எ-று.

கண்ணல்லாத வுருபுகளுக்கு உதாரணம் ஊர்க்கானிவந்தபொதும்பர்-கால்,—வேலின்கடைமணிபோற் றிண்ணியான்- கடை—நல்லாரிடைப்புக்கு-இடை.—வலைத்தலைமானன்னநோக்கியர்- தலை.—குரைகடல்வாயமுதென்கோ-வாய்.—தேர்த்திசையிருந்தான்-திசை.—அவர்வயிற்செல்லாய்-வயின்,—கற்றார்முற்றோன்றாகழிவிரக்கம்- முன்—காட்டுச்சாரோடுங்குறுமுயால்- சார்—கைவலத்துள்ளதுகொடுக்கும்-வலம்.—இல்லிடப்பாத்தை-இடம்.—தன்மேற்கடுவனாதீரிற் கடுத்துவரக்கண்டும் - மேல்—பிண்டிக்கண்ணார்நிழற்கீழ்—எயிற்புடைநின்றான்-புடை—சுரன்முதல்வந்தவுரன்மாய்மாலை முதல்—கானலின்பின்சென்றதம்ம பின்.—நம்பாடணையாதநாள்- பாடு—கல்லளைச்சுனைநீர்- அளை.—தேமுதிக்குரியவைசோடாய்த்தேத்து - தேம்—அவனுழைவந்தான்- உழை—நின்றதோர்நறவேங்கைநிழல்வழிப்பசைந்தன்ன- வழி.—உறையுழியோலைபோல- உழி—குயில்சேர்குளிர்காவுளி சேர்ந்துறையும்-உளி—முல்லையங்குவட்டுள்வாழும்- உள்—பயன்சாராப் பண்பில்சொல்பல்லாரகத்து- அகம்—,செல்லுமென்னுயிர்ப்புறத்திறுத்தமருண்மாலை- புறம்—ஊரிலிருந்தார் இல்—எனவரும் [இனிக்கண்கான்முதலானவை இடவேறுபாடுகளை யுணர்த்தும்போது - பலவகைப்பட்ட விடப்பெயர்களாம்-அவை கண்ணகன்ஞாலம்- அகத்திலிருந்தான்-வீட்டின்புறத்திலிருந்தான்-மேலிடத்திருந்தான்-முன்னிருந்தான்- அயற்கண்ணிருந்தான்-இடைச்சுரம்-தென்றிசை-எனவரும்] (௪௫)

## — எட்டாம் வேற்றுமை —

௩௱௩. எட்டனுருபே யெய்துபெயரீற்றின், திரிபுகுன்றன் மிகுதலியல்பயற், றிரிபுமாம்பொருள் படர்க்கையோரைத், தன்முகமாகத் தானழைப்பதுவே ... ... ... ... ... ... ... ... *

இது.எட்டாம்வேற்றுமைய திலக்கணமுணர்த்துகின்றது.:(இ-ள்) எட்டன்-எட்டாம்வேற்றுமையினுடைய—உருபு- உருபுகளானவை—எய்துபெயரீற்றின்-விளியடைந்தபெயரீற்றினுடைய—திரிபு-திரிதலும்—குன்றல்-கெடுதலும்—மிகுதல்-மிகுதலும்—இயல்பு-இயல்பாதலும்—அயற்றிரிபும்- ஈற்றயலெழுத்துத்திரிதலும்—ஆம்- ஆகும்—பொருள்- அவற்றின்பொருளாவது—படர்க்கையோரை - படர்க்கைப்பெயர்ப்பொருளை—தன்முகமாக-தனக்கெதிர்முகமாக—அழைப்பது-அழைப்பதாலாகிய விளிக்கப்படுபொருளாம்.எ-று. [விளித்தற்குக் கருவியானவுருபை விளியென்றது காரியவாகுபெயர்] (௪௬)

௩௱௪. இ உ ஊ ஓடு ஐ ஒ ள ர ல, யவ்விற்றுயர்திணையோரவல்லிவற்றொடு, ணஃகானுவீ றாகும்பொதுப்பெயர், ஞநவொழியனைத், தீற்றஃறிணைவிளிப்பன ... ... ... ... ... ... ...

இது பெயர்களுள் விளிக்கப்படுவன இவை என்கிறதை உணர்த்துகின்றது. (இ-ள்) இ உ ஊ ஓவொடையோனளரலய- இகரமும் உகரமும் ஊகாரமும் ஐகாரமும் ஓகாரமும்-என்கிற வுயிர்களும், னளரலய என்கிறமெய்களுங், ஆகிய பத்தெழுத்துகளையும்—ஈற்று- இறுதியிலுடைய—உயர்திணைப் பெயர்- உயர்திணைப்பெயர்களும்—ஓரவல்- ஓகாரவுயிரும் ரகரமெய்யுமொழிந்த—இவற்றொடு- இவ்வெழுத்துகளுடனே—ணஃகான்- ணகாரமும் ஆவும் ஆகியபத்தெழுத்துகளும்—ஈறாகும்- இறுதியாகிய—பொதுப்பெயர் - பொதுப்பெயர்களும்—ஞநவொழி- ஞகாரநகரங்களும் (ஈறுகாதளகரமு) மொழிந்த—அனைத்து- இருபத்தொரு எழுத்துகளையும்—ஈற்று - ஈற்றிலுடைய—அஃறிணைப் (பெயர்)-அஃறிணைப்பெயர்களும்—விளிப்பன- அழைக்கப்படுவன- என-று. (௪௭)

௩௱௫. இம்முப்பெயர்க்கண் ணியல்புமேயு, மிகரநீட்சியுமுருபாமன்னே ... ... ... ... ... ... ... ... ... *

இது மூவகைப்பெயர்களுக்கும் பொதுவாகிய விளியுருபு தொகுத்துணர்த்துகின்றது (இ-ள்) இம்முப்பெயர்க்கண்- முன்விளிக்கப்படுமென்ற மூவகைப்பெயர்களிடத்தும்—இயல்பும்- இயல்பாதலும்—ஏயும்- ஏகாரமிகுதலும்—இகரநீட்சியும்- இகரம்-ஈகாரமாதலும்—உருபாமன்-பெரும்பாலும்விளியுருபுகளாகும் என-று

(வரலாறு)

முனிகூறாய்-வேந்துகூறாய்-ஆடூஉக்கூறாய்-விடலைகூறாய்- கோக்கூறாய்-கோன்கூறாய் வேள்கூறாய்-மாந்தர்கூறீர்-தோன்றல்கூறாய்-சேய்கூறாய்-எனவும், முனியேகூறாய்-வேந்தேகூறாய்-, எனவும். நம்பீகூறாய்-எனவும்- உயர்திணைப்பெயர்களிலே மூன்றுருபுகளும்வந்தன.—பிதாக்கூறாய்-ஆண்கூறாய்-எனவும். பிதாவேகூறாய்- ஆணேகூறாய்- எனவும்.சாத்திகூறாய்-எனவும். பொதுப்பெயர்களிலே மூன்றுருபுகளும் வந்தன.—விளக்கொடியை- புல்வாய்கொடியை - எனவும் - விளவேகொடியை-புல்வாயேகொடியை-எனவும்.மந்திகொடியை- எனவும் அஃறிணைப்பெயர்களிலே மூன்றுருபுகளும்வந்தன.

காட்டாதொழிந்த பெயர்களும் இப்படியேவரும்—பெரும்பாலுமென்றதனால் இவ்வுருபுகள் சிலவற்றிற்குப்பொருந்தாமை யுளவேற்கொள்க. (௪௮)

௩௱௬. ஐயிறுபொதுப்பெயர்க் காயுமாவு, முருபாமல்ல வற்றுயுளாகும் ... ... ... ... ... ... ... ... ... ... *

இது ஐகாரவீற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி புணர்த்து கின்றது. (இ-ள்) ஐயிறுபொதுப்பெயர்க்கு - பொதுவிதியால் இயல்பும் ஏகாரமிகுதலுமன்றி ஐகாரவீற்றுப் பொதுப்பெயர்க்கு — ஆயுமாவும்-ஐகாரம் ஆயாதலும் ஆவாதலும் — அல்லவற்று-உயர்திணையஃறிணைப்பெயர்களுக்கு— ஆயும்-அவ்விரண்டுமல்லாமல் ஐகாரம் ஆயாதலும்— உருபாகும்-விளியுருபுகளாம்-எ-று.

(வரலாறு)

அன்னை - அன்னாய் - அன்னா-பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும் வந்தன.—விடலை-விடலாய்-எனவும் - நாரை-நாராய் - எனவும் - உயர்திணைப்பெயர்க்கும் அஃறிணைப்பெயர்க்கும்ஆய்வந்தது. (௪௯)

௩௱௭. ஒருசார்னவ்வீற்றுயர்திணைப் பெயர்க்கண், ணளபீறழிவயனீட்சியதனோடுறுபோதலவற்றோடோவுற, வீறழிந்தோ வுறலிறுதியவ்வாத, லதனோடயதிரிந் தேயுறலீறழிந், தயலேயாதலும் விளியுருபாகும் ... ... ... ... ... ... ... ... ...

இது. னகரமெய்யீற்று உயர்திணைப் பெயர்களுக்கு எய்தியதன் மேற்சிறப்புவிதியுணர்த்துகின்றது. (இ-ள், னவ்வீற்றுயர் திணைப்பெயர்க்கண்-பொதுவிதியன்றினகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்களுள்—ஒருசாரளபு-சிலவளபெடுத்தலும் — (ஒருசா, ரீறழிவு - சிலவீறு கெடுதலும் — (ஒருசா) ரயனீட்சி சிலவீற்றயனீளுதலும்— ஒருசா) ரதனோ டுறுபோதல் - சிலவீற்றயனீண்டீறு கெடுதலும் — (ஒருசா) ரவற்றோடோவுறல்-சில வீறுகெட்டு வீற்றயனீண்டு ஓகார மிகுதலும் — (ஒருசா) ரீறழிந்தோவுறல் - சில வீறுகெட்டு ஓகாரமிகுதலும் — (ஒருசா) ரிறுதியவ்வாதல் - சிலஇறுதினகர மெய்யகர மெய்யாதலும் — ஒருசா) ரதனோடயதிரிந்தேயுறல்-சில வீற்றுனகரமெய் யகரமெய்யாய்த் திரிந்து அயலில் ஆகாரம் ஓகாரமாய் ஏகார மிகுதலும்— (ஒருசா) ரீறழிந்தயலேயாதலும்- சிலவீறுகெட்டு அயலில் அகரம் ஏகாரமாதலும் — விளியுருபாகும்-விளியுருபுகளாகும். எ-று.

(வரலாறு.)

அம்பர்கிழான், அம்பர்கிழா அன் - அளபாயிற்று. — புலவன், புலவ-ஈறழிந்தது.— பெருமன், பெருமான், அயனீண்டது.— மன்னன், மன்னா-அயனீண்டு ஈறுகெட்டது.—ஐயன், ஐயாவோ-அயனீண்டு ஈறுகெட்டு ஓகாரமிக்கது.—திரையன். திரையவோ - ஈறழிந்து ஓகாரமிக்கது.—வாயிலான், வாயிலாய் - இறுதியவ் வாயிற்று— வாயிலான், வாயிலோயே-இறுதியவ்வாய் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமா

ய் ஏகாரமிக்கது.— ஐயன் - ஐயே ஈறழிந்து அயலில் அகரம் ஏகாரமாயிற்று.—[இவ்வொருசாரென்றிறந்தவிளியதிகாரமுழுதுங்கூட்டுக

௩௱௮. ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவய, னீட்சியி றுதி யவ்வொற் றாத, லயலி லகரமே யாதலும் விளித்தன ... ... ... ...

இது ளகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்க்கு எய்தியதன்மேற்சிறப்புவிதியுணர்த்துகின்றது இ-ள். ளஃகானுயர்பெயர்க்கு-பொதுவிதியன்றி ளகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்களுள் - ஒருசா(ரளபு சிலஅளபெடுத்தலும்— ஒருசா)ரீறழிவு-சிலஈறுகெடுதலும் - (ஒருசா)ரயனீட்சி-சிலஈற்றயனீளுதலும்— ஒருசா) ரிறுதியவ்வொற்றாதல்-சிலஇறுதிளவ்வொற்று யவ்வொற்றாதலும் —(ஒருசா ரயலிலகரமேயாதலும்-சில ஈற்றயல் அகரம் ஏகாரமாதலும்—விளித்தன- விளியுருபுகளாகும்-எ-று.

(வரலாறு)

வேள், வேஎள்-அளபெடுத்தது — எல்லாள் - எல்லா-ஈறுகெட்டது—மக்கள், மக்காள்-ஈற்றயனீண்டது.— குழையாள், குழையாய்-ளவ்வொற்றுயவ்வொற்றாயிற்று — அடிகள், அடிகேள்-ஈற்றயல்அகரம் ஏகாரமாயிற்று. (௫௧)

௩௱௯. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றய, லகரம் இஃயாத லாண்டையா, வீயாதலதனோ டேயுறலீற்றே, மிக்கயல்யாக் கெட்டத னயனீட, லீற்றினீருறலிவையுமீண்டுருபே ... ... ... ...

இது. ரகரமெய்யீற்று உயர்திணைப் பெயர்க்கு எய்தியதன்மேற்சிறப்புவிதி யுணர்த்துகின்றது (இ-ள்) ரவ்வீற்றுயர்பெயர்க்கு-(பொதுவிதியன்றி) ரகரமெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள் — ஒருசா ரளபெழல்-சில அளபெடுத்தலும்— (ஒருசா) ரீற்றயலகரம் இஃயாதல் - சில ஈற்றயல் அகரமானது இகரமாதலும் ஈகாரமாதலும் — (ஒருசா) ராண்டையா வீயாதல் சில அவ்வீற்றயல் ஆகாரம் ஈகாரமாதலும் — ஒருசா) ரதனோடே யுறல் சில அதனோடு ஏகாரமேற்றலும் — (ஒருசா) ரீற்றேமிக்கயல்யாக்கெட்டதனயனீடல்-சில -ஈற்றில் ஏகாரமிக்கு அயலில் யாக்கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாதலும் —(ஒருசா) ரீற்றினீருறல்-சில ஈற்றில் ஈர் ஆதலும்— இவையும்- ஆகியவிவையும்—ஈண்டு-இவ்விடத்து—உருபு விளியுருபுகளாகும்-எ-று.

(வரலாறு)

சிறார், சிறாஅர்-அளபெடுத்தது.—தெவ்வர், தெவ்விர்-ஈற்றயல் அகரம் இகரமாயிற்று.—நாயகர், நாயகீர்-ஈற்றயல் - அகரம் ஈகாரமா

யிற்று, — சான்றார், சான்றீர் - ஈற்றயல் ஆகாரம் ஏகார மாயிற்று. கணியார் - கணியீரோ — ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரமிக்கது — நம்பியார், நம்பீரோ - ஈற்றில் ஏகாரமிக்கு அயல்யாக்கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாயிற்று — எமர், எமரீர் - ஈர் ஏற்றது. — [ஈண்டென்றமிகையால்-கடலாரோ. கடலீரோ-சாத்தியாரோ, சாத்தியீரோ. எ-ம். அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களைச் சிறப்பித்து ரவ்வீற்று உயர்திணைப்பெயர்போலக் கூறினும் இவ்வுருபேற்றல்கொள்க. ()

௩௱௰. லகாரவீற்றுயர் பெயர்க்களபயனீட்சியும், யகாரவீற்றுற் களபுமா முருபே ... ... ... ... ... ... ... ... *

இது லகார யகார மெய்யீற்று உயர்திணைப் பெயர்க்கு எய்திய தன்மேற் சிறப்பு விதியுணர்த்து கின்றது. (இ-ள் லகாரவீற்றுயர்பெயர்க்கு - பொதுவிதியன்றிலகாரமெய்யீற்று உயர்திணைப்பெயர்க்கு — (ஒருசா ரளபு சில அளபெடுத்தலும் — (ஒருசா) ரயனீட்சியும் - சில ஈற்றயனீளுதலும் — யகாரவீற் (றுயர்பெயர்க்கு)-யகரமெய்யீற்றுஉயர்திணைப்பெயர்க்கு — அளபும்- அளபெடுத்தலும் — உருபாம்விளியுருபுகளாகும்-எ-று.

(வரலாறு)

மால், மாஅல்-எ-ம். தோன்றல், தோன்றால்-எ-ம். சேய், சேஎய் எ-ம் அம்மூன்றுருபுகளும்வந்தன. ;(௫௧)

௩௱௰௧. னவ்வீற்றுயர்திணை யல்லிருபெயர்க்கண் ணிறுதியழிவதனோடயனீட்சி ... ... ... ... ... ... ... ... *

இது னகரமெய்யீற்று அஃறிணைப் பெயர்க்கும்பொதுப்பெயர்க்கும் எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது (இ-ள்)னவ்வீற்றுயர்திணை யல்லிருபெயர்க்கண் - பொதுவிதியன்றினகரமெய்யீற்று அஃறிணைப்பெயர் பொதுப் பெயர்களிடத்து— (ஒருசா றிறுதியழிவு-சில ஈறுகெடுதலும்— ஒருசா) ரதனோடயனீட்சி- சிலஈறுகெடுதலுடனே ஈற்றயனீளுதலும் விளியுருபுகளாம்-எ-று.

(வரலாறு.)

அலவன், அலவ-எ-ம். கலுழன், கலுழா-எ-ம். சாத்தன், சாத்த எ-ம். கொத்தன், கொற்றா-எ-ம். முறையே அஃறிணைப் பெயரினும் பொதுப்பெயரினும் அவ்விரண்டும்வந்தன, (௫௨)

**௩௱௰௨. ளவீற்றஃறிணைப்பெயர்பொதுப்பெயர்க்கண், ணீற்றயனீட்சியுமுருபாகும்மே ... ... ... ... ... ... ... ***

இது, லகார ளகார மெய்யீற்று அஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும் எய்துவதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது (இ-ள்) லளவீற்றஃறிணைப்பெயர் பொதுப்பெயர்க்கண் - லகர ளகர மெய்யீற்று அஃறிணை பெயர்க்கும் பொதுப்பெயர்க்கு — ஈற்றயனீட்சியும்-பொதுவிதியன்றி ஈற்றயலெழுத்து நீளுதலும்— உருபாகும்-விளியுருபாகும்-எ-று

(வரலாறு)

முயல், முயால் - கிளிகள், கிளிகாள் எ-ம். தூங்கல், தூங்கால்-மக்கள், மக்காள்-எ-ம். (௫௫)

௩௱௰௩. அண்மையினியல்பு மீறழிவுஞ்சேய்மையி னளபும்புலம்பினோவுமாகும் ... ... ... ... ... ... ... ...*

இது, முன்சொல்லப்பட்ட விளியுருபுகளுக் காவதோர் புறனடை யுணர்த்துகின்றது (இ-ள்.) முன்சொல்லப்பட்ட விளியுருபுகளுள் — அண்மையின்-சமீபவிளிகளுக்கு— இயல்புமீறழிவும்-இயல்பாதலும் ஈறுகெடுதலும்— சேய்மையின்-தூரவிளிகளுக்கு — அளபும்-அளபெடுத்தலும்—புலம்பின்-புலம்பல்விளிகளுக்கு — ஓவும் -ஓகார மிகுதலும் — ஆகும்-வரும்-எ-று, [எனவே மற்றைவிளி வேற்றுமையுருபுகள் இம்மூன்றிடங்களிலுங் கலந்துவருமென்கிறது பெறறும்,]

௩௱௰௪, நுவ்வொடுவினாச்சுட் டுற்றனளர வைதுத்தாந் தானின்னனவியலா ... ... ... ... ... ... ... ... ... *

இது, இ உ ஊ வோடென்ற சூத்திரத்திற்கு ஆவதோர்புறனடையுணர்த்துகின்றது, (இ-ள்) நுவ்வொடு-நுவ்வுடனே — வினா-மூன்றுமுதல்வினாவையும் — சுட்டு-மூன்றுசுட்டையும்—உற்ற - முறையேபொருந்திய—னளர - னளரமெய்யீற்று உயர்திணைப் பெயர்களும்—வை-து-வைது என்கிறவிரண்டு ஈற்று அஃறிணைப்பெயர்களும் —தாந்தான்-இவ்விரண்டு பொதுப்பெயர்களும் — இன்னன-இவை போல்கின்றபிறவும் — விளியா-விளிக்கப்படுவனவல்ல-எ-று. [வைது என்கிறவிரண்டும் நுவ்வொடு பொருந்தாதென்பார் ஒடுக்கொடுத்துப்பிரித்தார்] நுமன்-நுமள் -நுமர்- எ-ம். எவன்-எவள்-எவர்-எது - எவை-யாவன்-யாவள்-யாவர்-யாது-யாவை-ஏவன்-ஏவள்-ஏவர் - ஏது- ஏவை-எ-ம்-அவன்-அவள்-அவர்-அது-அவை-எ-ம்- இவன்-இவள்- இவர்-இது-இவை-எ-ம்-உவன்-உவள்-உவர்-உது-உவை- எ-ம்- தான்-எ-ம்-தாம்- எ-ம்- வருகின்றவிப்பெயர்கள் விளியேலாமைகாண்க. இன்னனவென்றதனால்-பிறன்-மற்றையான்-முதலானவையுங்கொள்க, (௫௭)

௬௩. முதலையையுறிற்சினையைக்கண்ணுறு, மதுமுதற்காயிற் சினைக்கையாகும்... ... ... ... ... ... ... ... ...

இது முதல்சினைத்தொடர்பின்கண் இரண்டாமுருபுவரின் முதல் சினையிரண்டிடத்தும் வாராதுதமோறிவருதலே மரபெனப் புறனடையுணர்த்துகின்றது. (இ-ள்) முதலே-முதலினை—ஐயுறின்- ஐயுருபு பொருந்தினால்—சினையை- சினையினை—கண் - கண்ணுருபு—உறும்-பொருந்தும்—அது-அதுவுருபு—முதற்கு-முதலுக்கு—ஆயின்- வரின்—சினைக்கு-சினையினுக்கு—ஐ-ஐயுருபு—ஆகும்-வரும்-எ-று [இன்னும் இரட்டுறமொழிதல் என்கிறவுத்தியால்-அதுமுதற்காகிற் சினைக்கையாகும் - என்கிறவாக்கியத்தில் அதுவென்பதற்கு அக்கண்ணுருபு எனவும் பொருளுரைத்துக்கொள்க.]

(வாலாறு) யானையைக்காலின்கண்வெட்டினான்- யானையதுகாலை வெட்டினான்-யானையின்கட்காலைவெட்டினான் எனவரும். எனவேமுதல்சினையிரண்டிலும்ஐயுருபுவருவது சிறப்பன்றென்பதாயிற்று,(௫அ)

௬௪. முதலிவைசினையிவை யெனவேறுளவில,வுரைப்போர்க் குறிப்பினவற்றேபிண்டமும் ... ... ... ... ... ... ...

முன்சூத்திரத்திலே முதல்சினையிரண்டனிடத்தும் ஐயுருபுவாராதென்பது தோன்றச் சொல்லியதற்குக் காரணமும் அச்சூத்திரப் பொருளோடு இச்சூத்திரப்பொருளைப் பிண்டப்பொருளுக்கும் ஏற்பித்தலும் உணர்த்துகின்றது. (இ-ள்) முதலிவைசினையிவையென-சடங்களிவை படங்களிவை என்கிறதுபோல முதற்பொருள்களிவை சினைப்பொருள்களிவை என்கிறதற்கு—வேறுளவில- இரண்டாகவேறுள்ளனவிலவாம்—உரைப்போர்- ஒருபொருளையே இரண்டாகப்பகுத்துச் சொல்வோரது—குறிப்பின - குறிப்பின்மாத்திரையனவேயாம்—பிண்டமும்-பிண்டப்பொருளும்—அற்று- அத்தன்மைத்தாம்-எ-று.

யானையைக்குறித்தபோது யானையுண்டாக அதனுடைய கைகால் கொம்பு முதலியவை வேறில்லையாம். அவ்வவயவத்தைக் குறித்தபோது அவையுண்டாக யானைவேறில்லையாம் ஆகையால் இப்படிசொல்லப்பட்டன—இனிப்பிண்டப்பொருள்- நெல்லைப்பொலியின்கண்வாரினான்-நெல்லின் துபொலியைவாரினான்-எனவரும். பிண்டப்பொருளாகிய பொலிக்குப்பையும் பிண்டித்தபொருளாகிய நெல்லும் வேறாகாமையால்அவ்விரண்டனிடத்தும்ஐயுருபுவருவது சிறப்பென்றெனவறிக

(நெடுஞ்செழியன்)

௬௫. யாதனுருபிற்கூறிற்றாயினும், பொருள்செல்மருங்கின் வேற்றுமைசாரும் ... ... ... ... ... ... ... ... ...

இது. வேற்றுமையுருபுகள் மயங்கி யொன்றுநிற்கின்ற விடத்து மற்றொன்றுவரினும் அமையுமெனப் புறனடை யுணர்த்து கின்றது. (இ-ள்) யாதனுருபின்-மற்றொருவேற்றுமையுருபால்—கூறிற்றாயினும்-ஒருவேற்றுமைப் பொருள்சொல்லப்பட்டதாயினும்—பொருள் சென்மருங்கின்-அப்பொருள்சென்றவழியே—வேற்றுமை- அவ்வுருபு—சாரும்-சேரும்-எ-று. [எனவேவேற்றுமையுருபு மயங்கிவந்தால் அப்பொருளுக்கித் திரித்துக்கொள்க வென்றதாயிற்று.] (வரலாறு) மணற்கின்ற நாணற்கிழங்கின்றூளை - என்கிறவிடத்தே மணல்கோடற் பொருளாகாது இடப்பொருளாய் நிற்கையாற் குவ்வுருபைக் கண்ணுருபாகத் திரித்துக்கொள்க.

இனி உலாயிற் கோடலென்கிறவுத்தியால் ஒருவேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றுமை யுருபோடு தகுதியாய் வருதலும் உண்டெனக்கொள்க.

(வரலாறு)

வினைமுதற்பொருள் எழுவாயுடனேயும் மூன்றனுருபுடனேயும் அன்றிச்சிறுபான்மை-அவர்க்குச்செய்யத்தகுமக்காரியம்-எனநான்கனுருபுடனேயும்வரும்.

செயப்படுபொருள் இரண்டனுருபோடன்றிச் சிறுபான்மை-சோறடப்பட்டது-எனவெழுவாயுருபோடும். அரிசியாற்சோறாக்கினான்-எனமூன்றனுருபோடும். அவட்குக்கொள்ளுமிவ் வணிகலம்- என நான்கனுருபோடும் பழியினஞ்சும்-எனவைந்தனுருபோடும். தூணின்கட்சார்ந்தான்-எனவேழனுருபோடும்வரும்.

கருவிப்பொருள் மூன்றனுருபோடும் ஐந்தனுருபோடும் அன்றிச் சிறுபான்மை-கண்காணும்- எனவெழுவாயுருபோடும் கண்ணிற்குக்காணலாம்-எனநான்கனுருபோடும்வரும்.

கோடற்பொருள் நான்கனுருபோடன்றிச் சிறுபான்மை-செய்யவேளவையைக்காட்டிவிடும்-எனவிரண்டனுருபோடும்- சாத்தனொடுசொன்னான்-எனமூன்றனுருபோடும்வரும் —பொருட்டுப்பொருள் கூலியைக்குறித்து வேலைசெய்தான்-எனவிரண்டனுருபோடும்வரும்.

நீக்கப்பொருள் ஐந்தனுருபோடன்றிச் சிறுபான்மை- மதுரையைநீங்கினான்-எனவிரண்டனுருபோடும்வரும்.—எல்லைப்பொருள்- மதுரையின்வடக்குச் சிதம்பரம்- எனநான்கனுருபோடும்வரும்.

சம்பந்தப்பொருள் ஆறனுருபோடன்றிச் சிறுபான்மை- உயிர்க்கணுணர்வு-எனவேழனுருபோடும்வரும்.

இடப்பொருள் ஏழனுருபோடன்றிச் சிறுபான்மை- வழியைச் சென்றான்-என விரண்டனுருபோடும் வீட்டிற்குப்போவான்- நாளைக்குவருவான்-என நான்கனுருபோடும்வரும் மற்றுமிப்படிவருவன வற்றையாராய்ந்து அறிந்துகொள்க. (சூ௰)

**சூ௰௮** ஐயான்குச்செய்யுட் கவ்வுமாகு, மாகாவஃறிணைக்கானல்லாதன ... ... ... ... ... ... ... ... ... ... *

இது. சிலவேற்றுமையுருபு செய்யுளிடத்தே திரிந்துவரினும் அமையுமெனப் புறனடை யுணர்த்துகின்றது. (இ-ள்.) ஐயான்கு- ஐயும் ஆனும் குவ்வும் ஆகிய மூன்றுருபுகளும்—செய்யுட்கு - செய்யுளிடத்து—அவவுமாகும் ஒரோவழி அகரமாகத்திரிந்துவரவும்பெறும்—அஃறிணைக்கு-அஃறிணையிடத்து—ஆனல்லாதன-ஆனல்லாத ஐயுங்குவ்வும்—ஆகா-அகரமாகத்திரியாவாம்-எ-று

(வரலாறு) காவலோனைக் களிறஞ்சும்மே- காவலோனக்களிறஞ்சும்மே-எ-ம். புலவரான்-புலவரான-எ-ம் கடிநிலையின்றேயாசிரியற்கு- ஆசிரியற்க-எ-ம் உயர்திணையிலே மூன்றுருபுந்திரிந்தன—புள்ளினான் புள்ளினான-எனவஃறிணையில்வரும். (சூ௧)

**சூ௰௯.** எல்லையின்னு மதுவும்பெயர்கொளு, மல்லவினைகொளு, நான்கேழிருமையும்,புல்லும்பெரும்பாலு மென்மனார்புலவர் ... *

இது. எழுவாய்முதலிய வெட்டுவேற்றுமைக்கு முடிக்குஞ்சொல்லுணர்த்துகின்றது. (இ-ள்) எல்லையின்னும்-எல்லைப்பொருட்டாகிய வைந்தாம்வேற்றுமையும்—அதுவும்- ஆறாம்வேற்றுமையும்—பெயர் பெயரை—கொளும் கொண்டுமுடியும்—அல்ல ஒழிந்தவெழுவாய் முதலிய வேற்றுமைகளெல்லாம்—வினை- வினையை—கொளும்- கொண்டுமுடியும்—நான்கேழ் நான்காம்வேற்றுமையு மேழாம்வேற்றுமையும்—இருமையும்- வினையையேயன்றிப்பெயரையும்—புல்லும் - கொண்டுமுடியும்—பெரும்பாலும்-மிகவும்—என்மனார்-என்றுசொல்லுவர்—புலவர்-புலவர்.எ-று [பெரும்பாலுமென்றதனால் எழுவாய்பெயர் கொள்ளுதலும் பிறவுங்கொள்க.]

(வரலாறு) கருவூரின்கிழக்கு-சாத்தனதுகை- எல்லையின்னும் அதுவும்பெயர்கொண்டன—சாத்தன்வந்தான் - குடத்தைவனைந்தான்- வாளால்வெட்டினான்- சாத்தனுக்குக்கொடுத்தான்- நோயினீங்கினான்- அவையின்கணிருந்தான்-கொற்றாகொள்- அல்லவைவினைகொண்டன- இப்படியேவினைக்குறிப்புங்கொள்ளும் —பிணிக்குமருந்து- மணியின்கணொளி-நான்காம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினையேயன்றிப் பெயருங்கொண்டன-பிறவுமன்ன. (சூ௨)

பெயரியன் முற்றிற்று.

# வினையியல்.

௩௨௰. செய்பவன்கருவி நிலஞ்செயல்காலஞ், செய்பொருளாறுந் தருவதுவினையே ... ... ... ... ... ... ... ...,

இது. பெயரியலிலே பதின்மூன்றாஞ் சூத்திரத்திலேபெயர் வினையென விரண்டாகுமெனவைத்த முறைப்படியே வினைச்சொல்லிலக்கணம் உணர்த்தும்படியாகத் தொடங்கி அவற்றுள்ளே தெரிநிலை வினைசசொல்லின் பொதுவிலக்கண முணர்த்துகின்றது (இ-ள்) செய்பவன்-கருத்தாவும்—கருவி-காரணமும்—நிலம்-இடமும்—செயல் செயலும்—காலம்-காலமும்—செய்பொருள்-செயப்படுபொருளும்ஆகிய—ஆறும்-அறுவகைப்பொருளையும்—தருவது-கொடுப்பது—வினை தெரிநிலைவினைச்சொல்லாம் எ-று [நடவாமுதலியவெல்லாந் தழுவுதற்குச்செய்பென்றார் செய்பவனென ஆண்பாலிலே சொன்னாரேனும் ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே - என்பதனால் ஐம்பாலுங்கொள்க]

(வரலாறு)

வனைந்தான் என்கிறவிடத்தே குயவனாகியசெய்பவனும்-மண்ணாகியமுதற்காரணமும்- தண்டசக்கரமுதலாகிய துணைக்காரணங்களும்- வனைந்தவிடமும்- வனைதற்குச்செயலும்- இறந்தகாலமும்- குடமுதலிய செயப்படுபொருளுந் தோன்றுதல்காண்க —ஆறும்என்ற உம்மையை உயர்வு சிறப்பும்மையாக்கி ஒழிந்தனசிலவுள அவைவேண்டுமேற்கொள்கவெனப் பொருளுரைத்து- இன்னதற்கு- இதுபயன்- என்பவைகளுங்கூட்டிக்கொள்க. அவையாவன்-பிறர்க்குவனைந்தான். பொருள்கருதிவனைந்தான், எனவரும். இவ்விரண்டும் கருவியில் அடங்கவும் பெறுமாதலால் ஒழிந்தனவாயின.

இன்னும் ஆறுந்தருவதுவினை என்றதற்குமுற்றும்மையொரோவழி யெச்சமுமாகும் என்கிறசூத்திரத்தால் இத்தொகையிற்சிலகுறைந்துவரவும் பெறுமெனப் பொருளுரைத்துக்கொள்க. கொடியாடிற்று- என்கிறவிடத்தே ஆடுதல் வினைக்குச் செயப்படுபொருள் குறைந்துவருதல்காண்க

முற்றுவினைகளிலே- பகுதியாற்செயலும் - விகுதியாற்செய்பவனும்- இடைநிலைமுதலியவற்றாற்காலமும்- பெயரெச்சவினையெச்சங்களிலே இம்முறையே செயலுங்காலமும் வெளிப்படையாகத் தோன்றுதலால் மற்றவைகுறிப்பாற் றோன்றுமெனக்கொள்க. (௯)

௩௨௧. பொருண்முதலாறினுந் தோற்றிமுன்னுறனுள், வினைமுதன்மாத்திரைவிளக்கல்வினைக்குறிப்பே ... ... ... ... ...*

இது. குறிப்புவினைச்சொல்லின் பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது, (இ-ள்.) பொருண்முதலாறினும் - பொருளாதி யாறங்காரணமாக—தோற்றி - அவற்றினிடத்தேபிறந்து—முன்னுறனுள்-முன்சொல்லப்பட்ட செய்பவன்முதலாகிய ஆறனுள்—வினைமுதன் மாத்திரை - கருத்தாவொன்றையே—விளக்கல் - விளக்குதல்—வினைக்குறிப்பு - வினைக்குறிப்புச் சொல்வினிலக்கணமாம்-எ-று. [பொருண்முதலாறும் பதவியலிலே ஐந்தாவது சூத்திரத்திலே சொல்லப்பட்டன,]

(வரலாறு.) குழையினன் -பொன்னினன்-எ-ம். அகத்தினன்- புறத்தினன் -எ-ம் ஆதிரையான்- ஓணத்தான் - எ-ம். குறுந்தாளன்- செங்கண்ணன்- எ-ம். கரியன் - நல்லன்-எ-ம் கடுநடையன் - இன்சொல்லன் - எ-ம். வரும்.—இவற்றுள் விகுதியாற் செய்பவன் விளங்கிற்றும் ற்றவைகள் குறிப்பாக உணடெனக்கொள்க ஒன்றைக் குழையினன்- ஒன்றற்குழையினன் - எனவராமையால்- குழையினன் - என்கிறதற்குக்கருவியுஞ் செயப்படு பொருளுமில்லையென்றும் - ஒன்றையுடையன்-ஒன்றனுடையன்-எனவருதலால் உடையன் என்கிறதற்கு ஆறும்உண்டெனவுங்கொள்க. (௨)

௩௨௨. அவைதாம் முற்றும்பெயர் வினையெச்சமுமாகி, யொன்றற்குரியவும்பொதுவுமாகும் ... ... ... ... ... ... *

இது. முன்னே தெரிநிலைகுறிப்பெனத் தொகுத் துணர்த்திய வினைச்சொற்களை வகுத்துணர்த்து கின்றது. (இ-ள்) அவைதாம் - முன்னிரண்டு சூத்திரங்களானுந் தெரிநிலையாயுங், குறிப்பாயும் வருமென்ற வினைச்சொற்கள். — முற்றும் - முற்றுவினைச் சொற்களும் — பெய (ரெச்சமும்) - பெயரெச்ச வினைச்சொற்களும் — வினையெச்சமும் - வினையெச்சவினைச்சொற்களும்— ஆகி - ஆகி —ஒன்றற்குரியவும்- திணை பாலிடங்களுள் ஒன்றற்குச்சிறப்பாய் வருவனவும்.— பொதுவும்-பலவற்றிற்குப்பொதுமையினிற்பனவும்—ஆகும்- ஆகும்.எ-று. இவற்றிற்குஉதாரணம் தத்தஞ்சிறப்புச் சூத்திரங்களிற்காண்க.

இனியொரு மொழியொழிதன் னினங்கொளற்குரித்தே - என்பதனல்-பிறவழியால் ஒன்றற்குரியவும் பொதுவுமாய் நிற்பனவுஞ்சிலவுளவெனக்கொள்க. அவைவருமாறு - நடந்தான்-தன்வினை-நடத்தினன்-பிறவினை- வெளுத்தான் - நடத்தல்செய்தான் - அவ்விரண்டிற்கும்

பொதுவினை.—நடந்தான்-விதிவினை. நடவான்-மறைவினை - சாவான் வேவான்-அவ்விரண்டற்கும்பொதுவினை — உண்பான் - செய்வினை, உண்ணப்பட்டது-செயப்பாட்டுவினை - இவற்றிற்குப்பொது வினைவந்தவிடத்திற்காண்க.—இன்னும்-தேடியசாத்தன் - தேடியவந்தான்-எனச்சொல்லொன்றே ஈரெச்சங்களுக்கும் பொதுவாகுகை முதலானவையுங்கொள்க. (௫)

௩௨௫. பொதுவியல்பாறையுந்தோற்றிப்பொருட்பெயர், முதலறுபெயரலதேற்பிலமுற்றே ... ... ... ... ... ... .. *

இது. முற்றுவினையாமா றுணர்த்துகின்றது. (இ-ள்) பொதுவியல்பாறையும் - பலவகைவினைகளுக்கும் பொதுவிலக்கணமாகிய செய்பவன்முதலாறையும்—தோற்றி - தோன்றச்செய்து—பொருட்பெயர்முதல்-பொருட்பெயர் முதலாகிய— அறுபெயரலது - அறுவகைப்பெயரல்லாத மற்றொன்றையும்—ஏற்பில - ஏலாதன—முற்று- முற்றுவினைவினைக்குறிப்புகளாம்-எ-று.

(வாலாறு செய்தானவன்-நல்லனவன்- குளிர்ந்தது நிலம்- வந்தது கார்-குவிந்தது கை-பாந்தது பசப்பு ஒழிந்தது பிறப்பு-இவை பொருண் முதலிய வாறையுங்கொண்டு முடிந்தது காண்க. பிறவுமன்ன (௬)

௩௨௬ ஒருவன்முதலைந்தையும் படர்க்கையிடத்து, மொருமைப்பன்மையைத் தன்மைமுன்னிலையினு, முக்காலத்தினு முரணமுறையே, மூவைந்திருமூன்றாறாய்முற்று, வினைப்பதமொன்றேமூவொன்பானும் ... ... ... ... ... ... ... ... ... ... *

இது. தெரிநிலைவினைமுற்றுப்பா விடக்காலங்களின் வேறுபாட்டால் இத்தனையாமென்று உணர்த்துகின்றது. (இ-ள்) ஒருவன்முதலைந்தையும்- ஆண்பான்முதலாகிய ஐம்பால் வினைமுற்றுக்களையும்— படர்க்கையிடத்தும்- படர்க்கையிடத்திலும். — ஒருமை - ஒருமைவினைமுற்றையும்.—பன்மையை- பன்மைவினைமுற்றையும்.— தன்மை- தன்மையிடத்திலும்— முன்னிலையினும்-முன்னிலை யிடத்திலும்வைத்து—முக்காலத்தினும்-முக்காலங்களாலும்—முரண-மாற — முறையே-சொல்லப்பட்டமுறையே—மூவைந்து- படர்க்கை வினைமுற்றுகள் பதினைந்தும் - இருமூன்று-தன்மைவினைமுற்றுக்கள் ஆறும் —ஆறு-முன்னிலைவினைமுற்றுகள் ஆறும்—ஆய் -ஆகி— முற்றுவினைப்பதமொன்று-தெரிநிலைவினைமுற்றுப்பதமொன்றுமே —மூவொன்பானும்-இருபத்தேழாகும்-எ-று.

(வரலாறு,)

| | | இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். |
|---|---|---|---|---|
| படர்க்கை. | ஆண்பால் | - நடந்தான் | - நடக்கின்றான் | - நடப்பான். |
| | பெண்பால் | - நடந்தாள் | - நடக்கின்றாள் | - நடப்பாள். |
| | பலர்பால் | - நடந்தார் | - நடக்கின்றார் | - நடப்பார். |
| | ஒன்றன்பால் | - நடந்தது | - நடக்கின்றது | - நடப்பது. |
| | பலவின்பால் | - நடந்தன | - நடக்கின்றன | - நடப்பன, |
| தன்மை, | ஒருமை | - நடந்தேன் | - நடக்கின்றேன் | - நடப்பேன் |
| | பன்மை | - நடந்தேம் | - நடக்கின்றேம் | - நடப்பேம், |
| முன்னிலை, | ஒருமை | - நடந்தாய் | - நடக்கின்றாய் | - நடப்பாய், |
| | பன்மை | - நடந்தீர் | - நடக்கின்றீர் | - நடப்பீர், |

எனத்தெரிநிலை வினைமுற்று ஒருபகுதியே விருபத்தே ழாயவாறு காண்க. (௬)

௱௨௫, அன் ஆனிறுமொழியாண்பாற்படர்க்கை... ... ...

இது, முன்சொல்லப்பட்ட விருவகைமுற்றுகளுள் திணைபாலி டங்களில் ஒன்றற்குரியன உணர்த்துகின்றது, (இ-ள்) அன்ஆனிறு மொழி-அன் ஆன் என்கிற விருவிகுதியையும் இறுதியிலுடைய மொழிகள்—ஆண்பாற்படர்க்கை-உயர்திணையாண்பாற்படர்க்கை வினைமு ற்றுங் குறிப்புமுற்றுமாம்-எ-று,

(வரலாறு.)

| வி, | தெ, இ, | தெ, நி, | தெ, எ, | கு, | |
|---|---|---|---|---|---|
| அன் | - நடந்தனன் | - நடக்கின்றனன் | - நடப்பன் | - குழையன் | அவன் |
| ஆன் | - நடந்தான் | - நடக்கின்றான் | - நடப்பான் | - குழையான் | |

எனவரும், மற்றவைகளுமிப்படியே, (௭)

௱௨௬, அள் ஆளிறுமொழி பெண்பாற்படர்க்கை ... ... ...

இதுவுமது, (இ-ள்,) அள் ஆளிறுமொழி-அள் ஆள் என்கிறஇர ண்டுவிகுதியையும் இறுதியிலுடைய மொழிகள் — பெண்பாற்படர் க்கை-உயர்திணைப் பெண்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற் றுமாம்-எ-று,

(வரலாறு)

| வி, | தெ, இ, | தெ, நி, | தெ, எ, | கு, | |
|---|---|---|---|---|---|
| அள் | - நடந்தனள் | - நடக்கின்றனள் | - நடப்பள் | - குழையள் | அவள், |
| ஆள் | - நடந்தாள் | - நடக்கின்றாள் | - நடப்பாள் | - குழையாள், | |

எனவரும், மற்றவைகளுமிப்படியே, (எ)

கூஉஎ அர்ஆர்பவ்வூரகரமாரீற்றபல்லோர்படர்க்கைமார்வினையொடுமுடிமே ... ... ... ... ... ... ... ... ... ...

இதுவுமது, (இ-ள்,) அர்ஆர்பவ்வூரகரமாரீற்ற - அர்ஆர்ப மாரென்கிறநான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் — பல்லோர்படர்க்கை- உயர்திணைப்பலர்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம்—மார்- இவற்றுள்ளே மாரீற்றுவினைமுற்று — வினையொடுமுடியும்-பொதுவிதியாற் பெயருடன் முடிவதன்றி; வினையுடனுமுடியும்-எ-று, [மார்விகுதியும் பவ்விகுதியுந் தாமே காலங்காட்டுமெனப் பதவியலுட் கூறுதலால் அவைகுறிப்புவினைக்குவருதலில்லை,

(வரலாறு.)

வி, தெ, இ தெ, நி, தெ, எ, கு;
அர் - நடந்தனர்-நடக்கின்றனர்-நடப்பர் -குழையர், }
ஆர் - நடந்தார் -நடக்கின்றார் -நடப்பார் -குழையார், } அவர்.
ப நடப்ப }
மார் பாடன்மார்

ஆர்த்தார் கொண்மார் வந்தார்-எனவரும், மற்றவைகளு மிப்படியே,

கூஉஅ, துறுடுக்குற்றியலுகரவீற்ற, வொன்றன்படர்க்கைடுக்குறிப்பினுகும் ... ... ... ... ... ... ... ... ... ...

இதுவுமது, (இ-ள்) துறுடுக்குற்றியலுகரவீற்ற-துறுடு என்கிற இம்மூன்று குற்றியலுகரவிகுதிகளை யிறுதியிலுடைய மொழிகள்—ஒன்றன்படர்க்கை-அஃறிணையொன்றன்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம் — டு - இவற்றுள் டுவ்விகுதி குறிப்புவினைமுற்றிற்கல்லது தெரிநிலைவினை முற்றிற்கு வருவதில்லை-எ-று,[றுவ்விகுதி இறந்தகாலத்திற்கே வருமெனக்கொள்க,

(வரலாறு)

தெ, இ, தெ. நி, தெ, எ, கு }
து-நடந்தது-நடக்கின்றது - நடப்பது-குழையது, }
று-கூயிற்று- அற்று, } அது.
டு- பொருட்டு, }

எனவரும்-மற்றவைகளுமிப்படியே, (கூ)

கூஉகூ, அஆவீற்றபலவின்படர்க்கை, ஆவேயெதிர் மறைக்கண்ணதாகும் ... ... ... ... ... ... ... ... ... ...

இதுவுமது. (இ-ள்) அ ஆ ஈற்ற-அ ஆ என்கிற விகுதிகளை யிறுதி யிலுடையமொழிகள்—பலவின்படர்க்கை- பலவின்பாற்படர்க்கைவி னைமுற்றுங்குறிப்புமுற்றுமாம்—ஆ-அவற்றுள் ஆகாரம்—எதிர்மறை க்கண்ணதாகும்- எதிர்மறையினிடத்து வருமன்றி உடன்பாட்டினிடத் துவாராது.எ-று.

(வரலாறு)

| | தெ.இ. | தெ.நி. | தெ.எ. | கு. | மறை | |
|---|---|---|---|---|---|---|
| அ- | நடந்தன | நடக்கின்றன- | நடப்பன- | குழையன | | அவை. |
| ஆ- | | | | | நடவா | |

எனவரும்மற்றவைகளுமிப்படியே. (௰)

௩௩௰ தன்மைமுன்னிலை வியங்கோள்வேறிலை, யுண்டெச்சமி ருதிணைப்பொதுவினை ... ... ... ... ... . .. ...௪

இது திணைபாலிடங்களுக்குப் பொதுவினைகளை அறிவிக்கும்ப டியாகத்தொடங்கி அவற்றுள் இருதிணைக்கும் பொதுவினை இவையெ ன உணர்த்துகின்றது (இ-ள்) தன்மை-தன்மைவினை வினைக்குறிப்பு முற்றுகளும்—முன்னிலை-முன்னிலைவினை வினைக்குறிப்புமுற்றுகளும் —வியங்கோள்- வியங்கோள்வினைமுற்றுகளும்—வேறிலையுண்டு- வே று இல்லை உண்டுஎன்கிற மூன்றுவினைக்குறிப்பு முற்றுகளும்—எச் சம்- பெயரெச்சவினை வினைக்குறிப்புகளும்—வினையெச்சவினை வினை க்குறிப்புகளும்—இருதிணை உயர்திணை அஃறிணைஎன்கிற இருதிணைக் கும்—பொதுவினை-பொதுவினைகளாம்.எ-று.[செய்யுமென்னும் பெ யரெச்சமே செய்யுமென்னு முற்றாதலால் அம்முற்றும் இருதிணைப் பொதுவினையாமென்கிறது தானேதோன்றுதல்காண்க.] (௰௧)

௩௩௧. குடுதுறுவென்னும் குன்றியலுகரமோ, டல்லன்னென் னே னாகுமீற்ற,விருதிணைமுக்கூற் றொருமைத்தன்மை ... ...௪

இது. நிறுத்தமுறையாலே தன்மையொருமை வினைமுற்றுங் கு றிப்புமுற்றும் உணர்த்துகின்றது. (இ-ள்.) குடுதுறுவென்னுங் குன் றியலுகரமோடு-குடு துறு என்கிற குற்றியலுகர விகுதிகளும்—அல் லன் னென்னேன் அல்-அன் என் ஏன் என்கிற நான்குமெய்யீற்றுவி குதிகளும்—ஆகும்-ஆகிய—ஈற்ற- இவ்வெட்டுவிகுதிகளையும் இறுதியி லேயுடைய மொழிகள்—இருதிணை-இருதிணையிடத்தனவாகிய—முக் கூற்று - ஒருவன் ஒருத்தி ஒன்று என்கிற மூன்றுபால்களுக்கும் பொ துவாகிய—ஒருமைத்தன்மை ஒருமைத்தன்மை வினைமுற்றுங்குறிப்பு முற்றுமாம். எ-று. [குடுதுறு என்கிற நான்கும் தாமேகாலங்காட்டுத லாற் குறிப்புவினைக்குவாரா அல்-எதிர்காலத்திலே மாத்திரம்வரும்]

(வரலாறு)

| வி. | தெ. இ. | தெ. நி. | தெ. எ. | கு. | |
|---|---|---|---|---|---|
| கு | - " | " | உண்கு | - " | யான். |
| டு | - உண்டு | - " | " | " | |
| து | - வந்து | - - " | வருது | - " | |
| று | - சென்று | - " | சேறு | - " | |
| அல்- | " | " | உண்பல் | - " | |
| அன்- | உண்டனன் | - உண்ணாநின்றனன் | - உண்டன் | - தாரினன். | |
| என்- | உண்டனென் | - உண்ணாநின்றனென் | - உண்பென் | - தாரினென் | |
| ஏன்- | உண்டேன் | - உண்ணாநின்றேன் | - உண்பேன் | - தாரினேன் | |

என வரும் மற்றவைகளுமிப்படியே.] (தன்மையொருமை) (௰உ)

௧௧௨. அம்மாமெம்மென்பன முன்னிலையாரையு மெம்மேமோமிவை
படர்க்கையாரையு மும்மூர்கடதற விருபாலாரையுந் தன்னொடுபடுக்கு
ந் தன்மைப்பன்மை ... ... ... ... ... ... ... .. *

இ-து. தன்மைப்பன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றும் உணர்த்துகின்றது (இ-ள்) அம்மாமென்பன-அம் ஆம் என்கிற விரண்டுவிகுதிகளையு மிறுதியிலுடையமொழிகள்—முன்னிலையாரையும்-தன்னிலையி னிற்கையன்றி முன்னிலையிடத்தாரையும்—எம்மேமோமிவை - எம் ஏம் ஓம் இம்மூன்று விகுதிகளையு மிறுதியிலுடைய மொழிகள்—படர்க்கையாரையும் - தன்னிலையினிற்கையன்றிப் படர்க்கையிடத்தாரையும்—உம்மூர்கடதற - கும் டும் தும் றும் என்கிற நான்குவிகுதிகளையு மிறுதியிலுடையமொழிகள்—இருபாலாரையும்-தன்னிலையு னிற்கையன்றி அவ்விருவிடத்தார்களையும்- தன்னொடுபடுக்குந் தன்மைப்பன்மை-தன்னுடன் கூட்டுகிறதன்மைப்பன்மை வினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம். எ-று. கும் டும் தும் றும் என்கிறநான்குந்தாமே காலங்காட்டுதலாலே குறிப்புவினைக்கு வருவனவல்ல.]

| வி. | தெ. இ. | தெ. நி. | தெ. எ. | கு. | |
|---|---|---|---|---|---|
| அம்- | உண்டனம் | - உண்கின்றனம் | உண்பம் | தாரினம் | யாம். யானு. நீயும். |
| ஆம்- | உண்டாம் | - உண்கின்றாம் | உண்பாம் | - தாரினாம் | |
| எம்- | உண்டனெம் | - உண்கின்றனெம் | - உண்பெம் | - தாரினெம் | யாம். யானு மவனும் |
| ஏம்- | உண்டேம் | - உண்கின்றேம் | - உண்பேம் | - தாரினேம் | |
| ஓம்- | உண்டோம் | - உண்கின்றோம் | - உண்போம் | - தாரினோம் | |
| கும்- | " | உண்கும் | - " | | யாம். யானு நீயுமவனும் |
| டும்- | உண்டும் | - " | " | " | |
| தும்- | வந்தும் | - " | வருதும் | - " | |
| றும்- | சென்றும் | - " | சேறும் | - " | |

எனவரும் இவைசிறுபான்மை இம்முறையின்றி மயங்கிவருதலு முண்டு மற்றவையுமிப்படியே. (௰௧)

௩௩௩. செய்கெனொருமையுஞ் செய்குமென் பன்மையும், வினை யொடுமுடியினும்விளம்பியமுற்றே ... ... ... ... ... *

இது. சிலதன்மை வினைமுற்றுகளுக்கு எய்தியதன்மேற் சிறப்பு விதியும் எய்திய திகந்துபடாமற்காத்தலும் உணர்த்துகின்றது இ-ள்) செய்கென்-செய்குஎன்கிற—ஒருமையும்- தன்மையொருமைமுற்று ம்—செய்குமென்-செய்கும்என்கிற—பன்மையும்-தன்மைப்பன்மை முற்றும்—வினையொடுமுடியினும் பெயருடனேயன்றி வினையுடனே முடியினும்—விளம்பிய-முன்சொல்லப்பட்ட—முற்றே முற்றுகளே யாம்.எ-று. வரலாறு)உண்குவந்தேன் உண்கும்வந்தேம்- எனவரும்.()

௩௩௪. முன்னிலைகூடியபடர்க்கையுமுன்னிலை ... ... ...

இது உளப்பாட்டுப் பன்மைமுன்னிலைக்கும் உண்டென்பது உணர்த்துகின்றது (இ-ள்.) முன்னிலை முன்னிலையோடு—கூடிய-சேர்ந்த—படர்க்கையும் படர்க்கையும்—முன்னிலை- முன்னிலையாம். எ-று.

| | | | |
|---|---|---|---|
| உண்டனிர்- | குழையினிர். | } | நீயுமவனும். |
| உண்டீர் - | குழையீர் | } | |
| உண்மின்- | ——— | } | |

எனவரும்.இச்சூத்திரம் முன்னிலைப்பன்மை கூறியவழியே கூறாது - ஒன்றினமுடித்த றன்னினமுடித்தல் என்கிறவுத்தியால் இங்கே சொல்லப்பட்டது. (௰௫)

௩௩௫. ஐயாயிகர விற்றமூன்றும், ஏவலின்வருஉ மெல்லாவிற்று வு,முப்பாலொருமை முன்னிலைமொழியே ... ... ... ... *

இது. முன்னிலையொருமை வினைமுற்றுங்குறிப்புமுற்றும் உணர்த்துகின்றது (இ-ள்) ஐயாயிகர விற்றமூன்றும்-ஐ ஆய் இ என்கின்ற மூன்றுவிகுதிகளை யிறுதியிலுடைய மொழிகளும் — ஏவலின்வருஉ மெல்லாவிற்றவும் - விகுதிகுன்றுதல் குன்றியு நிற்பனவாகிய ஏவலி லேவருகிற இருபத்துமூன்றீற்று மொழிகளும்—முப்பால்- ஒருவன் ஒருத்தி ஒன்று என்கிற மூன்றுபால்களுக்கும் பொதுவாகிய — ஒருமைமுன்னிலைமொழி முன்னிலையொருமைமுற்றுங் குறிப்புமுற்றுமாம்.எ-று! [இகரவிகுதி எதிர்காலத்தை யிடைநிலையில்லாமற் காட்டும் ஐ

வல்வினைமுற்றுகள் குறிப்புவினையில் இல்லையென்று அறிவித்தற்கு உம்மைகொடுத்துப்பிரித்தார்.]

(வரலாறு.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வி | தெ இ. | செ,நி, | மே.எ, | கு, | |
| ஐ | -உண்டனை | உண்ணாநின்றனை | -உண்பை | -வில்லை, | நீ. |
| ஆய் | -உண்டாய் | -உண்ணாநின்றாய் | -உண்பாய் | வில்லாய் | |
| இ | -உண்டி | -உண்ணாய் நின்றி | -சேறி | -வில்லி. | |

எனவரும்.ஏவல்வினைகள்-நடவாய் வாராய்- கேளாய்-அஃகாய் நீ-எனவிகுதிகுன்றாமலும்-நட-வா-கேள்-அஃகு-நீ-எனவிகுதிகுன்றியும் வரும் ஏவலெனப்பொதுப்படச்சொல்லியவதனால்-செய்வி- செய்விப்பி என ஏவன்மேல் ஏவலாகவருவனவும்-செய்யல்-செய்யேல்- மறால்-நடவாதே-ஏன எதிர்மறையில் வருவனவும்-சொல்லிக்காண்- நடந்திடு-எழுந்திரு அருளு-எனவுடன்பாட்டில் வருவனவுங்கொள்க.] (௰சு)

கூகூசு. முன்னிலைமுன்ன ரீயுமேயு, மன்னிலைமாயின் மெய்யூர்ந்துவருமே ... ... ... ... ... ... ... ... ... *

இது ஏவன்முற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது. (இ-ள்.) முன்னிலைமுன்னர்-முன்னிலையேவன் முற்றெனமுன்சொல்லப்பட்ட வற்றிற்குமுன்—ஈயும்-ஈகாரமும்—ஏயும்-ஏகாரமும்—அந்நிலைமாயின்-அவ்விடத்து நிற்றற்குரிய மாயினையுடைய—மெய்-யாதானுமொருமெய்யை—ஊர்ந்து-ஏறி-வரும் வரும்-எ-று.

(வரலாறு) சென்றீபெரும நிற்றகைக்குநர்யாரோ- அட்டிலோலை தொட்டனை நின்மே-எனவரும். (௰எ)

- (முன்னிலைமாறு) -

கூகூஎ. இர்ஈரீற்றவிரண்டுமிருதிணைப், பன்மைமுன்னிலையின்னவற்றேவல்... ... ... ... ... ... ... ... ... *

இது. முன்னிலைப்பன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றும் உணர்த்துகின்றது, (இ-ள்) இர்ஈரீற்றவிரண்டும்- இர்ஈரென்கிற இரண்டுவிகுதிகளையு மிறுதியிலுடைய மொழிகள்— இருதிணை - இருதிணைக்கும்பொதுவாகிய—பன்மைமுன்னிலை - பன்மைமுன்னிலை வினைமுற்றுங்குறிப்புமுற்றுமாம்—மின்- மின்விகுதியையிறுதியிலுடைய மொழிகள்—அவற்றேவல்-முன்னிலைப்பன்மை யேவன்முற்றும்-எ-று [உம்மின்விகுதிமுன்னிலைப்பன்மை யேவலுக்கு இக்காலத்தில் வழங்கிவருதலால்-புதியனபுகுதலும் வழுவல என்பதனைக்கொள்க]

(வரலாறு.)

| | செ. இ. | செ. நி. | செ. எ. | கு. | |
|---|---|---|---|---|---|
| இர் | உண்டனிர் | உண்கின்றனிர் | உண்பிர் | குழையிர். | நீர் |
| ஈர் | உண்டீர் | உண்கின்றீர் | உண்பீர் | குழையீர். | நீர் |
| மின் | — | — | உண்மின் | — | |
| உம் | — | — | உண்ணும் | — | |

எனவரும். மற்றவையுமிப்படியே. (௰௮)

௩௩௮. கயவொடுரவ்வொற்றீற்றவியங்கோ, ளியலு மிடம்பாலெ ங்குமென்ப ... ... ... ... ... ... ... ... ... *

இது. வியங்கோண்முற்று உணர்த்துகின்றது. (இ-ள்) கயவொடு கயவென்கின்றவிரண்டுயிர்மெய்யினையும் — ரவ்வொற்று - ரகரமெய்யினையும்—ஈற்ற- இறுதியிலுடையமொழிகள்—வியங்கோள் - வியங்கோண்முற்றுகளாம் —(இடமெங்கும்)-மூன்றிடங்களிலும் — பாலெங்கும்-ஐம்பால்களிலும்.—இயலும்- செல்லும் — என்ப - என்று சொல்லுவர் புலவர்-எ-று.

(வரலாறு)

வாழ்க.
வாழிய.
வாழியர்.
} யான்-யாம்-நீ-நீர்-அவன்-அவள்-அவர்-அது-அவை என வரும்-வாழ்த்துப்பொருளில்வந்தன.

இவை அவனுண்க-நீவருக-எனவுயர்ந்தோனிழிந்தோனை விதித்தற்பொருளிலும்-எம்மைக்காத்தருள்க - ஒருசொற்கேட்க எனவேண்டிக்கோடற்பொருளிலும்- அத்தியன்கெடுக-எனவைதற் பொருளிலும்-வரும் — இப்படி சொன்னவர்தாமே வகுத்துரையாதவும்வகுத்தனர்கொளமே-என அல்லீறும் உடன்பட்டுப் புணர்த்தமையால் - அதுவுங்கொள்க. அன்றியுஞ் சிறுபான்மை இக்காலவழக்கத்தில் - நடக்கக்கடவன்-எ-ம். நடப்பானாக-எனப்பாலிடங்களுள் ஒன்றைச் சேர்ந்துவருவனவுங்கொள்க. (௰௯)

௩௩௯. வேறில்லையுண்டைம்பான்மூவிடத்தன ... ... ... *

இது. வேறுமுதலியமூன்றும் பாலிடங்களுக்குப் பொதுவாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) வேறில்லையுண்டு- வேறு இல்லை உண்டு என்கிற மூன்றுவினைக்குறிப்புமுற்றுகளும்—ஐம்பால்- ஐம்பாலுக்கும்—மூவிடத்தன-மூவிடத்திற்குமுரியனவாம்-எ-று.

வேறு- இல்லை- உண்டு. } அவன்- அவள்-அவர்- அது அவை- யான்- யாம்- நீ - நீர்- எனவரும்.

மொழிந்த பொருளோடொன்றவவ்வயின் மொழியா ததனையு முட்டின்று முடித்தல் என்கிறவுத்தியால் வேண்டும் - தகும் படும் எ ன்கிறசொற்களும் ஐம்பான்மூவிடத்திற்கும் பொதுவா மெனக்கொ ள்க. (வரலாறு அவனோதல்வேண்டும்-நீ போகல் வேண்டும் எ-ம். இ ச்சோறுண்ணத்தகும் - இவராவிக்காரியஞ் செய்யத்தகும்-எ-ம் வஞ் சனையஞ்சப்படும் - கற்றறிந்தோனைத் தலைநிலத்துவைக்கப்படுமெ ம. வரும். இம்மூன்றுமொருபொருட்சொற்களாய்த் தொழிற்பெயராய்த் தோற்றப்பொருள்பட்டேநிற்குமென்றறிக] (௨௰)

௧௪௰. செய்தசெய்கின்ற செய்யுமென்பாட்டிற், காலமுஞ்செ யலுந்தோன்றிப்பாலொடு, செய்வதாதியறுபொருட்பெயரு, மெஞ் சநிற்பதுபெயரெச்சம்மே ... ... ... ... ... ... ...

இது, ஈரெச்ச மென்னப்பட்டவற்றுள்ளே பெயரெச்ச மாமா று உணர்த்துகின்றது. (இ-ள்) செய்தசெய்கின்ற செய்யுமென் - செ ய்தவென்றும் செய்கின்றவென்றும்செய்யுமென்றும் சொல்லப்படுகி ற—பாட்டில் மூவகைச்சொற்களிலே—காலமும் - முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்கிற மூன்றுகாலங்களும்—செயலும்- தொழிலும் —தோன்றி-தோன்றி—பாலொடு -.பாலுடனே—செய்வதாதி - செ ய்பவன் கருவிநிலம் செயல்காலம் செயப்படுபொருள் என்கிற —அ றுபொருட்பெயரும் அறுவகைப்பொருட்பெயர்களும் .— எஞ்சநிற் பது ஒழியநிற்பன — பெயரெச்சம் - பெயரெச்சவினைக்குறிப் புகளாம் எ-று [எற்புழிக்கோடலால்-தோன்றி என்பது வினைக்குந் தெரிநிலைக்கும்-ஒழிந்தவிதிதெரிநிலை குறிப்பு இரண்டற்குங் கொள்க.

(வரலாறு.)

உண்ட - உண்கின்ற- உண்ணும்- } சாத்தன்-செய்பவன்-கலம்-கருவி வீடு-நிலம் - ஊண் செயல்- பகல்- காலம் - சோறு-செயப்படுபொருள்.

கரியகுதிரை - உள்ளபொருள் - எனப்பெயரெச்சக் குறிப்புவரு ம் அறுபொருட்பெயருமென்ற உம்மையால் - களைகட்டபயிர் - களை கட்டகூலி- என இன்னதற்கு இதுபயன் என்னும்பெயர்களெஞ்சநிற் பனவும் உண்டவிளைப்பு - குடிபோனவூர்-என்பிறபெயரெஞ்ச நிற்ப னவுங்கொள்க. (௨௧)

௧௪௧. செய்யுமென்னெச்சவீற்றுயிர் மெய்சேறலுஞ், செய்யுளு [illegible]ம்மூந் தாகலுமூந்றே, வுயிர்மெய்யுமேகலுமுளவே ....

இது செய்யுமெனெச்சத்திற் கெய்தியதன்மேற் சிறப்புவிதியு ணர்த்துகின்றது. (இ-ள்) செய்யுமெனெச்ச-செய்யுமென்னும்வாய்பா ட்டுப் பெயரெச்சத்தினுடைய — ஈற்று இறுதியிலுள்ள — உயிர் மெய்- உயிர்மெய்யானது— சேறலும் - கெடுதலும் — செய்யுளுள் செய்யுளிடத்து—உம் உம்விகுதியானது —உந்தாகலும்-உந்தெனத் திரிதலும் —முற்றேல்-அதுமுற்றாயின்—உயிரும்-அதனிறுதியுயிரா யினும் — உயிர்மெய்யும்-உயிர்மெய்யாயினும்—ஏகலும்-கெடுதலும் —உள-உளவாம்-எ-று

(வரலாறு. வாவும்புரவி-வாம்புரவி எனச்செய்யுமெனெச்சத்திற் றஉயிர்மெய்கெட்டது - கூப்பெயர்க்கும் நீர்க்கோழி - கூப்பெயர்க்கு ந்து-எனச்செய்யுளில் உம் உந்து ஆயிற்று. கலுழும்-தோழியுங்கலுழ் மே, மொழியும்-அவனொடுமொழிமே - எனமுற்றாயவிடத்து உயிரு முயிருமெய்யுங்கெட்டன. (௨௨)

௩௪௨. தொழிலுங்காலமுந் தோன்றிப்பால்வினை, யொழியநிற் பது வினையெச்சம்மே ... ... ... ... ... ... .... *

இது. வினையெச்சமாமாறு உணர்த்துகின்றது (இ-ள்) தொழி லும்-செயலும் — காலமும்-பொழுதும்—தோன்றி விளங்கி—பால்- பாலுடனே—வினை-வினையானது— ஒழிய எஞ்ச — நிற்பது - நிற்ப ன—வினையெச்சம்-வினையெச்ச வினைவினைக்குறிப்புகளாகும் -எ-று [வினையெனப்பொதுப்படக்கூறுதலால் வினைமுற்றுங் குறிப்புமுற்று- ம் வினையாலணையுந்பெயருந்தொழிற்பெயருங்கொள்க] (௨௩)

௩௪௩. செய்துசெய்பு செய்யாச்செய்யூ,செய்தெனச்செயச்செ யின்செய்யியசெய்யியர், வான்பான்பாக்கின வினையெச்சம் பிறவைந் தொன்றாறுமுக்காலமுமுறைதரும் ... ... ... ... ... *

இது. முன்னேதொழிலுங் காலமுந்தோன்றி யென்னப்பட்ட வினையெச்ச வாய்பாடுகள் இவையென வகுத்துணர்த்து கின்றது. (இ-ள்) செய்து - செய்யியர். செய்து என்பது முதல்செய்யியர் என் பதீறாகிய ஒன்பதுவாய்பாட்டால் வருவனவும் — வான்பான் பாக்கு- இம்மூன்றுவிகுதிகளைக் கொண்டுவருவனவும் — இன-இவைபோல்வ னபிறவும்—வினையெச்சம் - வினையெச்சவினைகளாம் — ஐந்து- முன் னையவைந்தும் — ஒன்று-நடுநின்ற ஒன்றும்—ஆறு- பின்னையவாறும் —முக்காலமும்-இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் — மு றை-முறையாக—தரும் - காட்டுவனவாம். எ-று. [இவற்றுள் செய்தெ ன்ப தொழிந்தவை இடைநிலைபெறாமல்தாமேகாலங்காட்டும் ]

இனவென் றவையால் - ஆடிக்கொண்டான் - போய்க் கொண்டான் - எனச்செய்து என்கிறவாய்பாடுபற்றி இகரவிகுதியும் யகரமெய்விகுதியும் வருமென்றும் — தழீஇக் கொண்டான் - என விகுதி விகாரப்பட்டு வருமென்றும் — புக்குவந்தான் எனப்பகுதி விகாரப்பட்டு வருமென்றும் — உணற்குவந்தான் - எனச்செயவென்வாய்பாடுபற்றிக் குவ்விகுதி வருமென்றும் — உண்டாற் பசிதீரும்உண்டக்காற்பசிதீரும்-உண்ணுமேற்பசிதீரும்-எனச் செயினென்னும் வாய்பாடுபற்றி ஆல் கால் ஏல்விகுதிகள் வருமென்றும் — ஏனுமேனும் வரும்-காண்டலுமிதுவேகூறும்-எனஎனும் - உம்மும் - ஒரோவிடத்திலே விகுதிகளாய்வருமென்றும்—உண்ணாமைவந்தான் - உண்ணாமல்வந்தான்-உண்ணாமேவந்தான் - என எதிர்மறையிடத்துமை - மல்-மே-விகுதிகள்வருமென்றும்—அருளின்றிவந்தான்-அவனல்லதில்லை- அவனல்லாமலில்லை-என வினையெச்சக்குறிப்புகளுக்கு-றி - து-மல்-என்பவை விகுதிகளாமென்றுங் கொள்க.— உரையிற்கோடலால்- சிறுபான்மை செயவெனெச்சம் உண்ணப்பசிதீர்ந்தது எனவருகிறவிடத்தே இறந்தகாலமும்-உண்ணவந்தான்-எனவருகிறவிடத்தே- எதிர்காலமுந்தருமெனக்கொள்க, (உகூ)

௨௪௪, அவற்றுள்-முதலினான்குமீற்றின்மூன்றும், வினைமுதல்கொள்ளும்பிறவுமேற்கும்பிற ... ... ... ... ... ... *

இது, அவ்வினையெச்சங்களுக்காவதோர் புறனடை யுணர்த்துகின்றது, (இ-ள்,) அவற்றுள்-முன் சூத்திரத்துட்சொல்லிய வினையெச்சங்களுள்-முதலில் முதலினுள்ள—நான்கும்-செய்து செய்பு செய்யா செய்யூ என்கிறநான்கும்—ஈற்றில் - இறுதியிலுள்ள—மூன்றும்-வான் பான் பாக்கு என்கிற விகுதிகளையுடைய மூன்றும்— வினைமுதல்-செய்பவனை—கொள்ளும்-கொண்டுமுடியும் — பிற-நடுவிலுள்ள செய்தன செய செயின்செய்யிய செய்யிரென்கிற ஐந்தும் இவைபோல்வனபிறவு மென்றதனால்வருஞ் செய்தால்முதலியவையும் வினையெச்சக்குறிப்புகளும் ஆகியவிவைகள்—பிறவும் - செய்பவனையன்றி மற்றவைகளையும்—ஏற்கும்-கொண்டுமுடியும்-எ-று.

| | |
|---|---|
| உ —தானடந்துவந்தான், | |
| பு —தானுண்குபுபோனான், | |
| ஆ —தான்கல்லாக்கழித்தான், | முதலினான்கும் ஈற்றின் மூன்றும் வினைமுதல் கொண்டு முடிந்தன, |
| ஊ —தான்காணூமகிழ்ந்தான், | |
| வான் —தான்கொல்வான்செல்வான் | |
| பான் —தானழைப்பான்புகுந்தான் | |
| பாக்கு —தானருபாக்குவருவான், | |

| | | |
|---|---|---|
| என | தானுண்டெனமகிழ்ந்தான். | இடையினைந்தும் வினைமுதலும் பிறவுங் கொண்டன. |
| | பிறனுண்டெனமகிழ்ந்தான். | |
| அ | தானுண்ணவருகிறான். | |
| | பிறனுண்ணக்காண்கிறான். | |
| இன் | தானுண்ணின்மகிழ்வான். | |
| | பிறனுண்ணிற் கொடுப்பான். | |
| இய | தானுண்ணியவருவான். | |
| | பிறனுண்ணியகொடுப்பான். | |
| இயர் | தானுண்ணியர்போவான். | |
| | பிறனுண்ணியர் வழங்குவான். | |

உண்டானுவக்கும் - உண்டாற் பசிதீரும்-எ-ம். மழை யின்றிப் பொய்ப்பின்-விருந்தின்றியுண்டான்-எ-ம். இன்னவென்றதனால் வருகிறசெய்தால் முதலியவையும்-வினையெச்சக்குறிப்பும் - இப்படியேவினைமுதலும் பிறவுமேற்றல்காண்க ] (௨௫)

௩௪௫. சினைவினைசினையொடு முதலொடுஞ்செறியும் ... ...

இது. முன்வினைமுதல்கொண்டுமுடியுமென்றவற்றிற்குஓர்புறனடையுணர்த்துகின்றது (இ-ள்) சினைவினை - முதலினுன் குமீற்றின்மூன்றுமென்ற வினையெச்சங்கள் சினைவினையாயின் அவை — சினையொடும்-முன்வினை முதல்கொள்ளுமென்ற விதியினுலே சினையுடனேயன்றி—முதலொடும்முதலுடனும்—செறியும்-முடியும்-எ-று (வரலாறு) காலொடிந்து விழுந்தான்-கண்வருவான் கதிரவனைத்தொழுதான் -என வரும். பிறவுமன்ன-ஒடிதல்சினைவினை-விழுதல்முதல்வினை. (௨௬)

௩௪௬. சொற்றிரியினும்பொருடிரியாவினைக்குறை ...

இதுவுமது. (இ-ள்.) சொல்-முதலினுன் குமீற்றின்மூன்றுமென்றவினையெச்சவாய்பாடுகளாக—வினைக்குறை - பிறவினை யெச்சவாய்பாடுகள்—திரியினும்.வேறுபடினும்—பொருள்-அவற்றின் பொருள்கள்—திரியா-வேறுபடாவாம்-எ-று.

(வரலாறு) கோழிகூவிப் பொழுது புலர்ந்தது - யான்கொள்ளுவான் பொன் கொடுத்தான். இவற்றில் கூவஎன்பது கூவி என்றும்-கொள்ள என்பது கொள்வான் என்றுந்திரிந்தன. மற்றவைகளுமிப்படியே (௨௭)

௩௪௭. ஆக்கவினைக்குறிப் பாக்கமின்றியலா ... ... ...

இது. வினைக்குறிப்பிற்கு ஆவதோர் விதியுணர்த்துகின்றது, (இ-ள்) ஆக்க - ஆக்கத்தால்வருகின்ற —வினைக்குறிப்பு-வினைக்குறிப்

புச்சொல்லுகள் — ஆக்கம் - ஆக்கச்சொல்லுகள். — இன்று - இல்லாமல் — இயலா - வாராவாம், எ-று, (வரலாறு) சாத்தனல்லனாயினான் - எனவரும்-சிலவிடங்களிலே வேற்றுமையுருபுபோலஅவ்வாக்கச் சொல்தொக்கும் வரும், ஆகவே இயற்கை வினைக்குறிப்பாயின் - சாத்தனல்லன் என ஆக்கம் வேண்டாதுவருமென்பதாயிற்று. (உ௮)

௩௪௮. பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற், செல்லாதாகுஞ் செய்யுமென் முற்றே ... ... ... ... ... ... ...*

இது. செய்யுமெனெச்சம்போல அறனுலாகிய செய்யுமென் முற்றுவினை சிலபாலிடங்களுக்குச் செல்லாமை புணர்த்துகின்றது (இ-ள்.) செய்யுமென் முற்று-செய்யுமென் முற்றானது — பல்லோர்படர்க்கை (யில் - உயர்திணைப்பன்மைப் படர்க்கையிலும் — முன்னிலை (யில் - முன்னிலையிலும் — தன்மையில் - தன்மையிலும் — செல்லாதாகும் - செல்லாது-எ-று. [எனவே பலவொழிந்தபடர்க்கை நாற்பாலிலுஞ் செல்லுமென்பதுபெற்றும்.]

(வரலாறு) அவனுண்ணும்-அவளுண்ணும்-அதுவுண்ணும்-அவையுண்ணும்-எனவரும்.

௩௪௯. யாரென் வினாவினைக் குறிப்புயர்முப்பால் ... ... *

இது. திணைப்பொதுவின்றிப் பாற்பொதுவினையாமாறுணர்த்துகின்றது (இ-ள்) வினா - வினாப்பொருளைத்தருகிற — யாரென்-யாரென்கிற — வினைக்குறிப்பு வினைக்குறிப்புமுற்று — உயர்முப்பால் உயர்திணைமுப்பால்களுக்கும்பொதுவினையாம்.எ-று.

(வரலாறு) அவன்யார்-அவள்யார்-அவர்யார்-எனவரும்-இதுஆரெனவு மருவிவழங்கும். (௩௰)

௩௫௰. எவனென் வினாவினைக் குறிப்பிழியிருபால் ... ... *

இதுவுமது. (இ-ள்) வினா-வினாப் பொருளைத்தருகிற — எவனென்-எவனென்கிற — வினைக்குறிப்பு-வினைக்குறிப்புமுற்று — இழியிருபால் - அஃறிணையிருபாலுக்கும், பொதுவினையாம்-எ-று. (வரலாறு) அஃதெவன்-அவையெவன்-எனவரும்-இது-என்-என்னை-என்ன-எனவு மருவிவழங்கும். — (௩௧)

௩௫௧. வினைமுற்றேவினையெச்சமாகலுங், குறிப்புமுற்றீரெச்சமாகலுமுளவே ... ... ... ... ... ... ... ... ...*

இது. இருவகைமுற்றிற்கும் ஆவதோர் புறனடை புணர்த்துகின்றது. (இ-ள்) வினைமுற்றே-தெரிநிலைவினைமுற்றே — வினையெச்ச

மாகலும்-வினையெச்சமாகிவருதலும்—குறிப்புமுற் றே)-வினைக்குறிப்புமுற்றே—சொச்சமாகலும்- வினையெச்சமாகியும் பெயரொச்சமாகியும்வருதலும்—உள-உளவாம்-எ-று.

(வரலாறு) கண்டனன்வணங்கினான் - என்பது கண்டு வணங்கினான்-எ-ம். முகந்தனர் கொடுத்தார்-என்பது முகந்துகொடுத்தார்-எ-ம். பொருள்படுதலால் வினைமுற்று வினையெச்ச மாதல்காண்க. அவன் வில்லினன்வந்தான்- அவன் வில்லினனாகிவந்தான் - எனப்பொருள்படுதலாற்குறிப்புமுற்றுவினை யெச்சமாதல்காண்க. வெந்திறலினன் விறல்வழுதியொடு வெந்திறலினனாகியவழுதி - எனப்பொருள் படுதலாற் குறிப்புமுற்றுப் பெயரொச்ச மாதல்காண்க, மற்றவைகளு மிப்படியேவரும். (௬௨)

வினையியல் முற்றுப்பெற்றது.

மூன்றாவது.

# பொதுவியல்.

௧௫௨. இருதிணையாண்பெணு ளொன்றனை யொழிக்கும், பெயரும்வினையுங்குறிப்பினானே ... ... ... ... ... ... ...

இது. முன்வந்த பெயர்வினைக்கும் பின்வரும் இடையுரிக்கும் பொதுவிலக்கணங்களைச்சிங்கநோக்காக இவ்வியலினாலே அறிவிக்கும்படி நடுவே வைத்துச் சொல்லுதலால் அப்பெயர்க்கும் வினைக்கும் உரியதோரிலக்கணமுணர்த்துகின்றது. (இ-ள்.) இருதிணை- இருதிணையிலும்— பெயரும் - ஆண்பால்பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும்—வினையும்-அப்படிப் பட்டவினைச் சொற்களும்—ஆண்பெணுள் - அவ்வாண்பால்பெண்பால்களுள்—ஒன்றனை -ஒருபாலை—ஒழிக்கும்-நீக்கும் — குறிப்பினான் - குறிப்பினாலென்றவாறு.

(வரலாறு) ஆயிரமக்கள் போர்செய்தற்குப்போயினார் என்கிறவிடத்தே மக்களென்னும் உயர்திணை இருபாற் பொதுப்பெயரும் போயினார் என்னும் பொதுவினையும் போர்க்கு என்னுங் குறிப்பினாலே பெண்பாலையொழித்தன—பெருந்தேவி பொறையுயிர்த்தகட்டிற்கீழ் நால்வர்மக்களுளர்-என்கிறவிடத்தே மக்களென்னும் பொதுப்பெயரும் உளரென்னும் பொதுவினைக்குறிப்பும் பொறையுயிர்த்தலென்னுங் குறிப்பினால் உயர்திணை யாண்பாலையொழித்தன அஃறிணையிலுமிப்படிவரும். (௧)

In Poetry it becomes ஏ

௬௩. பெயர்வினையிடத்து னளரயவீற்றய, லாவோவாகலுஞ் செய்யுளுளுரித்தே ... ... ... ... ... ... ... ... ௫

இது பெயர்வினைகளுக்குச் செய்யுளிலாவதோரிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்.) பெயர்வினையிடத்து- பெயரிடத்தும் வினையிடத்தும்—னளரயவீற்று-னகர ளகர ரகர யகர வீற்றிற்கு—அயல்-அயலிலுள்ள—ஆ-இறுதிமுதல்ஆகாரம் — ஓவாகலும் - ஓகாரமாதலும்—செய்யுளுள்-செய்யுளிடத்து—உரித்து-உரித்தாம்-எ-று.

(வரலாறு) வில்லோன் காலனகழலே - தொடியோள் மெல்லடி மேலனசிலம்பே-நல்லோர்யார்கொல்-வுனையாது கொடுத்தோய்-எ-ம். படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்-நல்லோண்மன்ற கூப்பெயர்த்தோளே -[சென்றோன்பிலர்தோழி-வந்தோய்மன்ற தெண்கடற் சேர்ப்ப-]எ-ம். பெயரிடத்தும் வினையிடத்தும்வந்தது. — வினையாலணையும் பெயரிடத்தல்லாமல் வினையிடத்தும் ஓரோவிடத்து ஆவோவாய்த்திரிந்து வருதலின் அதனையுமுடன்கூறினார். (௨)

௬௪ உருபும்வினையு மெதிர்மறுத்துரைப்பினுந் திரியாதத்ததமீற்றுருபினென்ப ... ... ... ... ... ... ... ... ௬

இது, வேற்றுமை யுருபுகளுக்கும் வினைச்சொற்களுக்கும் ஆயதோர் இலக்கணமுணர்த்துகின்றது, (இ-ள்) உருபும் - எட்டுவேற்றுமையுருபுகளும்—வினையும் - மூவகைவினைச்சொற்களும் — எதிர்மறுத்து-எதிர்மறுத்தல்செய்து—உரைப்பினும் - சொல்லுமிடத்தும்—தந்தமீற்(றின்)- தத்தமீற்றினின்றும்—உருபின்-அவ்வுருபினின்றும்—திரியா - வேறுபடா—என்ப-என்றுசொல்லுவர்புலவர் எ-று, [உருபு உருபினின்றும் வினையீற்றினின்றும் என எதிர்நிரனிறையாகப் பொருள்கொள்க,]

(வரலாறு,) சாத்தன்வாரான்-குடத்தைவனையான்- வாளாலெறியான்-புல்லர்க்குக்கொடான்-நிலையினீங்கான்-பொருளினதின்மை - நியர்கட்சேரான்-சாத்தாபோகேல்-எ-ம் நடவான் - நடவாத -] நடவாது-எ-ம்-வரும், ஓடாக்குதிரை-இதில்ஓடாதவென்னும் பெயரெச்ச வீறுகெட்டது,—உரையிற்கோடலரல்-நடந்து - நடவாமல் நடவாமை நடவாமே எனவருகிற வினையெச்ச மும் - நடத்தல்நடவாமைநடஎனத் தொழிற்பெயரும்-உண்ணு-உண்ணேல் உண்ணுதே எனவொருமையேவலும்-ஈறுதிரிந்தும் வருமெனக்கொள்க.] (௩)

௬௫, உருபுபலவடுக்கினும் வினை வேறடுக்கினும், மொருதம்மெச்ச மீறுறமுடியும் ... ... ... ... ... ... ... ... ௭

இதுவுமது. (இ-ள்.) உருபு - வேற்றுமையுருபுகள் — பலவடுக்கினும் - விரிந்துந்தொக்கும் தம்முள் விராவிப்பலவடுக்கிவரினும் வெவ்வேறுபலவடுக்கிவரினும் — வினை - மூவகைவினைச்சொற்களும் — வேறுபல வடுக்கினும் - வெவ்வேறுபலவடுக்கிவரினும் — ஒருதம்மெச்சம் - தத்தமெச்சமொன்று — ஈறு - இறுதியில் — உற - வர — முடியும் - அதனோடணைந்து முடியும் - எ-று

(வரலாறு.) அரசனவன் பகவனை வாளால்வெட்டினன் என உருபுகள் பலவடுக்கி யொருவினைகொண்டன — சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினன் - சாத்தனுக்குங் கொற்றனுக்குந்தந்தை - என ஐயுருபுங் குவ்வுருபும் வேறுபலவடுக்கி முறையே யொருவினையும் ஒரு பெயருங்கொண்டன. — வாள்கைக்கொண்டான் - அருளறமுடையான் - எனஉருபுதொக்கு அவ்வாறுவந்தன — ஆடினன் பாடினன் சாத்தன் - இளையன் மெல்லியண்மடந்தை - என வினைமுற்றுங் குறிப்புமுற்றும் வேறுபலவடுக்கி முறையே யொவ்வொரு பெயர்கொண்டன. — கற்றகேட்ட பெரியோர் கற்றுக்கேட்டறிந்தார் எனப்பெயரெச்சமும் வினையெச்சமும் வேறுபலவடுக்கி முறையே ஒருபெயரும் ஒருவினையுங்கொண்டன. [illegible] - adjuncts (௭)

௩௫௬. உருபுமுற்றீரெச்சங்கொள்ளும், பெயர்வினையிடைப்பிற வரலுமாமேற்பன. ... ... ... ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) உருபு - வேற்றுமையுருபுகளும் — முற்று - முற்றுகளும் — ஈரெச்சம் - பெயரெச்சவினையெச்சங்களும் — கொள்ளும் - கொண்டுமுடியும் — பெயர்வினையிடை - பெயர்க்கும்வினைக்குமிடையே — பிற - பிறசொற்கள் — வரலுமாம் - வருதலுமாம் — ஏற்பன - அவ்விடத்திற்குப்பொருந்துவன - எ-று.

(வரலாறு) சாத்தன் வயிறாரவுண்டான் - அறத்தையழகுபெறச்செய்தான் - வாளான்மாயவெட்டினன் - தேவர்க்குச் செல்வம்வேண்டிச் சிறப்பெடுத்தான் - மலையினின்றுருண்டுவீழ்ந்தான் - சாத்தனதித்தடக்கையானை - ஊர்க்கணுயர்ந்தவொளிமாடம் - சாத்தாவிரைந்தோடிவா - எ-ம். வந்தானவ்வூர்க்குப்போனசாத்தன் - வந்தவடகாசிமன்னன் - வந்து சாத்தனின்றைக்கவ்வூர்க்குப்போயினன் - எ-ம். வரும். மற்றவைகளுமிப்படியே. (௮)

௩௫௭. எச்சப்பெயர்வினை யெய்துமீற்றினும். ... ... ... *

இதுவுமது (இ-ள்) எச்சம் - உருபுகளு முற்றுகளும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டுமுடியுமெச்சமாகிய — பெயர்

வினை-பெயரும்வினையும் —ஈற்றினும்- அவற்றிற்கீற்றிலும்—எய்தும்-வரும்-எ-று.[ஈற்றினுமென்றவும்மையால் முதலினும்வருதல்கொள்க]

(வரலாறு.)

| (ஈறு.) | (முதல்) | |
|---|---|---|
| சாத்தன்வந்தான் | வந்தான்சாத்தன் | உருபுகளினெச்சங்கள் ஈரிடத்தும் வந்தன. |
| மரத்தைக்குறைத்தான் | குறைத்தான்மரத்தை | |
| சாத்தனால்வந்தான் | வந்தான்சாத்தனால் | |
| சாத்தனுக்குக்கொடுத்தான் | கொடுத்தான்சாத்தனுக்கு | |
| சாத்தனினீங்கினான் | நீங்கினான்சாத்தனின் | |
| சாத்தனதாடை | | |
| சாத்தன்கட்சென்றான் | சென்றான்சாத்தன்கண் | |
| சாத்தாவா | வாசாத்தா | |
| வந்தான்சாத்தன் | சாத்தன்வந்தான் | முற்றெச்சங்களினெச்சங்கள் ஈரிடத்தும் வந்தன. |
| வந்தசாத்தன் | | |
| வந்துபோயினான் | போயினான்வந்தது | |

முதற்கண்வருதலை உம்மையாற் றழுவிக்கொள்ளுதலால் ஆறனுருபினெச்சமும் எழனுருபினெச்சப்பெயரும் பெயரெச்சத்தினெச்சமும் முதற்கண்வாராவாம். (௬)

௩௫௮. ஒருமொழி யொழிதன் னினங்கொளற்குரித்தே ... ...

இது. நால்வகைச்சொற்களுக்குமாவதோரிலக்கணமுணர்த்துகின்றது. இ-ள்) ஒருமொழி பெயர்வினையிடையுரிகளுள் ஒருசொல்—ஒழி ஒழிந்துநின்ற—தன்-தன்னுடைய—இனம்- இனங்களை—கொளற்கு-கொண்டுமுடிதற்கு—உரித்து-உரித்தாகும்-எ-று.

(வரலாறு.) சோற்றைநனியுண்டான்-என்றவிடத்தே கறியைநனிதின்றான்-எ-ம் நஞ்சுண்டவன்சாவான்- என்றவிடத்தே நஞ்சுண்டவள் சாவாள்-நஞ்சுண்டவர்சாவார்-நஞ்சுண்டதுசாம்-நஞ்சுண்டவைசாம்-எ-ம் கூறாதேயமைதலின் இனங்களாயெஞ்சிநின்றன. இவற்றுள் சோற்றையென்கிற பெயர்ச்சொல்லும்,உருபிடைச்சொல்லும்,கறியையென்கிற பெயர்ச்சொல்லையும்-உருபிடைச்சொல்லையும்- நனியுண்டான் என்கிற உரிச்சொல்லும்,வினைச்சொல்லும், நனிதின்றான் ,என்கிற உரிச்சொல்லையும்-வினைச்சொல்லையும்-கொள்ளுதற்குரியவாய் நிற்றல்காண்க மற்றவைகளுமிப்படியேவரும். (எ)

௩௫௯. பொதுப்பெயர்வினைகளின் பொதுமைநீக்கு,'மேல்வருஞ்சிறப்புப் பெயர்வினைதாமே ... ... ... ... ... ...

இது பெயர்வினைகளுக்காவதோ ரிலக்கணமுணர்த்துகின்றது. (இ-ள்) பொது-திணைபாலிடங்காலங்களுக்குப் பொதுவாகிய—பெயர்வினைகளின்-பெயர்வினைகளுடைய—பொதுமை-பொதுத்தன்மையை—நீக்கும் நீக்கியொன்றற்குரிமைசெய்யும்—மேல்-மேலே—வரும்- வருகிற—சிறப்புப்பெயர்வினை - சிறப்பாகியபெயர்வினைகள்—தாமே-தாமே-எ-று.

(வரலாறு) சாத்தனிவன்-சாத்தனிது-எ-ம். சாத்தன்வந்தான்-சாத்தன்வந்தது-எ-ம். பெயர்த்திணைப்பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும்வந்துநீக்கின.—ஒருவனொன்றநகையர் - ஒருவனொன்றுயர்- எ-ம் மரம்வளர்ந்தது-மரம்வளர்ந்தன-எ-ம் பெயர்ப்பாற்பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும்வந்துநீக்கின.—அவனெல்லாமிருந்தார் யாமெல்லாம்வருவம்- நீவிரெல்லாம்போமின்- எனப்பெயரிடப்பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும்வந்து நீக்கின.— வாழ்க-அவன்-அவள்-அவர்-அது- அவை-யான்- யாம்-நீ- நீர்- எனவினைத்திணைபாலிடப்பொதுமையினைச் சிறப்புப்பெயர்கள்வந்து நீக்கின. மற்றவைகளுமிப்படியேவரும். (அ)

[illegible]

௩௬௰. பெயர்வினையும்மைசொற் பிரிப்பெனவொழியிசை,யெதிர்மறையிசையெனுஞ் சொல்லொழிபொன்பதுங், குறிப்புந்தத்தமெச்சங்கொள்ளும் ... ... ... ... ... ... ... ... *

இது. நால்வகைச்சொற்களுக்குமாவதோ ரிலக்கணமுணர்த்தும் வழிச் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதியுஞ் சிலவற்றிற்கு எய்தாத தெய்துவித்தலும் உணர்த்துகின்றது.(இ-ள்) பெயர்ச் (சொல்லொழிபு)- பெயரெச்சமும்—வினைச் (சொல்லொழிபு)- வினையெச்சமும்—உம்மைச (சொல்லொழிபு)-உம்மையெச்சமும்—சொற் (சொல்லொழிபு -சொல்லெச்சமும்—பிரிப்புச் (சொல்லொழிபு)- பிரிநிலையெச்சமும்——எனச் (சொல்லொழிபு -எனவெச்சமும்—ஒழியிசைச் (சொல்லொழிபு)- ஒழியிசையெச்சமும்—எதிர்மறைச் (சொல்லொழிபு)- எதிர்மறையெச்சமும்—இசைச் (சொல்லொழிபு)-இசையெச்சமும்—எனும்-என்கிற—சொல்லொழிபு -சொல்லெச்சங்கள்—ஒன்பதும்-ஒன்பதும்—குறிப்,(பொழி) யும்-குறிப்பெச்சமும்-தத்தம்-தம்முடைய தம்முடைய—எச்சம்-எச்சங்களை—கொள்ளும்- கொண்டுமுடியும். எ-று. [எனவே எச்சங்கள் சொல்லெச்சங் குறிப்பெச்சம் என விருவகைப்படுமென்பதாயிற்று.]

(வரலாறு)

செய்தசாத்தன்-நல்லசாத்தன்- எனப்பெயரெச்சங்கள் தம்மெச்சமாகிய செய்பவனது பெயர்கொண்டன.

செய்துவந்தான் - செய்துநல்லனுமினுன் - எனவினையெச்சங்கள் தம்மெச்சமாகிய வினைமுற்றுங் குறிப்புமுற்றுங்கொண்டன.

சாத்தனும்வந்தான் - என்கிற உம்மையெச்சம் முன்னேகொற்றன்வந்தான் எனத்தன்னெச்சங்கொண்டது.

நல்லவனென்றுன் - என்கிற சொல்லெச்சம் நல்லவனென்று சொன்னுன் எனச்சொல்லென்னுந் தன்னெச்சங்கொண்டது.

சாத்தனேகொண்டான் - சாத்தனேகொண்டான் என்பனபிரிநிலையெச்சம் இவைபிறர் கொண்டிலரெனத்தம்மெச்சங்கொண்டன.

கடலொல்லெனவொலித்தது - என்பது எனவெச்சம் இதுதன்னெச்சமாகிய வினைகொண்டது. மிகவுமொலித்ததென்பது பொருள்.

கூரியதோர்வாண்மன் - உண்ணுதற்கோவந்தான் - என்பன ஒழியிசையெச்சம். இவைமுறையே கோடிற்று. கலகஞ்செய்யவந்தான் - எனத்தம்மெச்சங்கொண்டன,

வரனுமரியன் - யானேசெய்தேன் - என்பன எதிர்மறையெச்சங்கள் - இவைமுறையே வாராமைக்குமரியன் - யான்செய்திலேன் - எனத்தம்மெச்சங்கொண்டன.

இசையெச்சமாவது வாக்கியங்களிலே அவ்வவ்விடத்திற்கேற்க ஒருசொல்லும் பலசொல்லுமாக வருவித்துரைக்கப்பட்டு வருவதாம் இசையென்பதுசொல். கற்றதனுலாய பயனென். இதற்கு நூலைக்கற்றதனுலென்னுமொருசொல்லும் - அந்தாமனாயன்னமே நின்னையானகன்றுற்றவனே இதில் என்னுயிரினுஞ் சிறந்தநின்னை யெனப்பலசொற்களும் - வருவிக்கப்படுதல்காண்க.

குறிப்பெச்சமாவது - பெயரியலிலே பன்னிரண்டாஞ் சூத்திரத்திலே ஒன்றொழிபொதுச்சொல் என்றதுமுதலாக இன்னபிறவும் என்றதுவரைக்குஞ் சொல்லப்பட்டவைகளாம் ஆயிரமக்கள் பொருதார் என்கிறவிடத்தே மக்களென்னும் பொதுப்பெயர் ஆடவரொன்னுஞ் சிறப்புப்பெயர்கொண்டது. பிறவும் அச்சூத்திரவுரையிற்காண்க. (கூ

## தொகைநிலைத்தொடர்

கூகூக. பெயரொடுபெயரும்வினையும்வேற்றுமை, முதலியபொருளினவற்றினுரும்பிடை, யொழியவிரண்டு முதலாத்தொடர்ந்தொருமொழிபோனடப்பனதொகைநிலைத்தொடர்சொல்... ... ... 

இ-ள். பெயர்க்கும் வினைக்குமாவதோரிலக்கண முணர்த்துகின் ... பெயர்ச்சொல்லோடு—பெயரும்- பெயர்

சொல்லும்—(பெயரொடு)-பெயர்ச்சொல்லொடு—வினையும்-வினைச்சொல்லும்—வேற்றுமைமுதலிய - பின்சொல்லப்படும் வேற்றுமைமுதலாகிய—பொருளின்-அறுவகைப்பொருட்புணர்ச்சிக்கண்—அவற்றின்-அவற்றினுடைய—உருபு-உருபுகள்—இடை- நடுவிலே—ஒழிய - தொக்குநிற்ப— இரண்டுமுதலா - இரண்டுசொற்கள்முதலாக—தொடர்ந்து-பலசொற்கள்—தொடர்ந்து ஒருமொழிபோல்- ஒருசொற்போல—நடப்பன-நடப்பவை—தொகைநிலைத்தொடர்சொல்- தொகைநிலைத்தொடர்சொற்களாம்- எ-று [தொகையென்பது இங்கேயுருபுமறைதல்.] (ய)

௩௬௨. வேற்றுமைவினைபண் புவமையும்மை, யன்மொழியென வத் தொகையாறாகும் ... ... ... ... ... ... ... ...*

இது முன்வேற்றுமை முதலியவென்றார் அவை இவையென்பது உணர்த்துகின்றது.(இ-ள்.) வேற்றுமைத் தொகை)- வேற்றுமைத்தொகையும்—வினைத் (தொகை)-வினைத்தொகையும்—பண்புத் (தொகை)-பண்புத்தொகையும்—உவமைத் (தொகை)- உவமைத்தொகையும்—உம்மைத் (தொகை)-உம்மைத்தொகையும்—அன்மொழித்(தொகை)- அன்மொழித்தொகையும்—என-என்று—அத்தொகை - முன்னேசொல்லப்பட்டதொகை நிலைத்தொடர்மொழிகள்—ஆறும் - ஆறுவகைப்படும். எ-று. (யக)

௩௬௩. இரண்டுமுதலா மிடையாறுருபும், வெளிப்படவில்லது வேற்றுமைத்தொகையே ... ... ... ... ... ... ... *

இது.நிறுத்தமுறையினாலே வேற்றுமைத்தொகையாமாறுணர்த்துகின்றது. (இ-ள், இடை- எழுவாய்க்கும் விளிக்குமிடையே நிற்கிற—இரண்டு-இரண்டாவது—முதலாம்- முதலாயிருக்கின்ற—ஆறுருபும்-ஆறுவேற்றுமையுருபுகளும்—வெளிப்படவில்லது - தொக்கதொடர்மொழிகள்--வேற்றுமைத்தொகை-வேற்றுமைத்தொகைகளாம்-எ-று.

(வரலாறு)

ஐ—நிலங்கடந்தான் -இரண்டாம்வேற்றுமைத்தொகை.

ஆல்—தலைவணங்கினான்-மூன்றாம்வேற்றுமைத்தொகை.

கு—சாத்தன்மைந்தன்-நாலாம்வேற்றுமைத்தொகை.

இன்—ஊர்நீங்கினான் -ஐந்தாம்வேற்றுமைத்தொகை.

அது—சாத்தன்கை -ஆறாம்வேற்றுமைத்தொகை.

கண்—குன்றக்கூகை -ஏழாம்வேற்றுமைத்தொகை.

யானைக்கோட்டுநுனிக்குறைத்தான்-இதுபன்மொழித்தொடர்.

எனவே-கடந்தானிலம்- இருந்தான்குன்றத்து- எனவிறுதியிடே தொகின் நிலங்கடந்தான்-குன்றத்திருந்தான்- எனக்கூட்டப்படுதலா: இடையிலே தொக்கவையேயாம் —ஆமுருபும் என்கிற உம்மையை யெச்சவும்மையாக்கி, பொன்றுற்செய்யப் பட்டகுடம்-பொற்குடம் என்பதுபோல உருபுடனே முடிக்குஞ்சொல் தொக்கவையும் தொகைநிலைத்தொடராமெனக்கொள்க (௰௨)

வினைத்தொகை -

௬௬௪. காலங்கரந்தபெயரெச்சம்வினைத்தொகை ... ... *

இது வினைத்தொகையாமாறு உணர்த்துகின்றது.(இ-ள்)காலம்-காலம்பற்றிப்புடைபெயர்கிறவினையுருபுகள்—கரந்த- தொக்க—பெயரெச்சம் - பெயரெச்சவினைகள்—வினைத்தொகை- வினைத்தொகைகளாம்- எ-று. [காலம் ஆகுபெயர் காலம்பற்றிப் புடைபெயர்வினையுருபுகள்தொகுமெனவே முதனிலைமாத்திரந் தொகாதிருக்கு மென்பது பெற்றும்.]

(வரலாறு.)

நேற்றுக்கொல்களிறு-முன்விடுகணை இறந்தகாலவினைத்தொகை.
இன்றுகொல்களிறு -இப்போதுவிடுகணை - நிகழ்காலவினைத்தொகை.
நாளைக்கொல்களிறு -பின்விடுகணை - -எதிர்காலவினைத்தொகை.

இவைமுறையேகொன்ற-கொல்கிற-கொல்லும்- எனவிரியும். இது முக்காலமும்பற்றிவரின் முக்காலவினைத்தொகையெனப்படும்.வருவழி-நடந்திடுகுதிரை-எனச்சிலவினைத்தொகைமுதனிலைதிரிந்தும்வரும்

பண்புத்தொகை -

௬௬௫. பண்பைவிளக்கு மொழிதொக்கனவு, மொருபொருட்கி ருபெயர் வந்தவுங்குணத்தொகை ... ... ... ... ... ... *

இது. பண்புத்தொகையாமாறு உணர்த்துகின்றது.(இ-ள்) பண்பை-குணத்தோடு குணிக்கு உண்டாகிய ஒற்றுமை நயத்தை—விளக்கும்-விளக்குகிற—மொழி- ஆகியவென்னும்பண்புருபு—தொக்கனவும்-தொக்குநின்றவையும்—ஒருபொருட்கு- ஒருபொருளுக்கு—இருபெயர்-பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயருமாகிய இருபெயர்கள்—வந்தவும்-வந்தவையும்—குணத்தொகை- பண்புத்தொகைகளாம்.எ-று [குணத்தொகையென்றதனால் ஒருபொருளுக்கு வருகிற அவ்விரண்டு பெயர்க்கும் நடுவில் ஆகியவென்கிற பண்புருபுதொக்கு வருமென்பது பெறப்பட்டது. பண்பெனப் பொதுப்படச்சொன்னதனால் வண்ணம் வடிவு அளவு சுவைமுதலாயினவை யெல்லாங்கொள்க.]

(வரலாறு)

செந்தாமரை -கருங்குவளை -வண்ணப்பண்புத்தொகை.
வட்டக்கல் - -சதுரப்பலகை-வடிவுப்பண்புத்தொகை.
ஒருபொருள் -மூக்குணம் -அளவுப்பண்புத்தொகை.
துவர்க்காய் - -இன்சொல் -சுவைப்பண்புத்தொகை.
சாரைப்பாம்பு -ஆயன்சாத்தன்-இருபெயரொட்டு பண்புத்தொகை;
செந்நிறக்குவளை- - - - -இதுபன்மொழித்தொடர்.

இவை-செம்மையாகியதாமரை-சாரையாகியபாம்பு-செம்மையாகிய நிறமாகியகுவளை-எனவிரியும். (௰௪)

உவமைத் தொகை—

௩௬௬. உவமவுருபில துவமத்தொகையே ... ... ... ✱

இது. உவமைத்தொகையாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) உவமவுருபு - வினைபயன்மெய்யுருபு என்பவற்றைப்பற்றிவருகிற உவமவுருபுகள்—இல்லது-தொக்கதொடர்மொழிகள்—உவமத்தொகை- உவமத்தொகைகளாம்-எ-று.

(வரலாறு.)

புலிக்கொற்றன்-குருவிகூப்பிட்டான்-வினையுவமத்தொகை.
மழைக்கை - -கற்பகவள்ளல் - -பயனுவமத்தொகை.
துடியிடை - -குரும்பைமுலை - -மெய்யுவமத்தொகை.
பொற்சுணங்கு-பவளவாய் - - -உருபுவமத்தொகை.
மரகதக்கிளிமொழி - - - - -இதுபன்மொழித்தொடர்.

இவை புலிபோலுங்கொற்றன்-மரகதம்போலுங் கிளிபோலுமொழி-எனவிரியும். செயப்படுபொருள் குறித்தால் புலியைப்போலு மென ஐயுருபுந்தோன்றும். (௰௫

உவம உருபு -

௩௬௭. போலப்புரைய வொப்பவுறழ,மானக்கடுப்பவியையயவேய்ப்ப நேரநிகர வன்ன வின்ன,வென்பவும்பிறவு முவமத்துருபே...✱

இது. உவமவுருபின் திரிசொற்களை புணர்த்துகின்றது (இ-ள்) போல,நிகர- இப்போலமுதலாகிய செயவெனெச்சம் பத்தும்— அன்னவின்னவென்பவும்- அன்ன இன்னஎன்கிற பெயரெச்சக் குறிப்பிரண்டும்—பிறவும்-இவைபோல்வனபிறவும்—உவமத்துருபு- உவமவுருபுகளாம்-எ-று. [பிறவென்றதனால்- போலமுதலானவைகளின் முதனிலையிற் பிறக்கின்றமற்றை வினையெச்சங்களும் வினைமுற்றுகளும் பெ

யரேச்சங்களும்-பொருவ-எற்ப-அனைய- முதலானவையுங்கொள்க.]()

உம்மைத்தொகை-

௩௬௮. எண்ணலெடுத்தன் முகத்தனீட்ட,லெனுநான்களவை யுளும்மிலதத்தொகை ... ... ... ... ... ... ... ... *

இது. உம்மைத்தொகையாமாறு உணர்த்துகின்றது.(இ-ள்) எண்ணல்-எண்ணலளவையும்—எடுத்தல்-எடுத்தலளவையும்—முகத்தல்-முகத்தலளவையும்—நீட்டல்-நீட்டலளவையும்—எனும்-என்கிற—நான்களவையுள்-நான்களவைப்பெயர்களுள்—உம்மிலது-உம்மையாகிய உருபுதொக்குநிற்பவை—அத்தொகை-அவ்வும்மைத்தொகைகளாம்-எ-று.

(வரலாறு)

ஒன்றேகால் -கபிலபரணர் -எண்ணலும்மைத்தொகை.
கழஞ்சேகால்-தொடியேகஃசு-எடுத்தலும்மைத்தொகை.
கலனேதூணி-நாழியாழாக்கு -முகத்தலும்மைத்தொகை.
சாணங்குலம் -சாணரை - -நீட்டலும்மைத்தொகை.
சேரசோழபாண்டியர் - -இதுபன்மொழித்தொடர்

இவை ஒன்றுங்காலும்- கழஞ்சுங்காலும்- கலனுந்தூணியும்- சாணுமங்குலமும்-சேரனுஞ்சோழனும்-பாண்டியனும்- எனவிரியும்(ஙன

அன்மொழித்தொகை-

௩௬௯ ஐந்தொகைமொழிமேற் பிறதொகலன்மொழி... ... *

இது. அன்மொழித்தொகையாமாறு உணர்த்துகின்றது.(இ-ள்) ஐந்தொகைமொழிமேல் - வேற்றுமைத்தொகைமுதலிய வைவகைத்தொகைநிலைத்தொடர்மொழிகளுக்கும்புறத்து—பிற- அவையல்லாத பிறமொழிகளாகியவுருபுகள்—தொகல்-தொக்குவருவன—அன்மொழி-அன்மொழித்தொகைகளாம்-எ-று.

(வரலாறு)

| | |
|---|---|
| பூங்குழல் - - - | இவை யிரண்டாம் வேற்றுமைத்தொகை முதலாகிய ஆறுவேற்றுமைத் தொகைகளின் புறத்தும் பிறந்த அன்மொழித்தொகைகள். |
| பொற்றொடி - - | |
| கவியிலக்கணம் - | |
| பொற்றாலி - - | |
| கிள்ளிகுடி - - | |
| கீழ்வயிற்றுக்கழலை - | |

இவைமுறையே- பூவையுடைய குழலினையுடையாள் - பொன்னலாகிய தொடியினையுடையாள் - கவிக்கிலக்கணஞ் செ ா ல் ல ப

ட்டநூல் - பொன்னிறமாகிய தாலியினையுடையாள் - கிள்ளியினது குடியிருக்குமூர்-கீழ்வயிற்றின் கணெழுந்தகழலைப்போன்வான் எனவிரியும். தாழ்குழல் - வினைத்தொகைப்புறத்துப்பிறந்தவன்மொழித்தொகை கருங்குழல்-பண்புத்தொகைப்புறத்துப் பிறந்தவன்மொழித்தொகை.] துடியிடை-உவமைத்தொகைப்புறத்துப்பிறந்தவன்மொழித்தொகை. உயிர்மெய்-உம்மைத்தொகைப்புறத்துப் பிறந்தவன்மொழித்தொகை. தகரஞாழன்மாலை-இதுபன்மொழித்தொடர்.

இவைமுறையே தாழ்ந்தகுழலினையுடையாள் - கருமையாகியகுழலினையுடையாள்-துடி போலுமிடையையுடையாள் - உயிருமெய்யுமாகிய விரண்டுங்கூடிப் பிறந்தவெழுத்து - தகரமுஞாழலும்விராய்ச் சமைந்த சாந்தையணிந்த மாலைகளையுடையாள்-எனவிரியும். (௰௫)

௩௭௰. முன்மொழிபின்மொழி பன்மொழிபுறமொழி,யெனுநான்கிடத்துஞ் சிறக்குந்தொகைப்பொருள் ... ... ... ... ✽

இது தொகைநிலைத்தொடர் மொழிப்பொருள்கள் ஓரிடத்துச் சிறந்தும் ஓரிடத்துச் சிறவாதும் நிற்குமென்பது உணர்த்துகின்றது. (இ-ள்.) முன்மொழி-முன்சொல்லும்—பின்மொழி - பின்சொல்லும்—பன்மொழி-பலசொற்களும்—புறமொழி-புறத்துவருகிறசொல்லும்—எனுநான்கிடத்தும்-என்கிறநான்கிடத்திலொன்றிலே— தொகைப்பொருள்-தொகைநிலைத்தொடர்ப்பொருள்—சிறக்கும்-சிறந்துநிற்கும்-எ-று.

(வரலாறு) குடம்வனைந்தான் -'வேங்கைப்பூ-செந்தாமரை - இவற்றுள்-குடமுதலியமுன்மொழிகள் இனம்விலக்கி நிற்கையால் அவைகளிற்பொருள்சிறந்தன.—நிலமுழுதான்-கண்ணிமை - செஞ்ஞாயிறு' இவற்றுள்-நிலமுதலாகிய முன்மொழிகள் இனம்விலக்குதலின்றிநிற்கையால் உழுதான்முதலாகிய பின்மொழிகளிற் பொருள்சிறந்தன — கபிலபரணர்-சேரசோழபாண்டியர் - புலிவிற்கெண்டை- எனஉம்மைத்தொகைகளில் எல்லாமொழிகளிலும் பொருள் சிறந்தன. — பூங்குழல் - கருங்குழல் - இவைமுதலாகிய அன்மொழித் தொகைகளில் உடையாள் என்பது முதலாகிய புறமொழிகளிற் பொருள் சிறந்துநின்றன. (௰௬)

௩௭௪, வல்லொற்றுவரினே யிடத்தொகையாகு, மெல்லொற்றுவரினே பெயர்த்தொகையாகும் ... ... ... ... ... ... ✽

இது. இடத்தொகையோ பெயர்த் தொகையோவென ஐயப்படத் தக்கவைகளிற் சிலவற்றைத்துணிதற்கு ஆவதோர் குறியுணர்த்துகின்றது. (இ-ள்) வல்லொற்று-வல்லொற்றனது—வரின்- இடையேவந்தால் — இடத்தொகை யாகும் - இடத்தின் கண்ணே தொக்கதொகையாகும்—மெல்லொற்று-மெல்லொற்றனது—வரின்- இடையேவந்தால்—பெயர்த்தொகையாகும்-பெயரின்கண்ணே தொக்கதொகையாகும்-எ-று.

(வரலாறு.) வடுகக்கண்ணன்-வடுகங்கண்ணன் - துளுவச்சாத்தன்-துளுவஞ்சாத்தன்-எனவரும். இவைமுறையே வடுகநாட்டிற் பிறந்தகண்ணன்-வடுகனுகியகண்ணன்-எனவிரியும். (உ௰)

௩௭௨. உயர்திணையும்மைத் தொகைபலரீறே ... ... ... *

இது உம்மைத்தொகைக்கு ஆவதோர் விதியுணர்த்துகின்றது (இ-ள்.)உயர்திணை உயர்திணை யொருமையில்வருகிற— உம்மைத்தொகை-உம்மைத்தொகைகளானவை— பலரீறே - அவ்வொற்றுங்களாகிய பலர்பால்விகுதியையுடையனவேயாம்-எ-று,

(வரலாறு. சேரசோழபாண்டியர் தேவன்றேவிகள்- எனவரும், —பலரீறேஎன்கிற தேற்றத்தால் அஃறிணை யொருமையிலும் பொதுத்திணை யொருமையிலும்வருகிற உம்மைத்தொகைகள் பன்மைவிகுதிபெற்றே வரல்வேண்டுமென்கிற நியதியில்லை யென்பதாயிற்று. அவைவருமாறு-நன்மைதீமை-நன்மைதீமைகள்-எ-ம் தந்தைதாய்-தந்தைதாய்கள்-தந்தைதாயர்-எ-ம்-வரும். சேரன் சோழன் பாண்டியன் எனப்பிளவுபட்டுவந்தாற் செவ்வெண்ணெனக்கொள்க.

௩௭௩. தொக்குழிமயங்குந விரண்டுமுதலே, ழெல்லைப்பொருளின்மயங்குமென்ப ... ... ... ... ... ... ... .... *

இது. தொகைநிலைத் தொடர்மொழிகள் உருபுதொக்கு நிற்கையால் சிலபொருள்களாலேமயங்குமாறுஉணர்த்துகின்றது இ-ள்)தொக்குழி- வேற்றுமையுருபுமுதலாகிய வுருபுகள் தொக்குநின்றவழி— மயங்குந-பொருள்களினலே மயங்குந்தன்மையனவாகிய தொடர்மொழிகள்—இரண்டுமுதல்-இரண்டுமுதலும்—ஏழெல்லை- ஏழீறுமாகிய— பொருளின்-பொருள்களால்—மயங்கும் - மயங்கும்—என்ப- என்று சொல்லுவர்புலவர்-எ-று.

(வரலாறு)

தெய்வவணக்கம்என்பது - தெய்வத்தைவணங்குகிற வணக்கம்· தெய்வத்துக்கு வணக்கம்-என விருபொருள்களினலே மயங்கியது

தற்சேர்ந்தார் என்பது. தன்னைச்சேர்ந்தார் - தன்னொடுசேர்ந்தார் - தன்கட்சேர்ந்தாரென மூன்று பொருள்களினாலே மயங்கியது.

சொல்லிலக்கணம் என்பது சொல்லினதிலக்கணம் - சொற்கிலக்கணம்-சொல்லின்கணிலக்கணம்-சொல்லினதிலக்கணஞ்சொன்ன நூலென நான்குபொருள்களினாலேமயங்கியது.

பொன்மணி-என்பது-பொன்னாலாகியமணி-பொன்னாகியமணி பொன்னின்கண்மணி-பொன்னொடுசேர்ந்தமணி-பொன்னுமணியும் எனவைந்துபொருள்களினாலேமயங்கியது.

மரவேலி என்பது, மரத்தைக்காக்கிறவேலி - மரத்துக்கு வேலி மரத்தினதுவேலி - மரத்தின்புறத்துவேலி-மரத்தாலாகியவேலி-மரமாகியவேலி-எனவாறுபொருள்களினாலேமயங்கியது.

சொற்பொருள்என்பது. சொல்லாலறியப்படுகிறபொருள்-சொல்லினதுபொருள்-சொல்லுக்குப்பொருள் -சொல்லின்கட்பொருள்-சொல்லும்பொருளும்-சொல்லாகியபொருள் - சொல்லானதுபொருள்-என வேழுபொருள்களினாலே மயங்கியது

புலிகொல்யானை என்பது. பன்மொழித்தொடர் - இதுபுலியைக்கொன்றயானை-புலியானதுகொன்றயானை - புலியினாலேகொல்லப்பட்டயானை-என மூன்றுபொருள்களினாலேமயங்கியது.

மற்றவையுமிப்படியே இனி வலிந்துபொருள்கொள்ளின் ஏழெல்லைகடந்துவரும்.



(உஉ)

௩௭௪. முற்றீரெச்ச மெழுவாய்விளிப்பொரு ளாறுருபிடையுரி யடுக்கிவை தொகாநிலை ... ... ... ... ... ... ... ...*

இது நால்வகைச்சொற்களுக்கும் ஆவதோர்விதி யுணர்த்துகின்றது (இ-ள்) முற்று-வினைமுற்றும்—எச்சம் -பெயரெச்சமும் வினையெச்சமும்—எழுவாய்-எழுவாயும்—விளி-விளியும்ஆகிய — பொருள்-ஐவகைப்பொருள்களிலே பெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும்—ஆறுருபு - வேற்றுமைப்பொருள்களில் அவற்றினுருபுகளாகிய இன்டாவது முதலாகிய வாறுருபுகளும் விரிந்துநிற்கப் பெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும்—இடை - இடைச்சொற்புணர்ச்சியும்—உரி-உரிச்சொற்புணர்ச்சியும்—அடுக்கு- அடுக்குப் புணர்ச்சியுமாகிய இவை - இவ்வொன்பதும் — தொகாநிலை - தொகாநிலைத் தொடர்மொழிகளாம்-எ-று.

(வரலாறு.) உண்டான் சாத்தன் - கரியன் சாத்தன் உண்ட சாத்தன் - கரிய சாத்தன் - உண்டுவந்தான் - இன்றிவந்தான் - சாத்தன் வந்தான் - சொற்றுகொள் - குடத்தை வனைந்தான் - வாளால்வெட்டினான் - இரப்போர்க்கீந்தான் - மலையினிழிந்தான் சாத்தனதுகை மணியின்கணொளி மற்றொன்று - நனிபேதைமையே - பாம்புபாம்பு எனவரும். (உ௩)

௩௭௫. திணையேபாலிடம் பொழுதுவினாவிறை, மரபாமேழுமய ங்கினாம்வழுவே ... ... ... ... ... ... ... ... ... *

இது, வழுக்களை அறிந்தல்லது அவற்றைக்களைதல் கூடாமையின் அவையிவையென உணர்த்துகின்றது (இ-ள்) திணை - இருதிணையும் — பால் - ஐம்பாலும் — இடம் - மூவிடமும் — பொழுது - முக்காலமும் — வினா - வினாவும் — இறை - விடையும் — மரபு - பலவகை மரபுகளும் — ஆம் - ஆகிய — ஏழும் - ஏழும் — மயங்கின் - தன்றன்வழி மயங்கின். — வழுவாம் - வழுவாம் - எ-று.

(வரலாறு) அவன்வந்தது - திணைவழு — அவன்வந்தாள் - பால்வழு — யான்வந்தான் இடவழு. — நாளைவந்தான் - காலவழு கறக்கிறவெருமைபாலோசினையோ - வினாவழு — கடம்பூர்க்கு வழியாதோவென்றால் இடம்பூணியென்னாவின்கன்றன்று என்பது விடைவழு. — யானைமேய்ப்பானை இடையனென்பது மரபுவழு, (உ௪)

௩௭௬. ஐயந்திணைபாலவ்வப்பொதுவினு, மெய்தெரி பொருண்மேலன்மையும்விளம்புப ... ... ... .. .. .... ... *

இது, திணையுடனேயும் பாலுடனேயும் வினாவிடைகள் வழுவாமற்காத்த லுணர்த்துகின்றது, (இ-ள்) திணை (யையம்) திணையையத்தையும் — பாலையம்) - பாலையத்தையும் — அவ்வப்பொதுவினும் - அதனதன் பொதுச்சொல்லாலும் — மெய்தெரிபொருண்மேல் - துணிந்த பொருண்மேல் — அன்மையும் - அல்லாதன்மையை வைத்தும், — விளம்புப - சொல்லுவர்புலவர் - எ-று.

(வரலாறு,) குற்றியோமகனோவவ்விடத்தோன்றுகிறவுரு - எனத் திணையையத்திலே உருவென்கிறபொதுச் சொல்லினாலேயும், ஆண்மகனோ பெண்மகளோ அங்கேதோன்றுகிறவர். எனவுயர்திணைப் பாலையத்திலேதோன்றுகிறவர் - என்கிற பொதுச்சொல்லாலும், ஒன்றோபலவோவிச்செய்புக்கபெற்றம் - எனவஃறிணைப் பாலையத்திலே பெற்றம் என்கிறபொதுச்சொல்லாலுஞ் சொல்லுக, — அவ்விடத்தே தோன்றுகிறவன் அல்லதுதோன்றுகிறதுஎன்றால் - திணைவழுவும் வினாவழுவுமாம், — இனித்துணிந்தபொருள் - குற்றியெனின் மகனன்று - எ-ம், மகனெனிற்குற்றியல்லன் - எ-ம், ஆண்மகனெனிற் பெண்மகளல்லன் - எ-ம்,

பெண்மகளெனின் ஆண்மகனல்லள்-எ-ம். ஒன்றெனிற்பலவன்று-எ-ம். பலவெனினொன்றல்ல-எ-ம். கூறுக மகனல்லன் அவ்வுருக்குற்றி எனக் கூறிச் சொற்பல்குதலென்னும் விடைவழுவாம்.

௩௭௭. உயர்திணைதொடர்ந்த பொருண்முதலாறு, மதனொடுசார்த்தி னத்திணைமுடிபின ... ... ... ... ... ... ... *

இது. திணைவழுவமைதி உணர்த்துகின்றது (இ-ள்) உயர்திணை-உயர்திணையை—தொடர்ந்த-பற்றிய—பொருண்முதலாறும்-பொருளாதியாறும்—அதனொடு-அவ்வுயர்திணையோடு—சார்த்தின்-சேர்த்து முடிக்கின்—அத்திணைமுடிபின அவ்வுயர்திணை முடிபினவாம்-எ-று.

(வரலாறு) நம்பிபொன்பெரியன் நாடுபெரியன்- வாழ்நாள்பெரியன்-மூக்குக்கூரியன்-குடிமைநல்லன்-நடையுடையன்-எனவரும். சொற்றொறுமிற்றிதன் பெற்றியென்கிற சூத்திரவிதியால் மாடுகோடுகூரிது எனவஃறிணையோடுசேர்ப்பின் அஃறிணை முடிபாதலுங்கொள்க. சார்த்தினெனவே சார்த்தாவிடின், வழாநிலையாக நம்பிக்குப்பொன் பெரிது எனவரும் பொன்னென்னும் அஃறிணையெழுவாய் பெரியனென்னும் உயர்திணையெழுவாயின் பயனிலைகொண்டு முடிதலால் வழுவாய்த்தொடர்புண்டாயிருத்தல் பற்றிச்சார்த்திமுடித்தலால் வழுவமைதியாயிற்று.

௩௭௮. திணைபால்பொருள்பலவிரவின சிறப்பினு, மிகவினு மிழிபினு மொருமுடிபினவே ... ... ... ... ... ... ... *

இது திணைபால்களின் மரபுவழுவமைதி உணர்த்துகின்றது. (இ-ள்) திணை திணைகளும்—பால்-பால்களும்—விரவின- கலந்துநின்றனவாகிய—பொருள்பல- வேறுவினைப்பலபொருள்களும்—சிறப்பினும்-சிறப்பினாலும்—மிகவினும்- மிகுதியினாலும்—இழிபினும்- இழிவினாலும்—ஒருமுடிபின-ஒருமுடிபினவாகும்-எ-று.

(வரலாறு) திங்களுஞ் சான்றோருமொப்பர்- திணைவிரவிச்சிறப்பினாலுயர்திணைமுடிபேற்றன.—பார்ப்பார்தவரேசுமந்தார் பிணிப்பட்டார் மூத்தார்குழவியெனுமிவர்கட்கு- திணைவிரவி மிகுதியாலுயர்திணைமுடிபேற்றன.—எச்சிலார்தீண்டார் பசுப்பார்ப்பார்தீத்தெய்வமுச்சந் தலையோடிவையென்ப - திணைவிரவிமிகுதியினாலஃறிணைமுடிபேற்றன — மூர்க்கருமுதலையுங்கொண்டதுவிடா - திணைவிரவி யிழிவினாலஃறிணைமுடிபேற்றன—மனைவியுந் தானும்வந்தான்- பால்விரவிச்சிறப்பினாலாண்பான்முடிபேற்றன.—சொற்றொறுமிற்றிதனென்கிற சூத்திரவிதியினாலே- தோழனுந்தானும்வந்தான்- எனமுடிதலுங்

கொள்க.—மாலையுமுடியுங்கவித்தான்- வேறுவினைப்பலபொருள் விர விச்சிறப்பினு லொருமுடிபேற்றன. மற்றவைகளுமிப்படியேவரும்.()

௩௮௪. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினு, மிழிப்பி னும்பாறிணை யிழுக்கினு மியல்பே ... ... ... ... ... *

இது. திணைபால்களின் வழுவமைதியுணர்த்துகின்றது. (இ-ள்.) பால்-பாலும்—திணை-திணையும்—உவப்பினும்- மகிழ்ச்சியினாலும்— உயர்வினும்- மேன்மையினாலும்—சிறப்பினும்- சிறப்பினாலும்—செ றலினும்-கோபத்தினாலும்— இழிப்பினும்- பழிப்பினாலும்—இழுக்கி னும்-வழுவிவரினும்—இயல்பு-இயல்பாம்-எ-று.

(வாலாறு) அன்புதல்வனை-என்னம்மைவந்தாள்- என்பது உவப் பினாலாண்பால் பெண்பாலாயிற்று —ஒருவனை அவர்வந்தார்-என்பது உயர்வினாலொருமைப்பால்பன்மைப்பாலாயிற்று—தாதாயுலகுக்கோர் தாயே- என்பது சிறப்பினாலாண்பால் பெண்பாலாயிற்று —எனைத்து ணையராயினு மென்னாந் தினைத்துணையுந், தேரான்பிறனில்புகல் என்ப து செறலினாற்பன்மைப்பா லொருமைப்பாலாயிற்று.—பெண்வழிச் செல்வானைநோக்கி இவன்பெண்- என்பது இழிப்பினாலாண்பால் பெ ண்பாலாயிற்று —ஓராவினை என்னம்மைவந்தாள்-என்பதுஉவப்பினால ஃறிணையுயர்திணையாயிற்று—செந்தார்ப்பசுங்கிளியார்சேன்றூர்க்கோ ரின்னுரை, தந்தாரோ ற்றந்தாரொன்னின்னுயிர் - என்பது உயர்வினால ஃறிணையுயர்திணையாயிற்று—தம்பொருளென்ப தம்மக்கள்-என்பது சிறப்பினாலுயர்திணையஃறிணையாயிற்று—எவவுஞ்செய்கலான்றான்றே ரானவ்வுயிர், போஒமளவுமோர்நோய்- என்பதுசெறலினாலுயர்திணை ய ஃறிணையாயிற்று.—நாமாறுடைடமை- என்பது இழிப்பினாலுயர்திணை யஃறிணையாயிற்று பிறவுமன்ன. (உஅ)

௩௮௫. ஒருமையிற்பன்மையும் பன்மையினொருமையு, மோரிட ம்பிறவிடந் தழுவலுமுளவே ... ... ... ... ... ... *

இது முன்சொல்லப்பட்ட உவப்புமுதலிய காரணத்தினாலல்லா மல் அமைந்தபால் வழுவமைதியும் அவ்வாறு அமைந்தஇடவழுவமை தியும் உணர்த்துகின்றது. (இ-ள்.) ஒருமையின்- ஒருமைப்பாலில்—ப ன்மையும்-பன்மைபாற்சொல்லையும்—பன்மையின்-பன்மைப்பாலில் —ஒருமையும்-ஒருமைப்பாற்சொல்லையும்—ஓரிடம்- ஓரிடத்தில்—பிற விடம்-பிறவிடச்சொல்லையும்—தழுவலும்-தழுவிக்கூறுதல்களும்—உ ள-உளவாம்-எ-று.

(வரலாறு.) வெயிலெல்லாமறைத்ததுமேகம்-எ-ம். இரண்டுகண்ணுஞ்சிவந்தது-எ-ம். அஃறிணையிலே யொருமையிற்பன்மையும் பன்மையிலொருமையும்வந்தன — அஃதைத்தந்தை யண்ணல்யானை யடுபோர்ச்செழியர்-எ-ம். பலையனெறிந்தபூசற்றண்ணுமை. யேவலிளையர் தாய்வயிறுகரிப்ப-எ-ம் உயர்திணையிலே ஒருமையிற் பன்மையும் பன்மையிலொருமையும்வந்தன- சாத்தன்றாயிவைசெய்வலோ- எனத்தன்மையிலேபடர்க்கைவந்தது — எம்பியையீங்குப்பெற்றேனென்னெனக்கரியதென்றான்-எனமுன்னிலையிலே படர்க்கைவந்தது—நீயோவவனோயாரிதுசெய்தார் - யானோவவனோயாரிதுசெய்தார் - எனவிரவியோரிடத்திலேபிறவிடம் வருதலுங்கொள்க ஒருபாற்பொருளை மற்றொருபாற்சொல்லாலும் ஓரிடப்பொருளை மற்றோரிடச் சொல்லாலுங்கூறுதலால் வழுவாய் அவை சான்றோர்க்கு ஏற்பமுடிதலால் அமைதியாயிற்று. (உகூ)

௬அக தரல்வரல்கொடைசெலல் சாரும்படர்க்கை,யெழுவாயிரண்டு மெஞ்சியவேற்கும் ... ... ... ... ... ... ...

இது. இடம்வழுவாமற்காத்த லுணர்த்துகின்றது (இ-ள்) தரல்வரல்கொடை செலல்-தரல் என்பதுமுதலிய இந்நான்கு சொற்களையும்—படர்க்கை- படர்க்கையானது—சாரும் - அடையும்—எழுவாயிரண்டும்- இவற்றுள் முதலிற்சொல்லப்பட்டதால் வரல் என்கிறவிரண்டு சொற்களையும்—எஞ்சிய-ஒழிந்ததன்மைமுன்னிலைகள்—ஏற்கும்- ஏற்றுவரும்-எ-று.

(வரலாறு அவனுக்குத்தந்தான்-அவனிடத்துவந்தான்-அவனுக்குக்கொடுத்தான்-அவனிடத்துச்சென்றான்-எ-ம் எனக்குத்தந்தான்-என்னிடத்துவந்தான்-எ-ம். உனக்குத்தந்தான்-உன்னிடத்துவந்தான்-எ-ம்.வரும். (௩௰)

௬அஉ. இறப்பெதிர்வுநிகழ்வெனக்காலமூன்றே ... ...

இது. பெயரியலிலேவந்த திணைமுதலாகியமூன்றையும் ஒழித்து மற்றைக்காலம் வினாவிடைமரபு என்கிற நான்கனுள்ளே காலத்தின் பெயருமுறையுந் தொகையும் உணர்த்துகின்றது. (இ-ள்.) இறப்பு- இறந்தகாலமும்—எதிர்வு-எதிர்காலமும்—நிகழ்வு- நிகழ்காலமும்—என-என்று—காலம்-காலமானது—மூன்று-மூன்றும்-எ-று.

௬அ௩ முக்காலத்தினு மொத்தியல்பொருளைச்,செப்புவர்நிகழுங்காலத்தானே ... ... ... ... ... ... ... ... ...

இது காலவழுவமைதி யுணர்த்துகின்றது.(இ-ள்.) முக்காலத்தினும்-மூன்றுகாலங்களினும்—ஒத்து- தமதுதொழிலினையுறு தொத்து

—இயல்-நிகழுகின்ற—பொருளை-பொருள்களை—நிகழுங்காலத்தான்-நிகழ்காலத்தினால்—செப்புவர்-சொல்லுவர்புலவர்-எ-று.

(வரலாறு, எனக்குத்துணை நீயிருக்கிறாய்-தெய்வமிருக்கிறது-ஆறொழுகுகிறது-அரசர்பூமியை ஆளுகிறார்-எனவரும். (௩௨)

Tenses interchanged

௩௮௫ விரைவினுமிகவினுந் தெளிவினு மியல்பினும், பிறழவும் பெறூஉமுக் காலமுமேற்புழி ... ... ... ... ... ... ௬

இதுவுமது.(இ-ள்) விரைவினும்-விரைவினாலும்—மிகவினும்-மிகுதியினாலும்—தெளிவினும்-தெளிவினாலும்—இயல்பினும்-இம்மூன்றுகாரணங்களுமின்றி இயல்பினாலும்—முக்காலமும்-மூன்றுகாலங்களும் பிறழவும்பெறூஉம்-ஒன்றுமற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும்—ஏற்புழி-ஏற்குமிடத்து-எ-று.

(வரலாறு) உண்ணும்படியாக விருக்கின்றவனையுடன் கொண்டு போகவேண்டிய மற்றொருவன் பார்த்து இன்னும் உண்டிலையோவென்றால்-உண்டேனுண்டேனென்பான் உண்கின்றவனை அப்படிவினாவினால்-உண்டேனுண்டேனென்பான், இவைவினாவினால் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின.—நீயவனுடனே பகைத்தாற்செத்தாய்-இக்காட்டிற்போனாற் கூறையிழந்தாய்-இவ்விடத்தே மிகுதியால் எதிர்கால மிறந்தகாலமாயிற்று-சாதலுக்கூறையிழத்தலுந் தப்பினுந் தப்புமாதலான் மிகுதியாயின.—அறஞ்செய்தாற் சுவர்க்கம்புக்கான்-எறும்புமுட்டைகொண்டு திட்டையேறின்மழைபெய்தது.இவ்விடத்தே தெளிவினால் எதிர்கால மிறந்தகால மாயிற்று. உரையளவையினாற் சுவர்க்கம்புகுதற்கு அறஞ்செய்தலும், காட்சியளவையினாலே மழைபெய்தற்கு-எறும்புமுட்டைகொண்டு திட்டையேறுதலுங் காரணமாகத் தெளிந்தமையினாலே தெளிவாயின யாம்பண்டு விளையாடுவதிச்சோலை-யாம்பண்டுவிளையாடுகிற திச்சோலை-இவ்விடத்தேகாரணமில்லாமல் இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமுமாயிற்று மற்றவையுமிப்படியே. (௩௩)

௩௮௬. அறிவறியாமை யையுறல்கொளல்கொடை, யேவறரும்வினா வாறுமிழுக்கார் ... ... ... ... ... ... ... ... ௭

இது. வினாவின்பெயருமுறையுந்தொகையுமுணர்த்துகின்றது-(இ-ள்) அறிவு-அறிதலும்—அறியாமை-அறியாமையும்—ஐயுறல்-சந்தேகித்தலும்—கொளல்-கொள்ளுதலும்—கொடை-கொடுத்தலும்—ஏவல்-ஏவுதலும்—தரும்-தருதலால்வருகிற—வினா-வினாக்கள்—ஆறும்-ஆறினையும்—இழுக்கார்-களையாதுகொள்வர்புலவர்-எ-று.

(வரலாறு) ஆசிரியன் -இச்சூத்திரத்திற்குப் பொருள்யாது-என்பது-அறிவினா.—மாணாக்கன் அப்படிச்சொல்வது - அறியாவினா—குற்றியோமகனோ-என்பது-ஐயவினா.—பயறுளவோவணிகிர் -என்பது கொளல்வினா—சாத்தனுக்காடையில்லையா-என்பது- கொடைவினா — சாத்தாவுண்டாயா-என்பது-ஏவல்வினா. (௬௪)

விடைவகை—

௩௮௬. சுட்டுமறைநே ரேவல்வினாதல், லுற்றதுரைத்த லுறுவது கூறல், இனமொழியெனு மெண்ணிறையுளிறுதி நிலவிய வைந்துமப் பொருண்மையினேர்ப ... ... ... ... ... ... ...

இது. விடையின்பெயரு முறையுந் தொகையும் வழுவமைதியும் உணர்த்துகின்றது. (இ-ள்) சுட்டு-சுட்டும். — மறை-எதிர் மறுத்தலும்—நேர் உடன்படலும்—ஏவல்-ஏவுதலும்—வினாதல்- எதிர்வினாவுதலும்—உற்றதுரைத்தல்-உற்றதைச்சொல்லுதலும்— உறுவதுகூறல் உறுவதைச்சொல்லுதலும்—இனமொழி - இனத்தைச்சொல்லுதலும் —எனும்-என்கிற—எண்ணிறையுள் - இவ்வெட்டுவிடைகளுள் — இறுதி - ஈற்றில்—நிலவிய-விளங்கிய—ஐந்தும் - ஐந்தும்—அப்பொருண்மையின் - அவ்விடைப்பொருளைத்தருதலினாலே —நேர்ப-விடைகளாகவேதழுவிக்கொள்வார்புலவர்-எ-று. [எனவே முதன்மூன்றுஞ் செவ்வனிறையும்பின்னையவைந்து மிறையப்பனவுமா மென்பதாயிற்று ]

(வரலாறு ) கருவூர்க்கு வழியாதெனின் - இது - என்பது - சுட்டுவிடை—சாத்தாவிது செய்வாயா-என்றபோது - செய்யேன் - என்பதுமறைவிடை — செய்வேன்-என்பதுநேர்விடை—நீசெய்-என்பது ஏவல்விடை—செய்வேனோ-என்பது- வினாவிடை — உடம்புநொந்தது நோவாநின்றது என்பன-உற்றதுரைத்தல்விடை— உடம்புநோமென்பது உறுவதுகூறல்விடை—மற்றையதுசெய்வேன்-என்பது -இனமொழிவிடை. (௬௫)

௩௮௭ வினாவினுஞ்செப்பினும்விரவாசினைமுதல் ... ... ...

இது. வினாவும்விடையும் முதல்சினைவழுவாமை உணர்த்துகின்றது. (இ-ள்) வினாவினும்-வினாவுதற்கண்ணும் — செப்பினும் - விடை கொடுத்தற்கண்ணும்—சினை-சினையும்— முதல் - முதலும் —விரவா ஒற்றுமைகருதிமயங்கச் சொல்லப்படாவாம்-எ-று.

(வரலாறு.) கண்பிறழ்ந்தவோ கயல்பிறழ்ந்தவோ - எனவினாவினார்க்குக் கண்பிறழ்ந்தது கயல்பிறழ்ந்தது - எனல்வேண்டும் — சாத்தனல்லனோ கொற்றனல்லனோ-எனவினாவினார்க்குச் - சாத்தனல்லன்

கொற்றனல்லன்-எனல்வேண்டும்—கண்பிறந்ததோ-என்பதற்குஅதனையுடையானைக்குறித்துஇவன்பிறந்தானோ-எனவினவுதலும் இவன்-பிறந்தான்-எனச்செப்புதலும்வருவனவாம். (௧௬)

மரபு-

௧௮௭. எப்பொருளெச்சொலினெவ்வாறுயர்ந்தோர்,செப்பினரப்படிச்செப்புதன்மரபே ... ... ... ... ... ...*

இது. மரபாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) எப்பொருள்-யாதொருபொருளை—எச்சொலின்-யாதொருசொல்லால்— எவ்வாறு-யாதொருவழியால்—உயர்ந்தோர் - அறிவுடையோர்கள் — செப்பினர் சொன்னார்களோ—அப்படி-அப்பொருளைஅச்சொல்லால்அவ்வழியால்—செப்புதல்-சொல்லுதல்—மரபு-மரபாம்-எ-று

(வரலாறு) குதிரைக்குட்டி-எ-ம். பசுவின்கன்று-எ-ம். மான்கன்று-எ-ம். வரும்,இப்படியல்லாமல்-குதிரைக்கன்று-பசுவின்குட்டி-என்றால்-மரபுவழுவாம் மற்றவைகளு மிப்படியே, (௧௭)

௧௮௮, வேறுவினைப்பல்பொருடழுவிய பொதுச்சொலும், வேறவற்றெண்ணுமோர் பொதுவினைவேண்டும் ... ... ... ...*

இது, மரபுவழாநிலை யுணர்த்துகின்றது, (இ - ள்) வேறுவினை-வெவ்வேறுவினைகளுக்குரிய—பல்பொருள் - பலபொருள்களையும்—தழுவிய-ஒருசேரத்தழுவிய,— பொதுச்சொலும் - ஒருபொதுச்சொல்லும்—வேறவற்று-அவற்றின்சிறப்புச்சொற்களாக—எண்ணும்- எண்ணிநிற்கிறபலசொற்களும்—ஓர்பொதுவினை - எல்லாவற்றிற்கு முரியதோர் பொதுவினையை—வேண்டும்-கொண்டுமுடியும்-எ-று,

(வரலாறு,) அணி-என்பது கவிக்கப்படுவது - கட்டப்படுவது-இடப்படுவது- பூணப்படுவது - முதலியவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலின் அதனை அணிந்தார் எனப்பொதுவினை கொடுத்துச்சொல்லுக—கிரீடமும்-குண்டலமும்- வீரக்கழலும்-என எண்ணிநிற்கிற கவித்தல் இடுதல் கட்டுதல்-என்கிறவேறு தொழில்களுக்கு உரிய பலவற்றிற்கும்-அணிந்தார்-எனப்பொதுவினைகொடுத்துச்சொல்லுக.

௧௮௯. வினைசார்பினமிட மேவிவிளங்காப், பலபொரு ளொருசொற்பணிப்பர்சிறப்பெடுத்தே ... ... ... ... ... ...*

இதுவுமது, இ-ள்.) வினை வினையும்— சார்பு-சார்பும் — இனம் இனமும்—இடம்-இடமும்—மேவி - பொருந்தி—விளங்கா -விளங்காத—பலபொருளொருசொல் - பலபொருளொருசொல்லை — சிறப்பெடுத்து — சிறப்புச்சொல்லோடுகூட்டி — பணிப்பர்- சொல்லுவர்புலவ

ர்-எ-று, [எனவேவினைமுதலியவற்றுள் ஒன்றைப்பொருந்தி விளங்கிக்கிடந்த பலபொருளொருசொல்லைவாளா கூறுவரென்பதாயிற்று,

(வரலாறு) மா என்பது மாமரத்திற்கும் - வண்டிற்கும் - ஒருசார்விலங்கிற்கும் - திருவிற்கும் - பொதுவான பலபொருளொருசொல் இப்பொருள்களுள்-மாபூத்தது - என்றவிடத்தே மரமென்பது வினையால் விளங்கிற்று, மாவீழ் மலர்-என்ற விடத்தே வண்டென்பது சார்பால்விளங்கிற்று, தேர்சரிமாக்காலாள் - என்ற விடத்தே குதிரையென்பது இனத்தால் விளங்கிற்று, மாமறுத்தமார்பன்-என்ற விடத்தே திருவென்பது இடத்தால் விளங்கிற்று, இவைவாளா கூறப்பட்டன —இனிமாவேறினான் - மாவியாது - என்றவழிக்குறித்தபொருள்விளங்காமையால் விளக்குதற்பொருட்டுப்-பாய்மாவேறினான் - மாமரமேறினான்-பாய்மாயாது மாமரம்யாது - எனச்சிறப்புச்சொல்லோடு கூட்டிக்கூறுக, மற்றவையுமிப்படியே, (௱௯)

௱௯௧, எழுத்தியறிரியாப் பொருடிரிபுணர்மொழி, யிசைத்திரிபாற்றெளிவெய்துமென்ப ... ... ... ... ... ... ... *

இதுவுமது, (இ-ள்) எழுத்து-எழுத்தினது—இயல்- தன்மை—திரியா-வேறுபடாமல்,— பொருடிரி - பொருள்வேறுபட்டுநிற்கிற— புணர்மொழி-தொடர் மொழிகள்—இசைத்திரிபால் - குறிக்கப்பட்ட சொற்களினிறுதியும் முதலுந்தோன்ற இசையறுத்துச் சொல்லுகிற வேறுபாட்டால்—தெளிவெய்தும்- துணிவுண்டாகும் — என்ப-என்றுசொல்லுவர்புலவர்-எ-று,

(வரலாறு,) செம்பொன்பதின்றொடி - நாகன்றேவன்போத்து குறும்பாம்பு எனவரும்-செம், பொன்பதின்றொடி - செம்பொன்-பதின்றொடி - எ-ம். நாகன் றேவன் - போத்து-எ-ம். நாகன்றே - வன்போத்து-எ-ம், குன்றேறு, மா-எ-ம்.குன்- றேறுமா-எ-ம், இவற்றை அப்படியிசையறுத்துஉச்சரித்துக்குறித்தபொருளைக்காட்டுக. (௬௰)

௱௯௨. ஒருபொருண் மேற்பல பெயர்வரினிறுதி, யொருவினை கொடுப்பதனியுமொரோவழி ... ... ... ... ... ... ...*

இது. மாபுவழாநிலையும் அதன்வழுவமைதியும் உணர்த்துகின்றது. இ-ள், ஒருபொருண்மேல்-ஒருபொருளின்மேலே—பலபெயர்-பலபெயர்கள்—வரின்-வருமாயின்—இறுதி-இறுதியில் — ஒருவினை-ஒருமுடிக்குஞ்சொல்லை — கொடுப்ப - பொருளொன்றேயென்பது தோன்றக் கொடுத்துக்கூறுவர்—ஒரோவழி-ஒரு பொருளாகுலகை தவறுமவிடத்தே—தனியும்பெயர்-தோறும்— (கொடுப்ப) - கொடுத்துக் கூறுவர்-எ-று.

(வரலாறு.) ஆசிரியன் பேரூர்கிழான்சாத்தன்வந்தான் -எ-ம்.கு யிலைச்சிலம்படிக்கொம்பினைத் தில்லையெங்கூத்தப்பிரான் - கயிலைச்சி லம்பிற்பைம் பூம்புனங்காக்கும் கருங்கட்செவ்வாய் - மயிலைச் சிலம்ப கண்டியான்போய் வருவன்வண்பூங்கொடிகள்-பயிலச்சிலம்பெதிர்கூய் ப்பண்ணை நண்ணும்பளிக்கறைக்கே எ-ம் வருகிற இவை யிறுதியிலே மூறையேவந்தான்-எ-ம். கண்டு-எ-ம் ஒருசொல்லைக் கொண்டன — வேலோன் வருகவிமலைசேய்வருக-மாலோன் மருகன் வருகவென்றனை வே எனப்பெயர்தோறும் வினைகொண்டன (௪௧)

கூகூகூ. திணைநிலஞ் சாதிகுடியேயுடைமை, குணந்தொழில் கல் விசிறப்பாம்பெயரோ, டியற்பெயரேற்றிடிற்பின்வரல்சிறப்பே ...

இதுவுமது. (இ-ள்) திணை-ஐந்திணையும் —நிலம் - தேசமும் .— சாதி-குலமும்—குடி-குடியும்— உடைமை - உடைமையும்—குணம்-குணமும்—தொழில்-தொழிலும்—கல்வி வித்தையும்— ஆகியவிவற் றைப்பற்றிவருகிற—சிறப்பாம்பெயரோடு - சிறப்புப்பெயரோடு — இயற்பெயர் இயற்பெயரை—ஏற்றிடின் - ஒருபொருள்ஒருசேரவேற் குமாயின்—பின்வரல்-அவ்வியற்பெயர்பின்வருதல் — சிறப்பு-சிறந்த மரபாம்-எ-று.

[சிறப்பென்றதனால் முன்வருவது வழுவமைதியாம்]

(வரலாறு)

குன்றவன்கொற்றன். கொற்றவன்குன்றவன் -திணை
அரிவாளனழகன் - - -அழகனரிவாளன் - -நிலம்
பார்ப்பான் பாராயணன் -பாராயணன் பார்ப்பான்-சாதி.
ஊர்கிழானோணன் -ஓணனூர்கிழான் - -குடி.
பொன்னன் பொறையன்-பொறையன்பொன்னன்-உடைமை.
கரியன்கம்பன் - - -கம்பன்கரியன் - - -குணம்.
நாடகிநம்பி - - - -நம்பிநாடகி - - - -தொழில்.
ஆசிரியனமிழ்தன் - - -அமிழ்தனாசிரியன் - -கல்வி
எனவரும்-மற்றவையுமிப்படியே, (௪௨)

ககூக, படர்க்கைமுப்பெயரோ டணையிற்சுட்டுப், பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க்கெங்கு- மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி ... ... ... ... ... ... ... ... ... ...

இதுவுமது, (இ-ள்,) படர்க்கை-படர்க்கை யிடத்தையுடைய— முப்பெயரோடு- உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் விரவுப்பெ யர் என்கிற மூவகைப்பெயர்களோடு— சுட்டுப்பெயர் - சுட்டுப்பெ

பர்—அணையின்-சேரின்—பின்வரும்-அச்சுட்டுப்பெயர் பின்வரும் —வினையெனின்-அவ்விடத்தேவினையாகிய முடிக்குஞ்சொல்வருமாயின்—பெயர்க்கு - அம்முடிக்குஞ்சொல்லில்லையாயின் அப்பெயர்க்கு —எங்கும்-பின்னுமுன்னும்-மருவும்-வரும்—வழக்கிடை- இம்மரபுவழக்கத்திடத்திலாம்—செய்யுட்கு-செய்யுளிடத்தே—வரம்புழி- நியதியின்றிவேண்டியவாறே வரப்பெறும்-எ-று.

(வரலாறு) நம்பிவந்தான் அவனுக்குச்சோறிடுக-எ.ம். எருதுவந்தது-அதற்குப்புல்லிடுக-எ-ம் சாத்தன்றெய்வம்-அவனுக்குப்பலியிடுக-எ-ம்.சாத்தன்வந்தது-அதற்குப்புல்லிடுக-எ-ம் வினைநிகழ்வழிச்சுட்டுப்பெயர்பின்வந்தன—நம்பிஅவன்-அவன்நம்பி-எனப்பெயர்க்குப் பின்னுமுன்னுஞ் சுட்டுப்பெயர்வந்தன— அவனணங்குநோய் செய்தானாயிழாய்வேலன் விறன்மிகுதார்ச்சேந்தன்பேர்வாழ்த்தி முகனமர்ந்தன்னையலர்கட்பந்தாரணியி னென்னைகொல் பின்னையதன்கண் விழைவு-எனச்செய்யுளில் வினைவருவழியுமுன்வந்தது. (௬௪)

௬௬௫. அசைநிலைபொருணிலை யிசைநிறைக்கொருசொல்,லிரண்டுமூன்றுநான் கெல்லைமுறையடுக்கும் ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) அசைநிலை-அசைநிலைக்கும்—பொருணிலை-விரைவுவெகுளியுவகையச்சமவலமுதலாகியபொருணிலைக்கும்—இசைநிறைக்கு-இசைநிறைக்கும்—ஒருசொல்-ஒருமொழி—இரண்டு- இரண்டும்—மூன்று-மூன்றும்—நான்கு-நான்குமாகிய—எல்லை-அளவும்—முறை-முறையாக—அடுக்கும்-அடுக்கும்-எ-று [எனவே அசைநிலைக்கு இரண்டும்—பொருணிலைக்கு இரண்டுமூன்றும்—இசை நிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும்-அடுக்குமென்றதாயிற்று.]

(வரலாறு.) அன்றேயன்றே-அசைநிலை-போபோ- விரைவு- எறியெறி வெகுளி-வருகவருக உவகை-பாம்புபாம்பு தீத்தீத்தீ- அச்சம்-வாழேன்வாழேன்-அவலம்-இவைபொருணிலை—எரயம்பன்மொழிந்தனளாயே-நல்குமேநல்குமேநல்குமேநாமகள்-பாடுகோபாடுகோபாடுகோபாடுகோ-இசைநிறை [ஒருசொல்லைப்பலகாற் சொல்லுதல்வழுவாயினும் இவ்விடத்தே ஆமென்றல் வழுவமைதியும்இதற்கு இவ்வெல்லை கடவாதென்றல் வழுவாமற்காத்தலுமாம்.] (௬௫)

௬௬௬. இரட்டைக்கிளவியிரட்டிற்பிரிந்திசையா ... ... *

இது. மரபுவழாநிலை உணர்த்துகின்றது. (இ-ள்.) இரட்டைக்கிளவி இரட்டைச்சொற்கள்—இரட்டின்- அவ்விரட்டிப்பின்—பிரிந்து- நீ—இசையா - தனித்து ஒலியாவாம்- எ-று. [எனவேபிரித்துச்சொ

ன்றாற்பொருள்படாதென்பதும் இரட்டித்துச்சொல்லல் மரபென்பதும் ஆயிற்று ]

(வரலாறு.) சலசலமும் மதம்பொழிய. குறுகுறுநடந்தும், துடிதுடித்துத்துள்ளிவரும். எனவரும்.

௯௯௭. ஒருபொருட்பல்பெயர் பிரிவிலவரையார் ... ... *

இதுவுமது.(இ-ள்)ஒருபொருள்-ஒருபொருளின்மேல்—பல்பெயர்-பலபெயர்சொல்லும்போது—பிரிவில-அப்பொருளினின்றும் பிரிதலில்லாதனவற்றை—வரையார்-நீக்காதுகொள்வார் புலவர்-எ-று.

(வரலாறு) ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன்வந்தான்-பாண்டியன்பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதிவந்தான்- எனவரும். (௪௬)

௯௯௮. ஒருபொருட்பன்மொழிசிறப்பினின்வழா ... ... *

இது மரபுவழுவமைதி உணர்த்துகின்றது. (இ-ள்.) ஒருபொருள்-ஒருபொருளைக்குறித்துவருகிற—பன்மொழி- பலசொற்கள்—சிறப்பினின்-சிறந்துநிற்கையால்—வழா - அவைவழுவென்றுநீக்கப்படாவாம்-எ-று.

(வரலாறு) டீமிசைஞாயிறு-புனிற்றிளங்கன்று-நாகிளங்கமுகு உடர்ந்தோங்குபெருவரை-குழிந்தாழ்ந்தகண்-எனவரும். (௪௭)

௯௯௯. இனைத்தென்றறிபொரு ளுலகினிலாப்பொருள், வினைப்படுத்துரைப்பினுமம்மைவேண்டும்... ... ... ... ... ... *

இது. மரபுவழுவாமற்காத்தலுணர்த்துகின்றது (இ-ள்.) இனைத்தென்று- இவ்வளவினதென்று—அறிபொருள்- அளவறியப்படுகிறபொருளும்—உலகினிலாப்பொருள்- எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாதபொருளும்—வினைப்படுத்துரைப்பின் - வினைப்படுத்துச்சொல்லும்போது-உம்மை முற்றும்மையை—வேண்டும்-வேண்டிநிற்கும்-எ-று

(வரலாறு) தமிழ்நாட்டு மூவேந்தரும்வந்தார்- இறைவர்க்குக் கண்மூன்றுமூச்சுடர்-இவ்வளவென்றறிபொருள்கள்முற்றும்மைவேண்டிநின்றன—முயற்கோடாகாயப் பூவென்றுமில்லை- ஒளிமுன்னிருளெங்குமில்லை-உலகினிலாப்பொருள்கள் முற்றும்மைவேண்டிநின்றன.()

௲. செயப்படுபொருளைச்செய்ததுபோலத், தொழிற்படக்கிளத்தலும்வழக்கினுளுரித்தே ... ... ... ... ... ... ... ... *

இது. மரபுவழுவமைதி யுணர்த்துகின்றது. (இ-ள்.) செயப்படுபொருளை - செயப்படுபொருளை — செய்ததுபோல - வினைமுதலைப் போலவைத்து — தொழிற்பட-அதன்மேல் அவ்வினைமுதல்வினையேற்றி — கிளத்தலும்-சொல்லுதலும் — வழக்கினுள்- வழக்கினிடத்து — உரித்து-உரித்தாம்-எ-று.

(வரலாறு) இம்மாடியான் கொண்டது-,இச்சோற்றியானைகொடுத்தது-எனவரும் — உம்மையால்- கருவிநிலனுஞ் செயல்காலங்களைக் கருத்தாவாகக் கூறுதலுமமையுமென்பதுபெற்றாம். அவைவருமாறு-இவ்வெழுத்தாணியானெழுதியது-கருவி. இவ்வீடியானிருந்தது- இடம். இத்தொழில்யான்செய்தது- தொழில் - இந்நாள்யான்பிறந்தது - காலம்- எனவரும் (௪௯)

௪௱௧. பொருண்முதலாறு மடைசேர்மொழியின, முள்ளவுமில் லவுமாமிருவழக்கினும் ... ... ... ... ... ... ... *

இது. மரபுவழுவாமற்காத்தலும் மரபுவழுவமைதியும் உணர்த்துகின்றது.(இ-ள்) பொருண்முதல்-பொருளாதி — ஆறும்- ஆறுகிய — அடைசேர்- அடைகளடுத்துவருகிற — மொழி- மொழிகள் — இனமுள்ளவும்-இனமுள்ளவையேயாமன்றி — இல்லவுமாம்- இனமில்லாதவையுமாம் — இருவழக்கினும்- உலகவழக்கினுள்ளுஞ் செய்யுள்வழக்கினுள்ளும்- எ-று.

(வரலாறு)

| (இனமுள்ளன) | (இனமில்லன) | |
|---|---|---|
| நெய்க்குடம் | -உப்பளம் | -பொருள். |
| குளநெல் - | -ஊர்மன்று | -இடம். |
| கார்த்திகைவிளக்கு | -நாளரும்பு | -காலம். |
| பூமரம் - - | -இலைமரம் | -சினை. |
| செந்தாமரை - | -செம்போத்து | -குணம். |
| குடிக்கூலி | -தோய்தயிர் | -தொழில். |

எனவழக்கிடத்துவந்தன.-பொருட்பெண்டிர்பொய்ம்மைமுயக்கமெனச்செய்யுளிடத்துமிப்படியேவரும்.[இவற்றுள் முன்னையதுவழுவாமற்காத்தலும் பின்னையது வழுவமைதியுமாம். (௫௰)

௪௱௨. அடைமொழியினமல்லதுந்தருமாண்டுறின் ... ... *

இது மரபுவழுவாமற்காத்த லுணர்த்துகின்றது. (இ-ள்.) அடைமொழி- முன்சொல்லப்பட்ட அடைசேர்மொழி — இனமல்லதும்- இனத்தைத்தருவதன்றி இனமல்லாததையும் — தரும் கொடுக்கும் — ஆண்டு- அவவிடத்திற்கு — உறின்-பொருந்துமாயின் எ-று.

(வாலாறு) மேலைச்சேரிச்சேவலையத்தகென்றவனவிலேகிழைச்சே ரிச்சேவலைப்புண்டதுளனவினத்தைத்தருதலேயன்றி அச்சேவலையு டையார்க்கு வெற்றியாயிற்று.என்கிற இனமல்லாதனதையுந்தந்தது.(௫௪

௩௯௫. அடைசினைமுதன் முறையடைதலுமீரடைமுதலோடாத லும்வழக்கியலீரடைசினையொடுசெறிதலுமயங்கலுஞ்செய்யுட்கே.

இது.மரபுவழுவாமற்காத்தலும் மரபுவழுவமைதியும் உணர்த்து கின்றது. (இ-ள்) அடை-ஓரடையும்—சினை-ஒருசினையும்—முதல்-ஒரு முதலும்—முறையடைதலும்- ஒன்றையொன்றுவிசேடித்துவருதலு ம்—ஈரடை-இரண்டடை—முதலோடாதலும்- முதலைவிசேடித்துவரு தலும்—வழக்கியல்- வழக்குநடையாம்—ஈரடை- இரண்டடை—சினை யொடுசெறிதலும்-சினையை விசேடித்து வருதலும்—மயங்கலும்- இ வ்வரம்புகடந்துவருதலும்—செய்யுட்கு-செய்யுணடையாகும்-எ-று.

(வாலாறு) வேற்கைமுருகன்-செங்காலநாரை-எ ம்.பட்டுச்சிறகிரை று-சிறுகருங்காக்கை-எ-ம் வழக்கில்வந்தன—சிறுபைந்தூவியிற்செயி ரறச்செய்த கருநெடுங்கண்டரும் காமநோய எ-ம் பெருந்தோட்சி றுமருங்குற்பேரமர்க்கட்பேதை- எ-ம். செய்யுளில்வந்தன. [அடைசி னைமுதன்முறையடைதலொன்றும் வழுவாமற்காத்தலும் மற்றைமூ ன்றும் வழுவமைதியும்-ஆம்] (௫௫)

௩௯௬. இயற்கைப்பொருளை யிற்றெனக்கிளத்தல்... ... ...

இது. மரபுவழுவமைதி யுணர்த்துகின்றது. (இ-ள்.) இயற்கைப் பொருளை-இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் என்கிற இருவ கைப்பொருள்களுள் இயற்கைப்பொருளை—இற்றென- இத்தன்மைத் தென்று—கிளத்தல்-சொல்லுக-எ-று.

(வாலாறு) மெய்யுள்ளது-பொய்யில்லது-நிலம்வலிது-நீர்தண்ணி து-தீவெய்து-மயிர்கரிது-எனவரும். [இயற்கைப்பொருளை இற்றென் னும் வினைக்குறிப்பாகிய செயற்படுத்துச் செயற்கைப்பொருள்போல க் கூறுதலின் இதுவழுவமைதியாயிற்று] (௫௬)

௩௯௭ காரணமுதலா வாக்கம்பெற்றுங், காரணமின்றி யாக்கம் பெற்று, மாக்கமின்றிக் காரணமடுத்து, மிருமையுமின்றியு மியலுஞ் செயும்பொருள் ... ... ... ... ... ... ... ... ...

இது. மரபுவழுவாமற்காத்தலும் வழுவமைதியும் உணர்த்துகி ன்றது. (இ-ள்.) செயும்பொருள் - செயற்கைப்பொருள்—காரணம்

காரணச்சொல்.—முதலா - முதல்வர—ஆக்கம் - ஆக்கச்சொல் —பெற்றும் - பின்வரப் பெற்றும் — காரணம் - காரணச்சொல் — இன்றி- தொக்குநிற்க — ஆக்கம் - ஆக்கச்சொல். — பெற்றும்-வரப்பெற்றும்—ஆக்கம்-ஆக்கச்சொல் — இன்றி - தொக்குநிற்க — காரணம்-காரணச்சொல் — அடுத்தும்-வரப்பெற்றும்—இருமையும் - அவ்விரண்டும்—இன்றியும்-தொக்குநிற்கவும்—இயலும்-நடக்கும்—எ-று.

(வரலாறு) கடுவுங்கைபிழியெண்ணெயும் பெற்றமையான் மயிர்நல்லவாயின-எ-ம் எருப்பெய் திளங்களை கட்டுநீர்கால் யாத்தமையாற் பயிர்நல்லவாயின-எ-ம். முன்காரணமும் பின்னாக்கமும்பெற்றன—மயிர்நல்லவாயின-எ-ம். பயிர்நல்லவாயின - எ-ம் காரணமின்றி ஆக்கம் பெற்றன.—கடுவுங்கைபிழியெண்ணெயும் பெற்றமையான் மயிர்நல்ல எ-ம். எருப்பெய்திளங்களை கட்டு நீர்கால் - யாத்தமையாற் பயிர்நல்ல எ-ம். ஆக்கமின்றிக் காரணம்வந்தன. — மயிர்நல்ல-எ-ம் பயிர்நல்ல-எ-ம். அவ்விரண்டு மின்றியும்வந்தன. [காரணமுதலாவாக்கம் பெறுதலொன்றும் வழுவாமற்காத்தல். மற்றை மூன்றும் வழுவமைதிகள்.

௪௱௬. தம்பாலில்லதில்லெனினினனாயுள்ளதுகூறிமாற்றியுமுள்ளது சுட்டியுமுரைப்பர்சொற்சுருங்குதற்கே ... ... ... ...௪

இது, மரபுவழுவாமற் காத்தலுணர்த்துகின்றது. (இ-ள்) தம்பால் - தம்மிடத்து—இல்லது-இல்லாதபொருளை.—இல்லெனின் - இல்லையெனின்—இனனாய் - வினவப்பட்டதற்கு இனமாய்—உள்ளது இருக்கின்றபொருளை— கூறி - சொல்லி—மாற்றியும் -அச்சொல்லைக்கொண்டு அதனை இல்லையென்றும்—உள்ளது - இருக்கிறபொருளாயின்—சுட்டியும் - இவ்வளவுண்டென்றும்—உரைப்பர் - சொல்லுவர்— சொற்சுருங்குதற்கு - வினவும்விடையுமாகிய சொற்கள் சுருங்குதற்பொருட்டு—எ-று.

(வரலாறு.) பயறுண்டோவணி கேரோ-என்றவருக்கு அதுவில்லையென்பார்-உழுந்துண்டு-உழுந்துந்துவரையுமுண்டு - எனஅதனினத்தைச்சொல்லக்கடவர்- அதுவுண்டென்பார் இருகலமுண்டு இருதூணியுண்டு. என அதனளவைச் சொல்லக்கடவர். மற்றவையு மிப்படியே.

௪௱௭. ஈதாகொடுவெனு மூன்றுமுறையே, யிழிந்தோனொப்போன்மிக்கோனிரப்புரை ... ... ... ... ... ... ...௪

இதுவுமது. (இ-ள்,) ஈதாகொடுவெனும் - ஈதாகொடுஎன்கிற—மூன்றும்-மூன்றுசொற்களும்—முறையே-முறையாக— இழிந்தோ

ன்-இழிந்தவனும்—ஒப்போன்-ஒப்பவனும்—மிக்கோன்-உயர்ந்தவனும்—இரப்புரை-இரத்தற்குவருஞ்சொற்களாகும்—எ-று.

(வ-று,) தந்தாமே-இழிந்தோனிரப்பு-தோழாதா-ஒப்போனிரப்பு-மைந்தாகொடு-உயர்ந்தோனிரப்பு-எனவரும். (௩௬)

௪௱௮, முன்னத்தினுணருங்கிளவியுமுளவே ... ... ...*

இது, மரபுவழுவமைதி யுணர்த்துகின்றது, (இ-ள்) முன்னத்தின்-குறிப்பினால்—உணரும்-பொருளறியப்படுகிற—கிளவியும்-சொற்களும்—உள-சிலவுளவாம்-எ-று,| [அவையாவன-ஒன்றொழிபொதுச்சொன்முதல் சொல்லுவான் குறிப்பீறாக-பெயரியலிலே-௰௨-ஆஞ்சூத்திரத்திலேசொல்லப்பட்டனவாம்,]

(வ-று,) குழைகொண்டுகோழியெறியும் வாழ்க்கையர்-என்றால்-பெருஞ்செல்வாழ்க்கையர்-என்பது குறிப்பினாலுணரப்பட்டபொருளாம், மற்றவைகளுமிப்படியே, [கேட்பவர்களுக்குப் பொருள்விளங்கச்சொல்லல்மரபாதலால் இதுவழுவமைதியாயிற்று, (௩௭)

௪௱௯, கேட்குநபோலவுங் கிளக்குநபோலவு மியங்குநபோலவு மியற்றுநபோலவு மஃறிணைமருங்கினுமறையப்படுமே ... ...*

இதுவுமது, (இ-ள்) கேட்குநபோலவும்-கேளாதவைகளைக்கேட்பவைகள்போலவும்—கிளக்குநபோலவும்-சொல்லாதவைகளைச் சொல்பவைகள்போலவும்—இயங்குநபோலவும்-நடவாதவைகளை நடப்பவைகள்போலவும்—இயற்றுநபோலவும்-செய்யாதவைகளைச் செய்பவைகள்போலவும்—அஃறிணைமருங்கினும்-அஃறிணையிடத்தும்—அறையப்படும்-சொல்லப்படும்—எ-று.

(வ-று,) நன்னீரைவாழி யனிச்சமே-எ-ம், பகைமையுங்கேண்மையுங்-கண்ணுரைக்கும்-எ-ம், இவ்வழியவ்வூர்க்குப் போகும்-எ-ம், தன்னெஞ்சேதன்னைச்சுடும்-எ-ம்-வரும், (௩௮)

௪௱௰, உருவகவுவமையிற்றிணை சினைமுதல்கள், பிறழ்தலும்பிறவும்பேணினர்கொளலே ... ... ... ... ... ... ... *

இதுவுமது, (இ-ள்) உருவகவுவமையில்-உருவகத்திலுமுவமையிலும்—திணை-இருதிணைகளும்—சினை-சினைகளும்—முதல்கள்-முதல்களும்—பிறழ்தலும்-தம்முள்ளேமயங்குதலும்—பிறவும்-இவ்வியலுட்சொல்லாதொழிந்தவையும்—பேணினர்கொளல்-பாதுகாத்துக்கொள்க—எ-று.

(வரலாறு)

நம்மரசனாகிய சிங்கத்திற்குப்பகைவர் கூட்டமாகிய யானைகளுஞ்
சிதறியோடின-உயர்திணையஃறிணையோடுமயங்கிற்று,— அவ்வரசனுக்கு
த்தம்பியரிருவரு மிரண்டுதோள்கள்,' உயர்திணைமுதல் உயர்திணைச்சி
னையோடுமயங்கிற்று, — முகமாகியமதி - உயர்திணைச்சினை யஃறிணை
முதலோடுமயங்கிற்று,— கல்விமங்கையைநல்லோர் விரும்புவார்-அஃ
றிணையுயர்திணையோடுமயங்கிற்று, இவையுருவகம்,

மயில் போலுமங்கை - அஃறிணை யுயர்திணையோடு மயங்கிற்
று,— கயல்போலுங்கண் - உயர்திணைச்சினையஃறிணை முதலோடுமய
ங்கிற்று,—தளிர்போலுமேனி-உயர்திணைமுதல் அஃறிணைச்சினையோ
டுமயங்கிற்று-இவையுவமை,

இனிப்பிறவுமென்றதனால் - இவன்சாகுவதிக் கொப்பானவன்-எ
னப்பான் மயக்கக்கூறுதலும், செங்கோல் - வீரக்கழல் - எனவொரு
பொருட்டன்மையை மற்றொருபொருண் மேல்வைத்துக் கூறுதலு
ம், ஈந்தானென்பதற்கு அருளினான் - எனவொருவினையை மற்றொரு
வினையாற்கூறுதலும்? அரசு - வேந்து - எனவுயர்திணையை அஃறிணை
யாகக்கூறுதலும், பிறவுங்கொள்க, (௫௧)

சாயக, யாற்றுநீர்மொழிமாற்று நிரனிறைவிற்பூண், டாப்பிசை
யளைமறி பாப்புக் கொண்டுகூட், டடிமறிமாற்றெனப் பொருள்கோ
ளெட்டே ... ... ... ... ... ... ... ... ... ...*

இது, நால்வகைச் சொற்களாலுஞ்செய்யப்படுஞ் செய்யுள்கொ
ள்ளும் பொருள் கோளின்பெயருந் தொகையு முணர்த்து கின்றது
(இ-ள்) யாற்றுநீர் - யாற்றுநீர்ப்பொருள்கோளும் —மொழிமாற்று-
மொழிமாற்றுப்பொருள்கோளும்—நிரனிறை - நிரனிறைப் பொருள்
கோளும்—விற்பூண் - விற்பூட்டுப் பொருள்கோளும் — தாப்பிசை-
தாப்பிசைப் பொருள்கோளும்— அளைமறிபாப்பு - அளைமறி பாப்பு
ப்பொருள்கோளும்— கொண்டுகூட்டு - கொண்டுகூட்டுப் பொருள்
கோளும்—அடிமறிமாற்று - அடிமறிமாற்றுப்பொருள்கோளும்—எ
ன-என்று—பொருள்கோள் - பொருள்கோள்—எட்டு-எட்டாமென-று,

சாயஉ, மற்றையநோக்கா தடிதொறும் வான்பொரு, ளற்றற்
றொழுகுமஃதியாற்றுப்புனலே ... ... ... ... ... ...*

இது, நிறுத்தமுறையானே யாற்றுநீர்ப்பொருள்கோளாமாறுஉ
ணர்த்துகின்றது, (இ-ள்.) 'மற்றையநோக்காது - மொழிமாற்றுமுத
லியவைபோலப்பிறழ்ந்து சொல்லவேண்டாமல் — அடி தொறும்-அ

டிதோறும் — அற்றற்றொழுகுமஃது - யாற்றுநீரொழுக்குப்போல்நெ
றிப்பட்டு அற்றற்றொழுகுவதாகிய — வான்பொருள் - சிறந்தபொரு
ள்கோள் — யாற்றுப்புனல் - யாற்றுநீர்ப்பொருள்கோளாம் — எ-று,

(வரலாறு,) சொல்லருஞ் சூற்பசும்பாம்பின் றோற்றம்போன், மெ
ல்லவேகருவிருந்தீன்றுமேலலார், செல்வமேபோற்றலை நிறுவித்தே
ர்ந்தநூற், கல்விசேர்மாந்தரி னிறைஞ்சிக்காய்த்தவே - எனவரும், இப்
பாட்டினுட்சொல்லென்னு மெழுவாயின்முதலெடுத்து அதன்றொ
ழிலாகிய வினையெச்சங்களொன்றனை யொன்றுகொள்ள விட்டேமு
றை நிறுத்திக்காய்த்தவென்னும் பயனிலையிறுதியிலே தந்துமுடித்த
மையால் இப்பொருளொழுகுதல் யாற்றுநீ ரொழுக்குப் போலுதல்
காண்க, [சொல்-நெற்பயிர்,] (௬௧)

௪௱௰௫, ஏற்றபொருளுக்கியையு மொழிகளை, மாற்றியோரடியு
ள் வழங்கன்மொழிமாற்றே... ... ... ... ... ... ... *

இது, மொழிமாற்றுப் பொருள்கோளாமாறுணர்த்துகின்றது
(இ-ள்) ஏற்றபொருளுக்கு - ஏற்றவிரண்டுபயனிலைகளுக்கு — இயைய
மொழிகளை - பொருந்துமொழிகளை — மாற்றி - ஏலாதபயனிலைகளுக்கு
த்தனித்தனிக்கூட்டி — ஓரடியுள் - ஓரடியுள்ளே — வழங்கல் - சொல்லுவ
து — மொழிமாற்று - மொழிமாற்றுப்பொருள்கோளாம் — எ-று

(வரலாறு.) சுரையாழவம்மி மிதப்பவரையனைய, யானைக்குநீத்
து முயற்கு நிலையென்பகானகநாடன் சுனை - எனவரும், இதனுள் - ஆழ
வென்னும்பயனிலைக்கியைந்த அம்மியென்னு மொழியின் மிதப்ப
வென்னும்பயனிலைக்கும், மிதப்பவென்னும் பயனிலைக்கு - இயைந்
த - சுரையென்னுமொழியின் ஆழவென்னும் - பயனிலைக்கும் நீத்தெ
ன்னும் பயனிலைக்கியைந்த முயலென்னுமொழியினை நிலையென்னும்
பயனிலைக்கும் - நிலையென்னும்பயனிலைக்கியைந்தயானையென்னுமொ
ழியினைநீத்தென்னும்பயனிலைக்குமாக மாற்றிக் கூறியவாறுகாண்க,

௪௱௰௬, பெயரும்வினையுமாஞ் சொல்லையும்பொருளையும், வே
றுநிரனிறீஇ முறையினுமெதிரினு, நேரும்பொருள்கோ ணிரனிறை
நெறியே ... ... ... ... ... ... ... ... ... ... ... *

இது, நிரனிறைப்பொருள்கோளாமாறு உணர்த்துகின்றது, (இ-ள்)
பெயரும் வினையுமாஞ்சொல்லையும் - பெயரும்வினையுமாகிய சொற்க
ளையும் — பொருளையும் - அவைகொள்ளும்பெயரும் வினையுமாகிய பய
னிலைகளையும் — வேறு - வேறாக — நிரனிறீஇ - வரிசையாகநிறுத்தி — மு
றையினும் - முறையாகவேனும் — எதிரினும் - எதிராகவேனும் — நே
ரும் - இதற்கிது பயனிலையென்பதுபடக்கூறும் — பொருள்கோள்

பொருள்கோள்—நெறி-நெறிப்பட்ட—நிரனிறை-நிரனிறைப்பொருள்கோளாம். எ-று.

(வரலாறு) கொடிகுவளை கொட்டைநுசுப் புண்கண்மேனி, மதிபவளமுத்தமுகம் வாய்முறுவல், பிடிபிணைமஞ்ஞை நடைநோக்குச்சாயல், வடிவினளேவஞ்சிமகள் இப்பாட்டில்-கொடி-நுசுப்பு- குவளை-உண்கண். கொட்டை-மேனி எ-ம். மதி-முகம்- பவளம் - வாய்-முத்தம்-முறுவல்-எ ம் பிடி-நடை - பிணை - நோக்கு. மஞ்ஞை-சாயல்-எ-ம். பெயர்ச்சொற்களும் பெயர்ச்சொற்களும் வந்த முறைநிரனிறை.

காதுசேர் தாழ்குழையாய் கன்னித்துறைச்சேர்ப்ப, போது சேர்தார்மார்பபோர்ச்செழிய-நீதியான்- மண்ணமிர்தமங்கையர்தோண்மாற்றாரையேற்றார்க்கு, நுண்ணியவாயபொருள். கா-மண் து-அமிர்தம். சேர் மங்கையர்தோள். தாழ்-மாற்றார். குழை-ஏற்றார்க்கு. ஆய்-நுண்ணியவாயபொருள், என வினையும்பெயருமாய்வந்த முறைநிரனிறை.

களிறுங்கந்தும்போல நளிகடற் கூம்புங் கலனுந்தோன்றும். களிறு-கலம்.கந்து-கூம்பு எனப்பெயரும் பெயருமாய்வந்த எதிர்நிரனிறை.

ஆடவர்களெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும், பாடகமும்ஊரகமும்பஞ்சரமா-நீடியமா, னின்றானிருந்தான் கிடந்தானிதுவன்றோ, மன்றார்மதிற்கச்சிமாண்பு—வெஃகா-கிடந்தான். பாடகம்- இருந்தான். ஊரகம்-நின்றான். எனப்பெயரும் வினையுமாய்வந்த எதிர்நிரனிறை. (௬௬)

சூ ௱௰௬, எழுவாயிறுதி நிலைமொழிதம்முட், பொருளோக்குடையது பூட்டுவில்லாகும் ... ... ... ... ... ... ...*

இது, பூட்டுவிற்பொருள் கோளாமாறு உணர்த்துகின்றது, (இ-ள்) எழுவாய்-செய்யுள்முதலிலும்—இறுதி - இறுதியிலும்—நிலை-இருக்கின்ற—மொழி மொழிகள்—தம்முள்-தமக்குள்—, பொருளோக்குடையது-பொருள்நோக்குதலுடைய பொருள்கோள்— பூட்டுவில்லாகும்-பூட்டுவிற்பொருள்கோளாம்-எ-று,

(வரலாறு) திறந்திடுமின்றீயவை பிற்காண்டமோத, சிறந்துபடிற்பெரிதாமேத-முறந்தையர்கோன், றண்ணாரமார்பிற்றமிழர் பெருமானைக், கண்ணாரக்காணக்கதவு. இதில் திறந்திடுமின்கதவு என நோக்கிற்று. (௬௭)

சூ ௱௰௭. இடைநிலைமொழியே யேனையீரிடத்து, நடந்துபொருளைநண்ணுதாப்பிசை... ... ... ... ... ... ... ...

இது தாப்பிசைப் பொருள்கோளாமாறு உணர்த்துகின்றது (இ-ள்.) இடைநிலைமொழி-நடுவிலுள்ளமொழி — ஏனையிரிடத்தும்-ஒழிந்தமுதலினுமீற்றிலும் — நடந்து-சென்று — பொருளை - பொருளை — நண்ணுதல்-கூடும்பொருள்கோள் — தாப்பிசை - தாப்பிசைப் பொருள்கோளாம்-எ-று. [ஊசல்வடம்போலிடைநின்று இருமருங்குஞ்செல்லலால் - இப்பெயர்பெற்றது. தாம்பு-தாப்பு — எனவிகாரமாயிற்று.]

(வரலாறு.) உண்ணாமையுள்ளதுயிர் நிலையூனுண்ண, வண்ணாந்தல்செய்யாதளறு. இதில் ஊனென்பது அப்படி செல்லல்காண்க ()

௪௱௭. செய்யுளிறுதிமொழியிடைமுதலினு, மெய்தியபொருள்கோளளைமறிபாப்பே ... ... ... ... ... ... ...*

இது. அளைமறிபாப்புப் பொருள்கோளாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) செய்யுள்-செய்யுளில் — இறுதிமொழி - இறுதியிலுள்ளசொல் — இடைமுதலினும்-இடையிலும்முதலிலும் — எய்தியபொருள்கோள்-சென்றபொருள்கோள்-அளைமறிபாப்பு - அளைமறிபாப்புப் பொருள் கோளாம்-எ-று. [புற்றிலேமறையும் பாம்புபோறலால் அப்பெயர்பெற்றது.]

(வரலாறு.) தாழ்ந்தவுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித்தளர்வார்தாமுஞ், சூழ்ந்தவினையாக்கைசுடவிளிந்து நாற்கதியிற்சுழல்வார்தாமு, மூழ்ந்தபிணிநலியமுன்செய்தவினையென்றேமுனிவார்தாமும், வாழ்ந்தபொழுதினேவானெய்துநெறிமுன்னி முயலாதாரோ-எனவரும். கடையடிச்சொற்கள் முதலிடைகளில் அப்படிசெல்லல்காண்க ... ... ... ... ... ... ... ... ... (௯௯)

௪௱௮. யாப்படிபலவினுங் கோப்புடைமொழிகளை. யேற்புழியிசைப்பதுகொண்டுகூட்டே ... ... ... ... ... ...*

இது. கொண்டுகூட்டுப் பொருள்கோளாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்.) யாப்படி-செய்யுளடிகள் — பலவினும் -பலவற்றினும் — கோப்புடை-கோக்கப்படுதலையுடைய — மொழிகளை-சொற்களை — ஏற்புழி-எடுத்தபொருளுக்கேற்றவிடத்து — இசைப்பது-கூட்டும்பொருள்கோள் — கொண்டுகூட்டு - கொண்டுகூட்டுப் பொருள்கோளாம்-எ-று.

(வரலாறு.) தெங்கங்காய்போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல், வெண்கோழிமுட்டையுடைத்தன்னமாமேனி, யஞ்சனத்தன்னபசலைதணிவாமே, வங்கத்துச் சென்றார்வரின்- எனவரும்-இதனுள் வங்கத்துச் சென்றார்வரின்- அஞ்சனத்தன்னபைங் கூந்தலையுடையண்மா

மேனிமேற் றெங்கங்காய்போலத் திரண்டுருண்ட வெண்கோழிமுட்டை யுடைத்தன்ன பசலைதணிவாம் எனக் கொண்டு கூட்டுக. ()

௪௱௰௯. ஏற்புழியெடுத்துடன் கூட்டுறுமடியவும், யாப்பீறிடை முதலாக்கினும்பொருளிசை, மாட்சியுமாறுவடியவுமடிமறி

இது. அடிமறிமாற்றுப் பொருள்கோளாமாறு உணர்த்துகின்றது, (இ-ள்.) ஏற்புழி-பொருளுக்கேற்குமிடத்து—எடுத்து- எடுத்து —உடன்கூட்டுறும்-நீங்காது கூட்டுகிற — அடியவும்-அடியையுடையவையும்—யாப்பீறிடைமுதல்- யாதானுமோரடியை) அச்செய்யுளின் இறுதிநடுமுதல் களில்யாதானுமோரிடத்து—ஆக்கினும்- எடுத்துக் கூட்டினும்— பொருளிசைமாட்சியும் !- பொருளோடிசைமாட்சியும் பொருண்மாட்சியும் —மாறு-வேறுபடாத—அடியவும் - அடியையுடையவையும்—அடிமறி-அடிமறிமாற்றுப்பொருள்கோளாம் -எ-று,

(வரலாறு ) நடுக்குற்றத்தற்சேர்ந்தார் துன்பந்துடையார்,கொடுத்துத் தான்றுய்ப்பினு மீண்டுங்காலீண்டு, விடுக்குற்றுப்பற்றினு நில்லாதுசெல்வம், விடுக்கும்வினையுலந்தக்கால் என்பதனுள்-கொடுத்துத்தான்றுய்ப்பினுமீண்டுங்காலீண்டும் - விடுக்கும் வினையுலந்தக்கா-விடுக்குற்றுப்பற்றினு நில்லாதுசெல்வம் (இஃதறியார்) நடுக்குற்றத்தற்சேர்ந்தார் துன்பந்துடையார்- என அடிகளை ஏற்குமிடத்து எடுத்துக்கூட்டுக.

மாறுக்காதலர் மலைமறந்தனரோ, யாறுக்கட்பனி வாலாவே, வேறுமென்றோள் வளைநெகிழும்மே, கூறாய்தோழியான் வாழுமாறே— இதனுள்-எவ்வடியை எங்கேகூட்டினும் பொருளுமோசையும்வேறுபடாமைகாண்க — அலைப்பான்பிறிதுயிரை யாக்கலுங்குற்றம்- விலைப்பாலிற்கொண்டூன் மிசைதலுங்குற்றஞ், சொலற்பாலவல்லாத சொல்லுதலுங்குற்றங், கொலற்பாலுங்குற்றமேயாம் —இதனுள் - கடையடியையாகேனு மோரிடத்துக் கூட்டும்போது ஓசைவேறுபட்டுப் பொருள்வேறுபடாமைகாண்க. (௬௮)

பொதுவியன்முற்றுப்பெற்றது.

நான்காவது.

# இடைச்சொல்லியல்.

௪௱௨௰. வேற்றுமைவினைசா ரியையொப்புருபுக, டத்தம்பொருளிசைநிறையசைநிலை, குறிப்பெனெண் பகுதியிற் றனித்தியலின்

திப், பெயரினும்வினையினும்பின்முன்னோரிடத், தொன்றும்பலவும்
வந் தொன்றுவதிடைச்சொல் ... ... ... ... ... ... ௲

இது. இடையுரியடுத்து நான்கும்மாமெனை நிறுத்த முறையால் இடைச்சொல்லிலக்கணம் இவ்வியலானுணர்த்தத் தொடங்கிஅவையி த்தினையன இவ்வியல்பின என அவற்றின்பொதுவிலக்கணமுணர்த்துகின்றது (இ-ள்) வேற்றுமை (யுருபுகள்) -ஐம்முதலியவேற்றுமை யுருபுகளும் —வினை (யுருபுகள்) -விகுதிமுதலியவினையுருபுகளும்— சாரியை (யுருபுகள்) -அன் ஆன் முதலியசாரியையுருபுகளும் —ஒப் (புருபுகள்) -போலப்புரையமுதலிய உவமையுருபுகளும் — தத்தம் பொருள- தத்தமக்குரியபொருளையுணர்த்திவருபவையும் — இசைநிறை- செய்யுளிசைநிறைத்துவருபவையும் — அசைநிலை- அசைத்தலே பொருளாகநிற்பவையும்—குறிப்பு - இவைபோலாது குறிப்பினால்வருபவையும்— என்-என்கிற — எண்பகுதியின் - எட்டுவகையினையுடையனவாய்—தனித்தியலின்றி-தனித்து நடத்தலில்லாமல்—பெயரினும்-பெயரினுள்ளும்—வினையினும்-வினையினுள்ளும்— பின்முன்-அவற்றின்பின்னுமுன்னுமாகிய— ஓரிடத்து- ஆறனுளோரிடத்து—ஒன்றும்-ஒன்றாயினும்—பலவும்-பலவாயினும் — வந்து-வந்து—ஒன்றுவது-ஒன்றுபட்டுநடக்குந்தன்மையது— இடைச்சொல் - இடைச்சொல்லாகும்—எ-று.

(வரலாறு) நம்பியை - பெயரின்புறத்துறப்பாய் ஐயுருபொன்றுவந்தது—முடியினன்-பெரியனகத்துறப்பாய் விகுதியுமிடைநிலையும்பலவந்தன—உண்ணான்- வினையிலகத்துறப்பாய்விகுதியுருபொன்றுவந்தது— நடந்தனன்- வினையிலகத்துருப்பாய்விகுதியிடைநிலைசாசாரியைபலவந்தன—அதுவேபொன்னினோ, ஓபெரியன், இனிமற்றொன்று,எனப்பெயர்களுக்கும்-வந்தானே,கொன்றுன்கூகூ,ஐயோ பிறந்தான், சீசீ போ - எனவினைகளுக்கும் புறத்துறப்பாய் முன்னும்பின்னும் ஒன்றும்பலவும்வந்தன, மற்றவைகளுமிப்படியே. (க)

ஈ௱உக தெரிநிலைதேற்ற மையமுற்றெண்சிறப் பெதிர்மறை யெச்சம்வினாவிழை வொழியிசை, பிரிப்புக் கழிவாக்க மின்னனவி டைப்பொருள்... ... ... ... ... ... ... ... ... ௲

இது முன்சூத்திரத்தே தத்தம்பொருள வெனப் பட்டவை இவையென்பது உணர்த்துகின்றது (இ-ள்.) தெரிநிலை- தெரிநிலையும் —தேற்றம்-தெளிவும்— ஐயம்-சந்தேகமும் —முற்று- முற்றும்— எண்-எண்ணும்—சிறப்பு-சிறப்பும்— எதிர்மறை- எதிர்மறையும் — எச்சம்-எச்சமும் —வினா-வினாவும்— விழைவு- விருப்பமும்— ஒழியிசை-ஒழிந்த சொல்லும்— பிரிப்பு- பிரிநிலையும்— கழிவு கழிவும் —ஆ

க்கம்-ஆக்கமும்—இன்னன-இவைபோல்வன பிறவும்—இடை-தத்தம்பொருளவென்றவிடைச்சொற்களுடைய — பொருள் -பொருள்களாம்-எ-று.

இவைபோல்வன வென்றதனாற் சிலவருமாறு, அ- இ -உ என்பனசுட்டுப் பொருளைத்தருவன.—எ-யா-என்பன வினாப்பொருளைத்தருவன. — முன் - பின் - இனி - என்பன இடப்பொருளுங்காலப்பொருளுந்தருவன.—தொறும் - தோறும்-இடப்பன்மைப்பொருளைத்தருவன.—ஆவது-ஆயினும்-முதலியவை- விகற்பப் பொருளைத்தருவன.—ஐயோ-அந்தோ-முதலியவை இரக்கப்பொருளைத் தருவன—ஆஅம்ம-ஓ ஓகோ - முதலியவை வியப்புப்பொருளைத் தருவன. —கூகூ-ஐயோ-முதலியவை அச்சப்பொருளைத்தருவன —சீ-சிச்சீ-சை-முதலியவை இகழ்ச்சிப்பொருளைத்தருவன,— கடகடென - துடுமென-முதலியவை ஒலிக்குறிப்புப்பொருளைத்தருவன —பொள்ளென-சரேலென-முதலியவை விரைவுக்குறிப்புப் பொருளைத் தருவன— —மற்றுமிப்படியே வருகிறபலவுகைப்பட்ட விடைச்சொற்களை ஆராய்ந்தறிந்துகண்டுகொள்க. (உ)

சஉஉ. பிரிநிலைவினாவெண் ணீற்றசைதேற்ற, மிசைநிறையெனவாறேகாரம்மே ... ... ... ... ... ... ... ... ... ...

இது. வேற்றுமைமுதலாகியநான்கும் முன்னேசொல்லப்பட்டதனால் அவையொழிந்த மற்றவைகளில் ஏகாரவிடைச் சொல்லிலக்கணமுணர்த்துகின்றது. (இ-ள் பிரி நிலை-பிரிநிலையும்— வினா: வினாவும்—எண்-எண்ணும்—ஈற்றசை-ஈற்றிலசைத்தலும்—தேற்றம்-தெளிவும்—இசைநிறை இசைநிறைத்தலும்—என-என்று—ஆறு-ஆறுபொருளைத்தரும்—ஏகாரம்-ஏகாரவிடைச்சொல்-எ-று

(வரலாறு) அவனேகொண்டான்-என்பது ஒருகூட்டத்திலிருந்து ஒருவனைப்பிரித்து நிற்கையாற்பிரிநிலை —நீயேகொண்டாய்- என்பது நீயாகொண்டாய் எனவினாவிநிற்கையால் வினாவாம் — நிலனே நீரே தீயே வளியே-என்பவை நிலனுநீருந் தீயும்வளியுமென வெண்ணிநிற்கையால் எண்ணாம் —வகுத்தனர்கொளலே - என்பது இறுதியிலசைத்துநிற்கையால் ஈற்றசையாம்—நானே கொண்டேன் - என்பது துணிவைக்காட்டுதலால் தேற்றமாம்.—ஏஎ யிவளொருத்திபேடியோவென்றார்-என்பது இசைநிறைத்துநிற்கையால் இசைநிறையாம்.[அன்றியும்-யானேகொண்டேன்-என்பது, யான்கொள்கிலனென்னும் எதிர்மறைப் பொருளைத் தருதலால் எதிர்மறை ஏகாரம்எதிர்மறைப்பொருளைத் தருவது புதியனபுகுதலாற் கொள்க. (௩)

௪௨௩. ஒழியிசைவினாச்சிறப்பெதிர்மறை தெரிநிலை, கழிவசைநிலைபிரிப்பெனவெட்டோவே ... ... ... ... ... ... ...

இது. ஓகாரவிடைச்சொல்லிலக்கணம் உணர்த்துகின்றது. (இ-ள்.) ஒழியிசை-ஒழியிசையும்—வினா-வினாவும்— சிறப்பு - சிறப்பும்.— எதிர்மறை-எதிர்மறையும்— தெரிநிலை-தெரிநிலையும்— கழிவு - கழிவும்— அசைநிலை-அசைநிலையும்—பிரிப்பு-பிரிநிலையும்—என - என்று—எட்டு-எட்டுப்பொருளைத்தரும்—ஓ ஓகாரவிடைச்சொல்-எ-று

(வரலாறு) கொளலோ கொண்டான் - என்பது கொண்டுய்யப் போயினானல்லன் - எனவொழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை — குற்றியோ மகனோ-என்பது வினா —சிறப்பு - உயர்வுசிறப்பும் இழிவு சிறப்புமென இருவகைப்படும். ஓஓபெரியன் - உயர்வுசிறப்பு. ஓஓ கொடியன்-இழிவுசிறப்பு.—அவனோ கொண்டான் - என்பது கொண்டிலனெனப்பொருள்படின் எதிர்மறை. — அவ்வை நோக்கி ஆணோ அதுவுமன்று பெண்ணோ அதுவுமன்று என்பவை அத்தன்மையில்லாமை தெரிந்தவழி நிற்கையால் தெரிநிலை— உறுதியுணராது கெட்டாரை ஓஓ தமக்கோருறுதி யுணராரோ - என்பது கழிவிரக்கப்பொருடருதலாற்கழிவு—காணியவம்மினோகங்குலது நிலையே - என்பது அசைநிலை—அவனோ கொண்டான் - என்பது பலருளிருந்து ஒருவனைப் பிரித்தலாற் பிரிநிலை.

௪௨௪. வினைபெயர்குறிப்பிசை யெண்பண்பாறினு, மெனவெனுமொழிவருமென்றுமற்றே ... ... ... ... ... ...

இது. என என்று என்கிற இடைச்சொற்களி லிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்) வினை-வினையும்—பெயர்-பெயரும்—குறிப்பு -குறிப்பும் — இசை-இசையும்—எண்-எண்ணும்—பண்பு-பண்பும்ஆகிய—ஆறினும்-ஆறுபொருளிலும் எனவெனுமொழி- எனவென்னுமிடைச்சொல்வரும்-சேர்ந்துவரும் — என்றும்- என்றென்னு மிடைச்சொல்லும்—அற்று-அப்படியேஆறுபொருளிலும்வரும்—எ-று,

(வரலாறு,) மைந்தன் பிறந்தானெனத் தந்தையுவந்தான்- வினை —ஊரெனப்படுவதுறையூர் - பெயர் —பொள்ளென வாங்கே புறம்வேரார்-குறிப்பு,— குட்டத்துத்துடுமெனப்பாய்ந்தது - இசை —நிலனென நீரெனத் தீயெனவளியெனவானெனப் பூதங்களைந்து - எண் —வெள்ளெனவிளர்த்தது- பண்பு—என்றென் பவையும் - மைந்தன் பிறந்தானென்று தந்தையுவந்தான்-என அவ்வாறனோடுங் கூட்டுக.

௪௨௫, எதிர்மறைசிறப்பையமெச்சமுற்றளவை, தெரிநிலையாக்கமோடும்மையெட்டே,.. ... ... ... ... ... ... ...

இது உம்மென்னு மிடைச்சொல்லிலக்கணம் உணர்த்துகின்றது, (இ-ள்) எதிர்மறை-எதிர்மறையும்— சிறப்பு - சிறப்பும் — ஐயம்-ஐயமும்—எச்சம்-எச்சமும்—முற்று-முற்றும்—அளவை- அளவையும்—தெரிநிலை-தெரிநிலையும்—ஆக்கம்-ஆக்கமுமாகிய—எட்டு - எட்டுப்பொருளைத்தரும்—உம்மை உம்மையிடைச்சொல்-எ-று.

(வரலாறு,) கொற்றன் வருதற்குமுரியன் - என்பது எதிர்மறை —சிறப்பு - உயர்வுசிறப்பும் இழிவுசிறப்பும் என இருவகைப் படும், குறவருமருளுங்குன்று-என்பது குன்றினுயர்வைச் சிறப் பித்தலால் உயர்வுசிறப்பாம், புலையனும் விரும்பாப்புன் புலாலியாக்கை - என்பது-உடம்பினிழிவைச்சிறப்பித்தலால்-இழிவுசிறப்பாம்— பத்தாயினு மெட்டாயினுங்கொடு - என்பன ஐயம்—எச்சவும்மை இறந்ததுதழீஇயதும் எதிரதுதழீஇயதும்-எனஇருவகைப்படும் —சாத்தனும் வந்தான்-என்பதுகொற்றன்வந்ததன்றி எனப்பொருள் படின் இறந்தது தழீஇய வெச்சவும்மையாம் - இனிக் கொற்றனும் வருவா னெனப் பொருள் படின்எதிரதுதழீஇய வெச்சவும்மையாம் — தமிழ்நாட்டு மூவேந்தரும்வந்தார் என்பதுமுற்றும்மை—சாத்தனுங்கொற்றனும் வந்தார் என்பனவெண்ணும்மை—ஆணுமன்றுபெண்ணுமன்று-என்பனவை தெரிநிலையும்மை—பாலுமாயிற்று-எனபது அதுவே மருந்துமாயிற்று-எனப்பொருள்படின் ஆக்கவும்மை. (௬)

௪௨௬, முற்றும்மையொரோவழியெச்சமுமாகும் ... ...

இது, முற்றும்மைக்கு எய்தியதன்மேற்சிறப்புவிதி யுணர்த்துகின்றது, (இ-ள்.) முற்றும்மை- முற்றும்மையானது — ஒரோவழி-ஒரோவிடத்தே—எச்சமுமாகும்-எச்சவும்மையுமாகும் - எ-று. (வ-று) எல்லாருமிதுசெய்தார், என்கிறவிடத்தே சிலரிது செய்வா ரெனவும் பொருள்படுதல்காண்க. (எ)

௪௨௭, செய்யெண்ணீற்றதாமெச்சவும்மை ... ... ...

இது, எச்சவும்மைக்கு ஆவதோர் விதி யுணர்த்துகின்றது, (இ-ள்) எச்சவும்மை- எச்சவும்மையானது—செவ்வெண் - செவ்வெண்ணிலே வருமாயின்—ஈற்றதாம்-ஈற்றிலேவரும்-எ-று.

(வரலாறு) கல்வி செல்வ மொழுக்கங்குடிப்பிறப்பும்பெறுவாருமுளர், என்கிறவிடத்தே இவற்றுட்சிலபெறுவாருமுள ரெனப்பொருள்படுதல்காண்க. (அ)

௪௨அ. பெயர்ச்செவ்வெண்ணேயென்றுவென்றெண், ணென்குத்தொகைபெறு மும்மையென்றேனவோ, டிந்நான் கெண்ணு மமைந்தியுமியலும் ... ... ... ... ... ... ... ...

இது, சிலவெண்ணிடைச்சொற்களுக் ககாவ்தோரிலக்கண முணர்த்துகின்றது, (இ-ள்) பெயர்ச்செவ்வெண் - பெயர்களிடத்தே யெண்ணிடைச்சொல் தொக்குவருகிற செவ்வெண்ணும் — ஏ (யென்)- ஏகாரவெண்ணும் — என்று (வென்) - என்றுவெண்ணும் — எனவெண்-எனவெண்ணுமாகிய — நான்கும் - நான் கெண்களும் — தொகை-தொகையை — பெறும்-பெற்றுநடக்கும் — உம்மை யென்) -உம்மையெண்ணும் — என்றெண் - என்றெண்ணும் — என (வென்) -எனவெண்ணும் — ஒடு (டெண்) -ஒடெண்ணும்ஆகிய — யிந்நான்கெண்ணும் -இந்நான்கெண்களும் — அஃறின்றியும் -தொகைபெறுமலும் — இயலும்-நடக்கும்-எ-று.

(வரலாறு,) சாத்தன்கொற்றனிருவரும்வந்தார்-எ-ம். சாத்தனே கொற்றனே யிருவரும்வந்தார்- எ-ம். சாத்தனென்று கொற்றனென்று விருவரும்வந்தார்-எ-ம். சாத்தனென கொற்றனென விருவரும்வந்தார்-எ-ம், தொகைபெற்றுவந்தன — சாத்தனுங்கொற்றனு மிருவரும்வந்தார் எ-ம், சாத்தனென்றுகொற்றனென்றிருவருளர்-எ-ம், சாத்தனெனகொற்றனென விருவருளர்-எ-ம், சாத்தனொடு கொற்றனொடிருவருளர்-எ-ம், தொகைபெற்றும் - சாத்தனுங் கொற்றனும்வந்தார்-எ-ம்? நிலனென்று நீரென்று தீயென்றுகாற்றென் றளவறுகாயமென்றுகியவுலகம்-எ-ம், நிலனென நீரெனத்தீயெனக் காற்றென வளவறு காயமென்வாகிய வுலகம்-எ-ம்,நிலனொடு நீரோடு தீயோடுகாற்றோட ளவறு காயமோடாகியபூதம்-எ-ம், தொகைபெறுமலும் வந்தன — முன்னைய நான்குந்தொகை பெறுதுவரின் விகாரத்தாலே தொக்கன வென்க, (௧௯)

ஏவறு, ஏனபூடு).

௪௨௯, என்றுமெனவு மொடுவுமொரோவழி, நின்றும் பிரிந்தெண்பொருடொறுநேரும் ... ... ... ... ... ... ... .

இது சிலவெண்ணிடைச்சொற்களுக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துகின்றது, (இ-ள்) என்றும்-என்றென்பதும் — எனவும்-எனவென்பதும் — ஒடுவும்-ஒடுவென்பதும் — ஒரோ வழிநின்றும் பொருடோறுநிற்றலேயன்றி ஓரிடத்திலேநின்றும் — பிரிந்து-பிரிந்து — எண்-எண்ணப்படுகின்ற — பொருடொறும் - பொருள்தோறும் — நேரும்-பொருந்தும்-எ-று.

(வரலாறு,) வினைபகையென்றிரண்டு-பகைபாவமச்சம் பழியென நான்கும் - பொருள்கருவிகாலம் வினையிட னொடைந்தும் - எனவரும், இவற்றுள் வினையென்று பகையென்றுளனக்கூட்டியெண்ணுக,

**௪௯௰. வினையொடுவரினுமெண் ணினையவேற்பன ... ...**

இது. முன்பெயரோடுவந்த வெண்ணிடைச்சொற்கள் வினையோடுவருமாறு உணர்த்துகின்றது. (இ-ள்) எண்-எண்ணிடைச்சொற்கள்—வினையொடுவரினும் - வினையோடுவந்தாலும்—இனைய - பெயரோடுவரும்போது சொல்லப்பட்ட இவ்விலக்கணங்களையெல்லாம்—ஏற்பன-ஏற்கும்-எ-று

(வரலாறு.) மயிலாடக்குயில்வாட மாமுகிலெழுந்தது- செவ்வெண்-கற்றுங்கேட்டுங்கற்பனைகடந்தார்-உம்மையெண்-உண்ணவென்றுடுக்கவென்றுவந்தான்-என்றெண்-உண்ணவுடுக்கவென்றுவந்தான்- பிரிந்துகூடுமெண் எனவரும் மற்றவையுமிப்படியேவரும். (௰௧)

**௪௯௧. விழைவேகாலமொழியிசைதில்லே ... ... ...**

இது. தில்லென்னுமிடைச்சொல்லிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்.) விழைவு- ஆசையும்—காலம்- காலமும்—ஒழியிசை - ஒழிந்த சொல்லும் ஆகிய மூன்றுபொருளையுந்தரும்—தில்- தில்லென்னுமிடைச்சொல்-எ-று.

(வரலாறு.) வார்ந்திலங்குவையெயிற்றுச்சின்மொழியரிவையைப் பெறுகதில்லம்மயானே- என்பது- அரிவையைப்பெறுதல் வேட்கையையுணர்த்தலால் விழைவு—பெற்றாங்கறிகதில்லம்மவிவ்வூரே-என்பது பெற்றகாலத்தறிக எனக் காலத்தையுணர்த்தலாற்காலம்—வருகதில்லம்மவெஞ்சேரிசேர-என்பது வந்தாலொன்றுசெய்வேனென்னுமொழிந்தசொற்பொருளை யுணர்த்தலால் ஒழியிசை. (௰௨)

**௪௯௨. மன்னேயசைநிலை யொழியிசையாக்கங், கழிவுமிகுதி நிலைபேறாகும் ... ... ... ... ... ... ... ... ...**

இது. மன்னென்னுமிடைச்சொல்லிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்.) மன்-மன்னென்னுமிடைச்சொல்—அசைநிலை-அசைத்துநிற்றற்பொருளிலும்—ஒழியிசை-ஒழிந்தசொற்பொருளிலும்—ஆக்கம்-ஆக்கப்பொருளிலும்—கழிவு-கழிதற்பொருளிலும்—மிகுதி- மிகுதிப்பொருளிலும்—நிலைபேறு-நிலைபெறுதற்பொருளிலும்—ஆகும், வரும்-எ-று.

(வரலாறு.) அதுமற்கொண்கன்றேரோ-என்பது அசைநிலை—கூரியதோர்வாண்மன்-என்கிறவிடத்தே-அது இரும்பை அறத்துணித்தது என்கின்றசொல்லொழிய நின்றதனால் ஒழியிசை—நெடியன்மன்-என்கிறவிடத்தே அவனே வலியனுமானானெனப் பொருள்படுதலால் ஆக்கம்—சிறியகட்பெறினேயெமக்கீயுமன்னே- என்கிறவிடத்தே

இப்பொழுது அவன் இறந்ததனால் எமக்குக்கொடுத்தல் கழிந்த தெனப்பொருள்படுவதினாற்கழிவு—எந்தையெமக்கருளுமன்-என்கிறவிடத்தேமிகுதியும் அருளுமெனப்பொருள்படுதலால் மிகுதி—மன்னுவுலகத்துமன்னியதுபுரிமே-என்கிறவிடத்தே இவ்விடைச்சொல் வடியாகப்பிறந்தவினையுள் மன்னென்பது நிலையினையுணர்த்தலால் நிலைபேறு.

௪௩௩. வினைமாற்றசைநிலை பிறிதெனுமற்றே ... ... ... *

இது மற்றென்னுமிடைச்சொல்லிலக்கண முணர்த்துகின்றது (இ-ள்) மற்று- மற்றென்னுமிடைச்சொல்—வினைமாற்று- வினைமாற்றுப்பொருளையும்—அசைநிலை- அசைத்துநிற்றற்பொருளையும்—பிறிதெனும்-பிறிதுபொருளையுந்தரும் எ-று.

(வரலாறு. மற்றறிவானல்வினை யாமிளையமென்னாது - என்பது விரைந்தறிவாமென்னும் வினையையொழித்து விரையாதறிவா மென்னும் வினையைத்தருதலால் வினைமாற்று—மற்றடிகள் கண்டருள் செய்யமலரடிக்கீழ் - என்பது அசைநிலை—ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான்முந்துறும்- என்பது ஊழல்லதொன்றென்னும்பொருளைத்தந்தமையாற்பிறிது. (௰௪)

௪௩௪. மற்றையதென்பது சுட்டியதற்கினம் ... ... ... *

இது. முன்னதற்கோர்புறனடை யுணர்த்துகின்றது. (இ-ள்) மற்றையதென்பது-மற்றையதென்னும்பொருளாகிய வினைமாற்றும் பிறிதும்—சுட்டியதற்கு-குறிக்கப்பட்டதற்கு—இனம்- இனமாகிய வினைமாற்றும் பிறிதுமாம்- எ-று [முன்னுதாரணங்களுள் நல்வினையை விரைந்தறிவாமெனக் குறிக்கப்பட்டதற்கு விரையாதறிவாமெனவும் ஊழொன்றெனக் குறிக்கப்பட்டதற்கு ஊழல்லதொன்றெனவும் இனம்வந்தவாறுகாண்க.] (௰௫)

௪௩௫ கொல்லேயைய மசைநிலைக்கூற்றே ... ... ... *

இது. கொல்லென்னுமிடைச்சொல்லிலக்கணமுணர்த்துகின்றது (இ-ள்.) கொல் - கொல்லென்னுமிடைச்சொல்லானது—ஐயம்- ஐயப்பொருளினும்—அசைநிலை- அசைநிலைப்பொருளினும்வருகிற—கூற்று இடைச்சொல்லாம்-எ-று.

(வரலாறு.) இவ்வுருக்குற்றி கொன்மகன்கொல்-என்பவை ஐயம்—கற்றதனாலாய பயனென்கொல்-என்பது-அசைநிலை. (௰௬)

**௩௬௬. ஒடுவுந்தெய்யவு மிசைநிறைமொழியே ... ... ***

இது. ஒடு தெய்ய என்கிற இடைச்சொற்களினிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்) ஒடுவுந்தெய்யவும்-ஒடுதெய்ய என்கிறவிரண்டும்—இசைநிறை இசைநிறைத்தற்பொருளைத்தருகிற—மொழி- சொற்களாம்-எ-று. (வரலாறு.) விதைக்குறுவட்டிற் போதொடு பொதுளிய-எ-ம். சொல்லேன்றெய்ய நின்னொடு பெயர்த்தே-எ-ம் வரும். (௰எ)

**௩௬௭. அந்திலாங்கசைநிலை யிடப்பொருளவ்வே ... ... ***

இது அந்தில் ஆங்கு என்கிற இடைச்சொற்களி னிலக்கண முணர்த்துகின்றது (இ-ள்.) அந்தில் - அந்திலென்பதும்—ஆங்கு- ஆங்கென்பதும்—அசைநிலை-அசைநிலைப்பொருளையும்—இடப்பொருள- இடப்பொருளையுந்தருவனவாம் எ-று

(வரலாறு.) அந்திற் கழலினன்கச்சினன்- என்பது அசைநிலை—சேயிழையந்திற் கொழுநற்காணிய- என்பது அவ்விடத் தென்னும் பொருளைத்தருதலால் இடம்—ஆங்கத்திறனல்ல யாங்கழற - என்பது அசைநிலை—ஆங்காங்காயினுமாக-என்பதுஇடம். (௰அ)

**௩௬௮. அம்மவுரையசை கேண்மினென்றாகும் ... ... ***

இது. அம்மவென்னு மிடைச்சொல் லிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்.) அம்ம அம்மவென்பது—உரையசை-உரையசைப்பொருளைத்தருவதும்—கேண்மினென்று- ஒன்றுசொல்லுவேன் கேண்மினென்கிற வேவற்பொருளைத்தருவதும்—ஆகும்-ஆகும்-எ-று. (வரலாறு. அதுமற்றம்மவென்பது உரையசை—அம்மவாழிதோழி யென்பதுகேளென்கிற ஏவற்பொருளைத்தந்தது.) (௰௯)

**௩௬௯ மாவென்கிளவி வியங்கோளசைச்சொல் ... ... ***

இது மாவென்னு மிடைச்சொல்லிலக்கணமுணர்த்துகின்றது (இ-ள்) மாவென்கிளவி - மாவென்னுஞ்சொல்—வியங்கோள்- வியங்கோளிடத்துவருகிற—அசைச்சொல்-அசைச்சொல்லாகும்-எ-று- (வரலாறு) உப்பின்றுபுற்கையுண்கமாகொற்கையோனே. (௨௰)

**௩௭௰. மியாயிகமோமதி யத்தையித்தை, வாழியமாளவீ யாழ முன்னிலையசை ... ... ... ... ... ... ... ... ... ...**

இது. மியாமுதலாகிய சில இடைச்சொற்களி னிலக்கணமுணர்த்துகின்றது. (இ-ள்,) மியா-யாழ—மியா இக மோ மதி அத்தை இத்

தை வாழிய மாள ஈ யாழ என்கிறபத்திடைச்சொற்களும் — முன்னிலை-முன்னிலையிடத்துவருகிற—அசை-அசைச்சொற்களாம்-எ-று.

(வரலாறு) சென்மியா-தண்டுறையூர்காணிக-கண்டதுமொழிமோ-செனமதிபெரும குறுமகளுள்ளிச்செல்வத்தை- நீயொன்றுபாடித்தை வாழிவாழிய-தவிர்ந்தீகமாள-சென்றீபெரும செலவயர்தியாழ-எ-ம் ()

௪௪௧. யாகாபிறபிறக்கரோபோமாதிகுஞ், சின்குரையோரும் போலுமிருந்திட்,டன்றாந்தாந்தான்கின்றுநின்றசைமொழி... *

இது யாமுதலிய விடைச்சொற்களினிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்) யா நிஃறு யா கா பிற பிறக்கு அரோ போ மாது இகும் சின் குரை ஓரும் போலும் இருந்து இட்டு அன்று ஆம் தாம் தான் கின்று நின்று என்கிற இருபதிடைச்சொற்களும் — அசைமொழி எல்லா விடங்களிலும் வருகிற அசைச்சொற்களாம்-எ-று.

(வரலாறு.) யாபன்னிருவர் மாணுக்காகத்தியனுர்க்கு- இவளிவட்காண்டிகா-ஆயவ்னயல்லபிற நசைபிறக்கொழிய-குயிலாலுமரோ வாழாதென்போ-விளிந்தன்றுமாதோ-காண்டிகுமல்லமோ- என்றி சின்பலகுரைத்துன்பம்-அஞ்சுவதோருமறனே-வருந்தினைபோலும்-எழுந்திருந்தேன்-பிளந்திட்டான்-சேர்துமன்றே-பணியுமாமென்றும்- நீதாம-நீதான்-ஆசைபட்டிருக்கின்றேன்-துணையாய்நின்றான். (௨௨)

இடைச்சொல்லியல்-முற்றியது.

ஐந்தாவது.

## உரிச்சொல்லியல்

௪௪௨. பல்வகைப்பண்பும் பகர்பெயராகி, யொருகுணம்பலகுணந் தழுவிப்பெயர்வினை,யொருவாசெய்யுட் குரியனவுரிச்சொல்... *

இது. நிறுத்தமுறையால் உரிச்சொல்லிலக்கணம் இவ்வியலால் உணர்த்தும்படி தொடங்கியவற்றின் பொதுவிலக்கணமுணாத்துகின்றது. (இ-ள்.) பல்வகை-இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய பலவேறுவகைப்பட்ட—பண்பும்-பண்புகளையும்—பகர்பெயராகி- உணர்த்துகின்றபெயராகி — ஒருகுணம் - ஒருகுணத்தையும் — பலகுணமும்-

பலகுணங்களையும்—தழுவி-உணர்த்துவனவாய்—பெயர்வினை -பெயர்வினைகளைவிட்டு—ஒழிவா-நீங்காவாய்—செய்யுட்கு - செய்யுளுக்கு—உரியன-உரியவையாய்ப் பொருளுக்குரிமை பூண்டுநிற்பவை—உரிச்சொல் - உரிச்சொற்களாம் - எ - று இசை - ஓசை - குறிப்பு மனத்தாற்குறித்து உணரப்படுவது [பண்பு - பொறியாலுணரப்படுவது.]

௪௪௩. உயிருயிரல்லதாம் பொருட்குணம்பண்பே ... ... ✱

இது. முன்பண்பென்றார் அது இது என்பது உணர்த்துகின்றது (இ-ள்) உயிர் உயிராகியபொருளும்—உயிரல்லது - உயிரல்லாத பொருளும்—ஆம்-ஆகிய—பொருள்-பொருள்களினுடைய—குணம் குணங்கள்—பண்பு பண்புகளாகும்-எ-று. (௧)

௪௪௪. மெய்ந்நாமூக்கு நாட்டஞ்செவிகளி, னொன்றுமுதலாக்கீழ்க்கொண்டுமேலுணர்தலி, னோரறிவாதியாவுயிரைந்தாகும் ... ✱

இது, முன்உயிராகிய பொருளென்றார் அவை இவை யெனத்தொகுத்து உணர்த்துகின்றது. (இ-ள்) மெய்-மெய்யும்—நா - நாவும்—மூக்கு-நாசியும்—நாட்டம்-கண்ணும்—செவிகளின் - காதும் ஆகியஐம்பொறிகளாலும்—ஒன்றுமுதலா - மெய்யாற்பரிசத்தை யுணருமுணர்ச்சியொன்று முதலாக-கீழ்க்கொண்டு-கீழ்ப்போன வுணர்ச்சியுங்கொண்டு—மேல் - இரதம் கந்தம் - உருவம் சத்தம் எனமேல்வரும் புலன்களை -உணர்தலின் ஒன்றொன்றாகவுணர்தலின்- ஓரறிவாதியா ஓரறிவுயிர்முதலாக-ஐந்தாகும்-ஐந்துவகையாகும்; உயிர்-அவ்வுயிர-எ-று.

௪௪௫. புன்மரமுதலவுற்றறியுமோரறிவுயிர் ... ... ... ✱

இது, முன் சொல்லப்பட்ட உயிரைந்தனுள் ஓரறி வுயிர்கள் இவையென உணர்த்துகின்றது (இ-ள் புல் புல்லும்—மரம் - மரமும்—முதல்-முதலியவை—உற்றறியும்-மெய்யாற்பரிசித்துப் பரிசத்தையறிகிற-ஓரறிவுயிர்-ஓரறிவுயிர்களாம்-எ-று. (௩)

௪௪௬. முரணந்காதிநா வறிவொடீரறிவுயிர் ... ... ... ✱

இது ஈரறிவுயிர்கள் இவையென உணர்த்து. கின்றது, (இ-ள்) முரண்-இப்பியும்—நந்து-சங்கும்—ஆதி-முதலியவை— நாவறிவொடு-கீழ்ப்போனமெய்யறிவேயன்றிநாவா லிரதத்தையும் அறிகிற—ஈரறிவுயிர்-ஈரறிவுயிர்களாம்-எ-று. (௪)

௪௪௭. சிதலெறும்பாதிமூக்கறிவின் மூவறிவுயிர் ... ... ✱

இது. மூவறிவுயிர்கள் இவையென உணர்த்துகின்றது. (இ-ள்) சிதல் - கறையானும்—எறும்பு, எறும்பும்—ஆதி - முதலியவை—மூக்கறிவின்-கீழ்ப்போனஇரண்டறிவுகளேயன்றி மூக்கால்கந்தத்தையும் அறிகிற அறிவோடு—மூவறிவுயிர்மூவறிவுயிர்களாம்-எ-று. (௬)

**௪௪௮.** தும்பிவண்டாதிகண்ணறிவினாலறிவுயிர் ... ... *

இது நாலறிவுயிர்கள் இவையென உணர்த்துகின்றது (இ-ள்.) தும்பி-தும்பியும்—வண்டு-வண்டும்—ஆதி - முதலியவை—கண்ணறிவின்-கீழ்ப்போனமூன்றறிவுகளேயன்றிக்கண்ணால்உருவத்தையும் அறிகிறவறிவோடு—நாலறிவுயிர்-நாலறிவுயிர்களாம்-எ-று, (௭)

**௪௪௯.** வானவர்மக்கணரகர்விலங்குபுள், ளாதிசெவியறிவோடையறிவுயிரே ... ... ... ... ... ... ... ... ... ...*

இது. ஐயறிவுயிர்கள் இவையென உணர்த்துகின்றது. (இ-ள் வானவர்-தேவரும்—மக்கள்-மனிதரும்—நரகர்-நரகரும்—விலங்கு- மிருகங்களும்—புள்-பறவைகளும்—ஆதிமுதலியவை— செவியறிவொடு-கீழ்ப்போனநாலறிவுகளேயன்றிச்செவியாற்சத்தத்தையும் அறிகிறவறிவோடு—ஐயறிவுயிர்-ஐயறிவுயிர்களாம்-எ-று. (௮)

**௪௫௰.** உணர்வியலாமுயிரொன்றுமொழித்த, வுடன்முதலனைத்துமுயிரல்பொருளே ... ... ... ... ... ... ... ...*

இது. உயிரல்லாதபொருள்கள் இவையென வுணர்த்துகின்றது (இ-ள்.) உணர்வியலாம் - அறிவுமயமாகிய—உயிரொன்றுமொழித்த உயிரொன்றமேயன்றி—உடன்முதல் - உடம்புமுதலாகிய —அனைத்தும்-உலகத்துப்பொருள்களெல்லாம்.— உயிரல்பொருள் - உயிரல்லாதபொருள்களாம்-எ-று. (௯)

**௪௫௧.** ஒற்றுமை நயத்திளென்றெனத் தோன்றினும், வேற்றுமைநயத்தின்வேறேயுடலுயிர் ... ... ... ... ... ... *

இது. முன்னதற்குஓர்புறனடையுணர்த்துகின்றது. (இ-ள்.) ஒற்றுமைநயத்தின்-எவ்வுயிர் எவ்வுடம்பையெடுத்ததோ அவ்வுடம்பின்மயமாய்நிற்கிறஒற்றுமைநயங்கருதியவழி. — ஒன்றென -, ஒன்றுபோல—தோன்றினும்-தோன்றுமாயினும்—வேற்றுமைநயத்தின் -உயிர்சித்தாயும்உடம்புசடமாயும் நிற்கிற வேற்றுமைநயமாகிய வுண்மைகருதியவழி—உடலுயிர்-அவ்வுடலும்உயிரும்—வேறு-வேறாம்-எ-று. (௰)

**௪௫௨.** அறிவருளாசை யச்சமான, நிறைபொறையோர்ப்புக்கடைப்பிடிமைய, னினைவுவெறுப்புவப்பிரக்கநாண்வெகுளி, துணிவழுக்காறன்பெளிமையெய்த்த, றுன்பமின்பமிளமைமூப்பிகல், வென்றிபொச்சாப்பூக்கமறமத, மறவியினையவுடல்கொளுயிர்குணம் ... *

இது, உயிர்க்குணமென்றார் அவையிவையெனவுணர்த்துகின்றது. (இ - ள்.) அறி - மறவி - அறிவு அருள் ஆசைஅச்சம்மானம்நிறை பொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல்நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண்வெகுளி துணிவுஅழுக்காறு அன்புஎளிமை எய்த்தல் துன்பம் இன்பம்இளமைமூப்பு இகல்வென்றி பொச்சாப்பு ஊக்கம்மறம் மதம் மறவிஎன்கிறமுப்பத்திரண்டும் — இனைய - இவைபோல்வன பிறவும் — உடல்கொள் உடம்போடுகூடிய — உயிர்க்குணம் - உயிர்களினுடையகுணங்களாம் - எ - று (௰௧)

௪௫௧ துய்த்தறுஞ்ச றொழுதலணித, லுய்த்தலாதியுட லுயிர்த்தொழிற்குணம் ... ... ... ... ... ... ... ... *

இது உயிரின்றொழிற்குணமுணர்த்துகின்றது, (இ-ள்.) துய்ய்த்தல்-துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்உய்த்தல் என்கிறஐந்தும் — ஆதி - இவைபோல்வனபிறவும் — உடலுயிர் - உடம்போடுகூடியவுயிரினுடைய — தொழிற்குணம் - தொழிற்குணங்களாம் - எ - று. (௰௨)

௪௫௨. பல்வகைவடிவிருநாற்றமைவண்ண, மறுசுவை யூறெட்டு யிரல்பொருட்குணம் ... ... ... ... ... ... ... ... *

இதுஉயிரல்லாதபொருள்களின்குணமுணர்த்துகின்றது (இ-ள்) பல்வகைவடிவு - வட்டம் இருகோணம் முக்கோணம்சதுரம் இவைமுதலாகிய பலவகைவடிவுகளும் — இருநாற்றம் - நற்கந்தம் துர்க்கந்தம் என்கிறஇருநாற்றங்களும். — ஐவண்ணம் - வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்கிறஐந்துவண்ணங்களும் — அறுசுவை - கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்கிற அறுசுவைகளும் — ஊறெட்டு - வெம்மை தண்மைமென்மை வன்மைநொய்ம்மைசீர்மைஇழுமெனல்சருச்சரைஎன்கிறஎட்டூறுகளும் — உயிரல்பொருள் - உயிரல்லாதபொருள்,களினுடைய — குணம் - குணங்களாம்,

௪௫௩. தோன்றன்மறைதல் வளர்தல்சுருங்க, னீங்கலடைதனடுங்கலிசைத்த, லீதலின்னன விருபொருட்டொழிற்குணம் ... ... *

இது அவ்விரு பொருள்களுக்கும் பொதுவான தொழிற்குணமுணர்த்துகின்றது (இ-ள்.) தோன்-ஈதல் — தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் என்கிறவொன்பதும் — இன்னன - இவைபோல்வனபிறவும் — இருபொருள் உயிர்ப்பொருளும் உயிரல்பொருளும் ஆகியவிரண்டற்கும்பொதுவாகிய — தொழிற்குணம் - தொழிற்குணங்களாம் - எ - று.

(வரலாறு.) உயிர்தோன்றிமறைந்தது - உடறோன்றிமறைந்தது நெருப்புத்தோன்றிமறைந்தது, எனவரும். (௰௩)

௪௫௬. சாலவுறுதவ நனிகூர்கழிமிகல் ... ... ... ...

இது. பலவகைப்பண்பும் இதுவரைக்கு முணர்த்தி அப்பண்பு களுள் ஒருகுணம்பலகுணந் தழுவிவருமென்ற உரிச்சொற்களை உணர்த்தத்தொடங்கி அவற்றுள் ஒருகுணந்தழுவிய உரிச்சொற்களிலேசில உணர்த்துகின்றது. (இ-ள்.) சால-கழி—சாலவென்பது முதலாகிய இவ்வாறுரிச்சொற்களும்—மிகல்-மிகுதியாகிய ஒருகுணத்தை யுணர்த்துகிற உரிச்சொற்களாம்-எ-று.

(வரலாறு) பருவந்துசாலப்பலகொலென்றெண்ணி— உறுவரி தூரக்குழயர்கிளைமாவின் —தவச்சேய்நாட்டாராயினும்—நனிபேதை யேநயனில்கூற்றம் — பொறை நில்லாநோய்கூரப்புல் லென்றிசினே —காமங்கழிகண்ணோட்டம்—என்முறையேகாண்க. (௰௫)

௪௫௭, கடியென்கிளவி காப்பேகூர்மை, விரையேவிளக்க மச் சஞ்சிறப்பே, விரைவேமிகுதி புதுமையார்த்தல், வரைவேமன்றல்கரி ப்பிறைகும் ... ... ... ... ... ... ... ... ... ...*

இது, பலகுணந்தழுவிய உரிச்சொற்களுள் ஒன்றுணர்த்துகின் றது, (இ-ள்,) கடியென்கிளவி-கடியென்னுமுரிச்சொல்—காப்பு - காவலும்—கூர்மை-கூர்மையும்—விரை-வாசனையும்—விளக்கம் - விளக்கமும்—அச்சம்-அச்சமும்— சிறப்பு சிறப்பும் —. விரைவு - விரைவும் —மிகுதி-மிகுதியும்—புதுமை-புதுமையும்—ஆர்த்தல்- ஒலித்தலும் —வரைவு நீக்கலும்—மன்றல்-மணமும்—கரிப்பின் - கரிப்பும் ஆகிய பதின்மூன்றுகுணங்களிலும்—ஆகும்-வரும்-எ-று,

(வரலாறு,) கடிநகர்-காப்பு—கடிநுனைப்பகழி• கூர்மை — கடிமாலை-நாற்றம்— கண்ணாடியன்ன கடிமார்பன்-விளக்கம் — கடியாமக விர்க்கேகைவிளக்காகி-அச்சம்—விழாக்கடி - சிறப்பு — எம்மம்புகடிவிடுதும் விரைவு—கடியுண்கடவுட்கிட்டசெழுங்குரல் - மிகுதி—இது புதிதுண்கடவுளென்றுமாதலால்-புதுமை-கடிமுரசு-ஆர்த்தல்— கடித்துக்கரும்பினைக்கண்டகாநூறு வரைவு—கடிவினை முடுகி-மன்றல் —கடிமிளகுதின்றகல்லாமந்தி-கரிப்பு, (௰௬)

௪௫௮, மாற்றநுவற்சி செப்புரைகரைநொடி, யிசைகூற்றுப்புகறன்மொழிகிளவிவிளம்பறை, பாட்டுப்பகர்ச்சி யியம்பல்சொல்லே.*

இதுவும், ஒருகுணந்தழுவிய வுரிச்சொற்களுட் சிலவுணர்த்துகின்றது. (இ-ள்,) மாற்ற-பல்—மாற்றமுதலாகியபதினாறும்—சொல்-சொல்லென்னு மொருகுணத்தை யுணர்த்துகிற வுரிச்சொற்களாம்-எ-று,()

(வரலாறு,) கோவலர்வாய் மாற்றமுணர்ந்து - இருபிறப்பாளர் பொழுதறிந்துநுவல- தெருண்டாரவை செப்பலுற்றேன்- உரைப்பாருரைப்பவையெல்லாம் - அறங்கரை நாவினுண்மறை முற்றிய - அந்

சொற்பெரும்பணைத்தோளா யிழையாடா ளொடியும் - நசையுநர்க்கடையா நன்பெருவாயிலிசையெனப்புக்கு - உற்றதுநாக்கள் கூறவுணர்ந்தனை புகன்றவன்றியும் - காமஞ்செப்பாது ! கண்டதுமொழிமோ - கிளந்தகிளை முதலுற்ற !மெய்ம்மூவாறெனவிளம்பினர்புலவர் - |அச்சுறனடிதொழுதறைகுவன்சொல்லே - ஒருவன் செய்நன்றிகொன்றார்க் குய்தியில்லெனவறம்பாடின்றே - வார்த்தைபகர்குற்றேன் - இடிபோல வியம்பினுனே - எனமுறையேகாண்க.

**௪௫௯.** முழக்கிரட்டொலிகலி யிசைதுவைபிளிறிரை, யிரக்கழுங் கியம்பலிமிழ்குளிறதிர்குரை, கனைசிலைசும்மைகௌவைகம்பலை, யரவ மார்ப்போ டின்னனவோசை ... ... ... ... ... ... *

இதுவுமது. (இ-ள்) முழக்கு போடு — முழக்குமுதலாகிய - இருபத்திரண்டும் — இன்னன - இவைபோல்வனபிறவும் — ஓசை - ஓசையென்னுமொருபொருளையுணர்த்து முரிச்சொற்களாம் - எ - று.

(வரலாறு) முழங்குமுந்நீர் முழுவதும்வளைஇ - குடிஞையிரட்டுங் கோடுயர்நெடுவரை - ஒல்லெனவொலிக்கு மொலிபுனலூரற்கு - கலிகெழுமூதூர் - பறையிசை - பல்லியந்துவைப்ப - பிளிறுவார்முரசம் இரைக்குமஞ்சிறைப் பறவைகள் இரக்குமாசனம் - இரும்பிழிமாரி யழுங்கிறமூதூர் - காலைமுரசமியம்ப இமிழ்கடல்வளைஇய - குளிறுமுரசங் குணில்பாய - களிறுகளித்ததிரும் - கார்குரைபுனற்கன்னி - கனைகடற்சேர்ப்ப - சிலைத்தார்முரசங்கறங்க தள்ளாதசும்மை மிகுதக்கணநாடு நண்ணி - கௌவை - நீர்வேலி - வினைக்கம்பலைமனைச் சிலம்பவும் - அறைகடலரவத்தானை - ஆர்த்தபல்லியக்குழாம் - எனமுறையேகாண்க. (௰௮)

**௪௬௰** இன்னதின்னுழி யின்னணமியலு, மென்றிசைநூலுட் குணகுணிப்பெயர்கள், சொல்லாம்பரத்தலிற் பிங்கலமுதலா, நல்லோ ருரிச்சொலி னயந்தனர்கொளலே ... ... ... ... ...

இது இவ்வியலுக்காவதோர் புறனடையுணர்த்துகின்றது. (இ-ள்) இன்னது பெயர்வினையிடையுரிகளில் ;இன்னசொல் — இன்னுழி - தன்மைமுன்னிலைபடர்க்கைகளிலும் வழக்குச்செய்யுள்களிலும் இவ்விடத்தே — இன்னணம் - இவ்விலக்கணமுள்ளதாய் — இயலுமென்று - நடக்குமென்று — இசை - சொல்லக்கடவதாகிய — நூலுள் - இந்நூலுள் — குணகுணிப்பெயர்கள் - குணப்பெயர்களையும் குணிப்பெயர்களையும் — சொல்லாம் - வேண்டியுட்டுஞ்சொல்வதன்றி விரித்துச்சொல்லக்கடவமல்லம் — பரத்தலின் - விரிக்கின் மற்றொன்று விரித்தலென்னுங்குற்றம்வருமாதலின் — நல்லோர் - அவற்றைக்கண்டறியவேண்டிய நல்லோர் — பிங்கலமுதலா - பிங்கலந்தைதிவாகரமுதலிய நூல்களில் — உரிச்சொலில் - உரிச்சொற்றொகுதியுள் — நயந்தனர்கொளல் - விரும்பிக்கொள்க.

எ-று. [எனவே பெயரியலுட் பெயர்ச்சொற்றொகுதியையும் - வினையியலுள் வினைச்சொற்றொகுதியையும் - இடையியலுள் - இடைச்சொற்றொகுதியையும் - விரிக்காமைக்கும் இதுவே புறனடையா மென்பதாயிற்று.] (௰௧)

௪௬௧ செற்றொறுமிற்றிதன் பெற்றியென்றனைத்து, முற்றமொழிகுறின் முடிவிலவாதலிற், சொற்றவற்றியலான் மற்றையபிறவுந், தெற்றெனவுணர்த றெள்ளியோர்திறனே ... ... ... ... ... *

இது இவ்வதிகாரத்திற்கோர் புறனடையுணர்த்துகின்றது. (இ-ள்) சொற்றொறும் - சொற்றோறும் — இற்று - இத்தன்மைத்து — இதன் பெற்றியென்று - இதனிலக்கணமென்று — அனைத்தும் - முழுதும் — முற்ற - நிறைவுற — மொழிகுறின் - சொல்லப்புகுந்தால் — முடிவில - முடிவிலவாம் — ஆதலின் - ஆதலால் — சொற்றவற்று - எடுத்துச்சொல்லப்பட்டசொற்களுடைய — இயலான் - இலக்கணங்களைக்கொண்டு — மற்றையபிறவும் - சொல்லப்படாதவற்றினிலக்கணங்களையும் — தெற்றெனவுணர்தல் — ஒப்புமைகருதி இதுவுமதுவெனவுணர்தல் — தெள்ளியோர் நூலோதித்தெளிதற்குரியமாணாக்கரது — திறன் - கடனாம் - எ-று. [இதற்குதாரணமுன்வந்தனகாண்க] (௨௰)

௪௬௨. பழையனகழிதலும் புதியனபுகுதலும், வழுவலகாலவகையினானே ... ... ... ... ... ... ... ... ... *

இது இந்நூலிற்கோர் புறனடை யுணர்த்துகின்றது. (இ-ள்) பழையனகழிதலும் - முற்காலத்துள்ளவிலக்கணங்களுட் சிலபிற்காலத்திறத்தலும் — புதியனபுகுதலும் - முற்காலத்தில்லன சிலபிற்காலத்திலக்கணமாதலும் — வழுவல் குற்றமல்லவாம் — காலவகையினான் - காலவேற்றுமைபற்றுவாதலால் - எ-று, [இவற்றிற்குதாரணமுன்வந்தனகாண்க]

உரிச்சொல்லியன் முற்றுப்பெற்றது,

---

இருதிணையைவிட நான்மொழி யைம்பா லறுதொகையே... ... *
டீரிருவழுவெட்டுரு பொன்பான் றொகாநிலை யாய்ந்தவெச்ச ... *
மொருபது கோளெட்டு முப்பொழுதீரிட மோரியல்பாய்... ... *
வருமொழிமூன் றுமுணரசசொல்வன்மை வருந்திருவே ... ... *

# நன்னூலுக்குத்

திருத்தணிகைக் கந்தப்பையர்குமாரராகிய

## விசாகப்பெருமாளையரால்

செய்யப்பட்ட காண்டிகையுரை

முற்றுப்பெற்றது,